# தமிழரசு

அக்டோபர் 1–31, 2000 ரூ. 10




# கலைஞர் ஆட்சியில்

## பள்ளிதோறும் கணினிக் கல்வி







## தரணி ஆள
## கணினிக் கல்வி
## தயார் நிலையில்
## தமிழகப் பள்ளி

**அனைத்து அரசு மேனிலைப்பள்ளிகளிலும்**
**கணினிப் பயிற்சி**

கடந்த ஆண்டில் **666** பள்ளிகளில் **ரூ.112 கோடி** செலவில் கணினிப் பயிற்சி

இவ்வாண்டில் **515** பள்ளிகளில் **ரூ.73 கோடி** செலவில் கணினிப் பயிற்சி

**16** மாநகராட்சி பள்ளிகளில் **ரூ.1.85 கோடி** செலவில் கணினி

**60** கலை அறிவியல் கல்லூரிகளில் **ரூ.28.22 கோடி** மதிப்பீட்டில் கணினி

**12** மருத்துவக்கல்லூரிகளில் **ரூ.2.79 கோடி** மதிப்பீட்டில் கணினி

**5** சட்டக் கல்லூரிகளில் **ரூ.1.55 கோடி** மதிப்பீட்டில் கணினி

# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2031
புரட்டாசி–ஐப்பசி
அக்டோபர் 1–31, 2000
மலர் : 32 இதழ் : 7&8
விலை ரூ.10


முதல் பக்க அட்டையில்...

காமராஜர் மணிமண்டபம் திறப்புவிழா

கடைசிப்பக்க அட்டையில்...

மேதகு ஆளுநர், மாண்புமிகு முதலமைச்சர் ஆகியோர் ஐ.நா. அமைதி சாசனத்தில் கையொப்பமிடுகிறார்கள்.

## இந்த இதழில்...


- கன்னியாகுமரி கடற்கரையில் காமராஜர் மணிமண்டபம் —— 2
- தூத்துக்குடியில் மருத்துவக்கல்லூரி —— 6
- திருவள்ளூர் மாவட்ட வளர்ச்சிப் பணிகள் —— 9
- வேலூர் மாவட்ட வளர்ச்சிப் பணிகள் —— 25
- வணிக பெருமக்களுக்கு ரூ.2,700 கோடி வரிச்சலுகை —— 33
- கால்நடைப் பாதுகாப்புத் திட்டம் —— 42
- புதுப்பொலிவு பெற்ற காஞ்சிபுரம் மாவட்டம் —— 49
- மின்னணு ஆளுமை மாநாடு —— 57
- இணையமும் இன்றியமையாமையும் —— 61
- ரயில் தண்டவாளத்தில் ஓடும்... —— 65
- பொய்கையாறு - நம்பியாறு அணை திறப்பு —— 74
- செய்திச்சரம் —— 78
- மறுமலர்ச்சி காணும் மலைவாழ் மக்கள் —— 81
- இராணுவத்தில் சேர... —— 83
- களவழி நாற்பதில் உவமைத்திறன் —— 86


### திருக்குறள்

**குணநாடிக் குற்றமு நாடி அவற்றுள்**
**மிகைநாடி மிக்க கொளல்.**

ஒருவரின் குணங்களையும், அவரது குறைகளையும் ஆராய்ந்து பார்த்து அவற்றில் மிகுதியாக இருப்பவை எவை என்பதைத் தெரிந்து அதன் பிறகு அவரைப் பற்றிய ஒரு தெளிவான முடிவுக்கு வரவேண்டும்.

– கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...

# கன்னியாகுமரி கடற்கரையில்

# காமராஜர் மணிமண்டபம்

"பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் மறைந்தவுடன் அவர்களுடைய அஸ்தி பல பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லப்பட்டது. அதிலே ஒரு இடமாக கன்னியாகுமரி கடற்கரையில் மறைந்த என்னுடைய அருமை நண்பர் பொன்னப்ப நாடார் அவர்களும், இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்களும், பெரியவர் இஸ்மாயில் அவர்களும் முன்னின்று அந்த அஸ்தியை வைத்த இடத்தில் ஒரு மண்டபம் கட்ட வேண்டுமென்கிற கோரிக்கை பல ஆண்டுக், காலமாக இருந்து, இன்றைக்கு நிறைவேறியிருக்கின்றது.

**25 ஆண்டுக் கால கோரிக்கை நம் கண்ணெதிரே மணிமண்டபமாக ஒளிவீட்டுக் கொண்டிருக்கிறது**

காமராஜருக்கு மணிமண்டபம் திறக்கின்ற விழாவிலே கோரிக்கைகள் எதுவும் வைக்கத் தேவையில்லை என்று அருமை நண்பர் அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி இங்கே தெரிவித்ததற்குக் காரணமே, ஒரு பெரிய கோரிக்கை நிறைவேறியிருக்கின்ற போது மேலும் கோரிக்கைகள்



தேவைதானா என்ற அந்தப் பொருளிலேதான் அவர் அதைச் சொன்னார். ஏனென்றால் 25 ஆண்டுக்கால கோரிக்கை நிறைவேறுமா என்ற வினாக்குறியோடு தொங்கிக் கொண்டிருந்த கோரிக்கை நிறைவேறி நம்முடைய கண்ணுக்கெதிரே மணிமண்டபமாக ஒளி விட்டுக் கொண்டிருக்கின்றது.

25 ஆண்டுக் காலம் இதிலே தயக்கம் ஏன் ஏற்பட்டது என்பதை கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டும். இப்போது இந்தக் கோரிக்கை யாரால் எப்படி நிறைவேறியிருக்கின்றது என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். 25 ஆண்டுக் காலமாக பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய அஸ்தி வைக்கப்பட்ட இடத்தில் ஒரு மணி மண்டபம் கூட அல்ல, ஒரு நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டுமென்று முயற்சித்த நேரத்தில் குறிப்பாக என்னுடைய நண்பர் இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்கள் அதற்காகக் குரல் கொடுத்த நேரத்தில் எல்லாம், முயற்சிகளை மேற்கொண்ட நேரத்தில் எல்லாம், மத்திய அரசு அதற்கான அனுமதியைத் தரவில்லை.

அந்த இடம் – இப்போது நாம் மணிமண்டபம் கட்டியிருக்கிறோமே, அந்த இடம், ஒதுக்கப்பட்ட பகுதி, அந்தப் பகுதியிலே இனிமேல் எந்தக் கட்டடங்களும் எழுப்பக்கூடாது என்று ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. நான் 1989–90–ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த அந்தக் காலக் கட்டத்தில் முயற்சி மேற்கொள்ளப்பட்டு, அப்போதிருந்த மத்திய அரசால் அதற்கான அனுமதி கிடைக்கவில்லை. அதற்குப் பிறகு கூட பலமுறை முயற்சித்தும் அனுமதி கிடைக்க வில்லை. பிறகு வந்த வேறு ஆட்சி யாளர்கள் இதற்காக முயற்சித் தார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. அவர்களோடு கூட்டணியிலே இருப்பவர் களுக்குத்தான் தெரியும்.

ஆனால் தொடர்ந்து குமரி அனந்தன் அவர்கள் இதை வலியுறுத்தி வந்து, இதற்காகப் போராட்டங்கள், உண்ணா விரதங்கள் எல்லாம் இந்தப் பகுதியிலே நடைபெற்ற போது நான் அதை அலட்சியப்படுத்தவில்லை. நான் எதையும் அலட்சியப்படுத்தக் கூடியவனல்ல. ஏனென்றால் நான் அகம்பாவக்காரனல்ல. ஆணவம் பிடித்தவனுமல்ல. அதனால் தான் அதை அலட்சியப்படுத்தவில்லை.

அலட்சியப்படுத்தாததற்கு இன்னொரு காரணம் உண்டு. மணி மண்டபம் எழுப்ப வேண்டுமென்பதில் இவர்களுக்கெல்லாம் எவ்வளவு அக்கறை உண்டோ அதே அக்கறை காமராஜருக்கு மணி மண்டபம் அமைப்பதில் எனக்கும் உண்டு என்பதால் நான் அதை அலட்சியப்படுத்தவில்லை. கடைசியாக மத்திய அரசில் ஏன் இந்த அனுமதி கிடைக்கவில்லை என்று பார்த்தபோது, இது கடற்கரைப்பகுதி, இங்கே உயரமான

கட்டடங்கள் எதுவும் கட்டக்கூடாது என்று தடை போடப்பட்டிருக்கிறது, அப்படி தடை விதிக்கப்பட்ட இடத்திலே எந்தச் சின்னமும் எழுப்பக்கூடாது. ஏற்கெனவே ஒரு காந்தி மண்டபம் இந்தப் பகுதியிலே எழுப்பியாகி விட்டது. இனிமேல் இந்த இடத்தில் எந்தச் சின்னமும் எழுப்பக் கூடாது என்று சொன்னார்கள்.

அதற்குப் பிறகு நான் 1996–இல் மீண்டும் நான்காவது முறையாக முதல் அமைச்சராக வந்த பிறகு, அந்த முயற்சியிலே ஈடுபட்டேன். மத்திய அரசுக்குப் பல கடிதங்கள் எழுதினேன். நான் எழுதிய கடிதங்கள் பற்றிய விவரங்களைத் தேதி வாரியாக வைத்திருக்கிறேன். அதற்குக் கடைசியாக வந்த பதில் இது தடை விதிக்கப்பட்ட இடம். அங்கே காமராஜருக்கு மண்டபம் கட்ட இயலாது என்று வருத்தத்தைத் தெரிவித்து இன்றுள்ள மத்திய அரசிடமிருந்து வந்தது. அதற்குப் பிறகுதான் பிரதமர் வாஜ்பாய் அவர்களைத் தொடர்பு கொண்டு இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசினேன். அவரும் அதனை மிகுந்த அனுதாபத்தோடு கேட்டார்.

நான் அவரிடம் இந்த மண்டபம் ஒன்றும் வானளாவ எழுப்பப்படுகின்ற மண்டபம் அல்ல. பக்கத்திலே இருக்கின்ற காந்தி மண்டபத்திற்கு இணையான உயரத்தோடு தான் இங்கே எழுப்பப்படவிருக்கின்றது. இந்த மண்டபம் ஒன்றும் அங்கேயுள்ள விவேகானந்தர் பாறையிலே உள்ள மண்டபத்தைவிட உயர்ந்த மண்டபம் அல்ல. அதைவிட உயரம் குறைவாகத்தான் இருக்கப் போகிறது. எனவே இந்த மண்டபத்திற்கு அவசியம் அனுமதி கொடுங்கள் என்று சொன்ன பிறகு உடனடியாக அதை ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்து இதற்கான அனுமதியை வழங்கியவர் இன்றைய பிரதமர் வாஜ்பாய் அவர்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நண்பர் குமாரதாஸ் இங்கே பேசும்போது இன்றைக்கு டெல்லியிலே இருப்பது வாஜ்பாய் அல்ல, கருணாநிதிதான் ஆட்சியிலே இருக்கிறார் என்றார். இந்த ஒரு விஷயத்திலே, காமராஜர் விஷயத்திலே அங்கே ஆட்சியிலே இருப்பது கருணாநிதிதான் என்பதை குமாரதாஸ் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பெருந்தலைவர் காமராஜர் வாழ்க்கை இளைஞர்களுக்குப் பாடமாக அமைய வேண்டிய ஒன்று**

பெருந்தலைவர் காமராஜருடைய வாழ்க்கை நம்முடைய நாட்டு இளைஞர்களுக்கெல்லாம் பாடமாக அமைய வேண்டிய ஒன்று. அரசியல்வாதிகள் எல்லாம் கற்றுக் கொள்ள வேண்டிய ஒரு வாழ்க்கைச் சரித்திரம் பெருந்தலைவர் காமராஜருடைய வாழ்க்கையாகும். அப்படிப்பட்ட தலைவருக்கு இன்றைக்கு நாம் செய்திருக்கின்ற இந்தக் கடமை மிகமிகச் சிறியதுதான் என்றாலுங்கூட அதை நான் பெரிதாகப் போற்றுவதற்குக் காரணம், பெருந்தலைவருக்காக நாம் எழுப்பியிருக்கின்ற சின்னம் என்பதினாலேதான்.

அவருடைய வாழ்க்கையிலே எத்தனையோ கட்டங்கள், என்னைப் பொறுத்தவரையில், என்னுடைய தலைவர் அண்ணாவைப் பொறுத்தவரையில், ஏன் அண்ணாவை உருவாக்கிய தந்தை பெரியாரைப் பொறுத்தவரையிலே கூட பல நேரங்களில் காமராஜரோடு ஒத்துப் போயிருக்கிறோம். பல நேரங்களிலே ஒத்துப்போக முடியாத சூழ்நிலை இருந்திருக்கின்றது. பெரியாருக்கே அப்படிப்பட்ட சூழ்நிலை இருந்திருக்கின்றது. காமராஜருக்காக காங்கிரசை ஆதரிப்பேன் என்று சொன்ன பெரியார்கூட காமராஜரை எதிர்க்க வேண்டிய கட்டாயம் சில நேரங்களில் ஏற்பட்டிருக்கின்றது.

ஆனால் எவ்வளவுதான் அரசியல் மாறுபாடுகள் இருந்தாலுங்கூட, அரசியலிலே கடைப்பிடிக்க வேண்டிய நாகரிகம், பண்பாடு இவைகள் எங்களைவிட்டு அகலாத காரணத்தால், பெரியாரை விட்டு அகலாத காரணத்தால், அண்ணாவைவிட்டு அகலாத காரணத்தால், பெருந் தலைவர் காமராஜரை விட்டு அகலாத காரணத்தால் நண்பர்களாகவே அரசியல் விரோதங்களைச் சமாளிக்கக் கூடிய அந்த நிலை எங்களிடையே இருந்தது என்பதை நான் எண்ணிப் பார்க்காமல் இல்லை.

இதே கன்னியாகுமரி மாவட்டத்தில் பெருந்தலைவர் காமராஜர் பாராளுமன்றத்திற்குப் போட்டியிட்ட நேரத்தில் இங்கே பேசிய மோசஸ் அவர்களின் தந்தையார் மத்தியாஸ் அவர்கள் இங்கே சுயேச்சையாகப் போட்டியிட்டபோது அவரை திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரித்தது என்பதும் அதற்காக நான் இங்கே முகாமிட்டுப் பணியாற்றினேன் என்பதும் மறக்க முடியாத சரித்திரம். ஆனால் அப்படி எதிர் முகாமிலே இருந்த நான் இன்றைக்குப் பெருந்தலைவர் காமராஜருக்கு மணி மண்டபம் அமைக்கிறேன் என்றால் அதற்கென்ன பொருள் ? இதுதான் தமிழ்நாட்டு அரசியலிலே நாம் கட்டிக் காப்பாற்ற வேண்டிய பண்பாடு, நாகரிகம் என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதுதான் அதற்குப் பொருள். அதைத்தான் இன்றைக்குச் செய்து கொண்டிருக்கிறோம்.

**இந்தச் சாமான்யனால் அந்தச் சாமான்யருக்கு மணிமண்டபம் எழுப்ப முடிந்தது**

காமராஜர் சாதாரண குடும்பத்திலே பிறந்தவர். ஒரு சாமான்ய குடும்பத்திலே பிறந்தவர். என்னைப் போல. நான் அவர் பிறந்த குடும்பத்தை விட இன்னும் சாமான்ய குடும்பத்திலே பிறந்தவன். அதனால்தான், இந்தச் சாமான்யனால் அந்தச் சாமான்யருக்கு மண்டபம் எழுப்ப முடிந்தது என்று நான் கருதுகிறேன். சாமான்ய குடும்பத்திலே பிறந்த காரணத்தால் தான் அவருடைய வாழ்நாள் எல்லாம் சாமான்ய மக்களுக்காகப் பாடுபட்டார். பணியாற்றினார். சாமான்ய மக்களை எண்ணிப் பார்த்தார். அவர்களுக்காக அவருடைய ஆட்சிக் காலத்திலே திட்டங்களைத் தீட்டினார்.

எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. 1951–ஆம் ஆண்டு வாக்கில் தமிழகத்திலே ஒரு பெரும் புரட்சி ஏற்பட்டது. அது என்ன புரட்சி என்பதை நான் உங்களுக்கு

விளக்க விரும்புகிறேன். இட ஒதுக்கீடு – வகுப்புவாரி பிரதிநிதித்துவம். அதற்கு வேட்டு வைக்கின்ற ஒரு முயற்சி உயர்நீதி மன்றத்தைத் தாண்டி, உச்சநீதி மன்றம் வரை சென்று, உச்சநீதிமன்றமும் இட ஒதுக்கீட்டிற்கு பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குச் சலுகை அளிக்க, உரிமை அளிக்க, இடங்களை ஒதுக்கித்தர, கல்வி வேலை வாய்ப்பிலே அவர்கள் முன்னேற வழி வகுக்க, உச்சநீதிமன்றமே இடையூறாக வந்து அரசியல் சட்டத்தை அதற்காகத் திருத்தித்தான் தீரவேண்டும் என்றதொரு நிலைமை ஏற்பட்ட போது தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் களம் புகுந்தார்கள். இருவரும் களம் புகுந்து, இட ஒதுக்கீட்டிற்கு ஏற்றவாறு அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்று குரல் கொடுத்தார்கள்.

அந்த நேரத்தில், அந்தக் குரலுக்கு ஆதரவாக காங்கிரஸ் பேரியக்கத்திலிருந்தும் சில குரல்கள் எழுந்தன. காங்கிரஸ் பேரியக்கத்திலே யார் யார் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தின் தலைவர்களோ, கே.டி.கோசல்ராம் போன்றவர்கள், ஆர்.வி.சாமிநாதன் போன்றவர்கள் எல்லாம் காங்கிரஸ் இயக்கத்திலிருந்தே அன்றைக்குப் பெரியாருக்கும், அண்ணாவிற்கும் ஆதரவாகக் குரல் கொடுத்தார்கள்.

அதையெல்லாம்விட வீரமிக்க குரலாக, வலிமை மிக்க குரலாக ஒரு குரல் ஒலித்தது. குரல் ஒலித்தது மாத்திரமல்ல, ஆக்க பூர்வமாகவே, பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்களைச் சந்தித்து அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று வாதாடி, போராடி வெற்றியைப் பெற்றது ஒரு குரல் என்றால் அதுதான் பெருந்தலைவர் காமராஜருடைய குரல் என்பதை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். இவைகள் எல்லாம், எங்களுக்கு அவரிடம் ஆயிரம் அரசியல் வேறுபாடுகள் இருந்தாலும், ஒரு அலாதியான தனியான பிரியத்தை ஏற்படுத்தியது.

அதனால் தான் 1952–ஆம் ஆண்டுவாக்கில் அவர் குடியாத்தத்தில் தேர்தலுக்கு நின்றபோது, கம்யூனிஸ்ட் கட்சியை எதிர்த்து அவர் அங்கே போட்டியிட்ட போது, அவர் மீண்டும் பதவிப் பொறுப்பையேற்று முதலமைச்சராக வரவேண்டும் என்பதற்காக – அவர் சட்டமன்றத்திற்கு வந்து விட்டார். ஆனால் சட்டமன்ற உறுப்பினராக ஆகவில்லை – சட்டமன்ற உறுப்பினராக ஆனால் தான் முதலமைச்சர் பதவி நீடிக்கும் என்பதற்காக குடியாத்தம் தொகுதியிலே வெற்றி பெற்ற காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் ராஜினாமா செய்துவிட்டு, அந்த இடத்திலே போட்டியிட்டார். அந்த நேரத்திலே காமராஜரும், அண்ணாவும், திராவிட இயக்கமும் காமராஜரும் எதிரும் புதிருமாக இருக்கிறார்கள். இருந்தாலும்கூட காமராஜரை ஆதரித்து அண்ணா அவர்கள் திராவிட நாடு பத்திரிகையிலே ''குணாளா, குலக்கொழுந்தே, உன் வெற்றிக்காக நாங்கள் பாடுபடுவோம்'' என்று அன்றைக்கே எழுதினார். இன்றைக்கும் அதைப் படித்துப் பார்க்கலாம். இவைகள் எல்லாம் எங்களுக்கு காமராஜரிடத்திலே உள்ள அன்பை, பாசத்தை மேலும் மேலும் நெருக்கத்தை ஏற்படுத்தக் கூடிய அளவிற்கு அமைந்தவைகளாகும்.

அவர் மொழிப் பிரச்சினையிலே எந்த அளவிற்கு உறுதியாக இருந்தார் என்பதற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அவர் காங்கிரஸ் கட்சியின் தலைவர் என்ற காரணத்தால் சிலவற்றை வெளிப்படையாகச் சொல்ல முடியாவிட்டாலுங்கூட, அவர் உணர்வு எப்படிப்பட்டதாக இருந்தது என்பதற்கு ஒரேயொரு எடுத்துக்காட்டைச் சொல்ல விரும்புகிறேன். சட்டப் பேரவையில் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகக் குழுவின் தலைவர், பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சர்.

அப்பொழுது சட்டப் பேரவையிலே காரசாரமாக ஒரு விவாதம் நடைபெறுகிறது. அதிலே கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர், என்னுடைய அருமை நண்பர் கல்யாணசுந்தரம் அவர்கள் ஆங்கிலத்தை கல்லூரிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் பாடமொழியாக வைக்கக்கூடாது. அகற்ற வேண்டும். தமிழ்தான் அரிச்சுவடியிலிருந்து முதுகலைப் பட்டப்படிப்பு வரை இருக்க வேண்டும் என்று பேசுகிறார். அண்ணா முன் வரிசையிலே அமர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறார். அண்ணாவிற்கு அடுத்த பின் வரிசையிலே நானும் பேராசிரியரும் அமர்ந்திருக்கிறோம். அப்பொழுது பெருந்தலைவர் காமராஜர் அவருடைய இடத்திலே இருந்தவாறே அண்ணாவைக் கைகாட்டி அருகே அழைக்கிறார். பிறகு காமராஜர் அங்கிருந்தவாறே



கைகாட்டி என்னையும் அழைக்கிறார். நான் போய் அண்ணாவிற்கும் வி.கே.ராமசாமி முதலியாருக்கும் இடையே அமருகிறேன். அப்பொழுது என்ன பேசினார்கள் தெரியுமா ?

பெருந்தலைவர் காமராஜர் அண்ணாவிடம், "என்ன தமிழ், தமிழ் என்று சொல்கிறீர்களே, நானென்ன தமிழுக்கு விரோதியா ? எனக்குத் தமிழ் பிடிக்காதா ?" என்று கேட்டார். அதற்கு அண்ணா, "என்ன சொல்கிறீர்கள் ?" என்றார். உடனே பெருந்தலைவர் காமராஜர் அவருடைய கொச்சைத் தமிழிலேயே "அவுங்க பேசுறாங்களே, இங்கிலீஷ் அறவே கூடாது. தமிழே எல்லா இடத்திலும் இருக்கணும்னு பேசுறாங்களே, இங்கிலீஷை அறவே அகற்றிட்டா என்னாகும்னு நினைக்கிறீங்க ? இங்கிலீஷை அறவே அகற்றிட்டா அந்த இடத்தில் இந்தி வந்து குந்திக்கும்னே" என்று சொன்னார்.

பின்னர் சபை கலைந்த பிறகு வீட்டிற்குத் திரும்பும்போது வழக்கம் போல் அண்ணா முன்னிருக் கையிலும் நான் அவருக்குப் பின்னாலும் அமர்ந்து சென்று கொண்டிருக்கிறோம். அண்ணா திரும்பிப் பார்த்து என்னை அழைத்து "எவ்வளவு பெரிய மொழிப் பிரச்சினையை ஒரே வார்த்தையிலே காமராஜர் அவருடைய பாஷையிலே சொல்லிட்டார், பார்த்தியா ? என்றார். அதாவது ஆங்கிலத்தை அறவே அகற்றிவிட்டால் அந்த இடத்திலே இந்தி வந்து உட்கார்ந்து விடும் என்கிற பயம் பெருந்தலைவர் காமராஜருக்கு இருந்தது என்றால் அதற்குக் காரணம் இந்தி திணிக்கப்படக் கூடாது என்பதும் அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொடியைப் பிடித்துக் கொண்டு அதைச் சொல்லவில்லையே தவிர, அவருடைய இதயத்திலே அந்த எண்ணம் இருந்தது என்பதற்கு இது ஒரு சான்றாகும்.

> "குணாளா, குலக்கொழுந்தே, உன் வெற்றிக்காக நாங்கள் பாடுபடுவோம்" என்று அன்றைக்கே எழுதினார் அண்ணா.

**தமிழ் - தமிழர்களுக்கு ஆபத்து வரக்கூடாது என்பதில் காமராஜருக்கு அழுத்தமான கருத்துண்டு**

இவைகளையெல்லாம் அவர் இன்றில்லை என்பதால் நான் சொல்கின்ற வார்த்தைகள் அல்ல. அவர் உயிருடன் இருக்கும் போதே மேடைகளில் நான் பேசியதைத்தான் இப்போதும் உங்கள் முன்னால் வெளியிட்டிருக்கிறேன். ஏனென்றால் ஒருவர் மறைந்த பிறகு எதுவேண்டுமென்றாலும் அவரைப் பற்றிச் சொல்லலாம் என்பார்கள். நான் அப்படிச் சொல்லவில்லை. அவர் இருந்தபோதே சொன்ன வார்த்தைகளைத்தான் இப்போதும் சொல்லியிருக்கிறேன். அவருக்கு மொழிப் பிரச்சினையிலே தமிழுக்கு, தமிழர்களுக்கு ஆபத்து வரக்கூடாது என்பதிலே அழுத்தந்திருத்தமான கருத்து உண்டு.

அதைப்போலவே சமுதாயப் பிரச்சினையிலே இட ஒதுக்கீட்டிலே பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பின்தங்கிப் போய் விடக்கூடாது என்பதிலே அழுத்தந்திருத்தமான கருத்து உண்டு. அப்படிப்பட்ட ஒரு பெருந்தலைவரைத்தான் நாம் இழந்தோம். இதையெல்லாம் விட மேலாக இந்தியாவிலே ஜனநாயகம் கட்டிக் காப்பற்றப்பட வேண்டும் என்பதிலே அவருக்கு உணர்வு பூர்வமான கருத்து உண்டு. அதனால் தான் நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்ட போது துடித்தார். துவண்டார். அந்தக் காரணத்தினாலேயே உடல் நலிவுற்றுப் படுத்தார். படுத்த படுக்கையானார். நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டது. அப்போது திருத்தணிக்குப் பக்கத்திலே ஒரு கூட்டத்திலே பேசிக் கொண்டிருந்தார். நெருக்கடி நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னவுடன் அவர் சொன்ன வார்த்தை "தேசம் போச்சு, தேசம் போச்சு" என்பதுதான். அந்த அளவிற்கு ஜனநாயகத்தை மதித்தார். சர்வாதிகாரத்தை வெறுத்தார். அப்படிப்பட்ட ஜனநாயக சீலர், சர்வாதிகார விரோதி, சமுதாயக் காவலர், சாமான்ய மக்களுக்காக வாழ்ந்த அந்தப் பெரியவர், பெருந்தலைவர் இன்றில்லை என்றாலும்கூட அவருக்காக இங்கே அமைக்கப் பட்டிருக்கின்ற மணி மண்டபம் மாத்திரமல்ல, அவருக்காக அமைக்கப்பட்டிருக்கின்ற நினைவுச் சின்னங்கள் அத்தனையும் அவர் புகழ் பாடும். அவரைப் போல் வாழ வேண்டும் என்ற எண்ணத்தை இளைஞர்களுக்குத் தோற்றுவிக்கும் என்ற நிறைந்த நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**அடுத்த ஆண்டு மருத்துவக் கல்லூரிக்கு நானே அடிக்கல் நாட்டுவேன்**

மருத்துவக் கல்லூரி கோரிக்கை ஒன்று இங்கே வைக்கப்பட்டது. அதிலும் குறிப்பாக சட்டமன்ற உறுப்பினர்கள் மாத்திரமல்ல, நேற்றுதான் அமைச்சராக ஆகியுள்ளவர் கூட மருத்துவக் கல்லூரி அமைக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். நான் ஏற்கெனவே அடுத்து வேலூருக்கு மருத்துவக் கல்லூரி, அதற்கடுத்து கன்னியாகுமரிக்கு மருத்துவக் கல்லூரி வரும் என்று சொல்லியிருக்கிறேன். இந்த ஆண்டே வருவதற்கான முயற்சிகளில் நாங்கள் ஈடுபட்டாலும் கூட, அதிலே இருக்கின்ற பல்வேறு விதமான ஆவணங்கள், அதற்காகப் பெற வேண்டிய அனுமதிகள், உரிமைகள் இவைகள் எல்லாம் இடையூறாக இருக்கும் என்பதால் நான் உங்களுக்கு உறுதியாகச் சொல்கிறேன் – அடுத்த ஆண்டு கன்னியாகுமரிக்கு மருத்துவக் கல்லூரி நிச்சயமாக வரும். அதெப்படி அடுத்த ஆண்டு தேர்தல் வருமே என்று நினைப்பீர்கள். அதற்குப் பிறகும் வந்து நானே அடிக்கல் நாட்டுவேன் என்று கூறி விடைபெறுகிறேன்.

*– கன்னியாகுமரியில் காமராஜர் மணிமண்டபத்தை 2-10-2000 அன்று திறந்துவைத்து முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரை.* ☐




இந்த இனிய விழா நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு தூத்துக்குடி மாவட்டத்தில் வாழ்கின்ற பொதுமக்களாகிய உங்களையெல்லாம் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

இன்றைய தினம் திட்டப்பணிகள் என்ற அளவில் மூன்று கோடியே ஒரு இலட்சத்து 39 ஆயிரம் ரூபாய் செலவில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் இந்த விழாவில் வழங்கப்படுகிறது.

12 கோடியே 6 இலட்சத்து 82 ஆயிரம் ரூபாய் செலவில் நிறை வேற்றப்பட்டுள்ள 30 திட்டப் பணிகளும், கட்டடங்களும் மக்கள் பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளன. 17 கோடியே 89 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்புடைய பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கற்கள் நாட்டப்படுகின்றன.

ஆக மொத்தம் இன்றைக்கு 32 கோடியே 98 இலட்சத்து ஒரு ஆயிரம் ரூபாய் மதிப்புடைய பல்வேறு திட்டப் பணிகள் இந்த மாவட்டத்திலே செயலாக்கம் பெறுகின்றன என்ற மகிழ்ச்சிகரமானத் தகவலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்குத் தூத்துக்குடியில் தொடங்கி வைக்கப் படும் மருத்துவக் கல்லூரி தமிழகத்தின் 11–வது அரசு மருத்துவக் கல்லூரியாகும். இதைத் திறந்து வைப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி யடைகிறேன். ஏனென்றால் இந்த அரசு தொடங்கி வைக்கின்ற மூன்றாவது மருத்துவக் கல்லூரியாகும் இந்தக் கல்லூரி.

மூன்றாவது மருத்துவக் கல்லூரி என்று சொன்னதற்குக் காரணம் தூத்துக்குடியிலே தொடங்கி வைக்கின்ற மருத்துவக் கல்லூரியை அடுத்து வேலூரிலே ஒரு மருத்துவக் கல்லூரி தொடங்கி வைக்கப்படவுள்ளது. ஏற்கெனவே திருச்சியில் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் பெயரால் ஒரு மருத்துவக் கல்லூரி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ 15 ஆயிரம் மாணவர்கள் மருத்துவக் கல்லூரியில் சேர விண்ணப்பம் செய்கிறார்கள். ஆனால் அதில் 1,255 பேருக்கு மாத்திரமே இடம் கிடைக்கிறது. விண்ணப்பிக்கின்றவர்களுடைய தொகைக்கும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றவர்களுடைய தொகைக்கும் இடையே மலைக்கும் மடுவிற்கும் உள்ள வித்தியாசம் இருக்கிறது என்பதை நாம் உணர வேண்டும். இதை உடனடியாகத் தீர்த்து வைக்க முடியாது என்பதற்காகத் தான் மெல்ல மெல்ல அரசின் சார்பில் கல்லூரிகளைத் திறந்து கொண்டிருக்கிறோம்.

**நூறு பேருக்கு ஒரு மருத்துவர்**

அதிக எண்ணிக்கையில் தமிழக மாணவர்கள் மருத்துவம் பயில வசதிகளைச் செய்து தரவேண்டும் என்று செயல்பட்டாலுங்கூட இருக்கின்ற நிதித் தட்டுப்பாடு, வேறு வகையான இடர்ப்பாடுகள் குறுக்கே



நிற்கின்றன என்பதை நான் உங்களுக்கு உணர்த்தக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

தமிழ்நாட்டின் மக்கள் தொகை ஏறத்தாழ ஆறுகோடி. சரியாகச் சொல்ல வேண்டுமேயானால் இன்றைய கணக்குப்படி ஆறு கோடியே 17 இலட்சத்து 74 ஆயிரம் பேர். தேசிய அளவில் பார்த்தால் 3,500 பேருக்கு ஒரு மருத்துவர் என்ற நிலை தற்போது உள்ளது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் 1,535 பேருக்கு ஒரு மருத்துவர் என்ற நிலை உள்ளது.

இது அகில இந்தியாவுடன் ஒப்பிடும் போது ஓரளவு திருப்தி தரக்கூடியது என்றாலுங்கூட, என்னுடைய ஆசை, நூறு பேருக்கு ஒரு டாக்டர் என்ற அளவிற்கு மருத்துவத்துறையில் நாம் வளர்ச்சியைக் காண வேண்டும். அதை நோக்கி நாம் வேகமாக முன்னேற வேண்டும், மருத்துவ உதவி தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் கிடைக்க வேண்டுமேயானால் நான் சொல்கிற இந்தக் குறிக்கோள் நிறைவேற்றப்பட வேண்டும்.

மருத்துவர்கள் நியமனங்கள் என்று எடுத்துக் கொண்டால் கடந்த காலத்திலே இருந்த அரசும், இப்போது நான்கரை ஆண்டுகாலமாக உங்களால் தேர்ந்தெடுக்கப் பட்டு நடைபெற்று வருகிற இந்த அரசும் ஆற்றியிருக்கின்ற பணிகளுக்கிடையே உள்ள வேறுபாட்டை நீங்கள் உணர வேண்டும்.

கடந்த கால அரசு ஐந்தாண்டுகளில் மருத்துவ மனைகளில் நியமனம் செய்த டாக்டர்களின் எண்ணிக்கை **1,327.** இந்த அரசு இந்த நான்கரை ஆண்டுக்காலத்தில் எத்தனை டாக்டர்களை நியமித்திருக்கிறது என்று பார்த்தால் **2,641** மருத்துவர்களாகும்.

கடந்த கால அரசு ஐந்தாண்டுகளில் மருத்துவ மனைகளில் நியமனம் செய்யப்பட்ட செவிலியர் நர்ஸ்கள் **786** பேர். இந்த அரசு நான்கரை ஆண்டுக்காலத்தில் நியமனம் செய்த நர்ஸ்களின் எண்ணிக்கை **1,570.**

ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்டுவதில் ஒரு ஒப்பீட்டை நீங்கள் பார்ப்பீர்களேயானால் முந்தைய அரசு ஐந்தாண்டுகளில் **213** ஆரம்பச் சுகாதார நிலையங்களை **15** கோடியே **92** இலட்சத்து **75** ஆயிரம் ரூபாய் செலவில் கட்டியது.



**ரூ.61 கோடி செலவில் மருத்துவக் கட்டடங்கள்**

**1996**–க்குப் பிறகு இந்த நான்கரை ஆண்டுக் காலத்தில் **653** ஆரம்பச் சுகாதார நிலையங்களும், **200** துணை சுகாதார மையங்களுக்குமாக மொத்தம் **853** சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்ட மொத்தம் **61** கோடியே **16** இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டு செலவிடப்படுகிறது.

இதிலே இதுவரை **608** ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கும், **191** துணை சுகாதார மையங்களுக்கு மாக மொத்தம் **799** சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

மருத்துவப் பயிற்சி பெறுகிற மாணவர்களுக்கு முன்பிருந்த உதவித் தொகையை இந்த அரசு எந்த அளவிற்குக் கட்டம் கட்டமாக உயர்த்தியிருக்கிறது என்று நான் விளக்கிட விரும்புகிறேன். பயிற்சி மருத்துவர்களின் மாத ஊதியத்தை **1.3.1990** முதல் நான் மூன்றாவது முறையாக முதலமைச்சராக இருந்த அந்தக் காலத்தில் **750** ரூபாய் என்றிருந்ததை **1,000** ரூபாயாக உயர்த்தியது இந்த அரசு.

**1996**–க்குப் பிறகு இதனை இரண்டு முறை உயர்த்தியிருக்கிறோம். **1.8.1997** முதல் மருத்துவ பயிற்சி மாணவர்களின் மாத ஊதியம் **1,550** ரூபாயிலிருந்து **2,250** ரூபாயாக உயர்த்தினோம். அதன் பிறகு **1.3.2000** முதல் **2,250** ரூபாயிலிருந்து **3,027** ரூபாயாகவும் இந்த அரசால் உயர்த்தப்பட்டது.

இதைப்போல பணிசாரா முதல் ஆண்டு பட்ட, பட்டய மேற்படிப்பு மாணவர்களுக்கு **1.8.1997** முதல் **1,600** ரூபாயிலிருந்து **2,500** ரூபாய் என்று மாத ஊதியம் இந்த அரசால் உயர்த்தப்பட்டது.

இப்படி எல்லா வகையிலும் பயிற்சி மருத்துவ மாணவர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு அவர்களை மகிழ்ச்சியோடு வைத்திருக்கிறது இந்த அரசு.

இந்த அரசு எத்தகைய நல்ல காரியங்களைச் செய்து வருகிறது என்பதற்கு ஒரேயொரு எடுத்துக்காட்டின் மூலமாக என்னால் விளக்க முடியும்.

இன்று மருத்துவக் கல்லூரியின் தொடக்க விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதைப்போல பல இடங்களில் மருத்துவமனைகளையும் திறந்து வைக்கின்றோம். மருத்துவமனை திறப்பது, மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களைத் தயாரிப்பதெல்லாம் அவர்கள் டாக்டர்களாக மாறி, மருத்துவமனைகளிலிருந்து மக்களுக்குப் பணியாற்ற வேண்டுமென்பதற்காகத்தான். அதிலே கூட ஒரு பெரிய மாற்றத்தைச் செய்திருக்கிறது இந்த ஆட்சி. மக்கள் மருத்துவமனைகளுக்கு வந்து தங்களுடைய உடல் நலத்தைப் பேணிப் பாதுகாத்துக் கொள்வது என்று ஒன்று, மருத்துவர்கள் மக்களை நாடிச் சென்று எப்படி இருக்கிறீர்கள் என்று விசாரித்து அவர்களுக்கு உடல் நலத்தைப் பாதுகாப்பது என்பது மற்றொன்று. இந்த அரசு இந்த இரண்டு காரியத்தையும் இன்றைக்குச் செய்து கொண்டிருக்கிறது.

மருத்துவமனைக்கு வருகின்ற மக்களுக்கு சிகிச்சை அளிக்கின்ற அந்தக் காரியத்தைத் தொடர்ந்து பல ஆட்சிகளிலே நடைபெற்ற அந்தக் காரியத்தைச் சீரும், சிறப்புமாக, செம்மையாக இந்த ஆட்சி இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

அதைத் தொடர்ந்து ஆங்காங்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் மருத்துவ முகாம்களை அமைத்து ஏழை–எளிய கிராமப்புறத்து மக்கள் அவர்களுக்கு உடல் நலம் இல்லை என்றால் அல்லது தங்களது உடல் எப்படி இருக்கிறதென்று சோதித்துக் கொள்ள விரும்பினால், அந்தப் பரிசோதனைக்கு எங்கே செல்வதென்று தெரியாமல் பட்டிக்காட்டில், குக்கிராமத்தில் இன்றைக்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்களே, அந்த மக்களை மருத்துவர்கள் நாடிச் சென்று முகாம்களைப் போட்டு அங்கே வருகின்ற மக்களுக்கு உடனுக்குடன் அதைத் தீர்த்து வைக்கக்கூடிய வியாதியாக இருந்தால் தீர்த்து வைப்பதற்கான மருந்தைத் தந்து, உடனடியாக தீராது என்றால் அதற்கான வழிமுறைகளைச் சொல்லி வேறு பெரிய மருத்துவமனைகளுக்கு அவர்களை அனுப்பி வைத்து, சொல்லப்போனால், இரண்டு, மூன்று இடங்களில் இருதய ஆபரேஷன் கூட நடத்தப் பட்டிருக்கின்றன. அந்த அளவுக்குக் கிராமப்புறத்து மக்கள் இன்றைக்கு தாங்களே மருத்துவர்களை நாடிச் செல்கின்ற அந்தச் செயல்களில் இருந்து விடுபட்டு மருத்துவர்கள் அவர்களை நாடிச் சென்று சிகிச்சை அளிக்க வேண்டும் என்கின்ற ஒரு முறையை 'வருமுன் காப்போம்' திட்டத்தின் மூலம் இன்றைக்கு நாம் நிறைவேற்றுகிறோம் என்றால் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத முறையை இந்த ஆட்சியிலே தமிழ்நாட்டிலே தான் நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம் என்பதை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

**ஓராண்டில் 6,523 மருத்துவ முகாம்கள்**

இந்தத் திட்டத்தின்படி இதுவரையிலே இந்த ஓராண்டில் **6,523** முகாம்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. அதிலே தங்களைப் பரிசோதனை செய்து கொண்ட மக்கள் தொகை **63** இலட்சத்து **14** ஆயிரத்து **844** பேர். மேல் சிகிச்சைக்குப் பெரிய மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமென்று அறிவுறுத்தப் பட்டவர்களின் எண்ணிக்கை **4** இலட்சத்து **17** ஆயிரத்து **261** பேர். இந்தப் பயனாளிகளுக்கு அரசின் சார்பில் இலவசமாகத் தரப்பட்ட மருந்துகளின் மதிப்பு **3** கோடியே **24** இலட்சத்து **85** ஆயிரத்து **787** ரூபாய். மனிதர்களுக்கு மாத்திரமல்ல, ஆடு, மாடுகளுக்குக் கூட "கால்நடை பாதுகாப்புத் திட்டம்" என்ற ஒரு திட்டத்தின்படி இதைப் போன்ற முகாம்கள் அமைத்து சேவை செய்கிறது. பணியாற்றுகின்றது; தொண்டு புரிகின்றது. இந்த அரசு என்பதையும் உங்களுக்குத் தெரிவித்து இப்படி நன்மைகளையே நாடி நாடிச் செய்கிற இந்த அரசு உங்கள் அரசு.

*– தூத்துக்குடியில் மருத்துவக் கல்லூரியை 1–10–2000 அன்று திறந்துவைத்து முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரையிலிருந்து...*

★ ★ ★

## அமைதி சாசனம்

*ஐக்கிய நாட்டுப் பொதுசபை 2000வது ஆண்டை அனைத்து நாட்டு கலாச்சார அமைதி ஆண்டாக அறிவித்து, 2000 முதல் 2010 வரை உலக குழந்தைகள் நலனுக்காக அமைதி மற்றும் அஹிம்சை கடைபிடிக்கும் ஆண்டாக அறிவித்துள்ளது.*



*இதையொட்டி யுனெஸ்கோ தனது உறுப்பு நாடுகளுக்கு நோபல் பரிசு பெற்றவர்களால் தயாரிக்கப்பட்ட இந்த அமைதி சாசனத்தின் முக்கியத்துவத்தை அனைத்து தரப்பு மக்களும் உணரும் வகையில் அனைத்து நாட்டுத் தலைவர்களும் முக்கிய பிரமுகர்களும் கையொப்பமிட்டு வருகிறார்கள். தமிழகத்தில் காந்தி ஜெயந்தி விழாவின் போது 2.10.2000 அன்று காலை சென்னையில் காந்தி சிலை அருகே மேதகு தமிழக ஆளுநர் அவர்களும், சென்னை மாநகர மேயர் மு.க.ஸ்டாலின் மற்றும் அமைச்சர் பெருமக்களும் இந்த அமைதி சாசனத்தில் கையொப்ப மிட்டார்கள். தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 2.10.2000 அன்று காலை தூத்துக்குடியில் அமைதி சாசனத்தில் கையொப்பமிட்டார். தமிழக சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு.பி.டி.ஆர்.பழனிவேல்ராஜன் அவர்கள் மதுரையில் இந்த அமைதி சாசனத்தில் கையொப்பமிட்டார்.*

# திட்டங்களை வகுக்க - அலுவலர்கள் கூடி முடிவு செய்ய ஆட்சியர் அலுவலக கட்டடங்கள்

## - முதலமைச்சர் கலைஞர்

*திருவள்ளூரில் ரூ.5.61 கோடி மதிப்பில் கட்டப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டிடத்தை முதல்வர் கலைஞர் அவர்கள் 7.10.2000 அன்று திறந்து வைத்தார்.*

*இவ்விழாவில் குத்தம்பாக்கம் பெரியார் நினைவு சமத்துவபுரம் மற்றும் புதிய கட்டிடங்களையும், திருவள்ளூர் நகர குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தையும், புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளையும், வீட்டு மனைப் பட்டாக்களையும் வழங்கி முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து...*





"திருவள்ளூருக்கு நான் வரும்போதெல்லாம் மழை பொழிகிறது. இனிமேல் இங்கே மழை வேண்டுமென்றால் என்னை அழையுங்கள். அந்த அளவிற்கு திருவள்ளூருக்கும் மழைக்கும் எனக்கும் ஒரு ராசி இருப்பதை என்னால் உணர முடிகின்றது.

இங்கே திராவிட கட்டிடக் கலை அடிப்படையில் திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் அமைக்கப்பட்டிருப்பதைக் கண்டு நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். தமிழ்நாட்டில் இந்த நான்காண்டு காலத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கான அலுவலகக் கட்டிடங்கள் பத்து கட்டப்பட்டு திறக்கப்பட்டுள்ளன. இன்னும் தேனியில் மட்டும் கட்டிடம் கட்டப்பட்டு என்னுடைய தேதிக்காக காத்திருக்கிறது. விரைவில் தேதி கொடுக்கவிருக்கிறேன்.

ஏதோ ஒரு கட்டிடம் இங்கே இருக்க வேண்டும் என்பதற்காக ஒரு கட்டிடம் கட்டப்பட்டு திறந்து வைக்கப்படவில்லை. செம்மையாக, சீராகப் பணிகளை வகுத்துக் கொண்டு ஆற்ற வேண்டுமேயானால், அதிகாரிகள் கலந்து பேசி என்னென்ன காரியங்களை எப்படியாற்ற வேண்டும் என்று திட்டங்களை வகுத்துக் கொண்டு காரியங்களை ஆற்றுவதற்கு இதுபோன்ற ஒரு கட்டிடம் தேவை. இந்தக் கட்டிடங்களிலே அமர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர்களும் மற்றும் அதிகாரிகளும் ஆற்றுகின்ற பணிதான் இந்த மாவட்டத்து மக்களுக்குப் பல நன்மைகளைச் செய்து தருகின்ற தொண்டாக அமையவிருக்கின்றது. அந்த வகையில் இந்தக் கட்டிடம் இவ்வளவு சீரும் சிறப்புமாக, இவ்வளவு எழுச்சியோடு எழிலார்ந்த முறையிலே கட்டப்பட்டுக் காட்சி தருவதைக் காணும் போது நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த நிகழ்ச்சியோடு மற்றொரு சமுதாயப் புரட்சி நிகழ்ச்சி 77–வது சமத்துவபுரம் இன்றைக்கு இந்த மாவட்டத்தில் திறக்கப்பட்டுள்ளது.

> விவேகம் என்னும் வெள்ளி முளைத்து
> சாதி–மதப்பித்து எனும் சனி தொலைந்தால்தான்
> சமத்துவம் என்னும் ஞாயிறு தோன்றும்.
>
> - கலைஞர்

**பெரியாருடைய நினைவைப் போற்றும் சமத்துவபுரங்கள்**

உங்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாட்டில் 77 இடங்களில் பெரியாருடைய நினைவு போற்றப்படும் வகையில் சமத்துவபுரங்கள், ஏதோவொரு அட்டையிலோ அல்லது கல்தூணிலோ பெரியார் என்று எழுதி வைத்து அவருடைய நினைவைப் போற்றவில்லை.

எந்தவொரு கொள்கைக்காக அவர் காலமெல்லாம் பாடுபட்டாரோ, சாதிகள் ஒழிந்து, சாதி சமய வேறுபாடுகள் ஒழிந்து அனைவரும் சமமாக வாழ வேண்டும் என்ற கொள்கைக்காகப் பெரியார் பாடுபட்டார். அப்படி எந்தக் கொள்கைக்காகப் பாடுபட்டாரோ அந்தக் கொள்கையை உள்ளடக்கிய சமத்துவபுரம், ஆதிதிராவிடர்கள் மற்றும் வெவ்வேறு வகுப்பினர், அவர் உயர் வகுப்பார் என்று சொல்லிக் கொண்டாலும் அல்லது நடுத்தர வகுப்பார் என்று சொல்லிக்கொண்டாலும் எல்லா வகுப்பினரும் கலந்த நூறு குடும்பங்கள் ஒற்றுமையாக வாழக்கூடிய சூழ்நிலை. நூறு குடும்பங்கள் கொண்ட பல்வேறு வகுப்பினர் சமத்துவபுரங்களிலே வாழ்ந்தாலும், அனைவருக்கும் அங்கே ஒரேயொரு சுடுகாடு, இடுகாடுதான் என்கிற அளவிலே ஒரு புரட்சி. அவர்களிடம் மத வேறுபாடுகள் இல்லை, சாதி வேறுபாடுகள் இல்லை என்ற ஒரு அருமையான கொள்கை முழக்கம்.

அதோடு வசதி வாய்ப்புகளையும் அவர்களுக்குத் தேடித்தந்து திருமணம் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்காக திருமண மண்டபங்கள், குழந்தைகள் படிப்புக்குப் பள்ளிகள், தேவைக்கேற்ப மருத்துவமனைகள் என்ற இவ்வளவு வசதியோடு தந்தை பெரியார் அவர்களின் நினைவாக ஒரு சமத்துவபுரம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அதிலும் தமிழ்நாட்டில் இதுவரை 76 சமத்துவபுரங்கள் திறக்கப்பட்டு இன்று 77வது சமத்துவபுரம் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றது.

**2 மாதங்களுக்குள் 100ஆவது சமத்துவபுரம் திறக்கப்பட வேண்டும்**

இன்றும் இரண்டு மாதங்களுக்குள்ளாக 100 சமத்துவபுரங்கள் கட்டப்பட வேண்டும். நூறாவது சமத்துவபுரத்தை திறந்து வைக்கும் வாய்ப்பை இந்தச் சமத்துவபுரங்களையெல்லாம் சீரோடும், சிறப்போடும் கட்டி வருகின்ற என்னுடைய அருமைத் தம்பி உள்ளாட்சித்துறை அமைச்சர் கோ.சி.மணி அவர்கள் எனக்கு விரைவில் அளிப்பார் என்ற நம்பிக்கையோடு நான் உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன்.

இன்றைய தினம் தமிழகத்திலே நான்கரை ஆண்டுக் காலத்திலே நாங்கள் ஆற்றியிருக்கின்ற பணிகளையெல்லாம் நீங்கள் அறிவீர்கள். வருமுன் காப்போம் என்ற திட்டத்தால் எவ்வளவு பயன் கிடைத்திருக்கின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள். உழவர் சந்தையினால் எவ்வளவு மக்கள் உற்சாகம் பெற்றிருக்கிறார்கள் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். கால்நடை பாதுகாப்புத் திட்டத்தால் விவசாயப் பெருமக்கள் இன்றைக்கு திருப்தி அடைந்திருக்கிறார்கள் என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

நமக்கு நாமே, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், இவைகளையன்னியில் உள்ளாட்சி மன்றத் தேர்தல் நடைபெற்று உள்ளாட்சி மன்றங்கள் எல்லாம் அதிகாரம் பெற்று இயங்குகின்ற காரணத்தினால் எல்லா உள்ளாட்சி மன்றங்களிலும் நடைபெறுகின்ற வேலைகளை நீங்கள் காண்கிறீர்கள். எங்கேயாவது ஒரு இடத்தில் ஒவ்வொரு ஊரிலும் ஒரு பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்று திருப்தி அடைகின்ற அளவிற்குத் தமிழ்நாடு இன்றைக்கு இருக்கின்றது.

தொடர்ந்து இந்தப் பணிகள் எல்லாம் நடைபெற உங்களுடைய ஆக்கமும் ஊக்கமும் எங்களுக்குத் தேவை என்பதை எடுத்துரைத்து இன்னொரு முறை வருகிறேன். மழை இல்லாமல் வருகிறேன் என்று உங்களுக்கு உறுதியளித்து இந்த நிகழ்ச்சியிலே இவ்வளவு மகிழ்ச்சியுடன் பல்லாயிரக்கணக்கில் கலந்து கொண்டுள்ள உங்களுக்கெல்லாம் என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்து இந்த அளவில் விடைபெற்றுக் கொள்கிறேன். ★

- *தீண்டாமை, இந்து மதத்தின் பகுதியல்ல, அதில் புகுந்துள்ள ஒரு கறை, குறை அல்லது பாவமே. அதைப் போக்குதல் ஒவ்வொரு இந்துவின் தர்மமும் சிறந்த கடமையுமாகும்.*



- *தீண்டாதார் என்று கருதப்படுவோரும் நான்கு வருணங்களைச் சேர்ந்தவர்களே.*
- *நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகக் கொடுமைக்குள்ளாகி, பண்புள்ள வருணத்தாரின் சேர்க்கையின்றி வாழ்ந்தமையால் தீண்டாதார் நிலை மிகவும் பரிதாபகரமாய் இழிவுற்றுப் போயிற்று; அவர்களைக் கைதூக்கி விட்டு மற்ற வருணத்தாருடன் சேர்க்கும் பொருட்டு பண்புற்ற இந்துக்கள் பெரிதும் முயல வேண்டும். ஆகையால் தீண்டாதார் முதலிய மற்றத் தாழ்த்தப்பெற்ற, முன்னேற்றமெய்தாத சமூகங்களின் ஊழியத்தின் பொருட்டு தம் வாழ்க்கையை அர்ப்பணம் செய்தலும், அப்பணிக்கு தாராளமாய் உதவுதலும் இந்த யுகத்தில் பண்புள்ள இந்துக்களின் மிகத்தூய கடமையாகும்.*

**- காந்தியடிகள்**

*காந்தீய நவநீதம் நூலிலிருந்து...*

# திருவள்ளூர் மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

**கா**ஞ்சிபுரம் மாவட்டத்தின் பகுதியாக இருந்த திருவள்ளூர் மாவட்டம் **1.1.97** முதல் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆணையின்படி தனி மாவட்டமாகச் செயல்படத் தொடங்கியது.

இம்மாவட்டத்தில் திருவள்ளூர், திருத்தணி மற்றும் பொன்னேரி ஆகிய வருவாய் கோட்டங்களும் – திருவள்ளூர், அம்பத்தூர், பூவிருந்தவல்லி, திருத்தணி, ஊத்துக்கோட்டை, பொன்னேரி, கும்மிடிபூண்டி மற்றும் பள்ளிப்பட்டு ஆகிய **8** வருவாய் வட்டங்களும் – **6** நகராட்சிகளும், **19** பேரூராட்சிகளும், **14** ஊராட்சி ஒன்றியங்களும், **539** ஊராட்சி மன்றங்களும் உள்ளடங்கி உள்ளன.

### மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகம்

மாவட்டம் உருவான முதலாண்டில் நிலம் தேர்வு செய்யப்பட்டு, இரண்டாம் ஆண்டில் நிலம் கையகப்படுத்தப்பட்டது. மூன்றாம் ஆண்டின் தொடக்கத்தில் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் திருவள்ளூரில் ரூ.**5.61** கோடி மதிப்பீட்டில் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாக கட்டுமானப் பணி **25.4.1999** அன்று தொடங்கப்பட்டது.

திராவிட கட்டடவியல் அடிப்படையில் கட்டப்பட்ட இந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடத்திற்குப் பிரதான நுழைவு வாயிலுடன் நான்கு இதர வாயில்களும் உள்ளன. இக்கட்டடத்தின் தரைதளம் **2,636** சதுர மீட்டர். முதல் தளம் **2,548** சதுர மீட்டர் இரண்டாவது தளம் **2,332** சதுர மீட்டர் என **7,516** சதுரமீட்டர் கொண்டதாக உள்ளது. மாநாட்டு கூடத்தின் கூரை பிரமிட் அமைப்பில் கட்டப்பட்டுள்ளது. **150** ஏக்கரில் அமைந்திடும் இந்த பெருந்திட்ட வளாகத்தில் காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகம், மாவட்ட நீதிமன்றம், போக்குவரத்துத்துறை, தீயணைப்புத்துறை, பொதுப்பணித்துறை, மாவட்ட விளையாட்டுக்குழு, வேலை வாய்ப்புத்துறை அலுவலகங்கள் தவிர காவல்துறை பயிற்சி மைதானம், போக்குவரத்துத்துறை சோதனை ஓட்டத் தடம் உட்பட பல்வேறு வசதிகள் ஒருங்கிணைந்து உருவாகி வருகிறது. இப்பெருந்திட்ட வளாகம் தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களால் **7.10.2000** அன்று திறந்து வைக்கப்பட்டது.



### அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

தேர்வு செய்யப்பட்ட கிராம ஊராட்சியில் அனைத்து அடிப்படை வசதிகள் மற்றும் ஊர் கட்டமைப்புகளை ஒருமுனைப்படுத்தி அக்கிராமங்களை சுயவளர்ச்சி பெற்ற



மற்றும் தன்னிறைவு பெற்ற நவீன கிராமமாக உருவாக்குவதே அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தனது சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒரு கிராம ஊராட்சியை சில நிபந்தனைக்குட்பட்டு தேர்வு செய்வர்.

திருவள்ளூர் மாவட்டத்தில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் 1997 முதல் 372 சாலைகள், 201 கட்டடங்கள், 162 குடிநீர்த் திட்ட பணிகள், 167 தெரு விளக்குகள் மற்றும் 283 இதர பணிகள் ரூ.1622 இலட்சம் மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

### நமக்கு நாமே திட்டம்

தங்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளை உருவாக்கித்தருவது அரசின் பாற்புட்டதே என்றில்லாமல், தாங்களே திட்டமிட்டு, அரசின் உதவி கொண்டு, தங்களின் பங்களிப்போடு, நிறைவேற்றிக் கொள்ள வாய்ப்பினையும் வழிவகையினையும் உருவாக்கித் தருவதுதான் நமக்கு நாமே திட்டம்.



இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்கு மொத்த மதிப்பிட்டில் 25 விழுக்காடு தொகையை பொதுமக்கள் தாங்களாகவே முன்வந்து உடல் உழைப்பாகவோ அல்லது பங்குதொகையாகவோ அளிக்கின்றார்கள்.

நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.309.55 இலட்சம் மதிப்பீட்டில் 56 கட்டடங்கள், 71 சாலைகள், 89 நீர் ஆதாரப் பணிகள், 16 குடிநீர் பணிகள், 1 சிறுபாலம் மற்றும் 222 இதர பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

### பெரியார் நினைவு சமத்துவபுரம்

இந்தியாவின் முன்னோடித் திட்டமான பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில்



ரூ.69.27 இலட்சம் மதிப்பீட்டில் சந்தான வேணுகோபாலபுரம் ஊராட்சியிலும், ரூ.83.19 இலட்சம் மதிப்பீட்டில் மப்பேடு ஊராட்சியிலும் உருவாக்கப்பட்ட பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டு பயனாளிகள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

“சமத்துவ புரங்கள் ஒன்றல்ல, இரண்டல்ல; தமிழ்நாடே சமத்துவபுரமாக ஆகட்டும்; இந்திய திருநாடே சமத்துவபுரமாக ஆகட்டும்” என்ற தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் விருப்பத்திற்கேற்ப அனைத்துப் பிரிவினரும் கூடிவாழும் வகையில் திருவள்ளூர் மாவட்டத்தில் மூன்று இடங்களில் சமத்துவ வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது. இதனை “சமத்துவபுரத்தருகே இன்னொரு சமத்துவபுரம்” என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பாராட்டியுள்ளார்கள். சந்தான வேணுகோபாலபுரம் சமத்துவபுரம் எதிரில் ரூ.4.63 இலட்சம் செலவில் 170 வீட்டுமனைகள் உருவாக்கப்பட்டு மற்றொரு சமத்துவபுரம் உருவாக வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதே போன்று மப்பேடு பெரியார் நினைவு சமத்தவபுரத்திற்கருகே ரூ.3 இலட்சம் மதிப்புள்ள 2.80 ஏக்கர் அரசு நிலத்தில் சமத்துவ அடிப்படையில் அனைத்து இனத்தவரும் இணைந்து வாழும் வண்ணம் 82 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு பயனாளிகள் குடியேறியுள்ளனர். மூன்றாவதாக திருத்தணி வட்டம் கார்த்திகேயபுரம் கிராமத்தில் ரூ.3.11 இலட்சம் மதிப்பீட்டில் 9 ஏக்கர் நிலத்தில் 240 பயனாளிகளுக்கு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் சமத்துவப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

### வருமுன் காப்போம்

ஏழை எளியோர் தங்களுக்கு ஏதாவது நோய் வந்து அதனால் வேதனையை தணித்துக் கொள்வதற்கு மட்டுமே மருத்துவர்களையும் அரசு சுகாதார நிலையங்களையும் நாடிச்செல்கின்றனர்.



பொதுவாக மக்களிடையே நிலவி வரும் இந்த மனோநிலையை மாற்றி நோய்கள் வருமுன் தடுக்கும் அணுகுமுறையை மக்களிடையே பரப்பி நல்ல ஆரோக்கியத்துடன் வாழ வேண்டும் என்ற

விழிப்புணர்வை ஏற்படுத்திடவும் நோய்த் தடுப்பு முறைகளை எளிய வகையில் விளங்க வைத்து பின்பற்றச் செய்திடவும், ஏழை, எளியோர்க்கு உயர்தர மருத்துவ சிகிச்சை இலவசமாக அளித்திடவும் "வருமுன் காப்போம்" திட்டம் முதலமைச்சர் அவர்களால் தமிழகத்தில் முதன்முறையாக திருவள்ளூர் மாவட்டம் பாடியநல்லூர் ஊராட்சியில் தான் முதலமைச்சர் அவர்களால் இத்திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 227 இலவச மருத்துவ முகாம்கள் நடைபெற்றுள்ளன. 2,64,135 நபர்கள் சிகிச்சை பெற்று பலன் பெற்றுள்ளனர். இதற்காக ரூ.15,94,793 மதிப்பு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன. 24,993 நபர்கள் மேல் சிகிச்சைக்குப் பரிந்துரைக்கப்பட்டு அவர்களுக்கு அரசு மருத்துவமனைகளில் மேல் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

## கால்நடை பாதுகாப்புத் திட்டம்

தமிழ்நாட்டில் உள்ள கிராமப் பகுதியில் வளர்க்கப்படும் கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களுக்கு முறையான சிகிச்சை அளித்து பாதுகாக்கவும் நோய்கள் வராமல்



தடுத்திடவும் இனவிருத்தி அதிகரிக்கவும் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டம் சிறப்பு கால்நடை பாதுகாப்புத் திட்டமாகும்.

இத்திட்டம் இம்மாவட்டத்தில் 27.1.2000 அன்று திருவள்ளூர் ஒன்றியம் காக்களூர் ஊராட்சியில் தொடங்கப்பட்டது. இதுவரை நடைபெற்ற 113 முகாம்களில் 3,80,000 கால்நடைகள் பயனடைந்துள்ளன. இதன் மூலம் கால்நடைகளுக்கு ரூ.5,61,075 மதிப்புள்ள மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன.

## உழுவோர் உயர – நுகர்வோர் மகிழ உழவர் சந்தை

உழவர்கள் தங்களுடைய உற்பத்திப் பொருட்களை எந்தவிதமான இடைத்தரகர்கள் குறுக்கீடும் இல்லாமல் விற்பனை செய்வதற்கு வசதியாக உழவர் சந்தை என்கின்ற நேரடி விற்பனை முறை செயல்படுத்தப்படுகிறது. இதன்படி உழவர்களே தங்கள் விளைபொருட்களை தாங்களே விற்பனை செய்யவும்



அதன் மூலம் தகுந்த விலையை பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட உழவர் சந்தையில் இதுவரை 23,76,680 கிலோ காய்கறிகள் ரூ.1,35,03,581–க்கு விற்பனையாகியுள்ளது. இதன்மூலம் 12,817 விவசாயிகளும் 54,03,867 நுகர்வோர்களும் பயன்பெற்று உள்ளனர்.

இதுதவிர இம்மாவட்டத்தில் திருவள்ளூரில் ரூ.12 இலட்சம் மதிப்பீட்டிலும் திருத்தணியில் ரூ.12.10 இலட்சம் மதிப்பீட்டிலும் இரண்டு உழவர் சந்தைகள் தலா 40 கடைகளுடன் அமைக்கப்பட்டு வருகின்றன.

## பூமாலை

கிராமப்புறங்களில் உள்ள கைவினைக் கலைஞர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களால் தயாரிக்கப்பட்டு வரும் பொருட்கள் நகர்ப்புறங்களில் விற்பனை செய்து உரிய விலை பெறுவதற்கான நிலையான விற்பனை மையங்களை அனைத்து மாவட்டங்களிலும்



ஏற்படுத்தவும், இந்த பொருட்களுக்கு "பூமாலை" என்னும் வணிகச் சின்னம் உருவாக்கி அவற்றின் விற்பனயை அதிகரிக்கவும் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

பூமாலை கைவினைப் பொருட்கள் விற்பனைக்கு இடம்பெற்றுள்ள இத்திட்டத்தின் விற்பனை மையங்களை முதன் முதலில், அம்பத்தூர் உழவர் சந்தையில் முதலமைச்சர் அவர்களால் **9.4.2000** அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இம்மையம் மூலம் இதுவரை ரூ.**3,89,332** மதிப்பில் கைவினைப் பொருட்கள் விற்பனை ஆகியுள்ளன.

### மினி பஸ் வசதி

கிராமப்புறங்களில் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் தொடங்கிவைக்கப்பட்டது மினிபஸ் திட்டமாகும்.

★ பள்ளிக்குழந்தைகள் இனி 5 கிலோ மீட்டர் நடக்கத் தேவையில்லை.



★ கர்ப்பிணிப் பெண்களுக்கு விடிவுகாலம்.

★ காய்கறிகள் விற்பனைக்கு வசதி என்று மக்களால் போற்றப்படும்.

மினி பஸ் திட்டத்தின் கீழ் 52 வழித்தடங்களுக்கு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது 9 வழித்தடங்களில் மினி பஸ்கள் இயக்கப்படுகின்றன.

### இளைஞர் விளையாட்டு – உடற்பயிற்சி மையங்கள்

கிராமங்களிலும் பேரூராட்சிகளிலும் உள்ள இளைய தலைமுறையினர்களின் நேரம் மற்றும் சக்தியை ஒருமுகப்படுத்தவும், தீய பழக்க வழக்கங்களிலிருந்து விடுபட்டு ஆரோக்கியத்துடனும் மத நல்லிணக்கத்துடனும் வாழவும் இளைஞர் நலம் பேணுகின்ற வகையில் **206** இளைஞர் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையங்கள் ஊராட்சி மற்றும் பேரூராட்சிகளில் அமைக்கப்பட்டுள்ளன.

### மக்கள் பணியில் கணினியின் பயன்பாடு

பொதுமக்களுக்கான சேவைகளை வெளிப்படையாகவும், விரைவாகவும் துல்லியமாகவும் வழங்கும்



வகையில் திருவள்ளூர் மாவட்ட நிர்வாகம் முழுமையாக கணினி மயமாக்கப்பட்டு வருகிறது. இதன்படி மாவட்டத்தில் உள்ள அனைத்து அலுவலகங்களிலும் கணினிமையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்டத்தில் உள்ள கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி), சார் ஆட்சியர், கோட்டாட்சியர் அலுவலகங்கள், 8 வட்டாட்சியர் அலுவலகங்கள், 14 வட்டார வளர்ச்சி அலுவலகங்கள், மாவட்ட சிறுசேமிப்பு அலுவலர் அலுவலகம் ஆகியவற்றில் கணினிமையங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இவையனைத்தும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் சென்னை தலைமைச் செயலகத்துடன் பரவலான வலைப்பின்னல் பிணையமாக இணைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மாவட்ட ஆட்சியர் தனது அலுவலகத்தில் இருந்து மற்ற அலுவலகங்களின் பணிகளின் நிலையை கணினி மூலம் தெரிந்து கொள்ள முடியும். இந்த அலுவலகங்களுக்கு ஆட்சியர் தேவையான உத்தரவுகளை வழங்க ஏதுவாக மென்பொருள் தனியாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அரசு ஆணைகள், சுற்றறிக்கை, மற்றும் முக்கிய கடிதங்கள் அனைத்தும் மின் அஞ்சல் (ஈ மெயில்), நிகரி (ஃபேக்ஸ்) இவற்றை கணினியில் பொருத்தி உடனுக்குடன் தகவல் பரிமாற்றம் செய்யும் வகையில் அனைத்து கணினிகளும் இணைக்கப்பட்டுள்ளன. இதனால் நேரம், காலம் வீணாகாமல் உடனுக்குடன் தகவல் பெற உதவியாகிறது.

திருவள்ளூர் மாவட்டத்திற்கென இன்டர்நெட்டில் தனி வெப்சைட் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த வெப்சைட் உதவியால் திருவள்ளூர் மாவட்டம் குறித்த பல்வேறு தகவல்களை உடனுக்குடன் அறிந்துகொள்ள முடியும்.

### வருவாய்த்துறை

முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சமூகத்தின் அடித்தளத்தில் உள்ள முதியவர், ஆதரவற்ற விதவைகள், உடல் ஊனமுற்றோர் ஆகியோர்களுக்கு தாய் உள்ளத்தோடு மாதந்தோறும் உதவித்தொகை வழங்க உத்தரவிட்டதின் அடிப்படையில் திருவள்ளூர் மாவட்டத்தில் இதுவரை **38,558** பயனாளிகளுக்கு ரூ.**6.96** கோடி வழங்கப்பட்டுள்ளது.

| திட்டம் | பயனாளிகள் | தொகை இலட்சத்தில் |
|---|---|---|
| 1. முதியவர் உதவித்தொகை | 15,046 | 258.46 |
| 2. விதவை உதவித்தொகை | 16,369 | 306.97 |
| 3. ஊனமுற்றோர் உதவித் தொகை | 1,294 | 24.27 |
| 4. ஆதரவற்ற விவசாய கூலித் தொழிலாளர் உதவித் தொகை | 2,602 | 48.66 |
| 5. ஆதரவற்ற விதவையர் உதவித்தொகை | 3,247 | 58.58 |
| மொத்தம் | 38,558 | 695.94 |

விபத்து நிவாரண திட்டத்தின் கீழ் கடந்த மூன்றாண்டுகளில் 54 நபர்களுக்கு ரூ.8.04 இலட்சம் உதவித்தொகை வழங்கப்பட்டது.

துயர் துடைப்பு நிவாரண திட்டத்தின் கடந்த மூன்றாண்டுகளில் 51,133 நபர்களுக்கு ரூ.387 இலட்சம் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

தீவிபத்தில் வீடிழந்து தவிக்கும் ஏழை குடிசைவாழ் மக்களுக்கு பகுதி சேதாரமாக ரூ.500, முழுசேதாரமாக ரூ.1000 வழங்கப்படுகிறது. இதுவரை 1,330 நபர்களுக்கு ரூ.10.29 இலட்சம் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

### வீட்டுமனை மற்றும் நிலப்பட்டா வழங்குதல்

வீட்டுமனையற்ற வறுமைகோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கு இலவசமாக வீட்டுமனை வழங்கும் திட்டத்தின் கீழ் இம்மாவட்டம் தொடங்கப்பட்ட பின்பு இதுவரை ரூ.3.67 கோடி மதிப்பீட்டில் 23,933 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டது. இதில் 13,393 நபர்கள் ஆதிதிராவிடர் மற்றும் 350 நபர்கள் பழங்குடியினர்.

இம்மாவட்டத்தில் ரூ.1.08 கோடி மதிப்பீட்டில் 98.12 ஹெக்டேர் பரப்பில் 84 நபர்களுக்கு இலவசமாக நிலப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. இதில் 23 ஆதிதிராவிடர்களும், 7 பழங்குடி இனத்தவர்களும் அடங்குவர்.

### சமூக நலத்துறை

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித்திட்டத்தின் கீழ் 6807 பேருக்கு ரூ.6.81 இலட்சம் வழங்கப்பட்டது.

அன்னை அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித்திட்டத்தின் கீழ் 54 பேருக்கு ரூ.6 இலட்சம் வழங்கப்பட்டது.

ஈ.வே.ரா.மணியம்மையார் நினைவு ஏழை விதவை மகள் திருமண உதவி திட்டத்தின் கீழ் 91 பேருக்கு ரூ.4.45 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

விதவை மறுமண உதவித்திட்டத்தின் கீழ் 10 பெண்களுக்கு ரூ.0.82 இலட்சம் வழங்கப்பட்டது.

டாக்டர் முத்துலெட்சுமி நினைவு தேசிய மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ் 13,333 மகளிருக்கு ரூ.57.6 இலட்சமும், டாக்டர் சத்தியவாணி அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ் 360 பெண்களுக்கு ரூ.7.02 இலட்சமும் வழங்கப்பட்டது.

சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தில் ரூ.15.92 இலட்சத்தில் 1,061 பெண் குழந்தைகள் பயன் பெற்றுள்ளனர்.

### பாதுகாக்கப்பட்ட குடிநீர்

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் 898 கிராமங்களில் 30 கோடியே 13 இலட்சத்து 27 ஆயிரம் ரூபாய் செலவில் ஊரக குடிநீர் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.



இதன் மூலம் குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறது. மேலும் 120 கிராமங்களுக்கு ரூ.37 இலட்சம் செலவில் திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

நகர்ப்புறக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் ரூ.3.94 கோடி செலவில் நாராவாரிகுப்பம், திருநின்றவூர், திருத்தணி, கொடிவலசை வெங்கத்தூர், பாதிரிவேடு, புழல் மற்றும் ஆவடி பகுதிகளைச் சேர்ந்த குடியிருப்புகள் பயனடைந்துள்ளன.

### தொழில் வளர்ச்சி

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் முன்னணியில் உள்ள மாவட்டங்களில் திருவள்ளூர் மாவட்டமும் ஒன்று. இம்மாவட்டத்தில் உள்நாட்டுத் தொழில் முதலீடுகள் மட்டுமல்லாது வெளிநாட்டுத் தொழில் முதலீடுகளையும் பெருமளவில் ஈர்க்கப்படுகிறது. மாவட்டத்தில் உள்ள காக்களூர், அம்பத்தூர், கும்மிடிபூண்டி – சிப்காட் ஆகிய

தொழில்பேட்டைகள் உட்பட மணலி பகுதியில் அமைந்துள்ள பெரிய இரசாயனத் தொழிற்சாலைகள் நாட்டின் தொழில் வளர்ச்சியில் முக்கிய இடம் வகிக்கின்றன. கடந்த நான்காண்டுகளில் மாவட்டத்தில் ரூ.708.48 கோடி மதிப்பீட்டில் பன்னாட்டு தொழில் முதலீட்டுடன் புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டுள்ளன. இதுதவிர எண்ணூரில் ரூ.6,000 கோடி அளவில் பெட்ரோகெமிக்கல் தொழிற்சாலை நிறுவ ஜப்பானிய மிட்சூயி கம்பெனியுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்ட தொழில் மையம் மூலம் சிறுதொழில் நடத்திட 10,959 நபர்களுக்கு சிறுதொழில் தற்காலிக சான்றிதழ்களும், சிறுதொழில் நிரந்தர சான்றிதழ்கள் 6,178 நபர்களுக்கும், குடிசைத்தொழில் 889 நபர்களுக்கும் மற்றும் கைவினைத் தொழில் சான்றிதழ்கள் 589 நபர்களுக்கும் இதுவரை வழங்கப்பட்டு வேலை வாய்ப்பும் மற்றும் தொழில் உற்பத்தி பெருகிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் 233 நபர்களுக்கு ரூ.7.09 கோடி மூலதன் முதலீட்டு மானியமும், 34 நபர்களுக்கு ரூ.18.27 இலட்சம் ஜெனரேட்டர் மானியமும், 182 நபர்களுக்கு ரூ.43.76 இலட்சம் குறைந்த அழுத்த மின்சார உபயோகத்திற்கான மானியமும் மாவட்டத் தொழில் மையம் மூலம் தொழில் நடத்த உதவிகள் செய்யப்பட்டுள்ளது.

## மகளிர் மேம்பாட்டுத் திட்டம்

வறுமை கோட்டிற்குக் கீழே உள்ள ஊரக மகளிருக்கு நிரந்த தீர்வின் அடிப்படையில் சுயவேலை வாய்ப்புக்களை அளித்திடவும் மகளிரிடையே விழிப்புணர்வை



ஏற்படுத்தவும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்படுகின்றன. இவர்களுக்கு பல்வேறு வகையான பயனுள்ள தொழில் மேற்கொள்ள பயிற்சி அளிக்கப்படுகிறது.

திருவள்ளூர் மாவட்டத்திற்கு 2,200 சுயஉதவிக் குழுக்கள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 26,059 உறுப்பினர்கள் அடங்கிய 1,669 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த சுயஉதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு ரூ.2.49 கோடி கடனாக சேமிப்பு பணத்தில் இருந்து வழங்கப்பட்டுள்ளது. இவர்களிடமிருந்து ரூ.1.55 கோடி சேமிப்பாகப் பெறப்பட்டுள்ளது.

## தாட்கோ

தனிநபர் தொழில் முனைவோர் திட்டம், பெண்கல்வி ஊக்குவிப்புத் திட்டம், வேளாண்மை தொழில் சார் திட்டங்கள், சிறுதொழில் போன்ற திட்டங்களில் ஆதிதிராவிட மற்றும் பழங்குடி இனமக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக வழங்கப்பட்ட கடன் ரூ.1.45 கோடி. இதன் மூலம் 5,316 நபர்கள் பயனடைந்துள்ளனர். அரசு மானியம் ரூ.90.33 இலட்சம்.

## ஊனமுற்றோர் மறுவாழ்வு

மறுவாழ்வுத் துறையின் மூலம் கண்பார்வையற்ற– வரை பார்வையுள்ளவர் திருமணம் செய்தல், கைகால் ஊனமுற்றவரை சாதாரண நபர் திருமணம் செய்தல்,



பேசும் திறனற்ற காது கேளாதவரை சாதாரண நபர் திருமணம் செய்து கொள்ளுதல், போன்றவற்றிற்கான திருமண உதவித் தொகைகள், கடும் ஊனமற்றவர்களுக்கான மாதாந்திர உதவித் தொகை, கல்வி உதவித்தொகை, மூன்று சக்கர வண்டி, இரு சக்கர நாற்காலி, பிரெய்லி கைக்கடிகாரம், கேலிப்பர் வழங்குதல், ஊன்றுகோல், காதொலி கருவி, செயற்கைக் கால் வழங்குதல் மற்றும் பிறவகையில் 3,994 பயனாளிகளுக்கு ரூ.32,49,098 செலவிடப்பட்டுள்ளது.

## வாழ்வொளித் திட்டம்

திருவள்ளூர் மாவட்டத்தில் வாழ்வொளித் திட்டத்தின் மூலம் 1,144 பள்ளிகளைச் சார்ந்த மாணவ, மாணவியர்க்கு ஒவ்வொரு வியாழக்கிழமையும், இந்த பகுதியைச் சார்ந்த ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள் குழுவின் மூலம் பரிசோதனை செய்யப்படுகிறது.

வருடத்திற்கு மூன்று முறை இதுபோன்று பரிசோதிக்கப்படும் இத்திட்டத்தின் மூலம் இதுவரை 80,486 மாணவர், மாணவிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளனர். இதில் 247 மாணவர்களுக்கு



கண்பார்வை குறைவும், 29 மாணவர்களுக்கு இருதயநோய் இருப்பதும், 65 மாணவர்களுக்கு தொழுநோய் இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளார்கள்.

### மக்கள் நல்வாழ்வுத்துறை

புதிதாக அமைக்கப்பட்ட திருவள்ளூர் மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு ரூ.33 இலட்சம் மதிப்பீட்டில் 48 படுக்கைகள் கொண்ட புது பிரிவு, ரூ.29.60 இலட்சம் மதிப்பீட்டில் 10 படுக்கைகள் கொண்ட விபத்து மற்றும் அவசரப் பிரிவு, ரூ.11.43 இலட்சம் மதிப்பீட்டில் 24 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் பிரிவு, ரூ.9 இலட்சம் மதிப்பீட்டில் மைய நீராவி தொற்று நீக்கிப் பிரிவு, ரூ.17 இலட்சம் மதிப்பீட்டில் 6 படுக்கைகள் கொண்ட தீவிர இருதய அறுவை சிகிச்சை கவனிப்பு பிரிவு, ரூ.35.50 இலட்சம் மதிப்பீட்டில் அறுவை அரங்கத்துடன் கூடிய 16 படுக்கைகள் கொண்ட கண் பிரிவு ஆக ரூ.1.64 கோடி மதிப்பில் தலைமை மருத்துவமனை மேம்படுத்தப்பட்டுள்ளது.



கும்மிடிபூண்டி அரசினர் மருத்துவமனையில் ரூ.13.64 இலட்சம் மதிப்பீட்டில் 26 படுக்கைகள் கொண்ட உள்நோயாளிகள் பிரிவும், திருத்தணி அரசினர் மருத்துவமனைக்கு ரூ.12 இலட்சம் மதிப்பீட்டில் குளிர்பதன வசதியுடன் கூடிய பிணவறை, ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் 75 கிலோவாட் மின்ஆக்கி மற்றும் அதற்கான கட்டடம் கட்டப்பட்டுள்ளது. 22 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.175 இலட்சம் மதிப்பிலும், 7 துணை சுகாதார நிலையங்களுக்கு ரூ.38.50 இலட்சம் மதிப்பிலும் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில் பொதட்டூர்பேட்டை, பழவேற்காடு மற்றும் மாதவரம் ஆகிய ஊர்களில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அரசு மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

### கண்ணொளித் திட்டம்

திருவள்ளூர் மாவட்டத்தில் கண்ணொளித்திட்டத்தின் கீழ் இதுவரை 29,883 நபர்களுக்கு கண்புரை அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. இதற்காக அரசு மானியம் ரூ.8,24,700 வழங்கப்பட்டுள்ளது.



கண்ணொளித் திட்டத்தின் கீழ் மாவட்டத்தின் 2,710 ஆசிரியர்களுக்கு கண் பரிசோதனை பயிற்சி அளித்து 3,58,198 மாணவ மாணவியர்க்கு கண் பரிசோதனை செய்யப்பட்டதில் கண்ணாடி வாங்க வசதியற்ற 3,285 மாணவர், மாணவியருக்கு இலவச கண்ணாடி வழங்கப்பட்டுள்ளது.

உலக வங்கி உதவியுடன் தலைமை மருத்துவமனைக்கு ரூ.35.50 இலட்சம் செலவில் 16 வார்டுகள் மற்றும் அறுவைச் சிகிச்சை கூடத்துடன் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

### கல்வித்துறை

இம்மாவட்டம் தொடங்கப்பட்டபின் 396 பெண்கள், 154 ஆண்கள் என 550 இடைநிலை ஆசிரியர்களும், 10 உடற்கல்வி ஆசிரியர்களும், 5 தையல் ஆசிரியர்களும், 5 ஓவிய ஆசிரியர்களும், ஒரு இசை ஆசிரியரும் ஆக மொத்தம் 571 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். 22 தொடக்கப்பள்ளிகள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளது. 6 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப்பள்ளிகளாகவும், 21 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 10 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்பட்டுள்ளன. 45 அரசுப்பள்ளிகளில் கணினிப்பாடம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.



## நெடுஞ்சாலைத்துறை

நெடுஞ்சாலைத் துறையின் கீழ் சாலை, பாலங்கள் மேம்பாட்டிற்காக ரூ.3.55 கோடி செலவில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.5.84 கோடி செலவில் 21 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிராமச்சாலைகள் சிறப்பு உறுப்புத் திட்டம் மற்றும் பேருந்து வழித்தடத் திட்டங்கள் கீழ் இதுவரை 31 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 86.70 கிலோமீட்டர் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் திட்டம் சாரா சாலைப்பணிகள் திட்டத்தின் கீழ் 17.21 கிலோ மீட்டர் நீளமுள்ள மாநிலச் சாலைகள், 183.89 கிலோமீட்டர் நீளமுள்ள மாவட்டச் சாலைகள், 581.73 கிலோமீட்டர் நீளமுள்ள 385 இதர சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

## பொதுவிநியோகத் திட்டம்

இம்மாவட்டத்தில் 717 முழுநேர நியாயவிலைக் கடைகள், 177 பகுதி நேர நியாயவிலைக் கடைகள் மூலமாக அத்தியாவசிய உணவுப் பொருட்கள் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன.



## மகளிர் சிறுவணிகக் கடன் வழங்கும் திட்டம்

இம்மாவட்டத்தில் உள்ள நகரங்களில் மத்திய கூட்டுறவு வங்கிக் கிளைகள் மற்றும் திருவள்ளூர் நகரக் கூட்டுறவு வங்கி மூலம் இதுவரை 1,445 மகளிருக்கு ரூ.8.92 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த மாவட்டத்தில் உள்ள 13 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலமாகவும் "மகளிர் சிறுவணிகக் கடன்" வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி

இவ்வங்கிகள் மூலமாக இதுவரை குறுகிய காலக் கடனாக ரூ.45.72 கோடியும், மத்திய காலக் கடனாக ரூ.1.18 கோடியும், நகைக்கடனாக ரூ.28.72 கோடியும், பண்ணை சாராக் கடனாக ரூ.0.33 கோடியும் வழங்கப்பட்டுள்ளன.

## வேளாண்மைத்துறை

விவசாயிகளுக்கு வேளாண்மைத்துறை கொடுத்த தொடர் ஊக்கத்தாலும், வழிக்காட்டுதலாலும், இம்மாவட்டம் தொடங்கியபோது எக்டேருக்கு 3,200 கிலோவாக இருந்த அரிசி உற்பத்தி 4,073 கிலோவாகவும், மணிலா உற்பத்தி 2,180 கிலோவிலிருந்து 3,664 கிலோவாகவும், பயிறு வகைகள் உற்பத்தி 596 கிலோவிலிருந்து 853 கிலோவாகவும், சிறுதானியங்கள்



உற்பத்தி 1,350 கிலோவிலிருந்து 3,002 கிலோவாகவும் அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டு மாவட்டத்தில் விவசாயிகளுக்கு தரமான தென்னங்கன்றுகள் வழங்கிடும் வகையில் 72,000 நெட்டை மற்றும் குட்டை ரக தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் இதுவரை 35,000 தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

## மின்சார வாரியம்

குறைந்த மின்அழுத்தத்தை நிவர்த்தி செய்ய பாலவாக்கம், விடியன்காடுபுதூர், துறைநல்லூர் அழிஞ்சிவாக்கம் ஆகிய நான்கு இடங்களில் ரூ.5.87 கோடியில் சார்பு மின் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. குறைந்த மின் அழுத்தத்தைச் சரிசெய்ய 650 மின்



மாற்றிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதுவரை 1,851 விவசாய மின் இணைப்புகள் ரூ.5.20 கோடியிலும், 8,927 குடிசைகளுக்கு ரூ.1.20 கோடி செலவில் ஒரு மின் விளக்கு திட்டத்தின் கீழ் மின் வசதியும், 7,448 தெரு விளக்குகள் ரூ.3.20 கோடி செலவிலும், 697 பொது குடிநீர் மின்இணைப்புகள் ரூ.1.35 கோடி மதிப்பிலும் உருவாக்கப் பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில் 4 இடங்களில் ரூ.479.89 இலட்சம் செலவில் புதிய துணை நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

### சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் ரூ.681.149 இலட்சம் மதிப்பீட்டில் 783 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை

இத்துறையின் மூலம் 25,372 மாணவ, மாணவியருக்கு ரூ.56.88 இலட்சம் கல்வித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 26,150 பள்ளிக்குழந்தைகளுக்கு இலவசப் பாடப்புத்தகங்களும் 2,380 குழந்தைகளுக்கு இலவசச் சீருடைகளும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் ரூ.1.24 இலட்சம் மதிப்பில் 101 நபர்களுக்கு இலவசமாக சலவைக் கருவிகளும், முடிதிருத்தும் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

### ஆதிதிராவிடர் நலத்துறை

இத்துறையின் சார்பில் இதுவரை 72.61 இலட்சம் செலவில் 3,029 ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்களும் ரூ.3.01 இலட்சம் மதிப்பீட்டில் 161 பேர்களுக்கு இலவச தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

### பொதுப்பணித்துறை

கட்டடப்பிரிவின் மூலம் வருவாய்த்துறை, மருத்துவத்துறை, கல்வித்துறை, காவல் மற்றும் சிறைத்துறை, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை போன்ற அரசுத் துறைகளுக்கான 750 பணிகள் ரூ.32.43 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு இதுவரை 670 பணிகள் ரூ.19.13 கோடி மதிப்பில் முடிவுற்றுள்ளன.

நீர்வள ஆதார அமைப்பின் மூலம் இதுவரை ரூ.319.6 இலட்சம் மதிப்பீட்டில் 2 சிறிய அணைக்கட்டுகளும் ரூ.140 இலட்சம் மதிப்பீட்டில் 14 தூர்வாரும் பணிகளும் ரூ.86.84 இலட்சம் மதிப்பீட்டில் 70 ஏரிகள் தரப்படுத்தும் பணிகளும் ரூ.87.19 இலட்சம் மதிப்பீட்டில் 69 வேலை வாய்ப்பு உறுதிப் பணிகளும் ரூ.690 இலட்சம் மதிப்பீட்டில்



வடசென்னைப் பகுதி கடல் அரிப்புத் தடுப்புப் பணிகளும் செயல்படுத்தப்பட்டுள்ளன.

★ ★ ★

# திருவள்ளூர் மாவட்ட நிர்வாகம் கணினி மயம்

திருவள்ளூர் மாவட்ட நிர்வாகம் முழுமையாக கணினிமயமாக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே முதல்முறையாக ஊராட்சி ஒன்றியம் வரை கணினி மயமாக்கப்பட்டுள்ளது திருவள்ளூர் மாவட்டத்தில்தான். இம்மாவட்டத்தில் 14 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. இவைகளில் 11 ஊராட்சி ஒன்றியங்கள் கணினி மயமாக்கப்பட்டுள்ளன. அலுவலர்களுக்குக் கணினிப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. E-Mail, Fax வசதிகள் ஏற்படுத்தப்பட்டு பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. 5,000–க்கு மேற்பட்ட உதவி பெறுவோர்க்கு கணினி உதவியுடன் இரண்டு நாட்களுக்குள் உதவித்தொகை அனுப்பமுடிகிறது.

தாலுக்கா அலுவலகத்தில் சிட்டா பட்டா போன்றவை கணினி உதவியுடன் உடனுக்குடன் வழங்கப்படுகின்றன.

**உடனுக்குடன் மக்கள் பணி**

பொதுமக்கள் அரசு அலுவலகங்களுடன் கொள்ளும் தொடர்பு எளிதானதாகவும் தாமதமின்றி இனிதானதாகவும் இருக்கும் வண்ணம் சேவை மைய அணுகுமுறைகள் பின்பற்றப் படுகின்றன.

அவற்றின் தன்மையைப் பொறுத்து 3 நாள் முதல் ஒரு வாரம் மற்றும் அதிகபட்சம் 30 நாட்களுக்குள் முடிவு செய்ய இயலும்.

**வலைத்தளம் (WEBSITE)**

அரசு அலுவலகங்களிலிருந்து பொது மக்கள் தங்களுக்குத் தேவையான தகவல்களை எளிதில் பெறும் வண்ணம் தனி வலைத்தளம் வடிவமைக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து சான்றிதழ்கள், பட்டா மாற்றம், வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வாகன ஓட்டுநர் உரிமம் பெறுதல் போன்றவைகளுக்கான வழிமுறைகளை பொதுமக்கள் எளிதில் அறியும் வண்ணம் விளக்கப்பட்டுள்ளது. இவ்வலை தளத்திலிருந்தே இதற்குத் தேவையான விண்ணப்பப் படிவம் பெறவும் வகை செய்யப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட அலுவலர் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி எண் ஆகியவற்றை பொதுமக்கள் பெறலாம். மேலும், மாவட்டத்திலுள்ள அனைத்து மத்திய, மாநில அரசு அலுவலகங்கள் பற்றிய தகவல்களும் இதில் இடம் பெற்றுள்ளன.



அதன்படி பட்டா மாற்றம், உட்பிரிவு செய்தல், முதியோர் உதவித்தொகை மற்றும் சான்றிதழ் கோரும் மனுக்கள் போன்றவை சேவை மையத்தில் பெறப்பட்டு கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு இறுதி ஆணை நாள் குறிப்பிடப்பட்ட ஒப்புகைச் சீட்டு கணிப்பொறி மூலமாக வழங்கப்படும். குறிப்பிட்ட நாளில் இறுதி ஆணை வழங்கப்பட்டதை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலிருந்து கணிப்பொறி மூலமாக நேரடியாக கண்காணிக்கும் வசதி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் வட்டாட்சியர் அலுவலகங்களில் பொதுமக்களின் பல்வேறு கோரிக்கைகளையும்

**வளர்ச்சிப் பணிகள் பிணையம்**



திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலகங்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் ஆகிய அனைத்திலும் கணினி மையங்கள் அமைக்கப்பட்டு அவை பரந்த வலைப்பின்னல் பரப்பு பிணையமாக இணைக்கப் பட்டுள்ளன. மாவட்ட ஆட்சித் தலைவர், ஊரக வளர்ச்சி இயக்குநர் மற்றும் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) ஆகியோர் நேரடியாக தங்கள் அலுவலகத்தில் இருந்து வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் உள்ள கணினியுடன் தொடர்பு கொண்டு வளர்ச்சிப் பணிகளின் நிலையை கணினி மூலமாகத் தெரிந்து கொள்வதுடன், மேற்கொண்டு உத்திரவுகளைக் கணினி மூலமாகவே பிறப்பிக்கும் வகையில் மென்பொருள் வடிவமைக்கப்பட்டுள்ளது. இனி அரசு ஆணைகள், சுற்றறிக்கைகள் மற்றும் முக்கிய கடிதங்கள் யாவும் மின் அஞ்சல் (E-Mail), நிகரி (Fax) இவற்றை கணினியுடன் பொருத்தி உடனுக்குடன் தகவல் பரிமாற்றம் செய்யும் வகையில் அனைத்துக் கணினிகளும் இணைக்கப்பட்டுள்ளன.

★ ★ ★

*திருவள்ளூர் மாவட்டம் பேரம்பாக்கத்தில் நமக்கு நாமே திட்டத்தின் மூலம் காலம் (நேரம்) தெரிவிக்கும் சங்கு (சைரன்) அமைக்கப்பட்டு ஒலி எழுப்பப்படுகிறது.*

*இப்பகுதி வேளாண் பெருமக்கள் அதிகம் கொண்ட பகுதி. அவர்களுக்குக் காலத்தைத் தெரிவிக்கும் வகையில் சங்கொலி எழுப்பப்படுகிறது. காலை 6 மணிக்கு அவர்களை பணிக்கு ஆயத்தப்படுத்தவும், 7 மணிக்கு பணிக்குச் செல்லவும் என ஒரு நாளில் 6 முறை சங்கொலி எழுப்பப்படுகிறது.*





திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் பகுதி நேருஜி நகர் மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சந்தித்தோம்.

நேருஜி நகர் மகளிர் குழுவில் 15 உறுப்பினர் உள்ளனர். அவர்கள் 10 பேர் துவரம் பருப்பு மொத்தமாக வாங்கி ஒரு கிலோ, அரை கிலோ என்ற அளவில் பாக்கெட் போட்டு விற்பனை செய்கின்றனர். வெளி மார்க் கெட்டில் கிலோ ரூ.30–க்கு விற்கும் போது அவர்கள் ரூ.25–க்கு விற்பனை செய்கின்றனர். அப்படியும் ஒரு மூட்டைக்கு ரூ.300 இலாபம் ஈட்டுகிறார்கள்.

மற்ற 5 பேர் பழ வியாபாரம் செய்கிறார்கள்.

மகிழ்ச்சியாக இருக்கிறோம். நம்பிக்கையுடன் வாழ்கிறோம் என்று கூறினர்.

குழந்தைகளை நல்ல முறையில் பராமரிக்கவும், படிக்க வைக்கவும் இக்குழுவினரால் முடிகிறது.

★ ★ ★

அம்பேத்கர் நகர் மகளிர் சுய உதவிக்குழுவினைச் சந்தித்தோம். அவர்கள் 4 ஏக்கர் நிலத்தைக் குத்தகைக்கு எடுத்து நெல் பயிரிட்டார்கள். இதில் ரூ.18,000 இலாபம் பெற்றுள்ளனர்.

கூலிவேலை செய்து பிழைத்து வந்த இப்பெண்கள் நம்பிக்கையுடன் எதிர்காலத்தை நோக்குகின்றனர். முதலில் இட்லிகடை, துணிக்கடை, சோப்பு, மசாலா விற்பனை என தொடங்கி, இன்று வெற்றி நடைபோடுகின்றனர். தற்போது 10 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு எடுத்து பயிரிட எண்ணியுள்ளனர்.

சாலை போடும் ஒப்பந்தத்தைப் போராடிப் பெற்று 750 மீட்டர் சாலை அமைத்துக் கொடுத்துள்ளனர். இதில் அவர்களுக்குக் கிடைத்தது ரூ.800 தான். வருமானம் இல்லை என்றாலும் ஒரு சாதனை நிகழ்த்திய பெருமிதத்துடன் அதனைக் குறிப்பிட்டார்கள்.

★ ★ ★

## திருவள்ளூரில் 7-10-2000 அன்று முதலமைச்சரால் திறக்கப்பட்ட புதிய திட்டங்களும், வழங்கப்பட்ட உதவிகளும்

மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருவள்ளூர், ரூ.561 இலட்சத்தில், வருவாய் கோட்ட அலுவலகம், திருத்தணி ரூ.59 இலட்சத்தில், நிலஅளவை ஆவணக்காப்புக் கட்டிடம், திருவள்ளூர் ரூ.10 இலட்சத்தில் உருவாக்கப்பட்டு திறக்கப்பட்டன.

பெரியார் நினைவு சமத்துவபுரம், குத்தம்பாக்கம் ரூ.124.75 இலட்சத்தில் அமைக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ளது.

மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதி கட்டிடம், ஆரம்பாக்கம், கும்மிடிப்பூண்டி வட்டம் ரூ.33 இலட்சத்தில், பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதிக்கட்டிடம், பழவேற்காடு, பொன்னேரி வட்டம் ரூ.35 இலட்சத்தில், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதி கட்டிடம், கீழச்சேரி, ரூ.36 இலட்சத்திலும், திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் மைய நீராவி தொற்று நீக்கு பிரிவு கட்டிடம் ரூ.9 இலட்சத்திலும், திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் 24 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் நலப்பிரிவு கட்டிடம் ரூ.30.8 இலட்சத்திலும் உருவாக்கப்பட்டு, முதலமைச்சர் கலைஞர் அவர்களால் திறந்துவைக்கப்பட்டன.

திருவள்ளூர் பெரியகுப்பத்தில் ரூ.470.92 இலட்சத்தில் அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்பிற்காக 54 அடுக்குமாடி வீடுகளையும் முதல்வர் திறந்து வைத்தார்.

### அடிக்கல் நாட்டப்பட்ட புதியத் திட்டங்கள்

பொன்னேரி வருவாய் கோட்ட அலுவலகக் கட்டிடம், திருவள்ளூர் நகர குடிநீர் அபிவிருத்தித் திட்டம், பொதட்டூர்பேட்டை நகர குடிநீர் அபிவிருத்தித் திட்டம், ஆரணி குடிநீர் அபிவிருத்தித் திட்டம், பூந்தமல்லி குடிநீர் அபிவிருத்தித் திட்டம், பொன்னேரி வட்டம் பழவேற்காடு ஏரியின் குறுக்கே புதிய பாலம் அமைத்தல், காமராஜ்நகர் 33/11 கிவோ. துணைமின் நிலையம், பட்டாபிராம் 110/11 கிவோ. துணைமின் நிலையம் அலமாதி 400கி.வோ. துணை மின்நிலையம், பொன்னேரி வட்டம் திருவெள்ளவாயல் துணைமின் நிலையம், திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் 150 கி.வோ. மின்உற்பத்தி இயந்திரக் கட்டிடம், திருவள்ளூர் வாகன சோதனை தளம் அமைத்தல், புழல் மத்திய சிறைச் சாலையில் சுற்றுச் சுவர், கண்காணிப்புக் கோபுரம், மின்வேலி முதலிய மேம்பாட்டுப் பணிகள், திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை வட்டம் பென்னாலூர் பேட்டை சித்தேரியின் கரை மற்றும் பாசனக் கால்வாய் சீரமைத்தல், திருவள்ளூர் கூட்டுறவுத் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிக் கட்டடம் மற்றும் திருவள்ளூர் கூட்டுறவு வீட்டு வசதி சங்கக் கட்டடம் ஆகியவற்றிற்கும் அந்நிகழ்ச்சியில் அடிக்கல் நாட்டப்பட்டது.

இதுதவிர ரூ.13.47 கோடி நலதிட்ட உதவிகளாக 9,483 பயனாளிக்கு வழங்கப்பட்டது.

### திருத்தணி சிறப்பு நிலை பேரூராட்சி 1996 முதல் 2000 வரை முடிக்கப்பட்ட பணிகள்

| வ. எண். | பணியின் பெயர் | நீளம் கி.மீ. | செலவிடப் பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | தார்சாலைகள் | 10.306 | 38.28 |
| 2. | சிமெண்ட் சாலைகள் | 5.468 | 83.34 |
| 3. | கப்பிச்சாலைகள் | 0.570 | 1.03 |
| 4. | வடிகால்கள் | 9.197 | 52.21 |
| 5. | குடிநீர் பணிகள் | 6.590 | 12.43 |
| 6. | ஆழ்துளை கிணறுகள் | 8 | 2.70 |
| 7. | திருத்தணி பேரூராட்சி பகுதியில் டிராக்டர் மூலம் குடிநீர் விநியோகம் செய்தது | -- | 12.21 |
| 8. | தெருவிளக்கு | 175 | 16.19 |
| 9. | வாகனங்கள் வாங்கியது | -- | 9.69 |
| 10. | கல்வெர்ட் | 2 | 0.27 |
| 11. | கழிப்பிடங்கள் | 1 | 1.25 |
| 12. | இதரபணிகள்(பூங்கா) | -- | 22.70 |
| | மொத்தம் | 32.317 | 252.30 |



# வேளாண் உதவி

## திருவள்ளூர் மாவட்டம்



வேளாண்மைத்துறையின் சிற்றுநீர்ப் பாசனத் திட்டத்தின் கீழ் மானிய விலையில் ஆயில் எஞ்சின் வாங்கிய பயனாளி திருவள்ளூர் மாவட்டம் கூடம்பாக்கம் திரு.தங்கவேலுவைச் சந்தித்தோம். 'ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவள் நான். எங்கள் குடும்பத்திற்கு 3 ஏக்கர் நிலம் உள்ளது. இதில் ஒரு கிணறும் உண்டு. இந்த கிணற்றிலிருந்து நீரை மொண்டு ஊற்றித்தான் செடிகள் வளர்த்து வந்தேன். இதனால் சிறிய பகுதியில் தான் பயிரிட முடிந்தது. இப்போது வேளாண்மைத்துறையின் மானிய உதவியுடன் ஆயில் எஞ்சின் வாங்கி பயன்படுத்துகிறேன். எங்கள் நிலம் முழுவதும் பயிரிட முடிகிறது. நல்ல வருமானம் கிடைக்கிறது. நன்றாக இருக்கின்றோம். நான் ரூ.9,300 கட்டினேன். வேளாண்மைத்துறையின் மானியம் ரூ.9,300. இப்போது ரூ.18,600 மதிப்புள்ள ஆயில் எஞ்சின் எனக்குச் சொந்தமாக உள்ளது' என்று கூறி அரசுக்கு நன்றி கூறினார். ★



ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ரூ.30,000 மானிய உதவி பெற்று விசை உழவி பெற்றவர் திருமதி சி.இராஜேஸ்வரி. அவர் கணவர் திரு.கிருஷ்ணன் 'நாங்கள் வாடகைக்கு உழவு மாடுகள் வைத்து உழவு செய்து வந்தோம். எங்களுக்கு தேவைப்படும் நேரத்தில் வாடகை உழவி கிடைக்காது. அதனால் பயிரிடும் பணி தாமதம் ஏற்படும். இப்போது இந்த விசை உழவி பெற்று பயிர்த் தொழில் செய்வது மிகவும் எளிதாக இருக்கிறது. இந்த உதவி செய்த தமிழக அரசுக்கு நன்றி' என்று உருக்கத்துடன் கூறினார். ★





# அம்பத்தூர் உழவர் சந்தை

தூய்மையான சுகாதாரமான சுற்றுச்சூழல் அமைந்துள்ள அம்பத்தூர் உழவர் சந்தைக்குச் சென்றிருந்தோம். சுறுசுறுப்பான மாலை நேரம். எந்த அங்காடியிலும் இல்லாத தூய்மை இச்சந்தையில் இருந்தது. மக்கள் கூட்டம் கூட்டமாக காய்கள் வாங்கிச் செல்வதைப் பார்த்தோம். கடைகள்தோறும் பசுமையான காய், கனிகள் இருந்தன. அங்குள்ள வியாபாரம் செய்த விவசாயிகளை வினவியபோது, ''நாங்கள் இந்த சந்தை தொடங்கிய நாளிலிருந்து வியாபாரம் செய்கின்றோம். நல்ல வருமானம் வருகிறது'' என்றனர். கீழகொண்டான் பாளையத்தைச் சேர்ந்த திரு.கார்த்திகேயன் ஒரு நாளைக்கு ரூ.180–லிருந்து ரூ.200 வரை இலாபம் கிடைப்பதாகக் கூறினார்.'





நுகர்வோரும் இங்கு குறைந்த விலையில் புதிய காய், கனிகள் வாங்குவதாகக் கூறினார்கள். திருமதி. இந்திராணி, திரு.பி.கே.வால்கன் ஆகியோர் ''இந்த சந்தை தொடங்கிய நாளிலிருந்து இங்குதான் காய்களை வாங்கி வருகின்றோம். வேறு கடைக்குச் செல்வதில்லை. நியாயமான விலையில் நல்ல காய்களை வாங்க முடிகிறது'' என்றனர்.

இங்கு டான்வா மகளிர் காய்–கனி கடை ஒன்றையும், சிற்றுண்டிச்சாலை ஒன்றையும் நடத்தி வருகின்றனர்.

இச்சந்தையின் கழிவுகளைக் கொண்டு உரமும் அம்பத்தூர் உழவர் சந்தையில் தயாரிக்கப் பட்டு வருகிறது.

இங்கு பூமாலை திட்டத்தின் கீழ் 6 கைவினை பொருட்கள் விற்பனை செய்யும் கடைகளும் உள்ளன. ★



# வேலூர் மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

## வேலூர் மாவட்டம்

| | | |
|---|---|---|
| தலைநகர் | – | வேலூர் |
| பரப்பு | – | 6.077 ச.கி.மீ. |
| மக்கள் தொகை | – | 30,26,432 |
| ஆண்கள் | – | 15,29,944 |
| பெண்கள் | – | 14,96,488 |
| எழுத்தறிவு | – | 15,72,293 |
| மக்கள் நெருக்கம் (ச.கி.மீ.) | – | 498 |

**வரலாறு**

இந்தியாவின் முதல் சுதந்திரப் போராட்டம் 1806–இல் சிப்பாய் கலகத்தின் முதல் பொறி இம்மாவட்டத் தலைநகர் வேலூரில் இருந்து கிளம்பியது. 1989, செப்டம்பர் 30–இல் வேலூர் மாவட்டம் உருவானது.

**வருவாய் நிர்வாகம்**

கோட்டங்கள்–3. ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர். வட்டங்கள்–8. ஆற்காடு, வாலாஜா, அரக்கோணம், வேலூர், குடியாத்தம், திருப்பத்தூர், வாணியம்பாடி, காட்பாடி,

**கல்வி**

அரசு மேல்நிலைப்பள்ளி–79, அரசு உயர்நிலைப்பள்ளி 127, நகராட்சி உயர்நிலைப்பள்ளி–4, நகராட்சி மேல்நிலைப்பள்ளி–3, ஆதிதிராவிட நல மேல்நிலைப்பள்ளி–6, ஆதி திராவிட நல உயர்நிலைப்பள்ளி–3, நிதியுதவி பெறும் உயர்நிலை/ மேனிலைப்பள்ளிகள்–60, கல்லூரிகள்–12, சுயநிதி கல்லூரிகள்–3, அரசு மற்றும் தனியார் பொறியியல் கல்லூரிகள்–5, அரசு பாலிடெக்னிக்–1, அரசு நிதியுதவி பாலிடெக்னிக்–1, தனியார் பாலிடெக்னிக்–5.

**தொழிற்சாலை**

ராணிப்பேட்டை ஒரு பெரிய தொழில் மையம். பெல், என்பீல்டு, ஈ.ஐ.டி. பாரி போன்ற நிறுவனங்கள் இங்குள்ளன. அரிசி மண்டிகள் குறிப்பிடத்தகுந்தவை. தவிர தமிழ்நாடு வெடி பொருள் ஆலை, எஃகு ஆலை, நூற்பாலை, எம்.ஆர்.எப்.டயர், சந்தனம், சர்க்கரை, தோல் மற்றும் தீப்பெட்டி ஆலைகளும் உள்ளன.

**முக்கிய விளைபொருட்கள்**

நெல், கரும்பு, சோளம், நிலக்கடலை.

**ஆறுகள்**

பாலாறு, பொன்னையாறு.

**மழையளவு**

சராசரி 1012.4 மி.மீ.-1998–99

**சுற்றுலாத் தலங்கள்**

வேலூர் கோட்டை, முத்து மண்டபம், ஏலகிரிமலை, அமிரிதிக்காடு, ஜவ்வாதுமலை, டாக்டர் விஷ்ணுபாப்பு வான் இயற்பியல் நிறுவனம், காவனூர்.





கிராமங்கள் மூலம் விவசாயிகள் காய்கறிகள், பழங்கள், மலர்கள், தேங்காய் போன்ற விளை பொருட்களை சுமை கட்டணம் இன்றி பேருந்து மூலம் உழவர் சந்தைக்குக் கொண்டுவந்து தாங்களாகவே இலவச எடை தராசு மூலம் நுகர்வோருக்கு விற்பனை செய்து எந்த இடைத் தரகர்கள் இல்லாமல் இலாபம் பெற்றுப் பயனடைந்து வருகிறார்கள்.

இதே போன்று 19.6.2000 மற்றும் 19.8.2000 முறையே காகிதப்பட்டடை மற்றும் வாணியம்பாடியில் தொடங்கப் பட்ட உழவர் சந்தைகளுக்கு 40 கிராமங்கள் மற்றும் 50 கிராமங்களிலிருந்து காய்கறிகள் வருகின்றது.

## வளர்ச்சிப் பணிகள்

### அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

அனைத்து வசதிகளையும் கிராமங்களுக்கு அளித்திடும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் வேலூர் மாவட்டத்தில் 49 கிராமங்களில் செயல்படுத்தப்பட்டது. இந்த 49 கிராமங்களிலும் 2,642 பணிகள் ரூ.16.85 கோடியில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டன.

### நமக்கு நாமே திட்டம்

ஊர் முன்னேற்றத்தில் ஒவ்வொருவரும் பங்கேற்கும் நமக்கு நாமே திட்டம் மூலம் வேலூர் மாவட்டத்தில் 2,109 பணிகள் ரூ.7.37 கோடியில் மேற்கொள்ளப்பட்டன.

### சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டம்

சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ரூ.77 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. வேலூர் மாவட்டத்தில் இத்திட்டம் மூலம் 1937 பணிகள் ரூ.23.04 கோடியில் மேற்கொள்ளப்பட்டது.

### உழவர் சந்தை

வேலூர் மாவட்டத்தில் நான்கு உழவர் சந்தைகள் தொடங்கப் பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. இதில் வேலூர், காட்பாடி உழவர் சந்தை 29.1.2000–ல் தொடங்கப்பட்டது. இச்சந்தைகளில் முறையே 52 கிராமங்கள் மற்றும் 72

| | | |
|---|---|---|
| வேலூர் மற்றும் காட்பாடி | 29.1.2000 முதல் 19.9.2000 முடிய | 235 நாட்கள் |
| காகிதப்பட்டடை உழவர் சந்தை | 19.6.2000 முதல் 19.9.2000 முடிய | 93 நாட்கள் |
| வாணியம்பாடி உழவர்சந்தை | 19.8.2000 முதல் 19.9.2000 முடிய | 32 நாட்கள் |

### விற்பனை விவரம் :

வேலூர் உழவர் சந்தையில் 27,13,286 கிலோ காய்கறிகள், ரூ.1,60,41,691–க்கு விற்பனை செய்யப்பட்டது. இதில் 42,566 உழுவோரும், 8,25,072 நுகர்வோரும் பயனடைந்துள்ளனர்.



காட்பாடி உழவர் சந்தையில் **23,78,070** கிலோ காய்கறிகள் ரூ.**1,53,29,609**-க்கு விற்பனையாகியுள்ளது. இதில் **34,966** விவசாயிகளும், **7,94,455** பொதுமக்களும் பயன்பெற்றனர்.

காகிதப்பட்டடை உழவர் சந்தையில் **3,67,821** கிலோ காய்கறிகள் ரூ.**25,38,842**-க்கு விற்பனையாகியுள்ளது. இதில் **6,356** விவசாயிகளும், **1,23,338** பொதுமக்களும் பயன் பெற்றனர்.

வாணியம்பாடி உழவர் சந்தையில் **2,20,640** கிலோ காய்கறிகள் ரூ.**11,78,599**-க்கு விற்பனையாகியுள்ளது. இதில் **3,584** விவசாயிகளும், **73,142** பொதுமக்களும் பயன் பெற்றனர்.

மொத்தத்தில் **56,79,817** கிலோ காய்கறிகள் ரூ.**3,50,88,741** மதிப்பில் விற்பனை ஆகியுள்ளது. இதில் மொத்தமாக **87,472** விவசாயிகளும், **18,16,007** நுகர்வோரும் பயன் பெற்றுள்ளனர்.

### வருமுன் காப்போம் திட்டம்

வேலூர் மாவட்டத்தில் வருமுன் காப்போம் பன்முனை இலவச மருத்துவப் பரிசோதனை மற்றும் சிகிச்சை முகாம் **6.1.2000** முதல் நடைபெற்று வருகின்றது. இவ்வாண்டில்



**454** மருத்துவ முகாம்கள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆகஸ்ட் **2000** வரை **275** முகாம்களும், தொரப்பாடி மத்திய சிறையில் சிறப்பு முகாம் ஒன்றும் சேர்த்து **276** முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

மீதமுள்ள **178** முகாம்கள் **2000**ஆம் ஆண்டு நவம்பர்/டிசம்பர் மாதத்திற்குள் நடத்தி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

★ இதுவரை நடைபெற்றுள்ள **276** முகாம்களில் **2,86,057** நபர்கள் பயனடைந்துள்ளனர். அவர்களில் ஆண்கள் **96,600 (34%)**, பெண்கள் **1,26,360 (44%)** மற்றும் குழந்தைகள் **63,097 (22%)**

★ இவர்களில் பொது மருத்துவம், அறுவை சிகிச்சை, கண், காது-மூக்கு-தொண்டை, பல், தோல், குழந்தைகள் நலம், மகப்பேறு, சித்த மருத்துவம் சிறப்பு மருத்துவர்களால் பரிசோதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்றவர்கள் ஆண்கள்-**56,162**, பெண்கள்-**68,622** மற்றும் குழந்தைகள்-**46,456** (மொத்தம்-**1,71,240**)

★ மேல் சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை - **15,974**

★ அவர்களில் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றவர்கள் - **3,298**

★ மேல் சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்ட நோயாளிகளுக்காக **15.7.2000**-ம் அன்று வேலூர் அரசினர் பெண்ட்லண்ட் மருத்துவமனையில் சிறப்பு முகாம் ஏற்பாடு செய்யப்பட்டு, **616** நோயாளிகள் சிகிச்சைப் பெற்றனர்.

★ இதுவரை ரூ.**16,98,973** மதிப்புள்ள மருந்துகள் இந்த முகாம்களில் இலவசமாக பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆய்வக பரிசோதனைகள் இம்முகாம்களிலேயே செய்யப்பட்டன. அதில்

சிறுநீர் பரிசோதனை - **1,92,446** பேருக்கும், இரத்த பரிசோதனை - **33,816** பேருக்கும், சளி பரிசோதனை - **3,370** பேருக்கும், இ.சி.ஜி. - **6,205** பேருக்கும், அல்ட்ரா சோனாகிராம் - **1,150** பேருக்கும், மற்ற பரிசோதனைகள் - **3,174** பேருக்கும் செய்யப்பட்டது.

**1,500** பேர்களுக்கு மேல் பங்கு பெற்ற முகாம்கள் - **34**, **1000** பேர்களுக்கு மேல் பங்கு பெற்ற முகாம்கள் - **99**, **1,000** பேர்களுக்கு குறைவானவர்கள் பங்கு பெற்ற முகாம்கள் - **143**

### பாராட்டு மற்றும் சிறப்பு அம்சங்கள்

மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையின் ஒத்தகால மதிப்பீட்டு ஆய்வறிக்கையில் வேலூர் மாவட்டத்தில் நடத்தப்பட்ட முகாம் ஒரு மாதிரி முகாம் என பாராட்டியுள்ளது.

"வேலூர் மாவட்டம் கொணவட்டம் முகாமின் **(28.1.2000)** சிறப்பம்சமாவது, முதலாவதாக இங்கு பதிவு செய்யப்பட்ட அத்தனை பயனாளிகளுக்கும் எடை பார்க்கப்பட்டதோடு மட்டுமல்லாமல் அவர்களில் **35** வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இரத்த அழுத்தம் பரிசோதித்து சுகாதார அட்டைகளில் குறிப்பிட்டது சீரான செயலாக்கத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். அடுத்த சிறப்பம்சமாவது, ஒவ்வொரு மருத்துவப் பிரிவுக்கும் மற்றும் பரிசோதனை இடம் போன்றவற்றிற்கு அடையாள



சின்னம் குறிப்பு பலகைகள் வைக்கப்பட்டிருந்ததால் பெரும்பாலான பயனாளிகள் பொது மருத்துவ பரிசோதனைக்குப் பின் தானாகவே தங்களுக்கான சிறப்பு மருத்துவர் மற்றும் பரிசோதனை பிரிவுகளுக்குச் சென்று பயனடைந்தனர். தமிழகத்தில் இதுகாறும் நடைபெற்ற அத்தனை முகாம்களைக் காட்டிலும் இங்கு அதிக அளவில் நோயின் குணமறிந்து அதற்கேற்றாற்போல் மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. பெரும்பாலான பயனாளிகள் முகாமின் மருத்துவ சேவையைப் பாராட்டி சென்றதற்கு மற்றொரு காரணம் முகாமில் மிகப் பொறுமையாகப் பணியாற்றிய மருத்துவர்களும், பேருதவி புரிந்த சீருடைத் தரித்த புனித ஜான் செவிலியர் பள்ளியின் மாணவிகள் மற்றும் ஜே.பி.கே.எம். செவிலியர் பள்ளி மாணவிகளின் சேவைகளுமே. இம்முகாம் வளாகம் மிகவும் தூய்மையாகவும், துப்புரவாகவும் ஒரு சிறந்த மருத்துவமனை போல் காட்சி அளித்ததை பயனாளிகள் மிகவும் பாராட்டி இருந்தார்கள். வட்டார வளர்ச்சி அலுவலகத்தின் ஒத்துழைப்பும், ஊராட்சி ஒன்றியத்தின் அதிக அளவு ஈடுபாடும் தன்னார்வ தொண்டர்களின் பங்கேற்பும் இம்முகாமை சுகாதாரத்துறை செவ்வனே நடத்தி முடிக்க ஏதுவாக இருந்தது. இது ஒரு மாதிரி முகாம் என்று கூட சொல்லலாம்".

மேலும் முகாம்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆய்வகம் மிகவும் சிறப்பாக செயல்படுகிறது என்பதை நேரிடையாகவும், தமிழகத்தில் இம்மாவட்டத்தில் தான் ஆய்வகம் மற்றும் மலேரியா மற்றும் யானைக்கால் சிகிச்சை ஏற்பாடுகள் தொடர்ந்து அனைத்து முகாம்களிலும் நடைபெறுகின்றன எனவும் பாராட்டியுள்ளனர்.

முகாம் செயல்பாடு பற்றிய சிறப்பு அறிக்கை முகாமைப் பார்வையிடும் மாவட்ட அளவிலான அதிகாரிகள் மற்றும் முகாம் பொறுப்பு வட்டார ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர்கள் ஆகியோரிடமிருந்து மாவட்ட ஆட்சியருக்கு நேரிடையாக அனுப்பும் முறை நடைமுறையில் உள்ளது ஒரு சிறப்பு அம்சமாகும்.

ஜூன் 2000ம் முதல் தொழுநோய் கண்டறிய முகாமிற்கு வருகிற நோயாளிகள் சிறியவர், பெரியவர்கள் ஆக அனைவருக்கும் மருத்துவம் சாரா மேற்பார்வையாளர்களால் பரிசோதனை செய்யப்படுவதும், உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்கள் அனைவருக்கும் இ.சி.ஜி எடுப்பதும் சிறப்பு செயல்பாடுகள் ஆகும்.

மலேரியா மற்றும் யானைக்கால் சிகிச்சை கடந்த ஆண்டைவிட நடப்பு ஆண்டில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை இருமடங்காக உயர்ந்திருப்பது, சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் என்ற உணர்வை வருமுன் காப்போம் திட்ட முகாம் மக்களிடையே ஏற்படுத்தியுள்ளது என்பது தெளிவாகிறது.

**மகளிர் சிறுவணிகக் கடன்**

வேலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மூலம் ஏழை, எளிய மகளிர் சிறுவணிகம் செய்ய 3145 மகளிர்க்கு ரூ.49.80 இலட்சம் கடனாக வழங்கப்பட்டது.

**பெரியார் நினைவு சமத்துவபுரம்**

சாதி சமய பூசல்களற்ற ஓர் சமத்துவ சமுதாயத்தை உருவாக்க முயலும் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் சீரிய முயற்சியில் உருவானதுதான் பெரியார் நினைவு சமத்துவபுரம் என்ற மகத்தானத் திட்டம்.



தமிழ்நாட்டின் முதல் சமத்துவபுரம், வேலூர் மாவட்டம் பொய்கை ஊராட்சியில் 12.77 ஏக்கர் பரப்பளவில் ரூ.105.49 இலட்சம் செலவில் அமைக்கப் பெற்று 20.12.98–இல் தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

வேலூர் மாவட்டத்தின் இரண்டாவது பெரியார் நினைவு சமத்துவபுரம் மாவட்டத்தின் கிழக்கு் எல்லையில் அரக்கோணம் வட்டம் பெரும்புலிபாக்கத்தில் 11.73 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.101.66 இலட்சம் செலவில் அமைக்கப்பெற்று 30.6.99 அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

வேலூர் மாவட்டத்தின் மூன்றாவது பெரியார் நினைவு சமத்துவபுரம் வாலாசா வட்டம் அம்மூர் பேரூராட்சி எல்லையில் 11.03 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.121.66 இலட்சம் செலவில் அமைக்கப்பெற்று 30.6.99 அன்று திறந்து வைக்கப்பட்டது.

மேலும் இம்மாவட்டத்தின் நான்காவது பெரியார் நினைவு சமத்துவபுரம் திருப்பத்தூர் வட்டம் உடையாமுத்தூர் கிராமத்தில் 12.33 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.81.65 இலட்சத்தில் நிர்மாணிக்கப்பட்டு 19.8.2000 அன்று பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

வேலூர் மாவட்டத்தின் 1999–2000–ஆம் ஆண்டு ஐந்தாவது பெரியார் நினைவு சமத்துவபுரம் காட்பாடி வட்டம் செம்பராயநல்லூர் ஊராட்சியில் 11.36 ஏக்கர் பரப்பில் அமையும் பொருட்டு கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டது.

இம்மாவட்டத்தின் ஆறாவது பெரியார் நினைவு சமத்துவபுரம் அரக்கோணம் வட்டம் சோளிங்கர் – அரக்கோணம் நெடுஞ்சாலையில் கூடலூர் ஊராட்சியில் 10.41 ஏக்கர் பரப்பில் அமைக்க, கட்டுமானப் பணிகள் 16.8.2000 அன்று தொடங்கப்பட்டது.

**கால்நடை பாதுகாப்புத் திட்டம்**

தமிழக முதல்வர் அவர்களால் 18.1.2000 அன்று தொடங்கி வைக்கப்பட்ட சிறப்பு கால்நடை பாதுகாப்பு முகாம் மாதம்தோறும் 20 கிராமங்களில் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒன்று வீதம் 31.3.2000 முடிய 41 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. 1,40,161 கால்நடைகள் பயனடைந்துள்ளன.

1.4.2000 முதல் 31.8.2000 முடிய 100 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. 2,12,575 கால்நடைகள் பயனடைந்துள்ளன. முகாம்களில் தடுப்பூசிப் பணி, சிகிச்சை அளித்தல், குடற்புழு நீக்கம் செய்தல், கருவூட்டல் பணி, மலட்டுத் தன்மைக்கு சிகிச்சை ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் கால்நடை தீவனம் குறித்து விரிவான பிரசாரம் செய்யப்படுகிறது.

**பூமாலை**

வேலூர் மாவட்டத்தில் டவுன்ஹாலில் 23.8.2000 முதல் தற்காலிக வணிக வளாகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.




இவ்வளாகத்தில் 17 கடைகள் உள்ளன. இக்கடைகளில் தினமும் ரூ.700–க்கு மேல் பொருள்கள் விற்பனை செய்கிறார்கள்.

**சமூக நலத்துறை**

வேலூர் மாவட்டத்தில் சமூகநலத்துறை மூலம் கடந்த நான்காண்டுகளில் வழங்கப்பட்ட உதவிகள் விவரம்:

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண நிதியுதவி ரூ.16,01,01,000. பயன்பெற்றோர் எண்ணிக்கை 17,545 பேர்.

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் விதவை மறுமணத் திட்டஉதவி ரூ.2,19,000. பயன் பெற்றோர் 32 பேர்.

அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதியுதவி ரூ.34,80,000. பயன் பெற்றோர் 251 பேர்.

ஈ.வெ.ரா.மணியம்மையார் ஏழை விதவை மகள் திருமண நிதியுதவி ரூ.10,80,000. பயன் பெற்றோர் 222 பேர்.

அன்னை தெரசா நினைவு ஆதரவற்றோர் பெண் திருமண நிதியுதவி ரூ.1,15,000. பயன் பெற்றோர் 22 பேர்.

சத்தியவாணிமுத்து அம்மையார் இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் மூலம் பயன்பெற்றோர் 725 பேர்.

ஏழை விதவை குழந்தைகளுக்கு இலவச பாடநூல் வழங்கும் திட்டச் செலவினம் ரூ.1,52,500. பயன்பெற்றோர் 1410 பேர்.

டாக்டர் முத்துலட்சுமிரெட்டி மகப்பேறு உதவி திட்டச் செலவினம் ரூ.1,03,93,750. பயன்பெற்றோர் 18,750 பேர்.

சிவகாமி அம்மையார் நினைவு பெண்குழந்தைகள் பாதுகாப்புத் திட்டச்செலவினம் ரூ.36,66,000. பயன்பெற்றோர் 2434 பேர்.

**இளைஞர் மன்றம்**

வேலூர் மாவட்டத்தில் ரூ.0.68 கோடியில் 272 இளைஞர் மன்றங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

**கண்ணொளித் திட்டம்**

இந்தியாவில் 1986–1989–ஆம் ஆண்டு ஆய்வின்படி 12 மில்லியன் மக்கள் பார்வையிழப்புக்குள்ளாகி உள்ளனர் எனவும், ஆண்டுதோறும் இந்நிலை கூடி வருவதாகவும் அறியப்பட்டுள்ளது. உலகளவில் பார்வையிழப்புக்குள்ளான நபர்களில் 5ல் ஒருவர் இந்தியாவில் உள்ளனர் எனவும், நகர்புறங்களைவிட கிராமப்புறங்களில் இந்த நிலை கூடுதல் எனவும் ஆய்வுகள் குறிப்பிட்டுள்ளன. இதன்படி இந்திய அளவில் 1,000 பேர்களில் 15 பேர்கள் பார்வையிழப்புக்குள்ளாகியுள்ளனர் என கணக்கிடப் பட்டுள்ளது.

ஆண்டுதோறும் பெருகிவரும் பார்வையற்றோரின் எண்ணிக்கையை குறைக்க, குறிப்பாக கிராமப்புற ஏழை, எளிய மக்களும் பெரிதும் பயன்பெறும் வகையில் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் 1972–ஆம் ஆண்டு அரசு இலவச கண்ணொளித் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தில் கிராமங்கள், நகரங்கள் தோறும் பெரியளவில் கண் சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டு, கண் மருத்துவ நிபுணர்களால் புரைநோய்க்குச் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இலவச கண்ணொளித் திட்டம் குக்கிராமங்களில் வாழக்கூடிய மக்களிடையேயும் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.

ஆய்வுகளின்படி வேலூர் மாவட்டத்தில் பார்வை இழப்புக்குள்ளானவர்களின் நோய் வாரியான விகிதம் 100 நபர்களில் பின்வருமாறு உள்ளன.

| | | |
|---|---|---|
| கண்புரை நோய் உள்ளவர்கள் (Cataract) | – | 80% |
| பார்வைத் திறன் குறையுள்ளோர் (Refractive Error) | – | 7.35% |
| கருவிழித் தழும்பு (Corneal Scar) | – | 4% |
| க்ளாக்கோமா (Glaucoma) | – | 1% |

வேலூர் மாவட்டத்தில் 1996–97 முதல் 1999–2000ம் முடிய கடந்த 4 ஆண்டுகளில் 53,920 பேர்களுக்கு கண்புரை அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு பார்வை மீட்டுத் தரப்பட்டுள்ளது.

**1998–99 கண்புரை நோய் இல்லாத மாவட்டமாக அறிவிக்கும் சிறப்புத் திட்டம் :**

1998–99 ஆண்டில் வேலூர் மாவட்டத்தை “முற்றிலும் கண்புரை நோய் இல்லா மாவட்டமாக” அறிவிக்கும் சிறப்புத் திட்டத்தின்படி கண்புரை நோயாளிகள் அனைவரையும் கண்டறிய ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும், நகராட்சிப் பகுதிகளிலும் 1998–ஆம் ஆண்டு ஜூன், ஜூலை மாதங்களில் வீடு வீடாகக் கணக்கெடுப்பின்படி கண்டறியப்பட்ட கண்புரை நோயாளிகள் அனைவரும் சிகிச்சைப் பெற இலவச கண் சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டன.

இச்சிறப்புத் திட்டத்தின்படி 1998–99–ஆம் ஆண்டின் மொத்தம் 122 இலவச கண் சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டு, முற்றிய கண் புரையுள்ள அனைவருக்கும் கண்புரை நீக்க அறுவைச் சிகிச்சை செய்து கண்ணொளி வழங்கப்பட்டது.

**பள்ளி மாணவ, மாணவிகளுக்கு கண் பரிசோதனை:**

1996–97–ஆம் ஆண்டில் 9 வட்டாரங்கள் மற்றும் 3 நகராட்சிகளில் உள்ள 972 பள்ளிகளில் பயிலும் 1,92,654 மாணவ, மாணவியர்களுக்குப் பார்வைச் சோதனை செய்யப்பட்டு பார்வைக் குறைவான 1,140 மாணவ மாணவியர்களுக்கு இலவசக் கண்ணாடிகள் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் கண் மருத்துவ உதவியாளர்கள் மூலம் வழங்கப்பட்டு பார்வையிழப்பு தடுக்கப்பட்டது.

1997–98–ஆம் ஆண்டில் 11 வட்டாரங்கள் மற்றும் 5 நகராட்சிகளில் உள்ள 6 முதல் 12–ஆம் வகுப்பு வரை பயிலும் 3,00,771 பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு பார்வை சோதனை செய்து பார்வைக் குறைவான 1,155 குழந்தைகளுக்கு இலவசக் கண்ணாடிகள் கண் மருத்துவ உதவியாளர்கள் மூலம் வழங்கப்பட்டு பார்வையிழப்புத் தடுக்கப்பட்டது.

1999–2000–ஆம் ஆணடில் வாழ்வொளித் திட்டத்தின் கீழ் 57,387 பார்வைக் குறைவான பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு பார்வைச் சோதனை செய்து 1,327 மாணவ மாணவியர்களுக்கு இலவசக் கண்ணாடிகள் வழங்கப்பட்டது.

31.3.2001க்குள் பார்வைக்குறைவான அனைத்து குழந்தைகளுக்கும் கண்பரிசோதனை செய்து பார்வையிழப்பைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. இலவசக் கண்ணாடிகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**கண் மருத்துவக் கட்டட வசதிகள்:**

16 ஆரம்ப சுகாதார நிலையங்களில் கண்பரிசோதனை அறைகள் ரூ.8.32 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப் பட்டுள்ளன.

1999–2000–ஆம் ஆண்டில் 4 ஆரம்ப சுகாதார நிலையங்களில் கண் பரிசோதனை அறைகள் ரூ.1.80 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன.

ஆற்காடு மற்றும் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைகளில் 16 படுக்கைகள் கொண்ட கண் சிகிச்சைப் பிரிவு கட்டடங்கள் ரூ.64 இலட்சத்தில் கட்டப்பட்டுள்ளன.

1999–2000–ஆம் ஆண்டில் அரக்கோணம் மருத்துவமனையில் 16 படுக்கைகள் கொண்ட கண் சிகிச்சைப் பிரிவுக் கட்டடம் ரூ.37.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது.

**தொழில் வளர்ச்சி**

மாநில தொழில் வணிகத்துறையின் ஒரு அங்கமாக மாவட்ட அளவில் செயல்படும் ஒரு அமைப்பு தான் மாவட்ட தொழில் மையம். தொழில் முனைவோருக்குத் தேவையான தகுந்த தொழில் திட்டங்களை வகுத்துக் கொடுத்தல், தொழிலுக்குத் தேவையான நிலம், கட்டடம் மற்றும் இயந்திரங்கள் வாங்குவதற்கு நிதி நிறுவனங்கள் மூலம் கடன் உதவிபெற பரிந்துரை செய்தல் மற்றும் உரிமம் பெறுவதில் தடங்கல் ஏற்படின் ஒருமுனை வழி தீர்வுக் கூட்டத்தின் மூலம் உதவி அளிக்கப்படுகிறது. மின் இணைப்பு முன்னுரிமையில் பெற்றிட வழி வகுத்தல். உற்பத்திப் பொருட்களை தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் மற்றும் சிறுதொழில் நிறுவனம் மூலமாக விலை முன்னுரிமை அடிப்படையில் விற்பனை செய்திடத் தேவையான பதிவுச்சான்றிதழ்கள் பெற்றிட பரிந்துரை செய்தல். உற்பத்தி பொருட்களுக்கு "தர நிர்ணயச் சான்றிதழ்" இந்திய தர நிர்ணய நிலையம் மற்றும் அரசு சோதனைக் கூடங்களின் மூலம் குறைந்த கட்டணத்தில் பெற்றிட பரிந்துரை செய்தல். பாரதப் பிரதமர் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 8–ஆம் வகுப்பு தேறிய அனைத்து ஆண்/பெண் இருபாலரும் சுயமாகத் தொழில் தொடங்க தேசிய வங்கியின் மூலம் கடனுதவி அளிக்கிறது. மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தொழில் முனைவோருக்கு பயிற்சி அளித்தல். சிறுதொழில் நிறுவனங்களுக்குத் தொழில் நடத்த சலுகைகளும் மானியங்களும் வழங்கப்படுகிறது.

**மாவட்டத் தொழில் மையத்தின் சாதனைகள்:**

சிறுதொழில் தொடங்க ஆர்வமுள்ள இளைஞர்களைக் கண்டறிந்து தற்காலிகச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் தொழில் தொடங்கி நடத்திக்கொண்டு இருப்பவர்களுக்கு நிரந்தர சிறுதொழில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகிறது.

| | இலக்கு | சாதனைகள் |
|---|---|---|
| அ) தற்காலிக சிறுதொழில் சான்றிதழ் | | |
| 1997–98 | 2200 | 2313 |
| 1998–99 | 2200 | 1489 |
| 1999–2000 | 2200 | 2341 |
| 2000–2001 (31.8.2000 முடிய) | 2200 | 868 |
| ஆ) நிரந்தர சிறுதொழில் சான்றிதழ் | | |
| 1997–98 | 1220 | 1272 |
| 1998–99 | 1220 | 1222 |
| 1999–2000 | 1220 | 1224 |
| 2000–2001 (31.8.2000 முடிய) | 1310 | 559 |

**சிறு தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மானியம் மற்றும் சலுகைகள் :**

தொழிலில் பின்தங்கிய ஒன்றியங்களில் தொடங்கப்படும் தொழில்களுக்கு 15% தொழில் முதலீட்டு மானியம், மிகவும் பின்தங்கிய ஒன்றியங்களில் தொடங்கப்படும் தொழில்களுக்கு 20% மானியத் தொகை வழங்கப்படுகிறது. மேலும் தானியங்கி வாகன உதிரி பாகங்கள் தயாரித்தல், உணவுப் பொருட்கள், தோல், மருந்துகள், மின்னணுப் பொருட்கள் தயாரிப்பு போன்ற தொழில்களுக்கு 20% சிறப்பு மானியம் வழங்கப்படுகிறது.

புதிய தொழிற்சாலைகள் மின்சாரம் பெறப்பட்ட முதல் மூன்று வருடங்களுக்கு முறையே 40%, 30% மற்றும் 20% மின்கட்டண மானியம் வழங்கப்படுகிறது. மேலும் வட்டியில்லா விற்பனை வரி தள்ளி வைப்பு மற்றும் மிகவும் பின்தங்கிய வட்டத்தில் விற்பனை வரி தள்ளுபடி சலுகைகள்.

| | | மானியம் வழங்கப் பட்ட தொகை (இலட்சத்தில்) | பயனாளிகள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| தொழில் முதலீட்டு மானியம் | 1997–98 | 156.65 | 56 |
| | 1998–99 | 163.90 | 69 |
| | 1999–2000 | 208.09 | 53 |
| | 2000–2001 (31.8.2000 முடிய) | 125.73 | 28 |

| | | | |
|---|---|---|---|
| மின்மானியம் | 1997-98 | 39.17 | 293 |
| | 1998-99 | 24.69 | 127 |
| | 1999-2000 | 24.39 | 152 |
| | 2000-2001 (31.8.2000 முடிய) | 10.43 | 67 |
| ஜெனரேட்டர் மானியம் | | | |
| | 1998-99 | 1.03 | 4 |
| | 1999-2000 | 1.69 | 4 |
| | 2000-2001 (31.8.2000 முடிய) | 1.12 | 4 |
| வட்டியில்லா விற்பனை வரி தள்ளிவைப்பு | 1997-98 | 24.29 | 2 |
| | 1998-99 | இல்லை | இல்லை |
| | 1999-2000 | 18.88 | 1 |
| | 2000-2001 | இல்லை | இல்லை |
| வட்டியில்லா விற்பனை வரி தள்ளுபடி | 1997-98 | 14.21 | 2 |
| | 1998-99 | இல்லை | இல்லை |
| | 1999-2000 | 80.41 | 1 |
| | 2000-2001 | இல்லை | இல்லை |

**மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் :**

இத்திட்டத்தின்கீழ் படித்து சுயதொழில் தொடங்க விரும்பும் மகளிருக்கு 2 மாதங்கள் பயிற்சிஅளிக்கப்பட்டு அவர்கள் தொழில் தொடங்க எல்லா உதவிகளும் செய்யப்படுகிறது. பயிற்சி காலத்தில் அவர்களுக்கு மாதம் ரூ.300 உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இவர்கள் 10 ஆம் வகுப்பு படித்தவராக இருக்க வேண்டும். மேலும் 18 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும். பயிற்சி முடிந்தபின் கடன் உதவி பெற, தேசிய வங்கிகளுக்கு பரிந்துரை செய்யப்படும்.

| | ஒதுக்கீடு செய்யப்பட்ட எண்ணிக்கை | பயிற்சி பெற்றவர்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1997-98 | 30 | 26 |
| 1998-99 | 35 | 35 |
| 1999-2000 | 30 | 27 |
| 2000-2001 (31.8.2000 முடிய) | 30 | பயிற்சி அளிக்கப்பட உள்ளது. |

**தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகள் :**

கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து சேவை செய்வதில் வேலூர் மாவட்டத்தில் தொழில் வணிகத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 14 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

அதிக அளவில் தோல் தொழிற்சாலைகளில் இருந்து வெளிவரும் கழிவு நீரால் பாலாற்று படுகை மற்றும் விளை நிலங்கள் பாதிக்கப்படுவதால் மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் உத்திரவின் பேரில் பொது தோல் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் இராணிப்பேட்டை, ஆம்பூர், பேர்ணாம்பட்டு, வாணியம்பாடி ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

**கல்வித்துறை**

அனைத்துக் கிராமப்புற உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் 8-ஆம் வகுப்புப் பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ மாணவியர்க்கு ஒவ்வொரு ஆண்டும் திறனாய்வுத் தேர்வு நடத்தி, தேர்வு பெற்ற 100 மாணவ, மாணவியர்க்கு ஆண்டுதோறும் ஒவ்வொருவருக்கும் ரூ.1,000 வீதம் வழங்கப்பட்டு வருகிறது. 1997-2000-ஆம் ஆண்டு வரை ரூ.14.70 இலட்சம் மாணவர்களுக்கு உதவித்தொகையாக வழங்கப் பட்டுள்ளது.




10-ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்புப் பொதுத்தேர்வுகளில் மாவட்டத்தில்/மாநிலத்தில் தரம் பெற்ற முதல் மூன்று மாணவர்களுக்கு அவர்களின் உயர் கல்விச் செலவை அரசு ஏற்கும் திட்டம் 1997-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி 1997-ஆம் ஆண்டு முதல் 1999-ஆம் ஆண்டு வரை 10-ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 7 பேர்களுக்கும், பிளஸ் 2 தேர்வில் 12 பேர்களுக்கும் மொத்தம் ரூ.2,74,161 உயர் கல்விச் செலவினமாக வழங்கப்பட்டுள்ளது.



கணினிக் கல்வித் திட்டத்தின் கீழ் 1999–2000–ஆம் ஆண்டில் 63 அரசினர் மேல்நிலைப்பள்ளிகளிலும், 2000–2001–ஆம் ஆண்டில் 22 அரசினர் மேல்நிலைப்பள்ளிகளிலும் கணினிக் கல்வித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

### உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வேலூர் மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் பகுதி நேர நியாயவிலைக் கடைகள்–312, முழுநேர நியாய விலைக்கடைகள்–106, மகளிர் நியாயவிலைக் கடைகள்(முழுநேரம்)–14 ஆக மொத்தம் 432 புதிய நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டு, குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.

### குடும்ப அட்டைகள்

புகைப்படத்துடன் கூடிய புதிய குடும்ப அட்டைகள் வழங்கும் பணி 1998–ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப் பட்டு, புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன. அதன் விவரம் :

பழைய குடும்ப அட்டைகளுக்குப் பதிலாக 6,71,360 புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன.

புதியதாக குடும்ப அட்டை கோரி வரப்பெற்ற மனுக்களின் பேரில் விசாரணை மேற்கொண்டு, தகுதியான நபர்களுக்கு 1,16,071 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது.

### போலி குடும்ப அட்டைகள்

போலி குடும்ப அட்டைகளைக் கண்டுபிடிக்க வருவாய்த்துறை, உணவு பொருள் வழங்கல் துறை மற்றும் கூட்டுறவுத்துறைப் பணியாளர்கள் அனைவரையும் ஈடுபடுத்தி நியாயவிலைக் கடைகளில் இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளை வீடு வீடாகச் சென்று 100% தணிக்கை மேற்கொண்டு 49,496 போலி குடும்ப அட்டைகள் கண்டறிந்து இரத்து செய்யப்பட்டுள்ளன.

பொது மக்களின் சௌகரியத்தை முன்னிட்டு, நகர்ப் புறங்களில் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருவதை ஒருங் கிணைத்து, வேலூர் மாவட்டத்தில் 9 மண்ணெண்ணெய் பங்குகள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டு, மாதம் முழுவதும் குடும்ப அட்டைதாரர் களுக்கு அரசு நிர்ணயித்த



அளவுகோலின்படி மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது.

**போக்குவரத்துத்துறை**



வேலூர் மாவட்டத்தில் இதுகாறும் 33 வழித்தடங்களில் சிற்றுந்துகள் இயங்கும் வகையில் அனுமதிச் சீட்டு வழங்க வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் உத்தரவிடப்பட்டுள்ளது. இதனால் இம்மாவட்டத்தில் உள்ள 303 கிராமங்களில் வசிக்கும் பொது மக்கள் சிற்றுந்து வசதிகள் பெற்று பயனடைவார்கள்.

அனுமதிக்கப்பட்ட மேற்குறித்த 33 வழித்தடங்களில் 13 வழித்தடங்களில் தற்பொழுது சிற்றுந்துகள் இயங்கி வருகிறது . மேலும் 26 வழித்தடங்களில் சிற்றுந்து அனுமதி வழங்கிட தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலன்**

தனி நபர் கடனுதவித் திட்டத்தின் கீழ் 1999–2000 ஆண்டில் பெறப்பட்ட 715 மனுக்களில் 83 மனுக்கள் அங்கீகரிக்கப்பட்டு ரூ.53,42,435 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

டாப்செட்கோ திட்டத்தின் கீழ் 1999–2000 ஆண்டில் 117 மனுக்கள் பெறப்பட்டு, 18 மனுக்கள் அங்கீகரிக்கப்பட்டு 18 பயனாளிகளுக்கு ரூ.16,68,000 கடனாக வழங்கப் பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் 1996–97–ஆம் ஆண்டில் மிக பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினைச் சார்ந்த 97,372 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.2.10 கோடியும், பிற்பட்ட வகுப்பினைச் சார்ந்த 77,716 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.26.67 கோடியும் கல்வி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

இத்துறை மூலம் 1996–97–ஆம் ஆண்டில் 21,225 மாணவ, மாணவியர்களுக்கும், 1997–98–ஆம் ஆண்டில் 26,608 மாணவ, மாணவியர்களுக்கும், 1998–99–ஆம் ஆண்டில் 30,801 மாணவ, மாணவியர்களுக்கும், 1999–2000–ஆம் ஆண்டில் 34,257 மாணவ, மாணவியர் களுக்கும் இலவச பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இத்துறையின் கீழ் இயங்கும் விடுதிகளில் தங்கி 5–ஆம் வகுப்பு முதல் 10–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு 1996–97–ஆம் ஆண்டில் 1,141 மாணவ, மாணவியர்களுக்கும், 1997–98–ஆம் ஆண்டில் 1,141 மாணவ, மாணவியர்களுக்கும், 1998–99–ஆம் ஆண்டில் 1,057 மாணவ, மாணவியர்களுக்கும், 1999–2000–ஆம் ஆண்டில் 1,163 மாணவ, மாணவியர் களுக்கும் இலவச சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்துறையின் கீழ் இயங்கும் விடுதிகளில் தங்கி பயிலும் 10, 12ஆம் வகுப்பினைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்கு 1996–97–ஆம் ஆண்டில் 323ம், 1997–98–ஆம் ஆண்டில் 323–ம், 1998–99–இல் 330–ம், 1999–2000–ஆம் ஆண்டில் 285ம் இலவச கையேடுகள் வழங்கப்பட்டுள்ளன.

தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து பயிற்சி உதவித் தொகை 1996–97–ஆம் ஆண்டில் 49 நபர்களுக்கு ரூ.18,720ம், 1997–98–ஆம் ஆண்டில் 39 நபர்களுக்கு ரூ.13,745ம், 1998–99–ஆம் ஆண்டில் 25 நபர்களுக்கு ரூ.9,065ம், 1999–2000–ஆம் ஆண்டில் 55 நபர்களுக்கு ரூ.19,335ம் வழங்கப்பட்டுள்ளன.

1996–97–ஆம் ஆண்டில் ரூ.87,075 மதிப்புள்ள 75 சலவைப் பெட்டிகளும், 1997–98–ஆம் ஆண்டில் ரூ.1,84,650 மதிப்புள்ள 150 சலவைப் பெட்டிகளும், 1998–99–ஆம் ஆண்டில் ரூ.4,92,400 மதிப்புள்ள 400 சலவைப் பெட்டிகளும், 1999–2000–ஆம் ஆண்டில் ரூ.6,15,500 மதிப்புள்ள 500 சலவைப் பெட்டிகளும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்திலுள்ள முடிதிருத்தும் தொழில் புரிபவர்களுக்கு 1996–97–ஆம் ஆண்டில் ரூ.5,880 மதிப்புள்ள சவரக் கருவிகள் 20 நபர்களுக்கும், 1997–98–ஆம் ஆண்டில் ரூ.14,700 மதிப்புள்ள சவரக்கருவிகள் 50 நபர்களுக்கும், 1998–99–ஆம் ஆண்டில் ரூ.29,400 மதிப்புள்ள சவரக்கருவிகள் 100 நபர்களுக்கும், 1999–2000–ஆம் ஆண்டில் ரூ.54,000 மதிப்புள்ள சவரக் கருவிகள் 250 நபர்களுக்கும் வழங்கப்பட்டன.

1997–98–ஆம் ஆண்டில் 20 பயனாளிகளுக்கு ரூ.13,520 மதிப்புள்ள கல் உடைக்கும் கருவிகளும், 1998–99–ஆம் ஆண்டில் 50 பயனாளிகளுக்கு ரூ.19,100 மதிப்புள்ள கல் உடைக்கும் கருவிகளும், 1999–2000–ஆம் ஆண்டில் 100 பயனாளிகளுக்கு ரூ.45,000 மதிப்புள்ள கல் உடைக்கும் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

பிற்பட்ட வகுப்பு, மிகப் பிற்பட்ட வகுப்பு, முற்பட்ட வகுப்பினைச் சார்ந்தவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் பொருட்டு 1996–97–ஆம் ஆண்டில்

ரூ.15,54,000 மதிப்புள்ள 16.18 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, 312 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது. 1997–98–ஆம் ஆண்டில் ரூ.74,59,000 மதிப்புள்ள 78.18 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு 1,676 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது. 1998–99–ஆம் ஆண்டில் ரூ.60,51,000 மதிப்புள்ள 73.82 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, 1,381 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது. 1999–2000–ஆம் ஆண்டில் ரூ.61,58,000 மதிப்புள்ள 107.94 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, 2,249 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டது.

**கால்நடை பராமரிப்புத்துறை**

வேலூர் மாவட்டத்திலுள்ள 20 ஊராட்சி ஒன்றியங்களிலும் 20 நடமாடும் கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன.

இம்மாவட்டம் வறட்சி பகுதியாக இருப்பதால் ஆடுகள் அதிக அளவில் சீரிய முறையில் வளர்க்கப்பட்டு வருவதாலும், ஆடு வளர்ப்பை மேம்படுத்த 112 ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

6,11,755 பசுக்களும், 1,75,737 எருமைகளும், 5,90,627 ஆடுகளும், 17,090 பன்றிகளும், 92,255 நாய்களும், 11,99,712 கோழிகளும், 1,760 இதர பிராணிகளும் வளர்க்கப்படுகின்றன.

முகுந்தராயபுரம் என்னுமிடத்தில் ஒரு ஆட்டுப் பண்ணை ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இப்பண்ணையில் சென்னை சிவப்பு இன செம்மறி ஆடுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன.



மேலும் கால்நடைகளின் தரத்தை உறைவிந்து மூலம் மேம்பாடு அடைய செய்வதற்கு உறைவிந்து வங்கி ரூ.7.3 இலட்சத்தில், உலக வங்கி நிதியுடன் காட்பாடியில் அமைக்கப்பட்டுள்ளது.

கால்நடை பராமரிப்புத்துறையின் கீழ் 2000–2001–ஆம் ஆண்டில் பகுதி 2 திட்டத்தின் கீழ் 100 கிராமப்புற இளைஞர்களுக்கு தீவனம், செயற்கைமுறை கருவூட்டல், குடற்புழு நீக்கம், கறவை மாடு பராமரிப்பு, தடுப்பூசிப்பணி போன்றவற்றில் நவீன தொழில் நுட்பங்களுடன் பயிற்சி அளிக்க ரூ.1,28,500 நிதி இசைவளிக்கப்பட்டுள்ளது.

**வீட்டு வசதி வாரியம்**

வேலூர் வீட்டு வசதி பிரிவின் கீழ் 1996–97–ஆம் ஆண்டில் வேலூர் புறநகர் திட்டப் பகுதியில் 80 மத்திய வருவாய் பிரிவு வீடுகள் ரூ.170.44 இலட்சத்திலும், வேலூர் புறநகர் திட்டப்பகுதி – 50 உயர் வருவாய் பிரிவு வீடுகள் ரூ.233.03 இலட்சத்திலும், ஆற்காடு புறநகர் திட்டப்பகுதி – 1068 மனைகள் மேம்படுத்தும் திட்டம் ரூ.401.65 இலட்சத்திலும், சீக்கராஜபுரத்தில் 778 மனைகள் மேம்படுத்தும் திட்டம் ரூ.501.73 இலட்சத்திலும், காட்பாடி தாராபடவேட்டில் 592 மனைகள் மேம்படுத்தும் திட்டம் ரூ.561.21 இலட்சத்திலும், வேலூர் புறநகர் திட்டம் பகுதியில் 72 உயர் வருவாய்பிரிவு மற்றும் 60 மத்திய வருவாய் பிரிவு அடுக்குமாடி குடியிருப்புகள்கட்டும் திட்டம் ரூ.258.70 இலட்சத்திலும் செயல்படுத்தப்பட்டன.

1997–98–ஆம் ஆண்டில் சோளிங்கர் திட்டப் பகுதியில் 297 மனைகள் மேம்படுத்தும் திட்டம் ரூ.98.96 இலட்சத்திலும், 1998–99–ஆம் ஆண்டில் வேலூர் புறநகர் திட்டப் பகுதியில் 312 மனைகள் மேம்பாட்டுத் திட்டம் ரூ.197.70 இலட்சத்திலும், 1999–2000–ஆம் ஆண்டில் சீக்கராஜபுரத்தில் 20 மத்திய வருவாய் பிரிவு வீடுகள் மற்றும் 26 உயர்வருவாய் பிரிவு வீடுகள் கட்டும் திட்டம் ரூ.117.84 இலட்சத்திலும் மேற்கொள்ளப்பட்டன.

வேலூர் வீட்டுவசதி பிரிவால் செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்களில் வேலூர் புறநகர் திட்டப்பகுதியில் 'சி' மற்றும் 'டி' பிரிவினருக்கான அடுக்குமாடி குடியிருப்புகளும், வேலூர் புறநகர் திட்டப் பகுதியில் செயல்படுத்தப் பட்டுள்ள உயர்வருவாய் பிரிவினருக்கான தனித்தனி வீடுகள் சீக்கராஜபுரத்தில மனைகள் மற்றும் வீடுகள், தாராபடவேடு மற்றும் சோளிங்கர் மனைகள் தற்சமயம் ஒதுக்கீடு பெற தயார் நிலையில் உள்ளது.

## இந்து அறநிலையத்துறை

**திருப்பணிகள்**

இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை வேலூர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருக்கோயில்கள் திருப்பணி வேலைகள் :

1997–98–ஆம் ஆண்டில் இரத்தினகிரியிலுள்ள அருள்மிகு பாலமுருகன் திருக்கோயிலில் அரசு மானியம் ரூ.5 இலட்சத்தில், திருப்பணி வேலைகள் நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளது.

வேலூர் மாவட்டம், வாலாஜா வட்டம், சோளிங்கரில் உள்ள அருள்மிகு இலட்சுமி நரசிம்மசுவாமி

திருக்கோயிலில் உபயதாரர் மூலம் ரூ.8 இலட்சம் செலவில் தங்கும்விடுதி கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வரப்படுகிறது.

1998-99-ஆம் ஆண்டில் குடியாத்தம் வட்டம், காங்குப்பத்தில் உள்ள அருள்மிகு மகாதேவசுவாமி திருக்கோயிலில் ஆணையர் பொதுநல நிதியிலிருந்து ரூ.1.5 இலட்சமும், அரசு மானியம் ரூ.1.5 இலட்சமும் அளிக்கப்பட்டு, திருப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சோழமூர் அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலில் ஆணையர் பொதுநலநிதி ரூ.1 இலட்சத்தில் திருப்பணி வேலைகள் நடைபெறுகின்றன.

ஆற்காடு வட்டம் அருள்மிகு காசிவிஸ்வநாதர் திருக்கோயிலில் அரசுமானியம் ரூ.2.56 இலட்சம் மற்றும் பொதுநலநிதி ரூ.1 இலட்சத்தில் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

**மலைப்பாதை அமைத்தல்**

1999-2000-ஆம் ஆண்டில் வேலூர் மாவட்டம், வாலாஜா வட்டம், சோளிங்கர் அருள்மிகு இலட்சுமிநரசிம்ம சுவாமி திருக்கோயிலில் பெங்களூர் ஸ்ரீஇலட்சுமி நரசிம்மசுவாமி கைங்கர்ய டிரஸ்ட் மூலம் ரூ.2.15 கோடி மதிப்பீட்டில் பெரிய மலையில் மலைப்பாதை அமைக்க மதிப்பீடு அங்கீகாரம் வழங்கப்பட்டு, பணித் துவங்கப்பட்டுள்ளது.

வாணியம்பாடி வட்டம், கைலாசகிரி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் 1999-2000-இல் நமக்கு நாமே திட்டத்தின் மூலம் மலைப்பாதை அமைக்கப்பட்டு வருகிறது.

**கிராமப்புற திருப்பணித் திட்டம்**

கடந்த 4 ஆண்டுகளில் வேலூர் மாவட்டத்தில் மிகவும் நலிந்த நிலையில் உள்ள கிராமப்புறத் திருக்கோயில்களின் திருப்பணிக்காக ரூ.25,000 வீதம் 28 திருக்கோயில் களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கள்வசிக்கும் இடங்களில் உள்ள திருக்கோயில்களில் திருப்பணித் திட்டத்தின் கீழ் கடந்த 4 ஆண்டுகளில் 8 திருக் கோயில்களுக்கு ரூ.25,000 வீதம் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

12 திருக்கோயில்களின் திருக்குளங்கள் ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் திருப்பணி செய்து முடிக்கப்பட்டது.

குடியாத்தம் அருள்மிகு பாலசார்துலிஸ்வரர் திருக்கோயிலில் தேர் திருப்பணி முடிவடைந்து, தேரோட்டம் நடத்தப்பட்டது.

சோளிங்கர் அருள்மிகு இலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயிலில் ரூ.8 இலட்சம் செலவில் தேர் திருப்பணி வேலைகள் 80 சதவீதம் முடிவடைந்துவிட்டன.

ஒருகால பூஜைத் திட்டத்தின்கீழ் கடந்த 4 ஆண்டுகளில் 135 திருக்கோயில்களுக்கு ரூ.2,500 வீதம் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

1997-98-ஆம் ஆண்டு வேலூர் மாவட்டத்தில், வாலாஜா வட்டம், சோளிங்கர் அருள்மிகு இலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயிலில் உள்ள ஓவியங்கள், சிற்பங்கள் மற்றும் முக்கிய திருவிழா நிகழ்ச்சிகள் படமெடுத்து ஒலி ஒளி நாடா தயாரிக்கும் பணி ரூ.1 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டது.

வேலூர் மாவட்டத்தில் இரத்தினகிரி அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில், வெட்டுவானம் அருள்மிகு எல்லையம்மன் திருக்கோயில், சோளிங்கர் அருள்மிகு இலட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயில்களில் திருக்குறள் வகுப்புகள் பக்தர்கள் பயனடையத்தக்க வகையில் நடத்தப்பட்டு வருகிறது.

கடந்த 4 ஆண்டுகளில் 161 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டது. 1999-2000-இல் மட்டும் 38 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளது.

**மோர்தானா அணை**

ரூ.100 கோடியில் குடியாத்தம் வட்டம், மோர்தானா கிராமத்தில் கவுண்டன்யா நதியின் குறுக்கே நீர்தேக்க அணை கட்டப்பட்டு தமிழக முதல்வர் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. இந்த அணையில் 7.40 மி.க.மீ. நீர் தேக்க முடியும். இடது புறக்கால்வாய் 32,250 மீட்டர் நீளம் உடையது. காவனூர் வரையிலான 7 ஏரிகள் அடங்கிய 1,538 ஏக்கர் நிலமும், இக்கால்வாயின் மூலம் நேரிடையாக 17 கிராமங்களில் உள்ள 2,689 ஏக்கர் நிலமும் பாசன வசதி பெறும்.





வலது புறக்கால்வாய் 43,500 மீட்டர் நீளம் உடையது. இக்கால்வாயின் மூலம் நேரிடையாகவும், தொரப்பாடி ஏரிவரையிலான 12 ஏரிகள் மூலமாகவும், 4,001 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

**ஊரக வளர்ச்சித்துறை தொகுப்பு விடுகள் திட்டம்**

ரூ.36.49 கோடிக்கு செயல்படுத்தப்பட்டு பயன் பெற்றோர் 12,490 பேர்.

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் மூலம் 6074 பணிகள் ரூ.27.15 கோடியில் மேற்கொள்ளப்பட்டன.

வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் மூலம் 2,784 பணிகள் ரூ.41.47 கோடியிலும், மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டம் மூலம் 2,020 பணிகள் ரூ.6.62 கோடியிலும், வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் மேம்பாட்டுத் திட்டம் மூலம் 378 பணிகள் ரூ.5.1 கோடியிலும் மேற்கொள்ளப் பட்டது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மூலம் ரூ.11.12 கோடியில் 18,175 பேர்களும், ஊரக மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடுத் திட்டத்தில் ரூ.1.15 கோடியில் 6,640 பேர்களும் பயனடைந்தார்கள்.

சுயவேலை வாய்ப்புப் பயிற்சியளிப்புத் திட்டம் மூலம் ரூ.86 இலட்சத்தில் 1819 பேர்களுக்கு பயிற்சியளிக்கப் பட்டது.

கரிமவாயு திட்டம் மூலம் ரூ.25 இலட்சத்தில் 419 பேர்களும், மேம்படுத்தப்பட்ட புகையில்லா அடுப்புகள் விநியோகத்திட்டம் மூலம் ரூ.23 இலட்சத்தில் 23,621 பேர்களும் பயனடைந்தார்கள்.

கிராமக் குடிநீர் திட்டப்பணிகள் மூலம் ஆழ்துளை கிணறுகள் மற்றும் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு பணிகளுக்கு ரூ.71 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டது.



**வருவாய்த்துறை**

வேலூர் மாவட்டத்தில் வருவாய்த்துறை மூலம் ரூ.45.72 கோடியில் 2,72,772 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் நான்காண்டுகளில் வழங்கப்பட்டுள்ளது.

முதியோர் உதவித்தொகை ரூ.13.91 கோடியில் 88,834 பேர்களும், விதவை உதவித்தொகை ரூ.13.01 கோடியில் 87,906 பேர்களும், ஆதரவற்ற விவசாயக்கூலிகள் உதவித்தொகை ரூ.3.96 கோடியில் 26,985 பேர்களும், உடல் ஊனமுற்றோர் உதவித்தொகை ரூ.1.5 கோடியில் 10,268 பேர்களும், கணவனால் கைவிடப்பட்டோர் உதவித் தொகை ரூ.3.13 கோடியில் 21,618 பேர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதியிலிருந்து உயிர்காக்கும் மருத்துவச் சிகிச்சைக்காக நிதியுதவி ரூ.86 இலட்சத்தில் 577 பேர்களும், இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கியதில் ரூ.5.475 கோடியில் 29,587 பேர்களும், இலவச நிலப்பட்டாக்கள் வழங்கியதில் ரூ.1.786 கோடியில் 1,037 பேர்களும், இடர்பாடு நிவாரண உதவித்தொகை ரூ.1.97 கோடியில் 5,709 பேர்களும், விபத்து நிவாரண உதவித்தொகை ரூ.12 இலட்சத்தில் 251 பேர்களும் பயனடைந்துள்ளனர்.

**பொதுப்பணித்துறை**

வேலூர் மாவட்டத்தில் ரூ.733 இலட்சம் மதிப்பீட்டில் 32,793 ஹெக்டேர் பாசன வசதி பெரும் பாலார் அணைக்கட்டு பாசனத்திட்டம். ரூ.400 இலட்சத்தில் 9,090 ஹெக்டேர் பாசன வசதி பெரும் பொன்னை அணைக்கட்டுத் திட்டம் உள்பட ரூ.253 கோடி மதிப்பீட்டில் பாசன திட்டங்கள்செயல்படுத்தப்பட்டுள்ளன.

வேலூர் மாவட்டத்தில் பொதுப்பணித்துறையில் கட்டடப்பிரிவு 120 பணிகளை ரூ.18.63 கோடியில் செயல்படுத்தியுள்ளது. இதில் அரசு கட்டடங்கள், 44 பள்ளி, கல்லூரி மற்றும் 40 மருத்துவமனை கட்டடங்கள் அடங்கும். இத்துடன் ரூ.10.01 கோடியில் 239 பராமரிப்பு பணிகள் செய்யப்பட்டுள்ளன.

**மின்வாரியம்**

வேலூர் மாவட்டத்தில் ரூ.2518.2 இலட்சத்தில் 8394 விவசாய மின்இணைப் புகள் கொடுக்கப்பட்டுள்ளன. தொழில் நிறுவனங்களுக்கு ரூ.457.20 இலட்சத்தில் 3,048 புதிய இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

1,10,935 குடியிருப்புகளுக்கு ரூ.1331.21 இலட்சத்திலும், 940 நீர்த்தேக்க தொட்டிகளுக்கு ரூ.564 இலட்சத்திலும் மின் இணைப்பு வழங்கப்பட்டது. ரூ.820.69 இலட்சத்தில் 16,749 தெரு விளக்குகள் புதியதாகப் போடப்பட்டன.

**வனத்துறை**

வேலூர் மாவட்டத்தில் தோட்டம் எழுப்புதல், பராமரித்தல், சிமெண்ட் தடுப்பணைகள், ஓடை தடுப்பணைகள் கட்டுதல் மற்றும் நலத்திட்டப் பணிகளுக்காக 1997–98–ஆம் ஆண்டு ரூ.68.35 இலட்சமும், 1998–99–ஆம் ஆண்டு ரூ.111.15 இலட்சமும், 1999–2000–ஆம் ஆண்டு ரூ.89.33 இலட்சமும், 2000–2001–ஆம் ஆண்டு 25.9.2000 வரை ரூ.46.41 இலட்சமும் செலவிடப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**நெடுஞ்சாலைத்துறை**

வேலூர் மாவட்டத்தில் 484.5 கி.மீ. சாலைகள் மேம்படுத்தப்பட்டது. 140 சாலைகள் ரூ.23.16 கோடியில் தார்சாலைகளாக்கப்பட்டன. ★

தூத்துக்குடி இந்திய வியாபார தொழிற் சங்கத்தினுடைய பவள விழா நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு உங்கள் அனைவரோடு சேர்ந்து இந்த விழாவினைக் கொண்டாடி மகிழ்வதிலே நான் மிகுந்த பெருமையடைகிறேன்.

1947-ஆம் ஆண்டு முதல் தூத்துக்குடிக்கும் எனக்கும் உள்ள தொடர்புகளையெல்லாம் அருமை விழாத் தலைவர் நித்தியானந்தம் அவர்கள் இங்கே கோடிட்டுக் காட்டினார்கள்.

1947-ஆம் ஆண்டு நடைபெற்ற, தந்தை பெரியார் அவர்கள் முன்னின்று நடத்திய, கே.வி.கே.சாமி எதிர்காலத் திராவிடத்தினுடைய தளகர்த்தராக ஆகக் கூடியவர் என்று பெரியாரால் புகழப்பட்ட அந்த மாநாட்டிற்கு நானும் வந்திருந்தேன். அந்த மாநாடு நடைபெற்ற நேரத்தில், நாங்கள் மாநாடு முடிந்து மகிழ்ச்சியோடு திரும்பினோம் என்று சொல்ல முடியாது. காரணம், அப்போது நடைபெற்ற அகில இந்திய ரெயில்வே வேலை நிறுத்தத்தின் காரணமாக ரெயில்கள் இல்லாமல் மூன்று நாள் தூத்துக்குடியிலேயே தங்கிவிட்டு திரும்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இப்படி தூத்துக்குடியை என்றைக்கும் மறக்க முடியாத அளவிற்குப் பல நிகழ்ச்சிகள் உண்டு.

அந்த நிகழ்ச்சிகளில் ஒரு நிகழ்ச்சியாக இந்தப் பவள விழா நிகழ்ச்சியும் இணைகிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேசியவர்கள் எல்லாம் அடுத்தும் இவர்தான் முதலமைச்சராக வரவேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு என்ன பொருள் என்றால், தொடர்ந்து நீ தான் தொல்லைப்பட வேண்டும் என்று தான் நான் கருதுகிறேன். இருந்தாலும் "தொந்தரவுக்குள்ளே தோழி சுகம் கண்டேன்" என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். அந்தத் தொந்தரவு உங்களுக்காக, தமிழ்நாட்டு மக்களுக் காக, இந்திய நாட்டு மக்களுக்காகப் படக்கூடிய தொந்தரவாக இருக்குமேயானால், அந்தத் தொந்தரவை நீங்கள் விரும்பி எனக்கே தருவீர்களேயானால், அந்தத் தொந்தரவை ஏற்றுக் கொள்ளவும் நான் தயாராக இருப்பவன். இதைப்பற்றி அதிகமாக நான் பேசி பவள விழா நிகழ்ச்சியை தேர்தல் பிரச்சார நிகழ்ச்சியாக ஆக்கிவிட நான் விரும்பிடவில்லை.

தேர்தல் இன்னும் சில மாதங்கள் தள்ளி வரப்போகின்ற ஒரு ஜனநாயகக் கடமை. அதற்கிடையே இந்த நாட்டினுடைய ஜனநாயகத்தைக் கட்டிக் காப்பாற்றுகின்ற பல பிரிவுகளில் ஒரு பிரிவாக வணிகர்களுடைய பிரிவு இருக்கின்றது என்பதை மறந்துவிடக்கூடாது.

**சிறப்போடு செயல்படும் 'வணிகர் நலவாரியம்'**

எப்படி விவசாயிகளுக்காகக் குரல் கொடுக்கிறோமோ, எப்படி நெசவாளர்களுக்காகக் குரல் கொடுக்கிறோமோ, எப்படி தொழிலாளர்களுக்காகக் குரல் கொடுக்கிறோமோ அதைப்போல வணிகர்களுக்காகவும் குரல் கொடுக்க வேண்டிய அளவிற்கு உள்ள ஒரு பெரிய சமுதாயம் வணிகச் சமுதாயம் என்பதை நான் மறந்துவிடக் கூடியவன் அல்ல. அந்தக் காரணத்தினால்தான் ஏற்கெனவே வணிகர் நல வாரியம் ஒன்றை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை வணிகப் பெருமக்களிடமிருந்து வந்தபோது திருநெல்வேலியில் நடைபெற்ற வணிகர்களுடைய மாநாடு ஒன்றில் வணிகர் நல வாரியம் அமைக்கப்படுமென்று அறிவித்து, ஆனால் உடனடியாக அறிவித்தவாறு அமைக்க முடியாமல் ஆட்சிக் கலைக்கப்பட்டு, மீண்டும் ஆட்சிக்கு வந்தபோது, வணிகர் நல வாரியம் அமைக்கப்பட்டு, இன்றைக்குச் சிறப்போடு செயல்படுகின்ற ஆக்கப்பூர்வ நடவடிக்கைகள் எல்லாம் வணிகர் நல வாரியத்தின் சார்பாக எடுக்கப்பட்டு இருக்கின்றன.

உங்களுக்கென்று ஒரு சங்கம், ஒரு அமைப்பு தேவை என்பதை நீங்கள் உணரத் தலைப்பட்ட காலத்திலிருந்து ஆங்காங்கு இந்த அமைப்புகளை நிறுவி வருகிறீர்கள். அதிலே ஒரு அமைப்பாக தூத்துக்குடியில் உருவாகிய அமைப்பு இன்றைக்குத் தன் பவள விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றது.

**மூன்று பவள விழா சங்கமித்திருக்கின்ற நிகழ்ச்சி**

இதிலே ஒரு பொருத்தம். ஏற்கெனவே பவள விழா கொண்டாடிய என்னை அழைத்து, பவள விழா கொண்டாடிய தலைவர் நித்தியானந்தம் அவர்களின் தலைமையிலே இந்தப் பவள விழாவை நடத்துகிறீர்கள். ஆக மூன்று பவளவிழா சங்கமித்திருக்கின்ற ஒரு நிகழ்ச்சி இது என்று சொன்னால் மிகையாகாது.

**வணிக பெருமக்களுக்கு**
**ஐந்தாண்டு காலத்தில்**
**ரூ.2,700 கோடி**
**வரிச்சலுகை**
**- முதலமைச்சர் கலைஞர்**




இந்த நிகழ்ச்சியிலே பேசிய அனைவரும் வணிகர்களுக்கு இந்த அரசு ஆற்றியுள்ள அரும்பெரும் பணிகளையெல்லாம், தொண்டினையெல்லாம் தொகுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சங்கத்தினுடைய- இச்சங்கத்தின் இக்கால நோக்கங்கள் நமது பொருளாதாரம் Global Economy -ஐ தழுவியதாக மாறி வருகின்றது என்பதும் இதன் அடிப்படையில், எதிர்காலத்தில் இந்தச் சங்கத்தின் பங்கு முறையீடு என்று இருக்காமல், ஒத்துழைப்பு என்ற வகையில்தான் இருக்கும் என்றும் கூறுகிறது. நமது நாடு குறிப்பாக தமிழ்நாடு எதிலும் முதலிடம் பெறப்பாடுபடுவதே இந்தச் சங்கத்தின் கொள்கையாக அமையும் என்று இச்சங்கம் அறிவிக்கின்றது.

தனியார் துறையில் உள்ள சிறுதொழில், பெரிய தொழில், சிறிய வணிகம், பெரிய வணிகம் போன்றவற்றிற்கிடையே எப்போதும் ஒரு நல்ல ஒத்துழைப்பு இருக்க வேண்டும். அதற்காகச் சங்கம் தொடர்ந்து பாடுபடும் என்று அறிவித்திருப்பது மகிழ்ச்சிகரமாக வரவேற்கத் தக்க ஒன்று என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

**வணிகப் பெருமக்களுக்கு ஐந்தாண்டு கால ஆட்சியில் ரூ.2,700 கோடி வரிச்சலுகை**

மதுரை ரெத்தினவேலு அவர்கள் இங்கே உரையாற்றும் போது ஆண்டுதோறும் வரிச்சலுகை அளிக்கப்பட்டது பற்றிக் குறிப்பிட்டார்.

வரிச் சலுகை 2,700 கோடி ரூபாய் அளவிற்கு இந்த அரசின் சார்பாகக் கடந்த ஐந்தாண்டுகளில் வழங்கப்பட்டுள்ளது.

1996-97-இல் அளிக்கப்பட்ட வரிச் சலுகை 353 கோடி ரூபாய். 1997-98-இல் அளிக்கப்பட்ட வரிச்சலுகை 143 கோடி ரூபாய். 1998-99-இல் அளிக்கப்பட்ட வரிச்சலுகை 81 கோடி ரூபாய். 1999-2000-இல் அளிக்கப்பட்ட வரிச்சலுகை 25 கோடி ரூபாய். 2000-2001-இல் அளிக்கப்பட்ட வரிச்சலுகை 76 கோடி ரூபாய். இதில் ஐந்தாண்டுகளில் எப்படி 2,700 கோடி வந்ததென்றால், 1996-97-இல் 353 கோடி ரூபாய் அளவிற்குச் சலுகை அளிக்கப்பட்டதல்லவா, அது தொடருகிறது.

அது மாத்திரமல்ல, 1997-98-இல் அளிக்கப்பட்ட வரிச்சலுகையும் தொடருகிறது. இப்படி தொடர்ந்து, தொடர்ந்து 2,700 கோடி ரூபாய் மதிப்புக்கு இந்த ஐந்தாண்டு காலத்தில் வணிகப் பெருமக்களுக்கு வரிச் சலுகையாக வழங்கப்பட்டிருக்கின்றது.

நான் பெருமையோடும், பெருமிதத்தோடும், பெருமகிழ்ச்சியோடும் ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன்.

இன்றைக்குத் தமிழ்நாடு அரசாங்கத்தினுடைய வருவாயில் அதிகமான வருவாய் வருவது ஓரளவு நாங்கள் திருப்தியடைய முடியாத அளவிற்குத்தான், மொத்தத்திலே பார்க்கும்போது வருவாய் இருக்கின்றது. அதிலும் இன்றைய தினம் மத்தியிலே போடப்பட்ட பதினோறாவது நிதிக் குழுவினுடைய பரிந்துரையால், ஆண்டு ஒன்றுக்கு 900 கோடி ரூபாயை தமிழக அரசு இழக்க நேரிடுகிறது. இதையெல்லாம் கூட்டிக் கழித்துப் பார்க்கும்போது வருவாய் திருப்திகரமாக இல்லை.

**விற்பனை வரித்துறையின் மூலம்தான் அரசுக்கு அதிக வருவாய்**

ஒவ்வொரு பிரிவாக எடுத்து எவ்வளவு வருவாய் என்று பார்க்கும் போது, நான் உங்களோடு சேர்ந்து பெருமையோடு சொல்வேன். இந்த விற்பனை வரித்துறையின் மூலம் வருகின்ற வருவாய்தான் இந்த அரசுக்கு அதிகமான வருவாய் என்பதைநான் தெரிவித்துக் கொள்வேன். இது எப்படி சாத்தியமாயிற்று, இவ்வளவு சலுகை அளித்தும்

எப்படி சாத்தியமாயிற்று என்று கேட்டால் சலுகை அளித்த காரணத்தினால்தான் சாத்தியமாயிற்று, இந்தச் சலுகைகள் அளிக்கப்பட்ட காரணமே ரெத்தினவேலு போன்றவர்கள், என்னுடைய அருமை நண்பர் தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றத்தின் முன்னாள் கொறடா சொக்கர் போன்றவர்கள் மற்றும் பல வணிகத் தொடர்புடைய ஆர்வலர்கள் என்னை அடிக்கடி சந்திக்கும் போதும், அவர்களையெல்லாம் கொண்டு ஒரு வரிச் சீர்திருத்தக்குழு இந்த அரசின் சார்பில் அமைக்கப்பட்ட போதும் அவர்கள் ஆய்ந்து தெளிந்து சொன்ன கருத்துத்தான். நீங்கள் வரிச்சலுகைகள் அளித்தால் அதிக வருவாய் வரும் என்ற அந்தக் கொள்கையாகும். அந்தத் தத்துவத்தை அவர்கள் தான் எனக்குத் தந்தார்கள். அதை உதாசீனப்படுத்தவில்லை, அலட்சியப்படுத்தவில்லை, அதை அப்படியே ஏற்றுக் கொண்டு அந்தச் சலுகையை நான் ஏற்கெனவே தெரிவித்தவாறு ஆண்டுதோறும் தொடர்ந்து வழங்கி ஏறத்தாழ மொத்தம் 2,700 கோடி ரூபாய்க்கு மேல் வழங்கப்பட்ட காரணத்தினால் இன்றைக்கு நான் துணிவோடு சொல்ல முடிகிறது. விற்பனை வரியின் மூலமாக எங்களுக்கு அதிக வருவாய் வருகிறது என்ற அந்தச் செய்தியை நான் துணிச்சலோடு தெரிவிக்க முடிகிறது.

அது மாத்திரமல்ல, தமிழக அரசின் வரலாற்றில் இல்லாத ஒன்றையும் நாங்கள் செய்தோம். 1999-2000-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை நான் தயாரிப்பதற்கு முன்பு வணிகர்களின் பிரதிநிதிகளை யெல்லாம் அழைத்து சென்னையிலே உள்ள தலைமைச் செயலகத்தில் ஒரு ஆலோசனைக் கூட்டத்தை நடத்தி, இன்னும் ஒரு மாத காலத்தில் நிதிநிலை அறிக்கை வரப்போகிறது, உங்களுடைய கருத்துக்கள் என்னவென்று கேட்டு, அவர்கள் சொன்ன கருத்துக்களையெல்லாம் ஆராய்ந்து பார்த்து ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்துக்களை யெல்லாம் ஏற்றுக் கொண்டு 1999-2000-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை நான் நாட்டிற்கு அளித்தேன்.

**நிதிநிலை அறிக்கைக்குமுன் வணிகர்களின் கருத்து கேட்டறிந்த ஒரே அரசு**

அதைப்போலவே 2000-2001-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை அளிப்பதற்கு முன்பும் வணிகப் பெருமக்களை, வணிகர் சங்கங்களின் பிரதிநிதிகளையெல்லாம் அழைத்துக் கருத்துக்களைக் கேட்டு அதற்குப் பிறகுதான் வரிச் சலுகைகளை அறிவித்தேன் என்பதையும் நான் உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன்.

எந்தவொரு அரசும் இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு அதிலும், குறிப்பாக தமிழ்நாட்டிலே உள்ள எந்தவொரு அரசும் இந்தப் பணியை மேற்கொள்ளவில்லை, இந்த அரசுதான் இந்தப் பணியை மேற்கொண்டது . எனவே இந்த அரசு விவசாயிகளுடைய அரசு மாத்திரமல்ல, தொழிலாளர்களுடைய அரசு மாத்திரமல்ல, நெசவாளர்களுடைய அரசு மாத்திரமல்ல, வணிகப் பெருமக்களாகிய உங்களுடைய அரசு என்பதை நான் நெஞ்சை நிமிர்த்திச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வரிச்சலுகைகள் அளிக்கப்பட்ட அத்தனை பொருட்களின் பட்டியலையும் நான் விரிவாகச் சொல்ல விரும்பவில்லை. அத்தனைப் பொருட்களுக்கு வரி விலக்கும் வரிக்குறைப்பும் செய்யப்பட்டுள்ளது.

நான் மேலவையிலே உறுப்பினர் தாமோதரன் அவர்களுடைய உரையைப் பலமுறை கேட்டிருக்கிறேன். நல்ல ஜனநாயகவாதி. தாமோதரன், ஏ.ஆர்.முதலியார் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் மேல்சபையிலே பேசும் போதெல்லாம் சொல்வார், "அரசாங்கத்திற்கு வரி போடுவதிலே ஒரு வியாதி இருக்கிறது. சர்-சார்ஜ் என்று ஒன்று போடுகிறீர்கள்,வரி போடுவதோடு நீங்கள் விடுவதில்லை,சர்-சார்ஜ், அதற்குப் பிறகு கூடுதல் சர்-சார்ஜ் என்றெல்லாம் போடுகிறீர்கள். இந்த இரண்டும் ஒழிந்தால்தான் வாணிபம் உருப்படும்" என்று அடிக்கடி சொல்வார். அது என்னுடைய காதுகளிலேயே ஒலித்துக் கொண்டிருந்தது. காதுகளிலே ஒலித்தால் மாத்திரம் போதாது. என் கருத்திலும் பொதிந்திருந்தது. எனவேதான் வணிகர் சங்கங்களின் பிரதிநிதிகளை அழைத்துப் பேசும் போது அவர்களும் அதே கருத்தை எதிரொலித்த நேரத்தில் அதை அப்படியே எற்றுக் கொண்டு 'சர்-சார்ஜ், கூடுதல் சர்-சார்ஜ் அதாவது மேல்வரி, கூடுதல் மேல் வரி ஆகியவற்றை அறவே நீக்கி ஆணை பிறப்பிக்கப்பட்டது என்பதையும் நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மிக முக்கியமாக நீண்ட காலமாக எழுப்பப்பட்ட கோரிக்கை சமையல் எண்ணெய்களான தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், கடலை எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் போன்றவற்றிற்கு அறவே வரி விலக்கு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையையும் இந்த அரசுதான் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது. இவ்வளவு சலுகைகளுக்குப் பிறகும் நாம் மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும் நேரத்தில் சோடை போய்விடவில்லை என்பதை இங்கே பேசியவர்கள் எடுத்துக் காட்டினார்கள்.

**சுயவரி விதிப்பு உச்சவரம்பை உயர்த்தியதால் 70 ஆயிரம் வணிகர்கள் பலன்**

இந்த வரிமுறையிலே சமாதானத் திட்டம் என்ற திட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டு 1.6.1999 முதல் அந்தத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு

வந்து 1,672 வணிகர்கள் அதனால் பயன் பெற்றார்கள். இதன் வாயிலாக 20 கோடி ரூபாய் வரி வசூலானது. சர்க்காருக்கும் வசூலானது. 48.78 கோடி ரூபாய் வரி நிலுவையும் தள்ளுபடி செய்யப்பட்டது.

இன்னொன்று, இந்த வரி விதிப்பிலேயிருந்த உச்ச வரம்பு, உங்களுடைய கோரிக்கை பலப்பட பலப்பட அரசு எந்த அளவிற்கு வளைந்து கொடுத்து, கோரிக்கையின் நியாயத்தைப் புரிந்து கொண்டு செயல்பட்டது என்பதற்கு ஒரேயொரு எடுத்துக்காட்டு, 1993-ஆம் ஆண்டு முதற்கொண்டு 1996 வரையிலே விற்பனைத் தொகை ஐந்து இலட்சம் ரூபாய் வரையிலே இருந்தால் சுய வரி விதிப்பிற்கான உச்ச வரம்பு 17.7.1996 முதல் பத்து இலட்சம் ரூபாயாக இருந்தது. அதை 1.4.1998 முதல் பத்து இலட்சம் ரூபாய் என்ற உச்ச வரம்பை இருபது இலட்சமாக உயர்த்தினோம்.

மீண்டும் கோரிக்கை எங்களை அழுத்தியது. அழுத்தியது என்று சொல்ல மாட்டேன். மெல்ல சீண்டியது. அதை ஏற்றுக் கொண்டு 1999-2000-ஆம் ஆண்டு வரி விதிப்புக்கு அந்த உச்ச வரம்பை ஒரு கோடி ரூபாய் என்று நான் மேலும் உயர்த்தினேன். இதன் காரணமாகப் பயன் அடைகின்ற வணிகர்களின் எண்ணிக்கை 70 ஆயிரம் பேர் என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடுத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஏற்றுமதி அளவு 22,976 கோடியாக உயர்வு**

அதைப் போலவே வணிகர் நல வாரியத்தின் பணி இடையிலே தொய்வு ஏற்பட்டது. அந்தத் தொய்வைப் போக்கி அந்த வணிகர் நல வாரியத்தைச் சரியாகச் செம்மையாக நடத்துகின்ற அந்தப் பொறுப்பினை உரிய குழுவிடம் ஒப்படைத்து, இன்றைக்கு அது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இப்படிப்பட்ட நிலைமைகளின் காரணமாக 1992-93-இல் இந்த ஆட்சி வருவதற்கு முன்பிருந்த காலக்கட்டத்திலே ஏற்றுமதி 6,808 கோடி ரூபாய் தான். 1997-98-இல் இந்த ஆட்சி வந்த பிறகு 18,982 கோடி ரூபாய். இப்போது ஏற்றுமதி 22,976 கோடி ரூபாய் என்பதையும் நான் மிகுந்த பெருமையோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

**தமிழகத்தில் நிலையாக ஓங்கி உயர்ந்துள்ள மென்பொருள் ஏற்றுமதி**

கணினி மென்பொருள் தமிழகத்திலிருந்து இதுவரை இல்லாத அளவிற்கு 1999-2000-ஆம் ஆண்டில் 1,890 கோடி ரூபாய் அளவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுப் புதிய சாதனையை நிகழ்த்தியிருக்கிறோம்.

இதுபற்றிய கணக்கைச் சொல்கிறேன். கொஞ்சம் சிந்திக்க வேண்டுகிறேன். தமிழ்நாட்டிலிருந்து மென்பொருள் ஏற்றுமதி 1993-94-இல் 2 கோடியே 35 இலட்சு ரூபாய். 1994-95-இல் 12 கோடியே 17 இலட்ச ரூபாய். 1995-96-இல் 37 கோடி ரூபாய்.

1996-97-இல் 161 கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி. 1997-98-இல் 393 கோடி ரூபாய்க்கு. 1998-99-இல் 1,246 கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி. 1999-2000-இல் 1,890 கோடி ரூபாய்க்கு இந்த ஏற்றுமதி கொஞ்சம் கொஞ்சமாக, அதே நேரத்திலே அழுத்தந்திருத்தமாக, நிலையாக ஓங்கி உயர்ந்திருக்கின்றது என்பதையும் நான் சுட்டிக் காட்டுகிறேன்.

தொலை நோக்கோடு கணினியை வளர்க்க வேண்டும் என்று நாம் தொடங்கிய முயற்சியின் காரணமாக 1996 மே மாதத்திற்கு முன்புவரை 34 மென்பொருள் நிறுவனங்கள்தான் இருந்தன. ஆனால் 1996 மே மாதத்திற்குப் பிறகு இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு இதுவரை 562 மென் பொருள் நிலையங்கள் தமிழகத்திலே ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இப்படி எல்லா வகையிலும் வளர்ச்சிப் பெற்றிருக்கின்ற தமிழகத்தில், நண்பர்கள் எடுத்துக்காட்டியதைப் போல தொழில் முதலீட்டில் நாம் முதல் இடத்திலே இன்றைக்கு இருக்கிறோம். அந்த முதல் இடத்தைப் பெறுவதற்கான அந்த முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு தந்த பிரிவினரில் ஒரு பிரிவினர்தான் வியாபார சமுதாயத்தினர், வணிகப் பெருமக்களைக் கொண்ட இந்தப் பிரிவினர் என்பதை நான் எடுத்துரைத்து, அதற்காக நான் நன்றியினைக் கூறிக் கொண்டு அந்த நன்றியை நீங்கள் பவள விழா கொண்டாடுகின்ற இந்த நேரத்திலே இதயபூர்வமாக உங்கள் அனைவருக்கும் தெரிவித்து, இந்தச் சங்கம் மேலும் மேலும் வளர்க, மேலும் மேலும் புகழ் ஈட்டுக, மேலும் மேலும் வளம் பெருக என்று வாழ்த்தி என் உரையை நிறைவு செய்கிறேன்.

**- தூத்துக்குடியில் இந்திய தொழில் மற்றும் வர்த்தகச் சங்கத்தின் பவளவிழா மாநாட்டில் 1-10-2000 அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.**

★ ★ ★

**எங்கே அழகும் சுதந்திரமும் உண்டோ**
**அங்கேதான்**
**மானுடம் திருவிழாக் கொண்டாடுகிறது.**
**– அப்துல் ரகுமான்**

# காலநடைப் பாதுகாப்புத் திட்டம்

- ஓர் ஆய்வு

முனைவர் **இர. பிரபாகரன்**
துணைவேந்தர்
கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

*தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கால்நடை பராமரிப்புப் பொருளாதாரத்துறை வல்லுநர்களால் தமிழக அரசின் கால்நடை பாதுகாப்புத் திட்டம் பற்றி நடத்திய ஆய்வின் முக்கிய முடிவுகள் :–*

★ கால்நடை பாதுகாப்புத் திட்டம் தமிழக விவசாயிகளிடம் குறிப்பாக கால்நடைகளையே நம்பி வாழும் நிலமற்ற விவசாயக் கூலித் தொழிலாளர்கள், ஆதரவற்றோர், விதவைகள் மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்கள் ஆகியோரிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

★ இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நான்கு மாதங்களில் (18–5–2000 வரை) தமிழகத்தில் 40.95 இலட்சம் கால்நடைகள் பயன்பெற்றுள்ளன.

★ 1276 கிராமங்களில் நடைபெற்ற இத்திட்டத்தில் முகாமொன்றுக்குச் சராசரியாக 3,209 கால்நடைகள் பயன்பெற்றுள்ளன.

★ செம்மறியாடுகளும் (31.32%) பசுவினங்களும் (25.74%) அதிகப் பயன்பெற்றுள்ளன.

★ குடற்புழு நீக்கம் (51.11%) மற்றும் தடுப்பூசி (30.88%) ஆகிய இரு பணிகள் அதிக அளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ ஒரு பெரிய முகாமில் சுமார் 8,500 கால்நடைகளும், நடுத்தர முகாமில் 6,000 கால்நடைகளும், சிறிய முகாமில் 4,000 கால்நடைகளும் பயன்பெறுகின்றன.



★ பயனடைந்த விவசாயிகளில் சுமார் 70 விழுக்காடு ஆண்களும், 30 விழுக்காடு பெண்களும் அங்கம் வகிக்கிறார்கள்.

★ படிக்காத பாமர மக்கள் தான் அதிக அளவில் (57.9 விழுக்காடு) பயனடைந்துள்ளனர்.

★ நிலமற்ற ஏழை விவசாயக் கூலித் தொழிலாளர்கள் 57.4 விழுக்காடு பயனடைந்துள்ளதாக அறியப் படுகிறது.

★ சிறப்பு முகாமிற்குக் கால்நடைகளைக் கொண்டு வந்தோரில் 78 விழுக்காட்டினர் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்கள் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

★ சுமார் 4–8 கி.மீ. தூரத்திற்குக் கால்நடைகளை கொண்டு சென்று சிகிச்சை பெற்று வந்த நிலை மாறி கால்நடைகள் இருக்குமிடங்களிலேயே மருத்துவ சிகிச்சை கிடைக்கின்றது.

★ கிராமத்திலுள்ள அனைத்து கால்நடைகளுக்கும் மருத்துவ வசதி கிடைக்கின்றது.

★ நீண்ட நாட்களாக குணமாகாத நோய்கள் மற்றும் குறைபாடுகளைப் போக்க தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக நிபுணர்களின் முயற்சி நல்ல பயனளிக்கின்றது.

**பரிந்துரைகள் :**

★ கால்நடைகள் வளர்ப்போர் பெரும்பாலானோர் விவசாயம் சார்ந்த தொழிலிலேயே இருப்பதால் கால்நடை சிறப்பு முகாம்களில் காலை 6 மணியிலிருந்து 8 மணி வரை சிகிச்சையும், மாலை 6 மணியிலிருந்து 8 மணி வரை கால்நடை வளர்ப்பு முறை பற்றிய செயல் விளக்கமும் செய்தால் அதிக அளவில் விவசாயிகள் பயன்பெறுவர் என்பது திண்ணம்.

★ கால்நடை சிறப்பு முகாம் ஒரு கால்நடை கோட்டத்தில் ஒரு வாரத்தில் ஒன்று அல்லது இரண்டு (3 நாட்கள் இடைவெளி தேவை) முறை நடத்தினால் கால்நடை பராமரிப்புத் துறையில் உள்ள தொழில்நுட்பப் பணியாளர்கள் அனைவரும் பங்கு பெற இயலும்.



திருக்கழுக்குன்றத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

**திட்டத்தின் நோக்கம்**

தமிழகத்திலுள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியப் பகுதியிலும் மாதந்தோறும் கால்நடைகளுக்கு மருத்துவ முகாம் நடத்தி அதன் மூலம் கால்நடைகள், கோழி இனங்கள் மற்றும் பறவைகளுக்கு இலவச மருத்துவ வசதி செய்து கொடுக்கப்படும். இத்திட்டம் கால்நடை பராமரிப்புத்துறை பணியாளர்கள் மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக நிபுணர்கள் மூலம் நிறைவேற்றப் படும். மேலும், ஒரு பொருட்காட்சியும், பல்வேறு கால்நடைப் பண்ணைகள் தொடர்புடைய செயல் விளக்கமும் காண்பிக்கப்படும்.

- ★ நவீன கால்நடை வளர்ப்பு முறைகளைப் பற்றிய ஒளி நாடாக்களைத் திரையிட்டு சிறப்பு முகாம்களில் விளக்க வேண்டும்.
- ★ இச்சிறப்பு முகாம் **6** மாதத்திற்கு ஒரு முறை மீண்டும் அதே ஊரில் நடைபெறவேண்டும் எனவும், இதன் மூலம் தடுப்பூசியின் பலனை முழுவதும் பெறலாம் என்றும் பெரும்பாலான விவசாயிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.
- ★ மாதம் ஒரு முறையாவது கால்நடை வளர்ப்பு சம்பந்தமான பொருட்காட்சி கோட்ட அளவில் நல்ல முறையில் நடத்தப்பட வேண்டும்.
- ★ கால்நடை பாதுகாப்புத் திட்டத்தை தொலைக்காட்சி மூலம் விளம்பரப்படுத்தி திட்டத்தின் முக்கியத்துவத்தை அறியச் செய்யலாம்.

**கால்நடை பாதுகாப்புத் திட்டம் - ஓர் ஆய்வு**

தமிழ்நாட்டிலுள்ள சுமார் **2.5** கோடி கால்நடைகளை பாதுகாக்கும் பொருட்டு, தமிழக அரசு கால்நடை பாதுகாப்புத் திட்டம் என்ற புதிய திட்டத்தை அறிவித்து, **10-1-2000** அன்று அரசாணை வெளியிட்டது. கால்நடை பாதுகாப்புத் திட்டம் கடந்த **18-1-2000** அன்று காஞ்சிபுரம் மாவட்டம்

**திட்டத்தின் நடைமுறை**

கால்நடை பாதுகாப்புத் திட்டத்திற்காக ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலிருந்து ஒரு கிராமம் தேர்ந்தெடுக்கப்படுகிறது. பின்னர் பொதுமக்களுக்கு விளம்பரத் தட்டி, சுவரொட்டி, ஒலி



பெருக்கி, துண்டுப் பிரசுரம், தண்டோரா போன்ற முறைகளால் கால்நடை பாதுகாப்புத் திட்டம் நடைபெறும் இடம் மற்றும் நேரம் அறிவிக்கப்படுகிறது. ஒவ்வொரு முகாமிலும் சராசரியாக கீழ்க்காணும் அளவில் அலுவலர்கள் பங்கு பெறுகிறார்கள்.



| | | |
|---|---|---|
| மண்டல இணை இயக்குநர் | – | 1 |
| உதவி இயக்குநர் | – | 1 |
| கால்நடை உதவி மருத்துவர்கள் | – | 6 |
| கால்நடை உதவியாளர்கள் | – | 8 |
| கால்நடை மருத்துவ பல்கலைக்கழக நிபுணர்கள் | – | 2 |

**முகாமில் நடைபெறும் பணிகள்**



1. கால்நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை
2. செயற்கைமுறை கருவூட்டல்
3. ஆண்மை நீக்கம்
4. குடற்புழு நீக்கம்
5. தடுப்பூசி போடுதல்
6. அறுவை சிகிச்சை
7. மலட்டுத் தன்மை நீக்க சிகிச்சை
8. சினை பரிசோதனை
9. கோழிகளுக்கு நோய் தடுப்பூசி
10. தீவனப்புல் கரணைகள் மற்றும் விதைகள் வழங்குதல்
11. கால்நடைக் கண்காட்சியில் பரிசு பெறும் சிறந்த கறவை மாடுகள் மற்றும் கலப்பினக் கன்றுகளுக்குப் பரிசு வழங்குதல்

கால்நடை சிறப்பு முகாமிற்குக் கால்நடைகளை கொண்டு வரும் விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்படுகிறது. அதில் கொண்டு வந்துள்ள கால்நடைகளைப் பற்றிய விவரம், அளிக்கப்பட்ட சிகிச்சை விவரம் போன்றவை குறிப்பிடப்படுகின்றன. தொடர் சிகிச்சை தேவைப்பட்டால், அடையாள அட்டையிலேயே பரிந்துரை செய்யப்படுகிறது. பின்னர் கால்நடை மருத்துவர்களால் கால்நடைகள் பரிசோதிக்கப்பட்டு நோயின் தன்மைக்கேற்றவாறு அறுவை சிகிச்சை முதற்கொண்டு தரமான சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேலும், விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு கால்நடைக் கண்காட்சி நடத்தப்பட்டு அதில் சிறந்த கறவைமாடுகளும் மற்றும் கலப்பினக் கன்றுகளும் தேர்வு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படுகிறது. தரமான தீவன உற்பத்திக்காக தீவனப்புல் கரணைகள் மற்றும் விதைகள் இலவசமாகவே விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. கால்நடைப் பண்ணைகள் தொடர்புடைய செயல் விளக்கமும் காண்பிக்கப்படுகிறது.

**கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்**

இத்திட்டத்திற்கு முன்பாக தமிழகத்தில் அவ்வப்போது ஆங்காங்கே கால்நடை பாதுகாப்பு சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டிருந்தாலும், அவற்றிலிருந்து இப்பாதுகாப்புத் திட்டம் கீழ்க்கண்ட காரணங்களால் முற்றிலும் வேறுபட்டுள்ளது.

★ இக்கால்நடை பாதுகாப்புத் திட்டம் தொடர் முறையில் மாதந்தோறும் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் நடத்தப்படுகிறது.

★ ஒவ்வொரு சிறப்பு முகாமிற்கும் தனியாக நிதி ஒதுக்கப்படுகிறது.



★ மக்கள் பிரதிநிதிகள் பங்கேற்கிறார்கள்.

★ கால்நடைகளின் உடல் நலக் குறிப்பேடு விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

★ தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக நிபுணர்கள் கலந்துகொண்டு சிக்கலான நோய்களுக்கு நிபுணர் கருத்து வழங்கி சிகிச்சையளிக்கிறார்கள்.

★ தொடர் சிகிச்சைக்குப் பரிந்துரை செய்யப்படுகிறது.



சுருங்கக்கூறின் இத்திட்டம் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கி செம்மையாக திறம்பட தீட்டப்பட்டுள்ளது.

### ஆராய்ச்சி முடிவுகள்

தமிழகம் முழுமைக்கும் 18–5–2000 வரை நடத்தப்பட்ட முகாம்களில் நடைபெற்ற பணிகளை ஆராய்ந்து அதன் முடிவுகள் அட்டவணை–1லிருந்து 3 வரை கொடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கால்நடை இனங்களில் செம்மறியாடுகள் மற்றும் மாட்டினமும் அதிக எண்ணிக்கையில் பயன் பெற்றுள்ளதைக் காணமுடிகிறது. கால்நடை நலப்பணிகளில் குடற்புழு நீக்கம் மற்றும் தடுப்பூசி போடுதல் ஆகிய இருபணிகளும் மொத்தப் பணியில் சுமார் 80 விழுக்காடு அளவாக உள்ளது. சிகிச்சை செய்யும் பணி சுமார் 12.34 விழுக்காடு அளவில் உள்ளது.

### தகவல் சேகரிக்கப்பட்ட இடங்கள்

இத்திட்டத்தின் மூலம் பயனடைந்த விவசாயிகளைப் பற்றியும் அவர்களது கருத்துக்களை அறியவும் தமிழகத்தில், காஞ்சிபுரம் மாவட்டம் (திருக்கழுக் குன்றம்), நாமக்கல் மாவட்டம் (செல்லியாயிபாளையம்) மற்றும் திருவள்ளூர் மாவட்டம் (காவேரி ராஜபுரம்) ஆகிய இடங்களில் ஒரு ஆரம்பக் கட்ட ஆய்வு மேற்கொள்ளப் பட்டது. இதன் முடிவுகள் அட்டவணை–4 மற்றும் 5இல் தொகுத்து அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வட்டவணைகளிலிருந்து, ஒரு பெரிய முகாமில் சுமார் 8,500 கால்நடைகளும், நடுத்தர முகாமில் 6,000 கால்நடைகளும் மற்றும் சிறிய முகாமில் 4,000 கால்நடைகளும்



பயன்பெறுகின்றன என்பது தெரிய வந்துள்ளது. மேலும், பயனடைந்த விவசாயிகளில் சுமார் 70 விழுக்காடு ஆண்களும், 30 விழுக்காடு பெண்களும் அங்கம் வகிக்கிறார்கள். படிக்காத பாமர மக்கள் தான் அதிக அளவில் (57.9 விழுக்காடு) பயனடைந்துள்ளனர். நிலமற்ற ஏழை விவசாயக் கூலித் தொழிலாளர்கள் 57.4 விழுக்காடு அளவு பயனடைந்துள்ளதையும் அறியலாம். சிறப்பு முகாமிற்குக் கால்நடைகளைக் கொண்டு வந்தோரில் 78 விழுக்காடு வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்கள் என்பது தெரிகிறது.



அட்டவணை-1

தமிழகத்தில் கால்நடை பாதுகாப்புத் திட்டத்தில் பயனடைந்த மொத்த கால்நடைகளின் விவரம் (18–5–2000 வரை)

| வ. எண். | கால்நடைகளின் இனம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பசுவினம் | 10,54,789 |
| 2 | எருமையினம் | 2,11,033 |
| 3 | செம்மறியாடுகள் | 12,81,811 |
| 4 | வெள்ளாடுகள் | 7,49,567 |
| 5 | கோழிகள் | 7,84,914 |
| 6 | இதர இனங்கள் | 13,794 |
| | மொத்தம் | 40,95,908 |

அட்டவணை-2

கால்நடை பாதுகாப்புத் திட்டத்தில் சராசரியாக முகாமொன்றுக்குப் பயனடைந்த கால்நடைகளின் விவரம்

| வ. எண். | கால்நடைகளின் இனம் | எண்ணிக்கை (சதம்) |
|---|---|---|
| 1 | பசுவினம் | 826 (25.74) |
| 2 | எருமையினம் | 165 (5.14) |
| 3 | செம்மறியாடுகள் | 1,005 (31.32) |
| 4 | வெள்ளாடுகள் | 587 (18.29) |
| 5 | கோழிகள் | 615 (19.17) |
| 6 | இதர இனங்கள் | 11 (0.34) |
| | மொத்தம் | 3,209 (100) |

அட்டவணை - 3

தமிழகத்தில் சராசரியாக ஒரு முகாமில் நடந்த பணி விவரம்

| பணி விவரம் | பசு | எருமை | செம்மறி ஆடு | வெள்ளாடு | கோழி | இதர | மொத்தம் (சதம்) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. சிகிச்சை செய்தல் | 248 | 35 | 64 | 27 | 13 | 9 | 396 (12.34) |
| 2. ஆண்மை நீக்கம் | 9.0 | 0.3 | – | 16.3 | – | 0.4 | 26 (0.81) |
| 3. செயற்கை முறை கருவூட்டல் | 10 | 3 | – | – | – | – | 13 (0.41) |
| 4. சினை பரிசோதனை | 50 | 22 | – | – | – | – | 72 ((2.24) |
| 5. மலட்டுத்தன்மை சிகிச்சை | 46 | 25 | – | – | – | – | 71 (2.21) |
| 6. குடற்புழுநீக்கம் | – | 251 (கன்றுகள்) | 812 | 517 | 60 | – | 1640 (51.11) |
| 7. தடுப்பூசி போடப்பட்டவை | – | 294 | 154 | – | 542 | 1.0 | 991 (30.88) |
| 8. தொடர் சிகிச்சைக்குப் பரிந்துரை செய்யப்பட்டவை | 0.50 | – | 0.30 | – | – | 0.05 | 0.85 |
| மொத்தம் | | | | | | | 3,209● (100) |

● தொடர் சிகிச்சைக்குப் பரிந்துரை செய்யப்பட்டவை நீங்கலாக (அடைப்புக் குறியில் கொடுக்கப்பட்டுள்ளவை மொத்த எண்ணிக்கையின் சதவீத மதிப்பு)

அட்டவணை–4

பயனடைந்த கால்நடைகளின் விவரங்கள்

| வ. எண். | கால்நடை இனம் | திருக்கழுக் குன்றம் | செல்லியாயி பாளையம் | காவேரி ராஜபுரம் |
|---|---|---|---|---|
| 1. | பசுவினம் | 2796 | 1037 | 1004 |
| 2. | எருமையினம் | 641 | 703 | 351 |
| 3. | செம்மறியாடுகள் | 1911 | 1292 | 1249 |
| 4. | வெள்ளாடுகள் | 1470 | 964 | 788 |
| 5. | கோழிகள் | 1776 | 2145 | 965 |
| 6. | இதர இனங்கள் | 74 | 16 | 0 |
| | மொத்தம் | 8668 | 6157 | 4357 |

அட்டவணை–5

| பயன்பெற்ற மக்களின் விவரம் | திருக்கழுகுன்றம் | செல்லியாயி பாளையம் | காவேரி ராஜபுரம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| **1. பயன்பெற்றோர் :** | | | | |
| ஆண் | 84(62) | 45(75.5) | 33(82.5) | 162(69) |
| பெண் | 51(38) | 15(24.5) | 7(17.5) | 73(31) |
| மொத்தம் | 135(100) | 60(100) | 40(100) | 235(100) |
| **2. கல்வியறிவு :** | | | | |
| படிக்காதவர் | 92(68) | 17(28.4) | 27(67.5) | 136(57.9) |
| ஆரம்ப கல்வி | 38(28) | 30(49.8) | 6(15.0) | 74(31.5) |
| மேல்நிலைக்கல்வி | 5(4) | 10(16.1) | 5(12.5) | 20(8.5) |
| கல்லூரிக் கல்வி | 0(0) | 3(5.7) | 2(5.0) | 5(2.1) |
| **3. நில அளவு :** | | | | |
| நிலமற்றோர் | 100(74) | 14(22.9) | 21(52.5) | 135(57.4) |
| 5 ஏக்கருக்குக் குறைவு | 30(22) | 35(58.3) | 18(45.0) | 83(35.0) |
| 5–10 ஏக்கர் | 4(3) | 7(11.7) | 1(2.5) | 12(5.1) |
| 10 ஏக்கருக்கு அதிகமாக | 1(1) | 4(6.7) | 0(0) | 5(2.5) |
| **4. வருமானம் :** | | | | |
| வறுமைகோட்டிற்கு கீழ் | 115(85) | 40(67.2) | 28(70) | 183(78) |
| வறுமைகோட்டிற்கு மேல் | 20(15) | 20(32.8) | 12(30) | 52(22) |

(அடைப்புக் குறியில் உள்ளவை சதவீதத்தை குறிக்கிறது)



**கால்நடை பாதுகாப்புத் திட்டம் பற்றி விவசாயிகளின் பல்வேறான கருத்துக்கள்**

- ★ கன்றுகளுக்குக் குடற்புழு நீக்கம் செய்யப்படுவதால் கன்றுகள் நன்கு வளர வாய்ப்புள்ளது.
- ★ தடுப்பூசிகள் போடப்படுவதால், 6 மாதங்களுக்கு ஒரு முறை சிறப்பு முகாம் மீண்டும் நடத்தப்பட வேண்டும்.
- ★ சிறப்பான முறையில் கால்நடைகளுக்குக் சிகிச்சை யளிக்கப்படுகிறது.
- ★ கிராமத்திற்கே வந்து சிகிச்சை அளிப்பதால் மிகவும் வசதியாக உள்ளது.
- ★ அதிக அளவில் கால்நடைகள் உள்ளதால் முகாமிற்கு அனைத்தையும் கொண்டுவர இயலவில்லை.
- ★ கால்நடை வளர்ப்பு பற்றிய பொருட்காட்சி திறம்பட நடத்தல் வேண்டும்.
- ★ கால்நடைப் பண்ணைகள் தொடர்புடைய செயல்விளக்கம் அதிகம் செய்து காட்டவேண்டும்.
- ★ அதிக அளவில் நவீன கால்நடை வளர்ப்புப் பற்றி சொல்லித் தரவேண்டும்.
- ★ இன்னும் அதிக அளவில் தீவன விதைகள் வழங்கப்பட வேண்டும்.
- ★ நல்ல பயனிக்கும் திட்டம்.
- ★ இத்திட்டம் கண்டிப்பாக தொடர்ந்து நடக்க வேண்டும்.





## கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின் பயன்கள்

**உடனடிப் பயன்கள்**

நோயுற்ற கால்நடைகள் சிகிச்சையளிக்கப்பட்டு நோயிலிருந்து உடனடி நிவாரணம் அடைகிறது.

கால்நடைகளை மட்டும் நம்பி வாழும் நிலமற்ற விவசாயிகள் மற்றும் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்பவர்களின் கால்நடைகளுக்கு ஊர் தேடி வந்து சிகிச்சை வசதி அளிப்பதால் மிகுந்த பயன்பெறுகிறார்கள்.

கால்நடைகளை வல்லுநர் குழு பரிசோதிப்பதால் நீண்டகாலமாக சரியாகாமல் இருந்த நோய்கள் சரி செய்யப்படுகிறது.

கால்நடை பராமரிப்பில் நவீன யுக்திகள் கற்றுத் தருவதால் அதைக் கடைபிடித்து விவசாயிகள் மிகுந்த பயன்பெறுவர்.

**எதிர்காலப் பயன்கள்**

கன்றுகளுக்குக் குடற்புழு நீக்கம் செய்வதால் நன்கு வளர்ச்சியுற்று கால்நடைப் பொருட்கள் உற்பத்தி பெருக வாய்ப்பு அதிகம்.

தடுப்பூசிகள் போடுவதன் மூலம் தொண்டை அடைப்பான், சப்பை நோய், துள்ளுமாறி நோய் போன்ற எளிதில் பரவக்கூடிய நோய்கள் வராமல் தடுப்பதால் எதிர்காலத்தில் இம்மாதிரி நோய்களைத் தமிழகத்தில் அறவே ஒழிக்க சாத்தியமுண்டு.

இலவசமாக தீவன விதைகள் விவசாயிகளுக்கு அளிப்பதால் எதிர்வரும் காலத்தில் தீவனப் பற்றாக் குறையைச் சமாளிக்க இயலும்.

ஐரோப்பிய நாடுகளை ஒப்பிடும்பொழுது, நம் நாட்டில் குறிப்பாக தமிழகத்தில் கால்நடைப் பொருட்கள் குறைந்த செலவிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன. இருந்தபோதிலும் வெளிநாட்டுச் சந்தையில் நம் நாட்டின் கால்நடைப் பொருட்களுக்கு அதிக கேட்பு இல்லை. இதற்கு மிக முக்கிய காரணம் நம் நாட்டின் கால்நடைகளில் தொற்று நோய்கள் பரவலாகக் காணப்படுவதேயாகும். கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் தமிழகத்தில் நோயற்ற கால்நடைச் செல்வங்களை உருவாக்க முடியும். உலக வர்த்தக கழக ஒப்பந்தம் (WTO) இந்தியாவில் செயல்படுத்தப் படுவதால், தமிழகத்தின் கால்நடைப் பொருட்களைத் தரமான முறையில் உருவாக்கி ஏற்றுமதி செய்து அந்நிய செலவாணியை அதிக அளவில் ஈட்டும் வாய்ப்பு உள்ளது.

எதிர்காலத்தில் தரமான கால்நடைகளின் எண்ணிக்கை உயர்ந்து கால்நடைகளைப் பாதிக்கும் நோய்கள் ஒழிக்கப்பட்டு, பால், முட்டை மற்றும் இறைச்சி போன்ற புரதச் சத்து நிறைந்த கால்நடைப் பொருட்கள் மிகுந்த அளவில் உற்பத்தி செய்யப்பட்டு இந்தியாவில் தமிழகக் கால்நடை வளம் ஒரு தனி முத்திரை பதிக்கும்.

**பரிந்துரைகள்**

இத்திட்டம் மேலும் செம்மையாக நடைபெற கீழ்க்கண்ட பரிந்துரைகள் செய்யப்படுகின்றன.

★ கால்நடைகள் வளர்ப்போர் பெரும்பாலானோர் விவசாயம் சார்ந்த தொழிலேயே இருப்பதால் கால்நடை சிறப்பு முகாம்களில் காலை 6 மணியிலிருந்து 8 மணி வரை சிகிச்சையும் மாலை 6 மணியிலிருந்து 8 மணி வரை கால்நடை வளர்ப்பு முறை பற்றிய செயல்விளக்கமும் செய்தால் அதிக அளவில் விவசாயிகள் பயன்பெறுவர் என்பது திண்ணம்.

★ கால்நடை சிறப்பு முகாம் ஒரு கால்நடை கோட்டத்தில் ஒரு வாரத்தில் ஒன்று அல்லது இரண்டு (3 நாட்கள் இடைவெளி தேவை) முறை நடத்தினால் கால்நடை பராமரிப்புத் துறையில் உள்ள தொழில்நுட்பப் பணியாளர்கள் அனைவரும் பங்குபெற இயலும்.

★ நவீன கால்நடை வளர்ப்பு முறைகளைப் பற்றிய ஒளிநாடாக்களைத் திரையிட்டு சிறப்பு முகாம்களில் விளக்க வேண்டும்.

★ இச்சிறப்பு முகாம் 6 மாதத்திற்கு ஒரு முறை மீண்டும் அதே ஊரில் நடைபெறவேண்டும் எனவும், இதன் மூலம் தடுப்பூசியின் பலனை முழுவதும் பெறலாம் என்றும் பெரும்பாலான விவசாயிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.

★ மாதம் ஒரு முறையாவது கால்நடை வளர்ப்பு சம்பந்தமான பொருட்காட்சி கோட்ட அளவில் நல்ல முறையில் நடத்தப்பட வேண்டும்.

★ கால்நடை பாதுகாப்புத் திட்டத்தை தொலைக்காட்சி மூலம் விளம்பரப்படுத்தி திட்டத்தின் முக்கியத் துவத்தை அறியச் செய்யலாம். ●

# புதுப்பொலிவு பெற்றுள்ள காஞ்சிபுரம் மாவட்டம்

பல்லவ மன்னர்கள் ஆண்ட சரித்திர பூமி இது,
பேரறிஞர் அண்ணா அவர்களை ஈன்று,
உலகிற்கு உவந்த, பெருமைமிக்க மண் இது:
பட்டாடைகள் என்றாலே...
நினைவிலே நிற்பது காஞ்சிபுரம் அன்றோ!
இயற்கை அன்னை எழில் கொஞ்சும்
சோலைவனம்!

பல்வேறு ஆலயங்களும், சுற்றுலாத் தலங்களும் கொண்ட சிறப்புமிக்க மாவட்டம், பெருமைமிக்க காஞ்சிபுரம் மாவட்டம். அழகுக்கு அழகு சேர்ப்பது போல், அரசின் பல்வேறு நலத்திட்டங்களினால், புதுப்பொலிவு பெற்று, சிறப்பாகத் திகழ்கிறது.

கிராம முன்னேற்றத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் தமிழக அரசின் திட்டங்கள், காஞ்சிபுரம் மாவட்டத்தில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கிராமங்களில் தார்ச்சாலைகளும், சிமெண்ட் கான்கிரீட் சாலைகளும், தெருவிளக்குகளும், மினி பஸ்களும், நியாய விலைக் கடைகளும், ஆரம்பச் சுகாதார நிலையங்களும் அமைந்து இருப்பது கிராம மக்களுக்கு மன நிறைவினை ஏற்படுத்தி உள்ளது.

**நமக்கு நாமே திட்டம்**

முதல்வர் கலைஞர் அவர்களின் "நமக்கு நாமே" திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்தில் ரூ.4,480 கோடி மதிப்பில் 320 பணிகள் செய்து முடிக்கப் பட்டுள்ளன.

செங்கல்பட்டு நகருக்கு அருகில் அம்மணம் பாக்கம், புள்ளவாக்கம் போன்ற 8 கிராமங்கள் உள்ளன. செங்கல்பட்டு நகருக்குச் செல்ல வேண்டுமானால், இடையே உள்ள கொளவாய் ஏரி குறுக்கிடுவதால், 8 கி.மீ.க்கு மேலாக சுற்றிச் சென்று, செங்கல்பட்டு நகருக்கு வரவேண்டும். ஏரிக்குக் குறுக்கே சாலை அமைத்தால், வெகு சீக்கிரம் செல்லலாம் என்ற ஏக்கம் 30 ஆண்டுகளுக்கு மேலாக அம்மணம்பாக்கம் மற்றும் அதைச்சுற்றியுள்ள கிராமங்களுக்கு இருந்து வந்தது. இந்த நிலையை மாற்றி இணைப்புச்சாலை அமைத்து இக்கிராம மக்களின் மனதுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்திக் கொடுத்தது, "நமக்கு நாமே திட்டமாகும்".



மேல் சிகிச்சைக்காக பரிந்துரை செய்யப் பட்டுள்ளனர்.

**உழவர் சந்தைத் திட்டம்**

தமிழக முதல்வர் அவர்களால், செங்கல் பட்டு நகரில் துவக்கி வைக்கப்பட்ட உழவர் சந்தை மிகச்சிறப்பாக நடைபெறுகின்றது. 10,360 விவசாயிகள் தங்கள் நிலத்தில் விளைந்த 10,69,445 கிலோ காய்கறிகளை ரூ.74,99,301-க்கு விற்பனை செய்துள்ளனர். இதில் உழவர்கள் தங்கள் விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைத்ததால் மகிழ்ச்சியடைவதுடன், நுகர்வோரும் நியாயமான விலையில் காய்கறிகள் கிடைத்த திருப்தியுடன் செல்வதை நாம் கண்கூடாகப் பார்ப்பது மனதுக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. இதில் 4,43,924 நுகர்வோர் பயனடைந்துள்ளனர்.

**அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்**

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்தில் 1959 பணிகள் சிறப்பாக நடத்தப்பட்டுள்ளன.

**கால்நடை பாதுகாப்புத் திட்டம்**

கால்நடைச் செல்வங்களுக்காக, கால்நடைப் பாதுகாப்புத் திட்டத்தினை தமிழக முதல்வர் அவர்கள் ஏற்படுத்தினார்கள். இத்திட்டம் தமிழகத்திலேயே முதன்முதலாக காஞ்சிபுரம் மாவட்டத்தில் திருக்கழுக்குன்றத்தில், புத்தாயிரம் ஆண்டின் துவக்கத்தில், துவக்கி வைக்கப்பட்டது. கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம் இதுவரை 112 நடைபெற்றுள்ளது. 3,61,992 கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. ரூ.4,20,870 மதிப்பிலான மருந்துகள் வழங்கப் பட்டுள்ளன. கிராமங்களில் இம் முகாமிற்கு நல்ல வரவேற்பு இருந்தது, இம்முகாமின் வெற்றியைக் காட்டுகிறது.

**வருமுன் காப்போம் திட்டம்**

வருமுன் காப்போம் திட்டத்தின்கீழ், இம்மாவட்டத்தில் நடைபெற்ற 252 முகாம்களில் 61,269 ஆண்களும், 79,270 பெண்களும், 59,280 சிறுவர்களும் ஆக மொத்தம் 1,99,819 பேர் சிகிச்சைப் பெற்றுள்ளனர். ரூ.7,35,992 மதிப்பிலான மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன. 13,625 பேர்

**பஸ் வசதி**

கிராமப்புற மக்களின் போக்குவரத்து வசதியைக் கருத்தில் கொண்டு, பேருந்து வசதி இல்லாத கிராமங்களுக்கு மினி பஸ் விட அரசு





உத்தரவிட்டுள்ளது. அதன் அடிப்படையில், காஞ்சிபுரம் மாவட்டத்தில் 29 வழித்தடங்களில் மினி பஸ் வசதி செய்து தரப்பட்டுள்ளது. மேலும், 12 வழித்தடங்களில் மினி பஸ் வசதி செய்துதர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**பள்ளிகளில் கணினி வகுப்பு**

எதிர்கால சமுதாயம் ஏற்றம் அடைய, தமிழக முதல்வர் அவர்கள் பள்ளிகளில் கணினி பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள். அதன் அடிப்படையில், இம்மாவட்டத்தில் 50 பள்ளிகளில் கணினி வகுப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**இளைஞர் நலம்**

கிராமப்புற இளைஞர்கள் நலனில் அக்கறையுடன் தமிழக அரசு விளையாட்டு மையங்களை ஏற்படுத்தி உள்ளது. அதன்படி இம்மாவட்டத்தில் 180க்கும் மேலான விளையாட்டு மையங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இளைஞர்கள் ஆர்வத்துடன் இம்மையங் களுக்கு வருகை தருகின்றனர்.

**கல்வித்துறை**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கல்வித்துறையின் சாதனை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

கடந்த 4 ஆண்டுகளில், 39 ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளும், 20 நடுநிலைப் பள்ளிகளும் துவக்கப்பட்டுள்ளன.

மேலும் 13 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 13 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் உள்ள 50 பள்ளிகளில் கணினி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**பொது விநியோகத் திட்டம்**

இம்மாவட்டத்தில் புதிதாக 93,069 நபர்களுக்குக் குடும்ப அட்டைகள் வழங்கப் பட்டுள்ளன. முழுநேரம் மற்றும் பகுதி நேர நியாயவிலைக் கடைகள் 76 புதிதாகக் கட்டப்பட்டுள்ளன.

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை**

இம்மாவட்டத்தில் 14 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

4 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் 24 மணிநேரமும் செயல்பட்டு வருகின்றன.





திருத்தி அமைக்கப்பட்ட மத்திய ஊரக சுகாதாரக் கழிப்பிடத் திட்டத்தின் கீழ் ரூ.73.64 இலட்சத்தில் 7,014 கழி வறைகள் கட்டப்பட்டுள்ளன.

இந்திரா குடியிருப்புத் திட்டத்தின்கீழ் ரூ.33.29 கோடியில் 11,516 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**ஆதிதிராவிடர் நலத்துறை**

8,367 ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப் பட்டுள்ளன.

ரூ.13.14 இலட்சம் மதிப்பில் மயானம் மற்றும் மயானப் பாதை வசதி செய்து தரப்பட்டுள்ளது.

275 ஆதிதிராவிடர்களுக்கு ரூ.4.30 இலட்சத்தில் இலவச தையல் இயந்திரம் மற்றும் சலவைப் பெட்டிகள் வழங்கப்பட்டன.

**மின்துறை**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 4 ஆண்டுகளில் 190 புதிய மின் மாற்றிகள் பொருத்தப்பட்டுள்ளன. சாதாரண முன்னுரிமையில் 512 மின் இணைப் புகளும், சிறப்பு முன்னுரிமையில் 403 மின் இணைப்புகளும், விவசாயிகளுக்கு வழங்கப் பட்டுள்ளன. 162 மேல்நிலை குடிநீர்தேக்கத் தொட்டிகளுக்கு மின் இணைப்பு வழங்கப் பட்டுள்ளது. 1,259 கிராமப் பஞ்சாயத்துத் தெரு விளக்குகளுக்கும், 506 நகரப் பஞ்சாயத்துத் தெருவிளக்குகளுக்கும், 189 நகராட்சி தெருவிளக்கு களுக்கும் இணைப்பு வழங்கப் பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் உள்ள ஒரிக்கையில் 110/11 கி.வோ, முகரவாக்கத்தில் 33/11 கி.வோ. கொண்ட துணை மின் நிலையமும் அமைக்கப்பட்டுள்ளது.

**பொதுப்பணித்துறை**

1997-98-இல் ரூ.109.25 இலட்சம் செலவில் 11 ஏரிகளும், 1998-99-இல் ரூ.6.80 இலட்சம் மதிப்பில் 8 ஏரிகளும் தூர்வாரப்பட்டன.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.0.93 இலட்சம் மதிப்பில், 1998-99-இல் திருக்கழுக்குன்றம் வட்டம், மணமை கண்டிகை, தாங்கல் ஏரியில் மதகு எண்.1ஐ திரும்ப கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

**ஊரக வளர்ச்சித்துறை**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ.5.46 கோடியில் 328 பணிகள் செய்யப் பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.7.87 கோடி மதிப்பில் 347 பணிகள் செய்யப் பட்டுள்ளன.

வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் ரூ.23.80 கோடி மதிப்புள்ள 1,545 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.





இலட்சத்திலும், 1998-99-இல் 36 பணிகள் ரூ.164.18 இலட்சத்திலும், 1999-2000 ஆண்டில் 14 பணிகள் ரூ.114.41 இலட்சம் மதிப்பிலும் நடை பெற்றுள்ளன.

**தொழில் வளம்**

நெசவுத் தொழிலும், வேளாண்மைத் தொழிலும் முக்கியத் தொழிலாக உள்ள இம்மாவட்டம், தொழில் வளத்திலும் கடந்த 4 ஆண்டுகளில் முன்னேற்றப்பாதையில் வீறுநடை போட்டு வருகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.29.28 இலட்சம் மதிப்பில், ஏரிக் கரையில் சாலை அமைத்தல், சிறுபாலம் அமைத்தல், மராமத்து செய்தல் போன்ற பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

துறைகளின் கட்டட பணிகள் 1996-97-இல் 42 பணிகள் ரூ.620.53 இலட்சத்திலும், 1997-98-இல் 66 பணிகள் ரூ.644.77

1824 ஏக்கர் பரப்பில் இருங்காட்டுக்கோட்டையில் உருவாக்கப்பட்டுள்ள சிப்காட் தொழில் வளாகத்தில் 32 தொழில் நிறுவனங்களுக்குத் தொழில் மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.





நலிவுற்ற பிரிவினர் 47,401 நபர்களுக்கு ரூ.4,981.73 இலட்சம் கடன் வழங்கப் பட்டுள்ளது.

12,318 நபர்களுக்குப் பண்ணைச்சாராக் கடனாக ரூ.2,946.91 இலட்சம் வழங்கப் பட்டுள்ளது.

**வேளாண்மைத்துறை**

மாநில அளவில் நெல் சாகுபடி பரப்பில் காஞ்சிபுரம் மாவட்டம் 1998-99-ஆம் ஆண்டில் முதலிடம் பெற்றுள்ளது.

மறைமலைநகரில் ரூ.27 கோடி மதிப்பில் ஆஸ்பெஸ்டாஸ் ஃபிரிக்ஷன் மெட்டீரியல்ஸ் தயாரிக்கும் தொழிற்சாலை.

மறைமலை நகரில் "போர்டு இந்தியா" கார் தொழிற்சாலை.

திருப்போரூரில் ஸ்ரீராம் ஆட்டோகாம் பொனண்ட்ஸ் நிறுவனத்தாரின் ஆட்டோ மொபைல்ஸ் உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

திருப்பெரும்புதூரில் ரூ.15 கோடி மதிப்பில் குருதிப்பைகள் தொழிற்சாலை.

ரூ.28.5 கோடி மதிப்பில் மறைமலை நகரில் "அப்டிக் பைபர் லேபில் ப்ராஜெக்ட்" தொழிற்சாலை ஆகியவை இம்மாவட்டத்தில் தொடங்கப்பட்டுள்ள தொழிற்சாலைகள் ஆகும்.

**கூட்டுறவுத்துறை**

1998 முதல் 1,093 நபர்களுக்கு ரூ.875 இலட்சம் வீடு கட்ட கடன் வழங்கப்பட்டுள்ளது.

மருத்துவர் மற்றும் பொறியாளர்கள் 239 பேருக்கு ரூ.949.27 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

1997-98 மற்றும் 1998-99-ஆம் ஆண்டுகளில் மாநில அளவில் அரிசி உற்பத்தியில் இம்மாவட்டம் முதலிடம் பெற்றுள்ளது.

1997-98-இல் மரம் வளர்ப்புத் திட்டத்தின் கீழ், படப்பை, திருப்போரூர் மற்றும் மதுராந்தகம் ஆகிய வட்டாரங்களில் 75 கி.மீ. தூரத்திற்கு நடவு செய்யப்பட்டுள்ள கன்றுகள் நல்லமுறையில் பராமரிக்கப்படுகின்றன.

1998-99-ஆம் வருடத்தில் காஞ்சிபுரம், வாலாசாபாத், உத்திரமேரூர், திருப்பெரும்புதூர், சித்தாமூர் ஆகிய 5 வட்டாரங்களில் சாலை ஓரங்களில் இருபுறமும் 15 கி.மீ. தூரத்தில் மொத்தம் 75 கி.மீ. தூரத்திற்கு மரக்கன்றுகள் நடவு செய்ய அனைத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.





**நகர குடிநீர்த் திட்டங்கள்**

1996 முதல் 2000 வரை நகர குடிநீர்த் திட்டத்தின் கீழ் 9 திட்டங்கள் ரூ.17.11 கோடி மதிப்பில் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. இதனால் 1,77,140 பேர் பயன்பெறுகின்றனர்.

8 பேரூராட்சிகளில் ரூ.13.30 கோடி மதிப்பில் 1,23,640 நபர்கள் பயன் பெறும் வகையில் குடிநீர் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சோழிங்கநல்லூர் பேரூராட்சி, சோழிங்கநல்லூரில் ரூ.1.62 கோடி மதிப்பில் 4 இலட்சம் லிட்டர் கொள்ள ளவுள்ள பகுதி-1 மேனிலைத் தொட்டியும், எம்.ஜி.ஆர். நகரில் 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள பகுதி-2 மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதன் பயனாக நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வரை குடிநீர் கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது.

**ஊரக குடிநீர்த் திட்டம்**

மாவட்டத்தில் உள்ள 13 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 3,346 குடியிருப்புகளில் 993 குடியிருப்பு களுக்கு ரூ.41.55 கோடி மதிப்பில் குடிநீர்த்திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட்டு மக்கள் உபயோகத்தில் உள்ளது.

நடப்பு நிதியாண்டில், 225 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.11.55 கோடி மதிப்பில் குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டு, ரூ.5.5 கோடி மதிப்பில், 97 குடியிருப்புகள் பணி முழுமையாக முடிக்கப் பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் துரிதமாக நடைபெறுகின்றன.

**சமூக நலத்துறை**

காஞ்சிபுரம் மாவட்ட சமூக நலத்துறை, கடந்த 4 ஆண்டுகளில் தனி முத்திரை பதித்துச் சாதனை படைத்து வருகிறது.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழ் கடந்த 4 ஆண்டுகளில் 8,102 பெண்கள் பயனடைந் துள்ளனர்.

ஈ.வெ.ரா.மணியம்மையார் நினைவு விதவை மகள் திருமண நிதி உதவித் திட்டத்தின் 35 பெண்களுக்கு ரூ.2,02,000 வழங்கப்பட்டுள்ளது.

1997-98-ஆம் ஆண்டில் சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகளுக்கு 50% மானியத்தில், 586 கடப்பாறைகளும், 513 மண்வெட்டிகளும், அக்ரோபெட் மூலம் பெறப்பட்டு விநியோகிக்கப் பட்டுள்ளது. மொத்த மானியத்தொகை ரூ.9,695 இலட்சமாகும். மதுராந்தகம் வட்டத்தில் மொத்தம் 30,000 உர அடையாள அட்டைகள் வழங்கப் பட்டுள்ளது.

1998-99-இல் 23 விவசாயிகளுக்கு 7.5 குதிரைத்திறன் சக்தி கொண்ட ஆயில் என்ஜின்கள் அக்ரோபெட் மூலம் ரூ.1.637 இலட்சம் மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது.

**குடிநீர் வழங்கல்**

பொது மக்களுக்குக் குடிநீர் வழங்குவதில் தமிழக அரசு முனைப்புடன் செயல்படுகிறது. அதன் அடிப்படையில் இம்மாவட்டத்தில் கிடைக்கின்ற நீர் ஆதாரத்தைக் கொண்டு, குடிநீர் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது.

அன்னை அஞ்சுகம் நினைவு கலப்புத் திருமண நிதி உதவித்திட்டத்தின் கீழ் 138 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

அன்னை தெரசா அம்மையார் ஆதரவற்ற மகள் திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழ் 25 பெண்களுக்கு ரூ.1,25,000 வழங்கப்பட்டுள்ளது.

விதவையரின் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கான இலவச பாடப் புத்தகம் மற்றும் குறிப்பேடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 3,670 குழந்தைகளுக்கு ரூ.2,22,750 மதிப்புள்ள புத்தகங்கள், நோட்டுகள் வழங்கப்பட்டன.

தேசிய மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் கீழ் 28,377 பெண்களுக்கு ரூ.1,41,86,000 வழங்கப்பட்டுள்ளது.

**வேலைவாய்ப்புத் துறை**

1996-ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தவர்களில் 765 நபர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். இதில் 268 பெண்கள். உடல் ஊனமுற்றோர் 61 பேர்.

1997-இல் 1,157 பேர் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். இதில் பெண்கள் 234 பேர், உடல் ஊனமுற்றோர் 60 பேர்.

1998-இல் 947 பேர் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். இதில் 259 பேர் பெண்கள், 60 பேர் உடல் ஊனமுற்றோர்

1999-இல் 569 பேர் பணியில் அமர்த்தப் பட்டுள்ளனர். இதில் 260 பேர் பெண்கள், 60 பேர் உடல் ஊனமுற்றோர்

**கால்நடை பராமரிப்புத்துறை**

ஆதிதிராவிட நலத்திட்டத்தின் கீழ் ஆதிதிராவிட இனப் பெண்களில் 1,160 நபர்களுக்கு கிடேரி கன்று வளர்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ.17,40,000 மானியத் தொகை வழங்கப்பட்டது.

1,212 நபர்களுக்கு அகில் இன கோழி வளர்ப்புத் திட்டத்தின் கீழ், ரூ.1,45,440 மானியத் தொகை செலவிடப்பட்டது.

கிரிராஜா இனக் கோழி வளர்ப்புத் திட்டத்தின் கீழ், 1,212 நபர்களுக்கு ரூ.8,72,640 தொகை வழங்கப்பட்டது.

242 நபர்களுக்கு, ரூ.48,360 செலவில் கால்நடைகள் மற்றும் கோழிகள் வளர்ப்பது குறித்து 3 நாட்கள் பயிற்சி அளிக்கப்பட்டது.

தொலை தூர கிராமங்களுக்குப் பொலி காளைகள் வழங்கும் திட்டத்தின் கீழ், காளை ஒன்று ரூ.5,000 வீதம் 10 நபர்களுக்கு 100% மானியத்தில் காளைகள் வழங்கப்பட்டது.

பழங்குடியினர் நலத்திட்டத்தின் கீழ், காஞ்சிபுரம் மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலகத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட 50 இருளர்களுக்கு, ஒரு அலகின் விலை ரூ.5,000 வீதம் 50 அலகிற்கு ரூ.2,50,000 பெறப்பட்டு ஆடு அலகுகள் வழங்கப்பட்டன. ஒரு அலகிற்கு 4 பெட்டை ஆடுகளும், ஒரு கிடா ஆடும் வாங்கி வழங்கப்பட்டது.

யூரியா மூலம் வைக்கோல் ஊட்டமேற்றும் திட்டத்தின் கீழ், சிறப்பு மத்திய நிதி உதவித் திட்டத்தின் மூலம் 100% மானிய அடிப்படையில் ஊட்டமேற்றப்பட்ட வைக்கோல் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 400 பேர் தேர்வு செய்யப்பட்டு, 1 நபருக்கு ரூ.500 வீதம் ரூ.2,00,000-ம் 1998-99-இல் வழங்கப்பட்டது.



□ **பா. நாராயணமூர்த்தி,**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

# தகவல் தொழில்நுட்பத்திற்குத் தனிக் கொள்கையை இந்தியாவில் முதன்முதலில் வகுத்தது தமிழகம்

☐ முதலமைச்சர் கலைஞர்

“E-governance எனும் மின்னணு ஆளுமையை அரசு நிர்வாகத்தில் பெருமளவுக்குக் கையாண்டு விரைவுபடுத்துதல் குறித்து, மேற்கொள்ளப்படவேண்டிய நடைமுறைத் திட்டங்களை வரையறை செய்திடும் நோக்கில் நடைபெறும் இம்மாநாட்டில் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

1996ஆம் ஆண்டு இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னர் தமிழகத்தில் பல்வேறு துறைகளில், கணினியைப் பயன்படுத்தி நிர்வாகத்தின் செயல்பாடுகளை மேம்படுத்த முனைப்பான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கணினியை அரசு நிர்வாகத்தில் முழுமையாகப் பயன்படுத்துவதன் மூலம், அரசுப் பணிகளின் தரம் உயரும்; நடவடிக்கைகளில் தாமதங்கள் குறையும்; பொது மக்களின் அலைச்சலும், மனத் தாங்கல்களும், வீண் செலவும் தவிர்க்கப்படும்.

அரசு நடவடிக்கைகள் வெளிப்படையாகி மக்களுக்கு அரசிடம் நம்பிக்கைகள் வலுவடையும். இதனைக் கருதித்தான் 1996இல் இந்த அரசு பொறுப்பேற்றபின் புதிய தொழிற் கொள்கைகள் வகுக்கப்பட்டன.

ஒளிவு மறைவற்ற வெளிப்படையான நிர்வாகத்தை வழங்கிட இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. அதனால்தான், பொதுமக்கள் தகவல் பெறும் உரிமைக்குச் சட்ட வடிவம் தந்து, தேவையான விதிமுறைகளை வகுத்து நடை முறைப்படுத்தியுள்ளோம். அரசு ஆணைகள், டெண்டர் விளம்பரங்கள் போன்றவற்றையெல்லாம் வலைதளத்தில் (website) இடம் பெறச் செய்துள்ளோம்.

தகவல் தொழில்நுட்பத்திற்குத் தனிக் கொள்கையை இந்தியாவிலேயே முதன் முதலில் வகுத்தது தமிழகம். அதற்கு ஓராண்டு கடந்த பின்னர்தான், அகில இந்திய அளவில் தகவல் தொழில்நுட்பக் கொள்கைகள் வகுக்கப்பட்டன.

தமிழக அரசு உருவாக்கிய தகவல் தொழில்நுட்பக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு, கடந்த சில ஆண்டுகளாக தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் தொடர்முயற்சிகளின் பயனாகத் தமிழகம் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் பாராட்டத் தக்க அளவில் முன்னேற்றம் கண்டு வருகிறது.

தகவல் தொழில்நுட்பத் துறையில் சிறந்து விளங்கும் உலகளாவிய நிறுவனங்கள் பல, தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பத் தொழில்களின் வளர்ச்சிக்குச் சாதகமாக அமைந்துள்ள பல்வேறு அம்சங்களைக் கண்டறிந்து, இங்கே முதலீடுகள் செய்துள்ளன; முதலீடுகள் செய்வதற்குப் பெரிதும் ஆர்வம் காட்டி வருகின்றன.

தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சிக்குத் தேவையான மனிதவளத்தைப் பெருக்கும் வகையில் புதிய கல்வி நிறுவனங்கள் பல தொடங்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் தற்போதுள்ள, ஏறத்தாழ 160 பொறியியல் கல்லூரிகளில் ஆண்டுதோறும் 45,500 மாணவ, மாணவியர் பல்வேறு தொழில்நுட்பப் பாடங்களில் தேர்ச்சி பெறுகின்றனர். இவர்களில், 26,000 பேர் தகவல் தொழில்நுட்பப் பாடங்களில் வல்லுநர்களாக வெளிவருகின்றனர். அடுத்த இரண்டு ஆண்டுகளில்



இந்த எண்ணிக்கை இரண்டு மடங்காக உயர்ந்திடும். இதற்கு ஏற்றவகையில் கூடுதல் வசதிகளை உருவாக்கிட அறிஞர்கள் குழு ஆய்வு செய்து வருகிறது.

தகவல் தொழில்நுட்பத் துறையில் பொறியியல் பட்டதாரிகளைக் கூடுதலாக உருவாக்கிவரும் அதேவேளையில், தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் வகையில் நடுத்தர நிலையில் தேவைப்படும் பயிற்சிபெற்ற பணியாளர்களையும் இந்த அரசு உருவாக்கி வருகிறது.

கடந்த ஆண்டில் 666 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 112 கோடி ரூபாய் செலவிலும்,

இந்த ஆண்டு முதல் எஞ்சியுள்ள 515 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 73 கோடி ரூபாய் செலவிலும்,

16 மாநகராட்சிப் பள்ளிகளில் 1.85 கோடி ரூபாய் செலவிலும்,

60 கலை அறிவியல் கல்லூரிகளில் 28.22 கோடி ரூபாய் செலவிலும்,

12 மருத்துவக் கல்லூரிகளில் 2.79 கோடி ரூபாய் செலவிலும், 5 சட்டக் கல்லூரிகளில் 1.55 கோடி ரூபாய் செலவிலும்,

கணினிக் கல்வி கற்பிக்கப்படுவதற்குத் தமிழக அரசினால் வகை செய்யப்பட்டுள்ளது. இவற்றின் மூலம், ஆண்டுக்கு ஏறத்தாழ 1 இலட்சம் மாணவ, மாணவியர் கணினி அறிவு பெற்றவர்களாக வெளிவரும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

இத்தகைய நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்துள்ளதன் காரணமாகத்தான், NASSCOM நிறுவனம், மென்பொருள் துறையில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகளை மதிப்பிடும் பொழுது, "Availability of Software Manpower" என்ற அளவுகோலின் அடிப்படையில், மென்பொருள் திட்டங்களைத் தயாரிப்பதற்கு இந்தியாவிலேயே சிறந்த இடம் சென்னைதான் என்று அறிவித்திருப்பது நமக்கெல்லாம் பெருமை தருவதாகும்.

இப்படி ஆற்றல் வாய்ந்த மனித வளத்தினை உருவாக்கி வருவதுடன், தமிழக அரசு நிர்வாகத்தில் முடிவுகள் மேற்கொள்வதற்குப் பின்பற்றப்படும் நடைமுறைகளிலிருந்து, திட்டச் செயலாக்கங்கள் வரை கடைப்பிடிக்கப்பட்டுவரும் வெளிப்படையான அணுகுமுறையும் தமிழகத்தின் வளர்ச்சிக்குச் சிறந்த முறையில் உறுதுணை புரிந்து வருகிறது.

தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்குத் தேவைப்படும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளான போக்குவரத்து வசதிகள், விமான நிலையங்கள், துறைமுக வசதிகள், மின்சார வசதிகள், மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது இங்கு நிலவும் குறைந்த விலைவாசிகள் போன்ற பல்வேறு காரணங்களால் கடந்த சில ஆண்டுகளாகத் தமிழகத்தில் அலைஅலையாகத் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் தோன்றி வருகின்றன.

மென்பொருள் தொழில் நிறுவனங்களைப் பொறுத்த வரை, 1996 மே திங்கள் அளவில் 34 மென்பொருள் நிறுவனங்கள் மட்டுமே தமிழகத்தில் இருந்தன. தற்போது இந்த நிறுவனங்களின் எண்ணிக்கை 600க்குமேல் உயர்ந்துள்ளன. 1995–96இல் தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட மென்பொருள்களின் மதிப்பு 37 கோடி ரூபாய் மட்டுமே. நான்காண்டுகளில், அதாவது, 1999–2000இல் இது, ஏறத்தாழ 52 மடங்காகப் பெருகி, 1914 கோடி ரூபாய் அளவுக்கு அதிகரித்து மிகப்பெரிய சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

இவையெல்லாம், தமிழக அரசு கடைப்பிடித்து வரும் தகவல் தொழில்நுட்பக் கொள்கைக்குக் கிடைத்திருக்கும் மாபெரும் வெற்றிச் சின்னங்கள் என்பதைப் பெருமிதத்துடன் குறிப்பிட விரும்புகிறேன்.

கடந்த ஜூலைத் திங்கள் 4ஆம் நாளன்று நமது பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்களால் திறந்துவைக்கப்பட்ட "டைடல் பூங்கா" தமிழகத்தின் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் மற்றொரு சாதனை மகுடமாக உருவாகியுள்ளது. இதில், உலகின் புகழ்வாய்ந்த பல மென்பொருள் நிறுவனங்கள் தங்களுடைய வர்த்தகப் பணிகளைத் தொடங்கிட முன்வந்துள்ளன. இதன்மூலம், மேலும் அதிக அளவில் மென்பொருள் வர்த்தகம் தமிழகத்தில் நிகழவும், ஆயிரக்கணக்கானவர்கள் வேலை வாய்ப்புகளைப் பெறவும் ஒளிமயமான வாய்ப்புகள் உருவாகியுள்ளன.



இந்த டைடல் மென்பொருள் பூங்காவைப் போல், சிறுசேரியில் 1,000 ஏக்கர் பரப்பில் தகவல் தொழில்நுட்பத் தொழிற்பூங்கா உருவாக்கப்பட்டு வருகிறது. இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா நிறுவனம் (Software Technology Park of India) தமிழக தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு உதவும் வகையில் தமிழக அரசின் உதவியுடன் மதுரை, திருநெல்வேலி, திருச்சி, சேலம் ஆகிய இடங்களில் செயற்கைக்கோள் தரை நிலையங்களை (Satellite Earth Stations) அமைத்திட நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

தகவல் தொழில்நுட்பத் துறையின் மூலம் ஏற்பட்டுவரும் இத்தகைய முன்னேற்றங்களின் பயன்கள் நமது நாட்டிலுள்ள பாமர மக்களுக்கும் கிடைத்திட வேண்டும்.

அவர்களின் தேவைகளைத் தேடிச் சென்று நிறைவுசெய்வதாகவும், தகவல் தொழில்நுட்பம் அமைந்திட வேண்டும்.



இன்றைய நிலையில், கணினி வசதியும், இணையத் தொடர்பு வசதிகளும், பண வசதி படைத்தவர்களுக்கும், ஆங்கிலம் கற்றவர்களுக்கும் மட்டுமே பரவலாகக் கிடைத்திடும் வாய்ப்புகள் உள்ளன.

வசதியற்ற ஏழை எளிய மக்களுக்கும் இந்த வாய்ப்புகள் கிடைத்திட வேண்டும் என்பதற்காகத் தான், தமிழக அரசு இங்கிலாந்து நாட்டிலுள்ள "வேர்ல்டு டெல்" என்னும் நிறுவனத்துடன் இணைந்து மாநிலம் முழுவதிலும் 13,000 சமுதாய இணைய மையங்களை உருவாக்குவதற்குத் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு, அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

அத்துடன், கணினியில் தமிழ்மொழி முழுமையாகப் பயன்படுத்தப்படும் சூழ்நிலை உருவாவதன் மூலம், தமிழகத்தைச் சார்ந்த எளிய, நடுத்தரக் குடும்பத்தினரும், குறிப்பாகப் பாமர மக்களும் பெரும்பயன் எய்திட முடியும் என்ற அடிப்படையில், கணினியில் தமிழ்மொழியைப் பயன்படுத்துவதற்குரிய வழிவகைகளை ஆராய்வதற்காக "தமிழ்நெட் 99" மாநாட்டினைச் சென்னையில் நடத்தியது இந்த அரசு.

"தமிழ்நெட் 99" மாநாட்டின் பரிந்துரைகளின்படி தரப்படுத்தப்பட்ட தமிழ் விசைப்பலகையும், தமிழ் வரிவடிவக் குறியீடுகளும் தமிழக அரசினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

இவற்றின் அடிப்படையில், தமிழ் மென்பொருள்களின் வளர்ச்சி அதிகரித்துள்ளது. இதுவரை தமிழில் தயாரிக்கப்பட்டுள்ள 18 புதிய மென்பொருள்கள், எழுத்து வடிவங்கள், விசைப்பலகைகள் போன்றவைகளுக்கு ஒப்புதல் அளித்துச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தத் தமிழ் மென்பொருள்களில் சில தமிழகத்திலுள்ள கல்வி நிலையங்களுக்கு விரைவில் இலவசமாக வழங்கப்பட உள்ளன.

கணினியிலும், இணையத்திலும் ஏற்பட்டு வரும் புதுப்புது மாற்றங்களுக்கு ஏற்ற வகையில், தமிழ் மென்பொருள்களைத் தயாரிப்பதற்கு ஊக்கம் அளித்து இதுவரை பல்வேறு நிறுவனங்களுக்கு ஒரு கோடி ரூபாய் நிதியுதவியும் வழங்கப்பட்டுள்ளது.

"தமிழ்நெட் 99" மாநாட்டில் எடுக்கப்பட்ட மற்றொரு முக்கிய முடிவின் அடிப்படையில், உலகெங்கிலும் பரவிக்கிடக்கும் தமிழர்களும், தமிழ் ஆர்வலர்களும் தமிழ் மொழியைக் கற்றிடத் துணைபுரிய அமைக்கப்பட்டு வரும் தமிழ் இணையப் பல்கலைக்கழகம், வரும் பொங்கல் திருநாளிற்கு முன்பாகத் தொடங்கப்பட இருக்கிறது என்பதனையும், இந்த இனிய வேளையில் எடுத்துரைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இவற்றைத் தொடர்ந்து, அரசின் அன்றாட நடவடிக்கைகளில் விரைவும், தெளிவும் ஏற்படும் வகையிலும், நிர்வாகத்தில் சீர்மையும், செம்மையும் பெருகிடும் வகையிலும் தகவல் தொழில்நுட்பத் துறையின் ஆற்றல்களை எந்த வகையில் பயன்படுத்திட முடியும் என்பதற்குரிய வழிவகைகளைக் காண்பதற்காகவே, இன்று இங்கு உங்களை அழைத்திருக்கின்றேன்.

தமிழக அரசின் வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை, நகராட்சி நிர்வாகம், போக்குவரத்துத் துறை, வணிகவரித்துறை, பத்திரப்பதிவுத்துறை போன்ற துறைகளில் கணினியைப் பரவலாகப் பயன்படுத்திடும் முயற்சிகள் தொடங்கப்பட்டு, இரண்டாண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டன. இந்த இரண்டாண்டுகளில் கணினியின் பயன்பாடுகளும், மென்பொருள்களின் செயல்பாடுகளும் பன்மடங்குப் பெருகியுள்ளன. எனினும், தனியார் நிறுவனங்கள் இவற்றின் மூலம் பயன்கண்டுள்ள அளவுக்கு இணையாக, அரசு நிர்வாகத்தில் கணினியின் மூலம் அந்த அளவுக்குப் பயன் எய்திடவில்லை என்றே நான் கருதுகிறேன்.

பொதுமக்களுக்கும், குறிப்பாக, இளைஞர்களுக்கும், மாணவ, மாணவியர்க்கும் தேவைப்படும் பல்வேறு வகைச் சான்றிதழ்கள், நில ஆவணங்கள், ஓய்வூதியங்கள், அரசின் சலுகைகள் போன்றவை கணினி தொழில்நுட்பத்தின் மூலம் உடனுக்குடன் சென்றடையும் போதுதான், மக்களின் ஆதரவும், மதிப்பும், அரசுக்கும், அரசு நிர்வாகத்திற்கும் கிடைக்கும் என்பதனைச் சுட்டிக் காட்டிட விரும்புகிறேன்.

இத்தகைய சீரிய பணியில் தொண்டு மனப் பான்மையுடன் ஈடுபட்டுள்ள அலுவலர் பெருமக்களை உளமாரப் பாராட்டுகிறேன். இப்பணியில் வேகம் நிறைந்திட வேண்டும். இடையில் தோன்றும் இடர்பாடுகள் உடனுக்குடன் களைந்தெறியப்பட வேண்டும். அடுத் தடுத்த நிலைகளில் உள்ள அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் உரிய வழிமுறைகள் எடுத்துரைக்கப் பட வேண்டும்.

கணினிகள் பெறுதல், மென் பொருள்கள் தயாரித்தல், அவற்றின் பயன்பாட்டை அதிகரித்து நிர்வாகத்தைச் செம்மைப்படுத்துதல் கணினியை முழுமையாய் அன்றாடப் பணிகளில் பயன்படுத்துவதற்கு வழிகாட்டும் வண்ணம், பணியாளர்களுக்குப் பல்வேறு பயிற்சிகள் அளித்தல், பொதுமக்களுடன் தொடர்புகளை விரிவாக்குதல், வலுப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளில் மாவட்ட ஆட்சியர்களும், அவர்களது அலுவலர்களும் தீவிரம் காட்டிட வேண்டும். இப்பணிகளில் காட்டப்படும் ஆர்வத் தைப் பொறுத்துத்தான், தமிழகத்தில் அவரவர் பகுதிகளில் சமூக பொருளாதார நிலைகளில் முன்னேற்றங்களை விரைவில் எட்டிப் பிடித்திட முடியும்.

இக்காலத்தில் இப்பணியில் நம்மிடம் ஏற்படும் சுணக்கம், நமது தமிழகத்தின் முன்னேற்றங்களுக்கு முட்டுக்கட்டைகளாய் அமைந்திடும் என்பதை எச்சரிக்கையாகவே ஒவ்வொருவரும் கருதிட வேண்டும்.

தகவல் தொழில்நுட்பமும், உயிரியல் தொழில்நுட்பமும் (Information Technology and Bio Technology) இந்த நூற்றாண்டின் இரு கண்களைப் போன்ற விஞ்ஞானங்கள் என்பதால்தான், அவற்றின் பயன்களைச் சமுதாயத்தின் எல்லா முனைகளுக்கும் எடுத்துச் செல்வதற்கு தொடர்ந்து இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்பதனை நீங்கள் அனைவரும் நன்கறிவீர்கள்.

அரசு நிர்வாகத்தில் அனைத்துப் பணிகளையும் கணினி மயமாக்குவது நமது இலக்கு. எனினும், ஓராண்டு காலத்தில், ஆறு மாத காலத்தில், மூன்று மாத காலத்தில் கணினிமயமாக்கத்தக்கப் பணிகள் எவைஎவை என வரையறை செய்துகொண்டு, அவற்றை அந்தந்த கால அளவிற்குள் நிறைவேற்றி முடித்தாக வேண்டும். இதற்கு ஏற்ற செயல் திட்டங்களை இன்றைய மாநாட்டில் வரையறை செய்திட வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

மின்னணு ஆளுமையின் அடிப்படைக் கட்டமைப்பாக இணையங்கள் விளங்கிட வேண்டும். அதற்கேற்ற வகையில் நிர்வாகத்தின் ஒவ்வொரு முனையிலும் உகந்த வலைதளம் (Website) உருவாக்கப்பட வேண்டும். இப்படி வலைதளங்கள் உருவாக்கப்படும்பொழுது துறையின் கண்ணோட்டத்தோடன்றி, பொதுமக்களின் தேவைகளை அறிந்து அவர்தம் கண்ணோட்டத்திலும் உருவாக்கப்பட வேண்டும். அப்படி உருவாக்கப்படும் வலைதளங்கள் தொடர்ந்து நவீனப்படுத்தப்பட வேண்டும்.

"ஈ–மெயில்" என்பது மிகச்சிறந்த மின்னணு சாதனம் என்பதால் அரசு அலுவலர்கள் எல்லா நிலைகளிலும் அதனைத் தொடர்ந்து பயன்படுத்திக் கொள்ள முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். அப்படி முயற்சிகள் மேற்கொள்ளப்படும் பொழுது "காகிதம் இல்லா நடைமுறை" (Paperless system) கைவசப்படும். ஒவ்வொரு துறையிலும் ஏதாவது ஒரு நடவடிக்கையை (Activity) தெரிந்தெடுத்து, அதில் இந்த காகிதம் இல்லா நடைமுறையைப் பின்பற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

இரண்டு மாதங்கள் கடந்தபின் மீண்டும் நாம் இங்கு சந்திக்கும் வேளையில், இன்று வரையறை செய்திடும் இலக்குகளில், நாம் எய்தியவை எவைஎவை என அடையாளம் காட்டத்தக்க வகையில், நம் செயல் திட்டங்கள் இன்று வடிவம் பெற வேண்டும் என்பதும் என் விழைவாகும்.



இந்த அடிப்படையில், உங்களிடமிருந்து கருத்துகளை, பொருத்தமான செயல் திட்டங்களை ஆவலுடன் எதிர்பார்த்து அமைகிறேன்"

***5–10–2000 அன்று மின்னணு ஆளுமை – மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாட்டில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.***

★ ★ ★

# இணையமும் இன்றியமையாமையும்...

– புலவர் டி.எம்.சண்முகசுந்தரம்

இதிகாசங்களைப் படித்து இளமையை முதுமை ஆக்கிக்கொண்டிருந்த எம்மை இணையம் (அல்லது) வலையம் என்ற சொல் ஈடில்லா பிணைப்பை ஏற்படுத்தியுள்ளது. தகவல் தொடர்புக்காக 1858–இல் அட்லாண்டிக் பெருங்கடலின் அடியில் ஒரு கேபிள் நிறுவப்பட்டது. அது சில நாட்களே செயல்பட்டாலும், தொழில்நுட்ப ரீதியில் தோல்வி அடைந்தாலும் தொலைத் தகவல் தொடர்புத்துறை சரித்திரத்தில் அது ஒரு மைல் கல்லாக அமைந்தது. பிறகு 1866–இல் மீண்டும் நிறுவிய கடலடி கேபிள்கள் அடுத்த நூறு ஆண்டுகள் வரை பயன்பாட்டில் இருந்தது. இதுதான் இன்றைக்குக் கம்ப்யூட்டரின் இலக்கணத்தையே மாற்றி, இந்த நூற்றாண்டின் மகத்தான தகவல் தொழில் நுட்பத்திற்கு வித்திட்டிருக்கிறது.

1957–இல் சோவியத் யூனியன் விண்ணில் பறக்கவிட்ட 'ஸ்புட்னிக்' செயற்கைக் கோளைக் கண்டு வியந்த வல்லரசான அமெரிக்கா 'ஆர்ப்பா' என்னும் ஆராய்ச்சி அமைப்பை அமைத்து, அடுத்த ஆண்டே எக்ஸ்புளோர் செயற்கைக் கோளை விண்ணில் பறக்கவிட்டது. பின்னாளில் தொலைத் தகவல் தொடர்புக்காக எண்ணற்ற செயற்கைக் கோள்கள் விண்ணில் பறக்கவிடப்படுவதற்கு ஸ்புட்னிக்கும், எக்ஸ்புளோருமே முன்னோடியாய் விளங்கியது. இன்றியமையாத் தேவைகளின் முதன்மையானதாக இந்த இணையம் இருக்கிறது என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. அறிவியலும், நவீனங்களும் நன்கு வளர்ச்சியடைந்த காலகட்டங்களில் அதனுடைய எழுச்சி புதுமையாக இருந்தது உண்மை தான். எனினும் இந்த இணையம் வந்த பிறகு ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குச் சென்று அங்கெல்லாம் நடைபெறும் சம்பவங்களை அறியவேண்டிய அந்த நிலை மாறி, இன்றைக்கு இருந்த இடத்தில் இருந்துகொண்டே இணையத்தின் வழியாக உலகைப் பார்க்கின்ற இந்த நிலை ஏற்பட்டிருக்கின்றது.

கம்ப்யூட்டர் நெட்வொர்க்கிலும், தகவல் தொடர்பிலும் ஆர்ப்பா கவனம் செலுத்த ஆரம்பித்த ஆரம்ப காலத்தில், அமெரிக்க இராணுவத்துறையில் கம்ப்யூட்டரின் பயன்பாட்டை 1962வாக்கில் ஆராயத் தொடங்கினாலும், அதற்குப் புதுமையான நெட்வொர்க்கை நிறுவுவதே நோக்கமாக இருந்தது. பிறகு இங்கிலாந்து நாட்டின் தேசிய இயற்பியல் ஆய்வுக்கூடமும், ஆர்ப்பாவும் நெட்வொர்க்கில் காட்டிய முனைப்பால் 1969–இல் ஆர்ப்பாநெட் உருவாக்கப்பட்டு, அதில் இருந்த நான்கே நான்கு நோடுகளை மட்டுமே கொண்டு நோடுகளுக் கிடையேயான தகவல் பரிமாற்றத்தினை வெற்றிகரமாக நடத்திக் காட்டப்பட்டது. வளரும் தொழில்நுட்பத்தின் வசந்தகாலம் என வர்ணிக்கப்பட்ட 1972–ஆம் ஆண்டு அக்டோபரில் நடைபெற்ற சர்வதேச கருத்தரங்கு உலகத்தின் பார்வையை ஈர்த்தது என்பதுடன் அதுவரை இருந்து வந்த வியப்புக்கு விளக்கமாக அமைந்து, சேமித்துவைக்கப்படும் எந்தவொரு தகவலையும், எந்தவொரு மூலையிலிருந்தும் எளிதில் பார்க்க முடியுமென்கிற நம்பிக்கையை வலுவூட்டியது.

வர்த்தகம், வானிலை, அண்டை தேசத்துடனான அந்நியம், சர்வ சாதாரணமான சமநிலை போன்ற அத்தியாவசங்களின் ஆக்கப்பணிகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்து இந்த இணையம் எம்மைப் புத்தம் புது தேசத்திற்கு இட்டுச் செல்கிறது. நெட்வொர்க் கண்ட்ரோல் புரொட்டக்கால் எனும் கம்ப்யூட்டர் தகவல் தொடர்பு முறையை ஆர்ப்பாநெட்டில் பயன்படுத்தியதன் ஆதாயமாக, ஒரு தகவலை என்சிபி என்னும் உறையில் போட்டு உரிய முகவரியை உறையின் மேல் எழுதிவிட்டால் அஞ்சல் நிலையங்களின் வழியாகக் கடிதங்கள் சென்று சேர்வதைப் போல் நோடுகள் வழியாகப் பயணம் செய்து உரிய முகவரியை அடைகிறது. ஒரு நெட்வொர்க்கோடு இணைக்கப்படும் எந்த கம்ப்யூட்டரும் அதே நெட்வொர்க்கில் இணைக்கப்படுகின்ற எந்த கம்ப்யூட்டருடனும் நேரடியாக பேசிக்கொள்ள முடியும் எனும் நினைப்பதற்கு இனிக்கும் நிஜ தத்துவம் இதில் அடங்கியுள்ளது.

அண்மைக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட தாராளமயமாக்கலின் அடிப்படையில் தகவல் தொழில் நுட்ப விரிவாக்கம் மற்றும் பயன்பாடு நம்மை வசப்படுத்தியிருக்கிறது என்பதைவிட வளப்படுத்தி யிருக்கிறது என்பதே பொருத்தமாக இருக்கும். உலகின் பல்வேறு நிறுவனங்கள் தயாரிக்கும் கம்ப்யூட்டர்கள், பல்வேறு ஆப்பரேட்டிங் சிஸ்டத்துடன் தயாரிக்கப்படும் கம்ப்யூட்டர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்வதற்காக டிசிபி/ ஐபி (Transmission Control Protocol/Internet Protocol) என்னும் புதிய முறையைப் புகுத்தியதால் எல்லாக் கம்ப்யூட்டர்களுக்குமான இணைப்பு வசதி ஏற்பட்டது. சூப்பர் கம்ப்யூட்டர்கள், மினி கம்ப்யூட்டர்கள், மெயின் ஃபிரேம் போன்றவைகள் கோலோச்சிய காலத்தில் முதன்முதலாக சாதாரண டெஸ்க்டாப் (DTP) கம்ப்யூட்டர்கள், கம்ப்யூட்டரின் நோடுகளாக அறிமுகம் ஆனது. இதன் காரணமாக ஏராளமான சமூகக் குழுக்கள் மிகவும் சக்திவாய்ந்த கம்ப்யூட்டர்களையும் நெட்வொர்க்கு களையும் அமைத்துக்கொள்ள முடிந்தது.

இப்படி வேகமாக வளர்ந்த இணையத் தொடர்பால் இராணுவத் தன்மைக்கு இன்னல்கள் வருமோ என அஞ்சிய அமெரிக்கா அதற்காக மாற்று ஏற்பாடுகளுக்கு ஆயத்தமான காலமே உலகில் மிகச் சக்திவாய்ந்த சூப்பர் கம்ப்யூட்டர்கள் அறிமுகமாயின. அதன் பிறகு சேமித்து வைக்கப்படும் மூலாதாரங்

களைப் பயன்படுத்திக்கொள்கின்ற வாய்ப்பு பரவலாக்கப்பட்டது. ஒரு காலகட்டம் வரை நவீனம் என்பதற்கே பொருள்புரியாத நிலைமாறி, பரந்த ஒரு இணையத் தொடர்பு சாத்தியமானதற்கு அறிவுத் திறத்தை ஆக்கப்பணிகளின் பக்கம் அடியோடு திருப்பியதால் அடைந்த முதல் வெற்றியே காரணம் ஆகும். அதனைத் தொடர்ந்து தகவல் தொடர்புத்துறை, இணையத்தோடு இணைக்கப்படுவதற்கு முன்புவரை எந்த நிலையிலிருந்தது, எப்படி இயங்கியது என்பது யாவருக்கும் தெரியும். இந்த நெட்வொர்க்கில் நிபுணர்களின் ஒருங்கிணைக்கப்பட்ட அறிவும், பரந்துபட்டதை நாடும் வேட்கையும் பதிவு செய்யப்பட்ட பிறகு பல்நோக்கில் தன்னைத்தானே வியக்கின்ற மேம்பாட்டு நிலைக்கு நாம் உயர்ந்துள்ளோம், உள்ளம் மகிழ்ந்துள்ளோம்!

அமெரிக்காவின் நேஷனல் சயின்ஸ் பவுண்டேஷன் நிறுவிய நெட்வொர்க்கே பின்னர் பெருமளவில் சக்திவாய்ந்த டெலிபோன் கேபிள்களுடன் இணைக்கப் பட்டு சூப்பர் கம்ப்யூட்டர்களில் வைக்கப்பட்ட தகவல்கள் உலகின் எந்தப் பகுதியிலும் அதன் பயனாளருடன் பகிர்ந்துகொள்ள முடியும் என்பதற்கு முன்னுதாரணமாக அமைந்தது. இந்த முயற்சிக்குக் கிடைத்த பலன் நாளடைவில் தகவல் பரிமாற்றங்களை அதிகப் படுத்தியது. அதனால் மிகவும் சக்தி வாய்ந்த சூப்பர் கம்ப்யூட்டர்கள் என்று நம்பப்பட்ட கம்ப்யூட்டர்களே சமாளிக்க முடியாமல் திணறியது. வேகவேகமான தகவல் பரிமாற்றத்திற்காக 1988–இல் நெட்வொர்க்குகள் புதுப்பிக்கப்பட்டு, மின்சாரம் அளவிற்குத் தகவல் சொல்லவேண்டும் என்பதற் காக தொலைபேசி வழித் தடங்களின் மூலமாக சக்திவாய்ந்த சகல கம்ப்யூட்டர்களும் இணைக்கப்பட்டதால் ஏற்பட்டதே இன்று அகில உலகிலும் பரவிக்கிடக்கும் இன்டர்நெட் ஆகும்.



அகவிருள் அகற்றி அறிவுச்சுடர் கொளுத்திய முதல் பாகத்தைவிட அறிவுப் பெருக்கத்தை அறிவியல் கோட்பாட்டோடு நெருக்கப்படுத்திக்கொண்ட இரண்டாவது பாகமே எதிர்காலத்தில் இணையத்தின் தேவையைப் புரிந்துகொள்ள உதவும். சுவாசப்பைகளுக்குக் காற்றும், தமனிகளுக்கு இரத்தமும், இதயத்திற்குக் காதலும் எப்படி அவசியமானதோ, அப்படி இணையத்தின் அவசியமும் இன்றியமையாததாக அமைகிறது. ஒரு சின்னஞ்சிறிய மின்காந்த தட்டில் சேமித்து வைக்கப்படுகின்ற தகவல்கள் பெரும் களஞ்சியமாக, கடிதப் போக்குவரத்தின் கடினத்தை சுலபப்படுத்துவதாக கூடி, குழு விவாதம் நடத்துவதிலிருந்த குளறுபடிகளைக் களைவதாக நாளேடுகளுக்காக செலவழிக்கும் நேரத்தை சேமிப்பதாக, கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளை கண்டுபிடித்துக் கொடுப்பதாக, பொழுதுபோக்கிலும், பொது அறிவை வளர்த்துக் கொள்வதாக, வணிகம், கலை, கலாச்சாரம் எல்லாவற்றையும்விட மேலாக அயல் நாடுகளின் நிகழ்வுகள் போன்றவற்றை குறைந்த செலவில் மனிதனின் தேவைகளை நிறைவேற்றிக்கொள்கின்ற நிலையில் இன்றைக்கு இணையம் இருக்கிறது.

மனிதனுக்கு உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இருப்பிடம் தேவைகளோடு உலகை ஒரு நொடியில் வலம் வர இணையத் தேவை இருப்பது குறித்து, இப்போதைக்கு எந்தப் பிரச்சினைகளும் இல்லை என்றாலும், எதிர்காலத்தில் இதன் வேகமும் விளைவும் உலக சமுதாயத்தில் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தப் போகிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது. வேகத் தளத்தில் விவேகத் தடத்தை தவறவிட்டு விடுவோமோ எனும் வினாவிற்கு விடை தேவையில்லை என்றாலும், விளக்கம் அவசியமாகிறது. காலத்தின் கவலைக்குக் கண்டிப்பாக ஆறுதல் சொல்லித்தான் ஆக வேண்டும். அறிவியல் முன்னேற்றந் தான் என்றாலும், ஆபத்தை விளைவிக்கக் கூடிய அணு மற்றும் ஹைட்ரஜன் தொழில் களைவிட, மற்ற புதிய இரசாயன தொழில் களைவிட இந்த இணையம் பெரும் இன்னல்களை ஏற்படுத்தக்கூடும் எனும் நம்பிக்கை எனக்கில்லை. அறிவை ஆக்கச் செயல்களுக்குப் பயன்படுத்துகின்ற அந்த நிலையிலிருந்து அறவே மாறாத வரை எந்தத் தீங்கும் எளிதில் ஏற்பட்டுவிடாது.

உலகின் பரப்பு ஒருபோதும் சுருங்குவதும் இல்லை, விரிவதும் இல்லை. ஆனால் உலகின் மக்கள்தொகை மட்டும் மட்டேயில்லாமல் உயர்ந்துகொண்டே செல்கிறது. அதனடிப்படையில் தேவைகளையும் நிறைவேற்றியாக வேண்டும். இந்த இணையத் தொடர்பாவது, இனி இன, மத, மொழி பூசல்களின்றி ஒரு புதிய இனத்தை ஏற்படுத்தட்டும்.

★ ★ ★

**சமத்துவபுரத்தில்**

**கணினி மையம்**

**வே**லூர் மாவட்டத்தில் இராணிப்பேட்டை அருகில் அம்மூரில் அழகிய சமத்துவபுரம் அமைக்கப்பட்டுள்ளது. எந்த சமத்துவபுரத்திலும் இல்லாத சிறப்பு, இங்கு ஒரு கணினி மையம் உள்ளது. முதலமைச்சர் கலைஞர் அவர்களது பவள விழா பிறந்த நாளினையொட்டி இராணிப்பேட்டை சட்டப்பேரவை உறுப்பினர் திரு ஆர்.காந்தி அவர்களின் பொருள் உதவியால் அமைக்கப்பட்டது. இங்கு 4




கணினிகள் உள்ளன. மையம் குளிர்சாதன வசதி செய்யப்பட்டுள்ளது. இவைகள் ரூ.3 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

இம்மையத்தில் 30 மாணவர்கள் பயிலுகிறார்கள். இங்கு 6 மாத காலம் கணினிக் கல்வி அளிக்கப்படுகிறது. இதற்கு சமத்துவபுர வாழ் மக்களுக்கு மாதம் ரூ.50ம், இதர மக்களிடம் 6 மாதத்திற்கு ரூ.2000மும் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இந்த ரூ.2000-ஐயும் 5 தவணைகளில் செலுத்தலாம். ஆனால் இப்படிப்பிற்கு வெளியில் ரூ.4000-க்கு மேல் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

இம்மையத்தை சிறப்புடன் செயலாற்றச் செய்ய வருவாய் அலுவலர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

---

## வேலூர் உழவர் சந்தை

**ஏ**ராளமான மக்கள் வேலூர் உழவர் சந்தையில் காய்கறிகள் வாங்கிக் கொண்டிருப்பதைக் காணமுடிந்தது. இக்கூட்டமே இச்சந்தையின் வெற்றிக்கு கட்டியம் கூறுவது போல் இருந்தது.

சந்தைக்கு வந்த நுகர்வோர்களையும், கடைக்காரர்களையும் சந்தித்துப் பேசினோம். அனைவரும் உழவர் சந்தை சிறப்பான பயனைத் தந்து கொண்டிருப் பதாக ஒருமித்த குரலில் கூறினர்.

திரு.பிச்சாண்டி ''சரியான எடை, நியாயமான விலை, புதிய காய்கறிகள்'' என்று கூறினார். திருமதி வரலட்சுமி, ''இச்சந்தை தொடங்கியக் காலத்திலிருந்து வாங்குகிறேன். இதுபோன்று முன்பு குறைந்த விலையில் நல்ல காய்களை



வாங்கியதில்லை. இங்கு எந்தக் குறையும் இல்லை" என்றார். சௌந்தர்ராஜன் மற்றும் சிலரும் இதுபோன்று கூறி திருப்தியாக உள்ளது என்றனர்.

அதுபோல், இராமச்சந்திரன், இந்திராணி, திருப்பதி போன்ற கடைக்காரர்கள் "இங்கே நல்ல வியாபாரம் நடைபெறுகிறது. நாங்கள் விளைவித்த பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கிறது. நல்ல இலாபமும் கிடைக்கிறது" என்று மகிழ்ச்சியுடன் கூறினர்.

60 கடைகள் உள்ள இந்த சந்தையில் 22.9.2000 அன்று 150 விவசாயிகள் பதிவு செய்து வியாபாரம் செய்தனர். கடந்த எட்டுமாதங்களில் 27,42,216 கிலோ காய்கள் ரூ.1,62,09,116 க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

உழவர் சந்தையில் மகளிர் குழு நடத்தும் ஒரு சிற்றுண்டி சாலை உள்ளது. இச்சிற்றுண்டி சாலையில் விற்பனை உழவர் சந்தைபோல் அமோகமாக உள்ளது என்றனர்.

• • •

## பள்ளியில் கணினி

ஆற்காடு ஊராட்சி ஒன்றியத்தில் பூட்டுத்தாக்கு அரசு மேனிலைப்பள்ளி கணினிக் கல்வி மையத்தைப் பார்த்தோம். இங்கு 10 கணினிகள் உள்ளன. 9,10,11,12-ஆம் வகுப்பு மாணவர்கள் இங்கு கணினிக் கல்வி பயின்று வருகிறார்கள். ஆண்டுக்கு ரூ.100 வீதம் 9, 10-ஆம் வகுப்பு மாணவர்கள் செலுத்த வேண்டும். 11, 12-ஆம் வகுப்பு மாணவர்கள் ரூ.200 கணினிக் கல்விக் கட்டணமாக செலுத்தி பயிலுகிறார்கள். •



## வருமுன் காப்போம்

வேலூர் மாவட்டம் மேல்விசாரத்தில் இஸ்லாமிய பெண்கள் அதிகமாக கலந்துகொண்ட வருமுன் காப்போம் திட்ட முகாமிற்கு 22.9.2000 அன்று சென்றிருந்தோம். ஏராளமான பெண்களும், ஆண்களும் தங்களைப் பரிசோதித்துக் கொண்டிருந்ததைக் காண முடிந்தது.

முதலில் பதிவு செய்துகொண்டு, பிறகு பொதுவான பரிசோதனை, தோல் வியாதி, தொழுநோய், இ.சி.ஜி., இருதய நோய், இரத்த பரிசோதனை மற்றும் கண், பல் மருத்துவ பரிசோதனைகளும் செய்யப்பட்டன. சித்த மருத்துவ பரிசோதனைகளும் செய்யப்பட்டன.

12 மருத்துவ அலுவலர்கள், டாக்டர் அன்பரசு தலைமையில் 47 உதவியாளர்களுடன் இம்முகாமில் கலந்து கொண்டனர்.

மதியம் 12.30 மணி வரை 1,096 பொதுமக்கள் பரிசோதிக்கப்பட்டிருந்தனர். இவர்களில் பெண்கள் மட்டும் 461 பேர்.

இம்முகாமிற்கு வந்திருந்த கூட்டத்தைக் கண்டு இத்திட்டத்தின் பெரும் வெற்றியை எங்களால் உணர முடிந்தது.



# ரயில் தண்டவாளத்தில் ஓடும்...

□ சுந்தர ராமசாமி

முப்பது வருடங்களாகப் பார்த்து வரும் இந்த வேலையிலிருந்து ஓய்வுபெற இன்னும் இருப்பதெல்லாம் இரண்டே இரண்டு மாதங்கள் தாம். ஒரு ரயில்வே டிரைவராக இத்தனை வருடங்கள் உழைத்ததை இன்றுகூட என்னால் நம்ப முடியவில்லை. சிறு பிராயத்தில் எந்த வேலைக்கும் என் மனசு வளைந்து கொடுக்கவில்லை. மேடையில் தோன்றி நடிக்க வேண்டும் என்று ஓர் ஆசை இருந்தது. அப்பா, 'அது ஆகவே ஆகாது' என்று குறுக்கே நின்றுவிட்டார். உதவாக்கரை என்று ஊரில் பெயர் எடுத்துவிட்டேன். ஊரார் பார்வையைத் தாங்க முடியாமல் கசப்புணர்ச்சியில் சாமியார் ஆகிவிடும் உத்தேசத்துடன் வீட்டைத் துறந்து ஓடினேன். தகப்பனார், அடுத்த ரயிலில் புறப்பட்டு வந்தவர், என்னைக் கையோடு இழுத்துச் சென்று இந்த வேலையில் மாட்டிவிட்ட பின்புதான் கண்ணை மூடினார். நீலநிறச் சட்டையும் நிஜாரும் அன்று மாட்டிக் கொண்டது. இனிமேல் தான் கழற்றியெறிய வேண்டும். கரிப்பொடியும் அழுக்கும் அடையாய் அப்பிவிட்டன.

ஒரே பாதையில் வருடக்கணக்காகச் சென்று, அலுத்துப்போய்விட்டது எனக்கு. இரவு கண்ணை மூடினாலும் அன்றாடம் செல்கிற திருவனந்தபுரத்துக்கும், கொல்லத்துக்குமான இடைவெளி தூரம்தான் ஒரு குடிசை விடாமல், ஒரு பாலம் விடாமல், ஒரு குளம் விடாமல், ஒரு தென்னை மரம் விடாமல் மனத்திலே ஓடிவரும். சுருள் விரிந்து கொண்டே செல்லும் காட்சிக்கு இப்போது கண் மூட வேண்டியதில்லை. மனசே போதும். இதுவரையிலும் கோடிக்கணக்கான பிரயாணிகளை அவரவர்களுடைய இலட்சிய ஊர்களுக்கெல்லாம் அழைத்துச் சென்றிருக்கிறேன். நான்தான் இதைச் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்ள வேண்டும். பிரயாணிகளில் ரொம்பப் பேர்கள் என் முகத்தைக் கூட ஏறிட்டுப் பார்த்திருக்க மாட்டார்கள். குறித்த நேரத்துக்கே கொண்டு போய்ச் சேர்த்தாலும் பாராட்டு என்னவோ ரயிலுக்குத்தான். 'ரயில் இன்று ரொம்பக் கரெக்டாக வந்துவிட்டது ஸார்'.ரயிலுக்குத்தான் சக்கரங்கள் உண்டு ? எனக்கு உண்டா ? என்னையும் ரயில்தானே சுமக்கிறது ? நான் என்ன வெளியே நின்று கயிற்றால் இழுக்கிறேனா ?

என் வேலையே விசித்திரமானது. மனித வெள்ளத்தின் மத்தியில் ஒளிந்து கொண்டிருக்கும் வேலை. எல்லோருக்கும் முன்னால் எல்லோருடைய பயணத்தையும் இயங்க வைப்போனாக இருந்தும் ஒருவருக்காவது என் ஞாபகம் இலேசில் வந்து விடுவதில்லை. பஸ் டிரைவர் வேலை, டாக்ஸி டிரைவர் வேலை மாதிரி இல்லை இது. ஓர் உறவு, ஒட்டு, மனுசத்தன்மை, ஒரு பசை, பாராட்டு ஒன்றும் இராது. பிரயாணிகள்தான் என்ன செய்வார்கள் ? அவசரம் அவர்களை முந்திக்கொண்டு ரயிலடிக்கு வந்துவிடுகிறது. மேலும் ரயில் ரொம்பப் பெரிசு. உலகம் மாதிரி, அகப்பட்ட பெட்டிக்குள் முண்டியடித்து நுழைந்து இடத்தைப் பிடிக்கும் ஆத்திரத்தில் முன்னும் பின்னும் பார்க்க நேரம் ஏது ? என் நினைவு எங்கே வரும் ?

தண்டவாளத்தில் ரயில் ஒழுங்காக ஓடிக்கொண்டிருக்கும் வரையிலும் என் நினைவு எழ வேண்டிய அவசியமும் அவ்வளவாக இல்லைதான்.

இன்று வரையிலும் என் வாழ்வில் பளிச் பளிச்சென்று எதுவும் நிகழ்ந்துவிடவில்லை. சிலர் வாழ்க்கையில்தான் ஏணிப்படிகள் வந்து கொண்டேயிருக்கும். படிகள் அத்தனையும் ஏறிய பின்பும் அவர்கள் கண்களுக்கு மட்டும் மேலேயும் ஓர் ஏணிப்படி புலப்படும். எனக்கு அந்த அதிருஷ்டம் எல்லாம் கிடையாது.

இந்த முப்பது வருஷ சர்வீஸில் என் மனசைத் தொட்ட சில அனுபவங்களை நான் சபையோருக்குச் சொல்ல வேண்டுமாம். எனக்கு மேடையேறிப் பேசிப் பழக்கமா என்ன ? வேண்டாம் என்றாலும் விடமாட்டேன் என்கிறார்கள். கூட்டம் கூட்டிப் பிரிவுபசாரம் பண்ணப் போகிறார்களாம். உடன் வேலை செய்யும் நண்பர்களின் உற்சாகத்துக்கு நான் வளைந்து கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்தக் காலத்து இளைஞர்களுக்கெல்லாம் நன்றாகப் பேச வருகிறது. என்னாலெல்லாம் அப்படிப் பேசமுடியாது. வந்திருக்கிறவர்கள் அத்தனை பேரையும் சொந்த மச்சான்களாகப் பாவித்துச் சல்லாபம் செய்து பார்க்க வேண்டியது தான்.

பொழுதுவிடிந்து அஸ்தமிப்பது வரையிலும் புத்திசாலித்தனமான பேச்சையே கேட்டுக் கேட்டு அலுத்துப் போயிருக்கும் ஜனங்கள் ஒரு கால் மணி நேரம் உளறலைப் பொறுத்துக் கொள்ளமாட்டார்களா என்ன? எதற்கும் மனசுக்குள் ஒரு தடவைச் சொல்லிப் பார்த்து விடுவது நல்லது...

.... மனசைத் தொட்ட அனுபவம் என்று நான் எதைச் சொல்லுவது? வேலையில் அமர்ந்த சில நாட்களுக்கெல்லாம் ஓர் எருமை மீது ரயில் ஓடிவிட்டது. பிராணவஸ்தையில் எழுந்த அதி பயங்கரமான அலறல், என்னை அப்படியே ஒரு முழம் மேலே தூக்கிப் போட்டுக் கீழே தள்ளியபோதும் நிலைகுலைந்து போய் விடாமல், மனசை இரு கைகளாலும் ஏந்திச் சுருட்டிப் பிடித்துக் கொண்டு கண்ணை விழித்துப் பார்த்தேன். ரயில் தண்டவாளத்தில் அமைதியாக ஓடிக்கொண்டிருந்தது. அப்பா! அந்த நிமிஷத்தில் ஏற்பட்ட நிம்மதி இருக்கிறதே, அது விலைமதிக்க முடியாதது.

இந்த வேலையைப் பொறுத்த வரையில் மலையே புரண்டு வந்தாலும் முதல் விசாரம் அதுதான். ரயில் தண்டவாளத்தில் ஓடிக்கொண்டிருக்கிறதா என்பதுதான். என்னதான் கண்ணில் எண்ணெய் விட்டுக் கொண்டு கட்டிக் காத்தாலும் ஏதாவது ஒரு விக்கினம் வரத்தான் செய்யும். அதை அலட்சியப்படுத்த வேண்டும் என்றுநான் சொல்லவில்லை. ஆனால் ரயில் தண்டவாளத்தில் ஓடிக்கொண்டிருக்கிறதே, அதுதான் முக்கியம். எல்லாவற்றையும் விட..

நான் ரொம்பப் படித்தவன் இல்லை. ஏதோ அனுபவம். குறைப்புத்தியை அனுபவம் சாணைப் பிடித்துத் தந்திருக்கிறது. அதை நம்பித்தான் பேசுகிறேன், சொல்ல வந்த விஷயத்தை விட்டு வேறு எங்கோ சென்று விட்டேன். தண்டவாளம் இல்லாத ரயில் மாதிரி அல்லவா இந்த மனசும் ஓடுகிறது.





என் வாழ்வில் மனசைத் தொட்ட அனுபவம் ஒன்றே ஒன்றுதான். அதை எந்த நாளும் என்னால் மறக்க முடியாது. என் நினைவில் அடிக்கடி எழுந்து இன்ப வேதனையைத் தந்து கொண்டிருக்கிற அனுபவம் அது. எஞ்சின் கரி படிந்த நீல நிறச் சட்டையோடும், எண்ணெய்ப் பிசினும் தூசியும் ஏறிப் போயிருந்த நீல நிற நிஜாரோடும், ஒருநாள் ஓடுகிற ரயில் கண்ணீர் விட்டு அழுதேன். பசுமையற்ற என் வாழ்விலும் கண்ணீர் சிந்த ஒரு சந்தர்ப்பம் வாய்த்ததே! தெய்வம் என்னை மறந்து விடவில்லை. என்னையும் அழ வைத்து விட்டது அது. அந்த அனுபவத்தையும் என் வாழ்வையும் ஒன்றாக இணைத்துப் பார்க்கிறபோதெல்லாம் கடைக்காவூர் ஸ்டேஷன் பக்கம் நூற்றுக்கணக்கான பூவரசு மரங்களுக்கிடையே ஒரு தென்னை மரம் தலையைத் தூக்கி நிற்கும் காட்சிதான் என் நினைவில் எழும்.

பிரமாத விஷயம் ஒன்றும் அல்ல. முன்பின் பார்த்திராத பழக்கமில்லாத ஒரு

குழந்தையிடம் என் மனசைப் பறி கொடுத்து விட்டேன். அதற்கான தண்டனையையும் அனுபவித்தேன். பாசம் பலமாகச் சொடுக்கிவிட்டது.

ஆனால் மனசு கண்ணன் பேரில் அவனுடைய உண்மைப் பெயர் இன்றுவரை எனக்கோ என் குடும்பத்தாருக்கோ தெரியாது. கவிந்து நின்ற நாட்களில் எல்லாம் உடம்புக்குள் ஓர் ஆனந்த மயக்கம் அலை அலையாய் எழுந்தவண்ணம் இருக்கும். அதிமதுரத்தைக் கடைவாயில் ஒதுக்கிக் கொண்டதுபோல் சதா ஒரு தித்திப்பு.

உலகத்தில் எந்தக் காரியமுமே நாம் எண்ணுவது போலத்தான் நிகழ வேண்டும் என்பதில்லை. அதற்கு நேர்மாறாகவும் நிகழலாம் என்பது எத்தனை பட்டாலும் நம் பிரக்ஞையில் ஒலித்துக் கொண்டிருப் பதில்லை. நிகழ நிகழத்தான் பழையபடி நினைவில் வருகிறது எத்தனை தடவை ஒத்திகை நடந்திருந்தாலும், மேடையில் அப்போது தான் நிகழ்கிறது என்ற பாவனையில் நடிக்கிறானே நடிகன், அது போலத்தான் நாமும் நடித்தாக வேண்டுமோ ?

எருமை மீது ரயிலேறிய விஷயத்தை அந்தரத்தில் விட்டு விட்டேன். அது ஒன்றும் அத்தனை பெரிய விஷயமும் அல்ல. இருந்தாலும் சொல்லி முடித்துவிடுகிறேன்.

அந்தச் சம்பவம் நடந்த இரண்டு மூன்று நாட்களுக்குப் பின் ஒரு நாள், வேளி ஸ்டேஷனில் ஒரு கிராமத்தானிடம் விசாரித்தேன். 'மாதவப் பணிக்கர் என்பவரின் எருமைதான் அது' என்றான் அவன். மடியில் விரல்



பட்டதும் 'சொர் சொர்' என்று ஒரு வேளைக்குப் பத்துப்படி வரையிலும் பொழியுமாம். பணிக்கர் துக்கம் தாங்காமல் தண்டவாளத்தின் மீது தலையை முட்டியபடி அழுது புலம்பிவிட்டுக் கூடையில் வழித்துப் போட்டுக் கொண்டு சென்றாராம். கொம்பு மட்டும் இரண்டு ரூபாய்க்குப் போச்சு என்றும் அவன் சொன்னான்.

சற்றுப் பெரிய கொம்பு போலிருக்கிறது. நாற்பது ஐம்பது சீப்பாவது தேறியிருக்கும். அவ்வளவுதான். பெரிய விஷயமாகச் சொல்லப் போகிறேன் என்று எதிர்பார்த்து ஏமாந்து போனீர்களோ என்னவோ ?

சுற்றி சுற்றி வந்து கொண்டிருக்கிறேன். கண்ணனைப் பற்றி அல்லவா சொல்ல வந்தேன் ? அதைச் சொல்லி விடுகிறேன்.

நாலைந்து வருஷங்களுக்கு முன்னால் ஒரு நாள் ரயில் பேட்டை ஸ்டேஷனைத் தாண்டி, நடுவில் ஒரு பெரிய வளைவும் மரம் அறுக்கும் டிப்போவும் வருகின்றனவே, அவற்றையும் தாண்டிப் போகையில் வானவெளியில் நாதசுர இசை கேட்க ஆரம்பித்தது. தொலை தூரத்தில் நிறையக் குடைகள் ஊர்ந்து வருவதையும் கவனித்தேன். ஒரு கல்யாண கோஷ்டி.

அந்த இடத்தில் தண்டவாளம் மேட்டுப் பாங்கான இடத்தில் ஓடுகிறது. இரு பக்கமும் பள்ளம். சரிவில் பச்சைப் புற்கள் அடர்த்தியாக வளர்ந்திருக்கும். அநாதைக் குளத்தில் பாசிபடர்ந்த மாதிரி ஒவ்வொருவராக வலது பக்கத்தோடு ஏறித் தண்டவாளத்தைத் தாண்டி இடது பக்கமாக இறங்கிச் சென்றார்கள். மாப்பிள்ளையும் பெண்ணும் கண்ணுக்கு லக்ஷணமான ஜோடிதான். பெண் சற்று ஸ்தூலமாக இருந்தாள். அநேகமாக அப்படித்தானே அமைகிறது. கறுகறுவென்று மையில் தோய்த்த புருவம், நெற்றியில் நேர் கோட்டில் நீளமான சந்தனப் பூச்சு. பிள்ளைக்கும் பெண்ணுக்கும் நடுவில் ஒரு கிழவனார் சவரம் செய்த முகத்தோடும் சலவை செய்த வெண்ணிற ஆடைகளோடும் வெகு சுத்தமாகக் காட்சி அளித்தவர் தனது வேஷ்டியோ உத்தரீயப் பட்டோ பெண்ணின் மேல்

பட்டுவிடக் கூடாது என்ற ஜாக்கிரதையில் அதிகப்படி கவனத்துடன் இருவருக்குமாகக் குடை பிடிக்கும் முயற்சியில் இருவரையும் முழுதும் நனையவிடாமல் தனக்கும் பட்ச பாதம் காட்டிக் கொள்ளாமல் வேண்டிய மட்டும் நனைந்து கொண்டு பின்னால் வந்தார். அப்போதே அவருக்கு எண்பது வயசுக்குக் குறைவில்லை. இப்போ இருக்கிறாரோ என்னவோ!

ரயில் அருகே வந்ததும் பெண்ணின் முகம் சிவந்தது. மணப்பெண் கோலத்தில் அவளைக் காண ஒரு ரயில் நிறைய அல்லவா கூட்டம் வந்துவிட்டது! வெட்கமாக இராதா அவளுக்கு ?

இரண்டு வருடங்களுக்குப் பின் மீண்டும் அவளைக் கண்டேன். அந்த இடமே அதி அற்புதமானது. தங்கச்சேரி ஸ்டேஷனையொட்டி இருந்த ஒரு சிற்றூர் அது. எங்கு பார்த்தாலும் அடர்த்தியான தென்னந் தோப்பு. முகம் பார்க்கும் கண்ணாடி உடைந்து சிதறியது போல் சூரிய ஒளி சில்லுச் சில்லாய் மண்ணில் இறைந்து கிடக்கும். இடையிடையே தீப்பெட்டிகள் மாதிரி சிறு குடிசைகள். பள்ளத்தை நோக்கிப் பாதாளம் வரையில் பாயும் பாதையோரங்களில் கூட முதுகைக் காட்டியபடி குடிசைகள் ஒட்டிக் கொண்டிருக்கும். காற்றடித்தால் புரண்டுவிடும் என்று எண்ணும்படி. நீள நீளமான கயிற்றில் கட்டப்பட்டிருந்த மாடுகள் பரிபூர்ண சுதந்திரத்துடன் மேய்ந்து திரிவதைக் காணலாம்.

சற்றுத் தொலைவில் ஒரு குளம் தெரியும். காலை வேளையில் பெண்கள் கூட்டமாகக் குளித்துக் கொண்டிருப்பார்கள். கரையில் உடம்பைத் தேய்த்தபடி நிற்கும் இளம் பெண்கள் ரயில் அருகே நெருங்கி வருவது வரையிலும் கழுத்தைத் திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டுக் கடைசி நிமிஷத்தில் தொப்பென்று தண்ணீரில் குதிப்பார்கள். ஒன்று குதிக்க, இன்னொன்று குதிக்க, ஒன்றன்பின் ஒன்றாக எல்லாக் குட்டிகளும் தண்ணீருள் தொப்தொப்பென்று விழும். சில பெண்கள் கழுத்தளவு தண்ணீரில் நின்றபடி ரயிலைப் பார்த்து விஷமத்தனமாகச் சிரிப்பதும் உண்டு. என் மனத்தை வெகுவாகக் கவர்ந்த இடம் அது.

அந்த இடத்தில் ரயில் தண்டவாளத்தை ஒட்டியிருந்த ஒரு சிறு வீட்டின் முன்வாசலில் ஒரு நாள் ஒரு பெண் குனிந்து நின்றவாறு கோலமிடும் காட்சி கண்ணில் விழுந்தது. அப்போது மணி ஆறு ஆறரைதான் இருக்கும் புகைப்படம் பிடிக்கும் ஸ்டூடியோ விளக்குகள் போல் அந்த வீட்டுக் கொல்லையிலிருந்து இருளைக் கிழித்து முன்னேறிக் கொண்டிருந்த கிரணங்கள் அவளுக்கு இருபக்கமுமாக வந்து தண்டவாளத்தைத் தொட்ட இடத்தில் எல்லாம் வெள்ளி முலாம் பூசியது. நாற்புறமும் சூழ்ந்திருந்த மங்கிய ஒளியில் ஒளிக்கற்றையின் நடுவே அவள் காட்சி அளித்தது இயற்கையின் ஒரு விசித்திரமான ஏற்பாட்டின் விளைவே என எண்ணினேன். அந்த நேரத்திலேயே அவள் குளியை முடித்துவிட்டிருந்தாள். ஈரத்தலை ஒரு வெறும் நாடா முடிச்சில் கட்டுண்டு கிடந்தது. அப்போதும் என்ன அகலமான அடர்த்தி! குனிந்து நின்ற கோலத்தில் அவள் கறுப்பு நிறப்பட்டு ஜம்பர் அணிந்து கொண்டிருப்பதாக நான் எண்ணியது தவறு என்பது, எழுந்த வேகத்தில் அவளுடைய கேசபாரம் தோள்பட்டையில் ஒதுங்கியபோதுதான் தெரிய வந்தது.

பின்னால் எத்தனையோ தடவை அவளைப் பார்த்தேன். ஒவ்வொரு தடவையும் மனசில் ஒரு முடிச்சு உறுத்தும். திடீரென்று ஒரு நாள் ஏதோ ஒரு நிமிஷத்தில் அது அவிழ்ந்தது. மணப்பெண் கோலத்தில் இரண்டு வருடங்களுக்கு முன் நான் பார்த்த அதே பெண்தான் அவள் என்பது நினைவில் உதித்துவிட்டது.

முன்னைவிட அவள் உடம்பு அப்போது சற்றுக் குளுமையாக இருந்தது. கன்னக் கதுப்புக்களில் செம்மை படர்ந்திருந்ததா என்பது என் கண்களுக்குத் தெரியவில்லை. ஆனால்

நாம் வெட்டும்
வாய்க்கால்களைப் போல்
நதிகள் நேராக ஓடுவதில்லை
ஆனால்
நதிகளின் சௌந்தர்யம்
நம் வாய்க்கால்களில்
இல்லை.

- அப்துல் ரகுமான்

அவளுடைய முகத்தையும் உடம்பையும் கவனித்த நான் வெகு சுலபமாக ஊகித்துவிட்டேன். ஐந்து பெண்களுக்குத் தகப்பனும் ஏழெட்டுக் குழந்தைகளுக்குப் பாட்டனுமாகிய நான் அதை உணர்ந்து கொண்டதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

அதற்கு முன், அந்த வீட்டையொட்டிய தென்னந் தோப்பில் கட்டியிருந்த கயிற்றுக் கொடியில், ஜம்பரும் வேஷ்டியும் பெரிய சட்டையும் பனியனும்தான் தொங்குமே தவிர சின்னச் சொக்காய் தொங்குவதைக் கண்டதே இல்லை. என் மனசுக்கு இது குறையாக இருந்தது. இரண்டு வருஷங்கள் ஆகிவிட்டதே என்று கூட எண்ணுவேன். எதற்கும் ஒரு வேளை கூடி வர வேண்டாமா?

அந்த வேளையும் வந்துவிட்டது. என் மனைவியிடம் இதைச் சொன்னபோது 'கடவுள் அவளுக்கு ஆண் குழந்தையைக் கொடுக்கட்டும்' என்று ஆசிர்வாதம் பண்ணி வைத்தாள்.

ஏழெட்டு மாதங்களுக்குப் பின்னால் அதே கொடியில் உள்ளங்கை அகலத்தில் சின்னச் சொக்காய்கள் இரண்டு மூன்று தொங்குவதைக் கண்டு ரொம்பவும் சந்தோஷப்பட்டேன். 'என்ன குழந்தை?' என்று எனக்கு நானே கேட்டுக் கொண்டேன். தோப்பில் வீசிக் கொண்டிருந்த காற்று ஒரு பதிலும் சொல்லவில்லை.

அன்று என் மனத்தில் எழுந்த கேள்விக்கு விடை கிடைக்க எத்தனையோ மாதங்கள் காத்திருக்கும்படி ஆகிவிட்டது.

இத்தனைக்கும் ஒவ்வொரு நாளும் அந்தக் குழந்தையைப் பார்க்கத் தவறியதும் இல்லை. தாயாரின் மடியில் ஊனக் கண்களுக்குப் புலப்படாத ஏதோ ஓர் அரிய சம்பத்தைப் பிஞ்சு விரல்களிடையே இறுகப் பற்றியபடி நிஷ்டையில் ஆழ்ந்து கிடக்கும் நாட்களிலிருந்து ரயிலின் ஓசை கேட்ட மாத்திரத்தில் அவசரம் அவசரமாய் உள்ளேயிருந்து முன்வாசல் வரையிலும் தவழ்ந்து வந்து தலையைச் சரித்தபடி வேடிக்கை பார்க்கும் நாட்கள் வரையிலும் எத்தனையோ தடவைகள் அந்தக் குழந்தையைப் பார்த்திருக்கிறேன். சில சமயம் தாயார் முற்றத்தில் பிச்சிப்பூ பறித்துக் கொண்டிருக்கும்போது இடுப்பில் உட்கார்ந்து தோளில் ஈற்றின் தினவைத் தீர்த்துக் கொண்டிருக்கும், ரயிலைக் கண்டால் அதற்கு என்ன சந்தோஷம்! தாயாரின் முகத்தை இரண்டு கைகளாலும் மாறிமாறி அடித்து இடுப்பிலிருந்து திமிறிக் குதிக்கும். வில்லாய் வளைந்து பின்பக்கம் சரிகிறபோது அவள் நிலைகுலைந்து தடுமாறி அப்படியே கீழே உட்கார்ந்து விடுவாள்.

என்ன அற்புதமான குழந்தை! ஒரு குறுநகையில், ஒரு கை வீச்சில் மனத்தை அள்ளிக் கொண்டு போய்விடும். தெய்வத்தின் சிருஷ்டி மகோன்னதத்தை மண்ணில் பறைசாற்ற வந்த குழந்தை போலும்! இந்த மோகன உருவத்தைப் படைத்தவன் எப்படி இதை விட்டுப் பிரிந்தான்? கடவுளைக் கலைஞன் என்றும் துறவி என்றும் கவிஞர்கள் போற்றுகிறார்களே அதன் காரணமே இதுதானோ?

பல நாட்களாக மனசை உறுத்திக் கொண்டிருந்த கேள்விக்கு ஒருநாள் விடை கிடைத்துவிட்டது.

தென்னந் தோப்பில் வெய்யிலில் சூடேற்றிய நீரில் அவள் குழந்தையைக் குளிப்பாட்டுவதை ஒருநாள் கண்டேன். என் மனைவியின் ஆசீர்வாதம் பலித்துத்தான் இருந்தது!

இரவு வீட்டுக்குச் சென்றால் ஒருநாள் கூட அந்தக் குழந்தையைப் பற்றி என்னால் பிரஸ்தாபிக்காமல் இருக்க முடியாது என்றாகிவிட்டது. நாளடைவில் 'குழந்தை குழந்தை' என்று மொட்டையாக அழைப்பதே எங்களுக்குப் பிடிக்கவில்லை. என் மூத்த பெண் அவனுக்குக் கண்ணன் என்று பெயர் வைத்தாள். அவனுடைய உண்மைப் பெயர் எங்களுக்குத் தெரியாது என்பதையே பின்னால் நாங்கள் மறந்துவிட்டோம். எங்களுக்கு அவன் கண்ணன்தான்.

கண்ணனுக்கும் எனக்கும் என்ன உறவோ? ஒரு நாள் அவனைப் பார்க்காமல் இருந்துவிட்டால் என் மனம் ஏன்

> நாம் வளர்க்கும் பூங்கா
> மரங்களைப் போல்
> காட்டு மரங்களில்
> கட்டுப்பாடு இல்லை
> ஆனால்
> காட்டின் கம்பீரம்
> நம் பூங்காவில் இல்லை
>
> **- அப்துல் ரகுமான்**

வாட வேண்டும் ? காலையில் ரயிலில் புறப்படுகிற வேளையிலேயே எனக்கு ஏன் அவன் ஞாபகம் வருகிறது ? உலகத்துக் குழந்தைகளையெல்லாம் எதற்காக நான் அவனுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் ? அவனை ஒவ்வொரு தடவை பார்க்கிறபோதும் என்னுடன் என் மனைவி குழந்தைகள் அருகில் இல்லையே என்ற குறை உணர்ச்சி எனக்குத் தோன்றக் காரணமென்ன ? தெய்வமே, எனக்கு எதற்கு இந்த விசாரமெல்லாம் என்று நொந்து கொள்வேன்.

கண்ணனுக்கு நன்றாக வால் முளைத்துவிட்டது. வாசல் கதவு திறந்திருந்தால் போதும், நொடிப் பொழுதில் அவன் முற்றத்தில் இறங்கி ஓடி விடுவான். பின்னால் பிடிக்க வரும் அவன் தாயாரை அவன் ஓடஓட அடிப்பதை எத்தனையோ தடவைகள் பார்த்திருக்கிறேன். அவள் அவனைக் கையால் எட்டி எடுத்து தன்னுடைய தலைக்கு மேல் தூக்கிக் கீழே விட்டெறிவது போல் பாவனை காட்டிவிட்டு அப்படியே அவனை மார்புறத் தழுவிக் கன்னத்தில் முத்தமிடுகிற போதெல்லாம் அந்த பட்டுக் கன்னத்தின் ஸ்பரிச சுகத்தை நானும் அனுபவிப்பது போல் ஆனந்தத்தில் திளைப்பேன்.

அவன் தாயாருக்கு வீட்டு வேலைகள் இல்லையா என்ன ? நாள் முழுதும் கண்ணனுடன் மல்லுக்கு நின்று கொண்டிருந்தால் சோறும் கறியும் எங்கிருந்து வரும் ?கிணற்றடியில் ராட்டினத்தின் கிரீச்சென்ற ஓசை எழும்போதும், துணி துவைக்கும் சத்தம் தப்தப்பென்று கேட்கும் போதும் வாசல் கதவு சாத்தியிருக்கும். அப்போதெல்லாம் கண்ணன் முன்னறையில் சிறைப்பட்டுக் கிடக்கிறான் என்று அர்த்தம். ஆனால் ரயில் வருகிற சத்தத்தைக் கேட்டால் நாற்காலியைப் பற்றி ஏறி ஜன்னல் விளிம்பில் நின்றபடி வலது கையைக் கம்பிகளிடையே நீட்டிக்கொண்டு என்னைப் பார்த்துக் கையை விசுறுவான்.. கையை மேலும் கீழும் இழுத்துக் காட்டுவான். ரயில் கத்த வேண்டுமாம். விசையை இழுத்து ரயிலைக் கத்த வைப்பேன். அவனுக்கு உற்சாகம் கரை புரண்டுவிடும். அவன் குதிப்பதைப் பார்த்து ஜன்னலிலிருந்து உருண்டுவிடக் கூடாதே என்று நான் கவலைப்பட ஆரம்பித்து விடுவேன்.

ஒருநாள் கண்ணன் தோப்புக்குள் வந்துவிட்டான். அவனுக்கு வெகு சமீபத்தில் மாடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. 'உள்ளே போ, போ' என்று இரண்டு கைகளாலும் சைகை காட்டினேன். என்னுடைய யோசனையை அவன் கொஞ்சமேனும் மதிக்கவில்லை. 'கிடக்கிறான்கள், பயந்தாங்கொள்ளிகள்' என்று எண்ணி அலட்சியம் செய்தானோ என்னவோ ? உதட்டைச் செம்பருத்தி மொக்கு மாதிரி குவித்துக் கொண்டு 'ஊஊ' என்று கத்தினான். ரயில் கத்த வேண்டுமாம். சில மாடுகள் அவனுக்கு வெகு சமீபமாக நின்று மேய்ந்து கொண்டிருந்தன. அபாயச் சங்கிலி எல்லாம் பிரயாணிகளுக்குத்தான். மேலும் ஒரு குழந்தையை மாடு முட்டாமல் காப்பாற்றுவதற்காக ரயிலை நிறுத்தினேன் என்று சொன்னால் ரயில்வே இலாகாக்கு அந்தப் பாஷை புரியுமா என்ன ? ரயில் வெகுதூரம் சென்ற பின்னும் என் பார்வை தோப்புக்குள்ளேயே தங்கி நின்றது. கண்ணன் பார்வையிலிருந்து மறையும் வேளையில் அவனுடைய தாயார் படியிறங்கி வருவதைக் கண்டு ஆசுவாசம் அடைந்தேன். ரயில் அன்று எக்களிப்போடு கூவிக்கொண்டு சென்றது.

தாயார் பக்கத்தில் நின்று கொண்டிருந்ததில் ஏற்பட்ட துணிச்சலோ என்னவோ, ஒருநாள் கண்ணன் என்னைப் பார்த்து மீசையை முறுக்குவது போல் பாவனைக் காட்டிக் கண்ணை உருட்டி விழித்தான். நான் பயந்து நடுங்குவது போல் நடித்தேன். அவனுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. வயிறு குலுங்கக் கடகட வென்று சிரித்தான். அவன் தாயார் அவன் முதுகில் இலேசாகத் தட்டி முகத்தால் கண்டித்துவிட்டு என்னைப் பார்த்தாள். 'குழந்தைதானே!' என்று முணுமுணுத்தேன். நான் சொன்னது அவளுக்கு எங்கே கேட்டிருக்கும். இந்த ரயிலின் பேய்ச் சிரிப்பில் ?

திருவோணப் பண்டிகை அன்று ஏற்பட்ட அனுபவத்தை ஒரு நாளும் நான் மறக்க முடியாது.

அன்று கண்ணன், அவனுடைய தாயார், தகப்பனார் மூவரும் புத்தாடைகள் அணிந்து வாசலில் இறங்கி நின்று கொண்டிருந்தார்கள். ரயிலை வரவேற்க வந்து நிற்பது போலத்தான் இருந்தது. அவர்கள் மூவரும் அங்கு நின்று கொண்டிருந்த கோலத்திலேயே பண்டிகையின் நறுமணம் நன்றாக வீசியது. ஓணம் அங்கிருந்துதான் ஆரம்பமாகிறது என்று எண்ணிக் கொண்டேன்.

அன்று கண்ணனுடைய தகப்பனாரும் என்னைப் பார்த்துச் சிரித்தார். நான் அவருடைய குழந்தையின் உயிர்த்தோழன் என்பதை மனைவி சொல்லத் தெரிந்து கொண்டிருக்கிறார் போலிருக்கிறது.

கண்ணன் அன்று டேப் வைத்துத் தைத்த அழகான பட்டு நிஜார் அணிந்து கொண்டு வேடிக்கையாகக் காட்சியளித்தான். நான் எங்கே அவனுடைய ஆடையலங்காரத்தைப் பார்க்காமலே சென்று விடுவேனோ என்ற எண்ணத்தில் அவனுடைய தாயார் அவனை முன் பக்கம் எடுத்து நிறுத்தினாள். கண்ணன் என்னைக் கண்டதும் தன் சின்னஞ்சிறு கைகளை



முன்னால் நீட்டினான். இரண்டு கைகளிலும் தங்கக் காப்பு ஒளி வீசியது. அவனுடைய தகப்பனார் அவனுக்கு ஆசையாகச் செய்து போட்டிருக்கிறார்.

ரயில் அவர்கள் எதிரே வந்ததும் கண்ணனின் காதருகே அவன் தாயாரின் முகம் குனிந்தது. மறு நிமிஷம் குழந்தை என்னைப் பார்த்துத் தன் சின்னஞ்சிறு கையை வாய் அருகே கொண்டு சென்று சாப்பிட வரவேண்டும் என்று சைகை காட்டி அழைத்தான். என்னையும் மீறிக்கொண்டு வந்த உற்சாகத்தில் 'வருகிறேன்' என்று வாய்விட்டுக் கத்தினேன். மனசை என்னவோ செய்தது. அப்படியே ரயிலிலிருந்து குதிக்க முடியவில்லையே என்னால்! அன்று ரயில் நன்றியுடன் ஒரு மணி நேரம் கத்தியது.

இத்தனை உறவு கொண்டாடிய பின்பும் ஒரு நாள் கூட நான் அவர்கள் வீடு தேடிச் செல்லவில்லை. கை நிறைய வாங்கிக்கொண்டு ஒருநாள் போக வேண்டுமென்று எத்தனை தடவையோ எண்ணியிருக்கிறேன். நான் போகாமலே நாட்கள் போய்க்கொண்டிருந்தன.

இதற்கு மேல் எனக்குச் சொல்வதற்கு ஒன்றுமில்லை. என் மனதிலிருப்பதை முழுதும் சொல்ல எனக்குத் தெரியவும் தெரியாது. சொல்லவும் முடியாது. இருந்தாலும் ஒரே ஒரு சம்பவத்தை மட்டும் சொல்லிவிட்டு முடித்துக் கொள்கிறேன்.

ஓணம் பண்டிகைக்குப் பின் சில மாதங்கள் சென்றன. ஒருநாள் திடீரென்று கண்ணனைக் காணமுடியவில்லை. அன்றும் அதற்கு அடுத்த நாளும் அவனைப் பார்க்காமலே சென்றேன். காலையில் இஞ்சின் பெட்டிக்குள் நுழைகிறபோதே அவன் நினைவுகள் வரும். இன்றாவது அவனைக் காண முடியுமா என்று கேட்டுக்கொண்டு செல்வேன். அந்த வீட்டுக்கு ஒரு மைல் இருக்கும்போதே ரயிலை முடிந்த மட்டும் உரக்கக் கத்த வைப்பேன். ஆனால் என்றும் ஏமாற்றம்தான் காத்திருந்தது. வீட்டு வாசல் கதவு சாத்தியிருக்கும். முற்றம் வெறிச்சென்றிருக்கும். சன்னல்களில் சூன்யம் தேங்கிக் கிடக்கும்.

என் மனைவியிடம் சொன்னபோது, 'உடம்புக்கு ஏதாவது வந்து விட்டதோ என்னவோ, மழையும் தண்ணீருமாக இருக்கிறதே' என்று சந்தேகப்பட்டாள். அப்படியும் இருக்கலாம் என்றுதான் நானும் எண்ணினேன்.

ஒருநாள் அவர்கள் வீட்டைத் தாண்டிச் சென்று கொண்டிருக்கும் போது கொடியில் உலர்த்தியிருந்த ஒரு பட்டுச் சொக்காய் காற்றில் உயரப் பறந்து இஞ்சின் பெட்டிக்குள் வந்து விழுந்தது. அதைக் கையில் எடுத்துப் பார்த்தேன். கண்ணனின் அழகிய பட்டுச் சொக்காய். அதைத்தான் அவன் ஓணப் பண்டிகையன்று அணிந்து கொண்டிருந்தான்.

வீட்டில் என் மனைவியும், குழந்தைகளும் ஒவ்வொருவராகச் சட்டையைப் பிரித்துப் பார்த்ததும் மடித்து வைத்துக் கொண்டதும், மீண்டும் கைவிரல் நுனியில் தூக்கி முகத்துக்கு எதிரே விரித்துப் பிரித்தபடி ரசித்துச் சிரித்ததும் உடம்பிலும் நெஞ்சிலுமாக அணைத்துக் கொண்டதும்... அப்போது அனுபவித்த இன்பத்தை என்னால் வருணிக்க முடியாது.

எனது இரண்டாவது பெண்ணுக்குச் சட்டென்று ஒரு யோசனை தோன்றியது. அவள் அந்த சட்டையில் அழகிய பூ வேலை செய்யத் தொடங்கினாள். அதே சட்டையைத் தீபாவளி அன்று கண்ணனுக்கு எங்கள் உளம் கனிந்த அன்புடன் திரும்ப அளித்து விடுவது என்றும் தீர்மானம் பண்ணிக் கொண்டோம்.

ஒரு மாதம் வேலை செய்து தனது கை வண்ணத்தை முழுதும் காட்டிச் சொக்காயில் இரண்டு

பெரிய சிவப்புப் பூக்களைப் பொறித்தாள் என் பெண்.

தீபாவளிப் பண்டிகைக்கு ஒரு மாத காலத்துக்கு மேல் இருந்தது. அந்த நாட்களில் கண்ணனை நான் ஒரு நாள் கூடப் பார்க்கவில்லை. நடுவில் சில நாட்கள் அந்த வீடு பூட்டிக் கிடப்பதைப் பார்த்தேன். பின்னால் பூட்டுக் கழன்று விட்டதென்றாலும் வாசல் கதவு அநேகமாகச் சாத்தப்பட்டிருக்கும்.

ஒரே ஒருநாள் கண்ணனின் தாயாரை மட்டும் பார்த்தேன். கூடைக்காரியிடம் பேரம் பேசிக்கொண்டு வாசலில் நின்றாள். உடம்பு பாதியாய் இளைத்து விட்டது. முகத்தைப் பார்க்கவே சகிக்கவில்லை. அவள் ரயிலை ஏறிட்டுப் பார்த்தாள் என்றாலும் என் பார்வையைத் தவிர்த்துவிட்டு முகத்தைக் கவிழ்த்துக் கொண்டாள். என் மனைவி சொன்னது அப்போது என் நினைவில் ஓடியது. படுக்கையோடு படுக்கையாய்க் கிடக்கும் குழந்தை ரயில் கத்துவதைக் கேட்டாவது சந்தோஷப்படட்டும் என்ற எண்ணி ரயிலை உரக்கக் கத்தச் சொன்னேன். எவ்வித சஞ்சலமும் இன்றி அன்றும் ரயில் கத்திற்று.

தீபாவளி அன்று கண்ணன் சட்டையை எடுத்துச் செல்ல நான் ரொம்பவும் தயங்கினேன். என் மனைவிதான் வற்புறுத்திக் கையிலெடுத்துக் கொடுத்தாள். அந்தச் சட்டையில்தான் அவனுடைய ஐசுவரியம் அடங்கியிருப்பதாகவும் மீண்டும் அணிந்து கொண்டுவிட்டால் அவன் உடம்பை வருத்தும் பீடைகள் பனிபோல் விலகிப் போகும் என்றும் அவள் சொன்னாள்.'

வழவழப்பான காகிதத்தில் சிவப்பு ரிப்பனால் கட்டப்பட்டிருந்த பொட்டலத்தை எடுத்துச் சென்றேன். நல்லவேளை கண்ணனின் தாயார் அன்று வாசலில் நின்று கொண்டிருந்தாள். யாரையோ எதிர்பார்த்து நிற்பது போலிருந்தது. முடியாது தலைமயிர் காற்றில் கண்ணிலும் முகத்திலுமாக விழுந்து கொண்டிருந்தது. ரயிலை ஏறிட்டுப் பார்த்த அவள் முகத்தில் பிரேதக்களை தட்டியது. படி இறங்கிவரும்படி சைகை காட்டினேன். நான் வீசியெறிந்த பொட்டலம் அவள் கைக்குள் சென்று விழுந்தது.

பெட்டியின் வாசல் கைப்பிடியைப் பிடித்துத் தொங்கியவாறு நான் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டு நின்றேன். அவசரம் அவசரமாய்ப் பொட்டலத்தைப் பிரித்த அவளுடைய முகம் பயங்கரமாகக் கோணியது. அப்படியே அந்தச் சட்டையில் முகத்தை மூடியபடி உள்ளே நோக்கி ஓடினாள். எனக்குப் புரிந்துவிட்டது.

படைத்து மண்ணில் விட்ட பின்புதான் அதன் அருமை தெய்வத்துக்கேப் புரிந்தது போலும். மனிதன் அதை அள்ளியெடுத்து அணைத்து முத்தமிட்டுக் கொஞ்சுவதைப் பார்த்துப் பார்த்து எத்தனை நாட்கள் தான் அவர் பொறாமைத் தீயில் வெந்து கொண்டிருக்க முடியும் ?

அதற்கு மேல் எனக்குத் தாளவில்லை. வயசும் அனுபவமும் அவைக் கற்றுத் தந்த பாடங்களும் என்னை விட்டு அகன்று சென்றுவிட்டன. பதினாறு வயதில் சந்நியாசம் வாங்கிக்கொள்ள நான் ஆசைப்பட்டது உண்மைதான். ஆனால் இன்று நான் அழுதுவிட்டேன்.

சில நாட்களுக்கெல்லாம் பழையபடி அந்த வீட்டு வாசலில் ஒரு துருப்பிடித்த பூட்டுத் தொங்கியது. கயிற்றுக் கொடி அப்படியேதான் இருந்தது. என்றாலும் அதில் துணிகள் தொங்குவதை நான் காணவில்லை. முற்றத்தில் நின்ற பிச்சி ஆயிரம் பற்களைக் காட்டிச் சிரித்தது. அது சிரித்ததும் மொக்கு அவிழ்ந்ததும் உதிர்ந்ததும் கருகியதும் என்னைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. ராட்டின் கரகரத்த ஓசையோ, துணி துவைக்கும் சத்தமோ அதற்குப் பின்னால் என்றுமே நான் கேட்கவில்லை. இரவில் அந்த வீட்டுக்குள் அந்தகாரம் தேங்கிக் கிடந்தது.

என் மனசில் அந்தப் புண் ஆற நீண்ட நாட்கள் ஆயிற்று, என்னைப் பொறுத்த வரையில் நான் எதற்கும் ஒரு வியாக்கியானம் தேடிப்பிடித்துத் திருப்தி அடைகிறவன். பிறருக்கு அது அசட்டுத்தனமாகக் கூடப் படலாம்.

கண்ணன் எங்கும் போய் விடவில்லை என்றும், அனுபவித்த இன்பத்தை என்னால் வருணிக்க முடியாது என்றும், ரயிலின் ஆரவாரத்தில், கரகரப்பற்ற அந்த ஓசையில் அவன் கலந்து நிற்பதாகவும் சமாதானம் தேடிக்கொண்டேன். அந்த நினைப்பும் ஏதோ ஒரு விதத்தில் மனச்சாந்தியைத் தருகிறது.

அதற்குப் பின்னால் அந்த வீட்டைத் தாண்டிச் செல்லுகிற ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு தடவையும் ரயிலைக் கூவ வைப்பேன். அந்தக் குரலில் அவன் முகத்தையே பார்க்கிறேன்.

ரயிலுக்கு அவன் வந்ததும் தெரியாது. போனதும் தெரியாது. மாதவ பணிக்கர் தனது எருமையை இழந்ததும் கண்ணனை அவனுடைய தாய் இழந்ததும் அதற்கு ஒன்றுதான். அது இன்றும் தன் போக்கில் ஓடிய வண்ணமாய் இருக்கிறது. அதுதானே முக்கியம் ? அந்த ஞானம் என்றுதான் நமக்கு வரப்போகிறதோ ?

பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*– 'காகங்கள்' சிறுகதைகள் தொகுப்பிலிருந்து.*
*வெளியீடு: காலச்சுவடு பதிப்பகம்*

• • •

# பொய்கையாறு அணை

"இங்கே இன்று திறந்து வைக்கப்பட்டுள்ள பொய்கையாறு அணை எவ்வளவு காலமாக இந்த மாவட்ட மக்களுடைய கனவாக இருந்தது என்பதை முன்னால் பேசியவர்கள் எடுத்துச் சொன்னார்கள். தொடக்கத்திலே பேசிய நண்பர் ஹேமச்சந்திரன் அவர்கள் அதைக் குறிப்பிட்டார். கன்னியாகுமரி மாவட்ட மக்களின் நீண்ட காலக் கனவாக இருந்த இந்தப் பிரச்சினை இன்று நிறைவேறி இருக்கின்றது என்று குறிப்பிட்டார். ஏன் இவ்வளவு காலம்



இதில் தயக்கம் ஏற்பட்டது. தாமதம் ஏற்பட்டது என்பதை தம்பி துரைமுருகன் இங்கே விளக்கினார்.

89–ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றிருந்த அந்தக் காலக் கட்டத்திலேயே இதற்கான அனுமதி வழங்கப்பட்டு இந்தப்பணி தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டும்கூட இடையிலே ஐந்தாண்டு காலம் அந்தப் பணியைப் பற்றி யாருமே கவலைப்படாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விட்ட காரணத்தால் இந்தத் தயக்கம், இந்தத் தாமதம் ஏற்பட்டு 96–க்குப் பிறகு எடுக்கப்பட்ட முயற்சிகளால் இன்று இந்த அணைகள், இந்த நீர்த்தேக்கங்கள் ஆகியவைகளை நாம் காணுகிறோம்.

தம்பி துரைமுருகன் இங்கே ஒரு நீண்ட பட்டியலைப் படித்தார். அவர் படித்தார் என்பதைவிட கூறினார் என்பதுதான் பொருத்தமாக இருக்கும். ஏனென்றால் சட்டசபையிலேகூட அவர் இந்தப் பட்டியலை மனப்பாடமாக ஒப்புவிக்கக் கூடிய திறமை படைத்தவர். அந்த அளவிற்கு இந்தத் திட்டங்கள் எல்லாம் அவருடைய நெஞ்சிலே நிலைத்திருப்பவை, பதிவானவைகள். அதனால்தான் பொதுப்பணித் துறையைப் பொறுத்த வரையிலே எந்த ஊரிலே எந்த ஆறு இருக்கிறது, எந்த வாய்க்கால் இருக்கிறது, எந்தக் குளம் இருக்கிறது, எந்த ஏரி இருக்கிறது என்று கேட்டால் விரல் நுனியிலே என்பார்களே அதைப்போல இந்தப்புள்ளி விவரங்களை யெல்லாம் விரல் நுனியிலே வைத்திருக்கக்கூடியவர் பொதுப்பணித்துறை அமைச்சர் தம்பி துரைமுருகன். அந்த வகையிலே அவர் இங்கே பட்டியலிட்டுக் காட்டினார்.

ஏறத்தாழ பெரிய திட்டங்களாக 69–இல் இருந்து 76 வரையிலே அன்றைக்கிருந்த இதே கழக அரசால் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் 31 என்று அவர் இங்கே குறிப்பிட்டார். அந்த 31 திட்டங்கள் மூலமாகக் கிடைத்த

பாசன வசதி ஏறத்தாழ இரண்டு இலட்சம் எக்டேர். அதாவது 2 இலட்சம் எக்டேருக்கு புதிய பாசன வசதி கிடைத்தது. ஏற்கனவே இருந்த பழைய பாசன வசதி நிலங்களோடு சேர்த்து புதிதாகக் கிட்டிய பாசன வசதி இரண்டு இலட்சம் எக்டேர்.

அதன் பின்னர் 89–90–இல் போடப்பட்ட அந்தத் திட்டங்களின் வாயிலாகவும், கிட்டத்தட்ட 50 ஆயிரம் அல்லது 60 ஆயிரம் எக்டேர் நிலங்கள் பயன்பெறக்கூடிய அளவிற்குப் புதிய பாசன வசதி கிடைத்திருக்கின்றது. மொத்தத்தில் பார்த்தால் மூன்று அல்லது நான்கு இலட்சம் எக்டேர் நிலங்களுக்குப் புதிய பாசன வசதியை அளித்திருக்கிறோம் என்று சொன்னால் அது மிகையாகாது.

இந்த நான்காண்டு காலத்தை எடுத்துக் கொண்டால் 96 முதல் இதுவரையிலே உள்ள காலத்தை எடுத்துக் கொண்டால் கூட ஏற்கெனவே இருந்த ஆட்சியாளர்கள் ஐந்தாண்டு காலத்திலே பாசன வசதி புதிதாக செய்து கொடுத்தது 11,809 எக்டேர் நிலத்திற்காகும். ஆனால் இந்த நான்கரை ஆண்டுக் காலத்தில் 96–க்குப் பிறகு நாம் நிறைவேற்றியுள்ள பாசனத் திட்டங்களின் மூலம் பயன் பெற்றுள்ள நிலம் 40,033 எக்டேர் என்ற இந்த ஒப்பீட்டையும் நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இங்கே குளங்கள், குட்டைகள், வாய்க்கால்கள் இவை பற்றியெல்லாம் பேசப்பட்டது. அவைகளையெல்லாம் நாம் சாதாரணமாகக் கருதக்கூடாது. அணைகட்டுவதென்றால் ஆற்றிலேதான் கட்டவேண்டும் என்று இல்லை. ஏரிகளையும் பயன்படுத்தி அணைகளைக் கட்டலாம், நீர்த்தேக்கங்களை அமைக்கலாம். வாய்க்கால்களையும் செம்மைப்படுத்தி அந்த நீர்த் தேக்கங்களுக்காக துணை நிற்கச் செய்யலாம்.

இப்போது தஞ்சை மாவட்டம், திருச்சி மாவட்டம், மதுரை மாவட்டம், ஏன் நெல்லை மாவட்டம், குமரி மாவட்டத்தைக் கூடச் சேர்த்துக் கொள்ளலாம். இவ்வளவு இடங்களிலே உள்ள ஆறுகள் எல்லாம் கடந்த இரண்டாண்டு காலமாகத்தான் தூர்வாரப்பட்டு கரைகள் உயர்த்தப்பட்டு, உயர்த்தப்பட்டது மாத்திரமல்ல, காங்கிரீட் தளங்கள் என்ற வகையிலே கரைகள் எல்லாம் அமைக்கப்பட்டு. அதன் காரணமாக ஏற்பட்ட பயன் என்னவென்று கேட்டால் வெறும் மணலாக இருந்தால் வரும் தண்ணீரை உறிஞ்சுகின்ற சக்தி அதிகம். இதைப் போன்ற காங்கிரீட் தளங்களாக இருந்தால் தண்ணீர் அதிகமாக உறிஞ்சப்படாமல் அது தேவைக்கு மேல் நமக்குக் கிடைக்கும் என்பதற்காகத்தான் வாய்க்கால்கள் வகைப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆறுகள் வகைப்படுத்தப் பட்டிருக்கின்றன. இவைகள் எல்லாம் கூட நீர்ப்பாசனத் திட்டத்தினுடைய கூறுகள் தான். அந்த வகையிலேதான் நான் உங்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்திலே எல்லா திட்டங்களும் நிறைவேறி விட்டதாக நான் சொல்லமாட்டேன். இங்கேகூட நான் பேசுவதற்கு முன்பு நம்முடைய வேலாயுதம் அவர்கள் என் காதுகளிலே சொன்னார்,



மாம்பழம் மறந்துவிடாதீர்கள் என்று சொன்னார். மாம்பழம் என்பது தேர்தல் சின்னம் அல்ல. மாம்பழத்துறை ஆறு திட்டத்தை மறந்துவிடாதீர்கள் என்றார். மறக்க மாட்டோம். ஆனால் நிறைவேற்ற வேண்டிய காலம் ஒன்று வரவேண்டும். அது நிச்சயமாக வரும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கின்றது. ஒரேயடியாக எல்லாத் திட்டங்களையும் ஒரே நாளில் நிறைவேற்றி விட முடியாது. படிப்படியாகத்தான் நிறைவேற்ற வேண்டும். எனவே அந்தத் திட்டங்களும் எஞ்சியுள்ள எல்லா திட்டங்களும் நிறைவேற்றப்படுவதற்கு உங்களுடைய அன்பான ஆதரவு தொடர்ந்து இந்த அரசுக்குத் தேவை என்பதை மாத்திரம் உரைத்து இந்த அளவில் விடைபெற்றுக் கொள்கிறேன்.

*– 4.10.2000 அன்று பொய்கையாறு அணையைத் திறந்து வைத்து முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை*

• • •

# நம்பியாறு அணை

"இந்தத் திட்டத்தைத் தொடங்கிய பிறகு இந்தப் பகுதிக்கு ஒன்பது முறை தான் வந்திருப்பதாக துரைமுருகன் என்னிடம் சொன்னார். ஒரு பொதுப்பணித்துறை அமைச்சர் ஒரு திட்டத்தை நிறைவேற்ற ஒன்பது முறை வந்தார் என்பதிலிருந்தே இந்தத் திட்டத்தில் மாத்திரமல்ல, ஒவ்வொரு திட்டத்திலும் அவருக்குள்ள அக்கறையை நான் புரிந்து கொண்டிருக்கிறேன். நீங்களும் அறிந்து கொண்டிருப்பீர்கள் என்றே நம்புகிறேன்.

தம்பி துரைமுருகன் மாத்திரமல்ல, என்னுடைய அமைச்சரவையிலே இருக்கின்ற தம்பிமார்கள் அனைவரும் இதுபோன்ற அரும்பணிகள் மக்களுக்கு நடைபெற வேண்டுமென்பதற்காக தங்களுடைய சிரமத்தைப் பார்க்காமல் மக்களுக்கு நன்மைகள் பெருகினால் போதுமென்கிற அளவில் தங்களுடைய கடமைகளை ஆற்றிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களையெல்லாம் நான் பாராட்டுகிறேன். வாழ்த்துகிறேன்.

சிறப்பாகப் பொதுப்பணித்துறையிலே மிகுந்த ஆர்வத்தோடும் அக்கறையோடும் ஓராண்டு காலத்திற்குள்ளாக பல திட்டங்களை நிறைவேற்றுகின்ற அந்த ஆற்றலோடு பணியாற்றிக் கொண்டிருக்கின்ற தம்பி துரைமுருகனுக்கு உங்கள் சார்பாக என் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்து மகிழ்கிறேன்.

அண்மையில் மோர்தானா திட்டம் என்றதொரு திட்டத்தைத் தொடங்கிவைத்தோம். அந்தத் திட்டம் அந்தப் பகுதி மக்களால் எந்த அளவிற்கு எதிர்பார்க்கப்பட்டது என்பதற்கு அதற்குக் கூடிய கூட்டமே சான்றாக விளங்கியது. இலட்சக்கணக்கான மக்கள் நாலாபுறத்திலிருந்தும்—ஏன் எட்டுத் திக்கிலுமிருந்து அந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்து எங்களை வாழ்த்தினார்கள், பாராட்டினார்கள். அவ்வளவு அவசியமான திட்டம் மோர்தானா திட்டம். அந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தபோதும், அதைப் போல இந்தத் திட்டத்தை இன்றைக்கு நிறைவேற்றி தொடங்கி வைக்கின்ற இந்த நேரத்திலும் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். அளவற்ற மன நிறைவு எனக்கேற்படுகிறது.

இந்தத் திட்டங்களின் மூலமாக மக்களுக்கு என்ன பயன் என்றால், பாசனவசதி— அது தான் பெரும் பயன். எந்த மக்களுக்கென்றால், வேளாண்மைத்துறையை நம்பியிருக்கின்ற – வேளாண்மையைத் தங்களுடைய உயிர் மூச்சு என்று கருதிக் கொண்டிருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இந்தத் திட்டங்கள் வரப்பிரசாதங்களாக அமைகின்றன.

அணைக்கட்டு திட்டம் என்றால் பத்தாயிரம் ஏக்கருக்கு பாயக் கூடிய திட்டமாகத்தான் இருக்க வேண்டும். குறைந்தபட்சம் ஐந்தாயிரம் ஏக்கராவது பயனடைய வேண்டும் என்ற அளவில்தான் அந்த அணைக்கட்டுகளைத் தொடங்குவது என்று ஒரு காலத்திலே நிலைமை இருந்தது. அது மாற்றப்பட்டு இன்றைக்கு ஓடைகள், குளங்கள், குட்டைகள், ஐம்பது ஏக்கரா நிலம் பாசன வசதி பெறக்கூடிய நிலை இருந்தாலும்கூட அந்த திட்டங்களை நிறைவேற்றுவது என்ற முறையிலே இந்த அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது.

### மாநில திட்டக்குழு கூட்டத்தில் ஆற்றிய உரையின் விளைவே இன்றைய நிலை

ஒன்றை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். நான் அறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட கால கட்டத்தில் மத்தியிலே ஒரு திட்டக்குழு இருப்பதைப் போல மாநிலங்களிலும் திட்டக்குழு தேவை என்று கருதி மாநிலத் திட்டக்குழு ஒன்றை தமிழ்நாட்டிலே அமைத்தேன். அப்போது பெரியவர் சி.சுப்ரமணியம் அவர்கள் கூட அந்த மாநிலத் திட்டக்குழுவைப் பாராட்டி, "இது ஒரு புதிய முயற்சி, கருணாநிதி அவர்களைப் பாராட்டுகிறேன். மாநிலங்களிலே திட்டக்குழு அமையுமேயானால் மத்திய திட்டக்குழுவினுடைய வேலை குறையும். அதற்கு இந்த மாநிலத் திட்டக்குழு பயன்படும்" என்று அப்போது வாழ்த்து தெரிவித்திருந்தார்.

அந்தத் திட்டக்குழுவினுடைய தொடக்கக் கூட்டத்தில் நான் ஆற்றிய உரை எனக்கு நன்றாக நினைவிலே இருக்கிறது. அப்போது நான் – திட்டங்களைத் தீட்டும் பொழுது பொருளாதார ஆய்வு என்ற வகையில் இது பொருந்துமா என்றெல்லாம் பார்க்காதீர்கள் என்று சொன்னேன். இது திட்டக்குழு உறுப்பினர்களுக்கு அதிர்ச்சி – எந்த ஒரு திட்டத்தையும், பொருளாதார வடிவத்திலே பார்ப்பதுதான் திட்டம் தீட்டுகின்றவர்களின் பணி. அவர்களுக்கு அதிலேதான் அக்கறை. ஆனால் எடுத்த எடுப்பில் இந்த முதலமைச்சர் இப்படி பேசுகிறாரே என்று அதிர்ச்சி அடைந்தார்கள். பயன் எவ்வளவு என்று எண்ணாதீர்கள், ஆனால் அந்தப் பயன் யாருக்கு என்பதைப் பற்றி நினைத்துப் பாருங்கள் என்று சொன்னேன்.

இதற்காக செலவழிக்கப்படுகின்ற பணத்திற்கு இலாபம் கிடைக்கின்றதா, வருமானம் கிடைக்கிறதா, பத்து கோடி ரூபாய் செலவழித்தால் அதன் பலனாக இருபது கோடி ரூபாய் அளவுக்கு விவசாயிகளுக்கு இலாபம் கிடைக்கிறதா என்று பார்க்கக்கூடாது. அதைவிட நாம் பார்க்க வேண்டியது இந்த திட்டத்தை நிறைவேற்றினால் எத்தனை விவசாயிகள் இதன் மூலம் பயன் அடைவார்கள் என்ற அந்தக் கணக்கை மாத்திரம் பாருங்கள் என்று சொன்னதன் அடிப்படையிலேதான் குட்டைகள், குளங்கள், சிறிய சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் எல்லாம் இன்றைக்கு தமிழகத்திலே அமைக்கப்பட்டுள்ள காட்சியை நீங்கள் காணுகிறீர்கள்.

அந்த வகையிலே இன்றைய தினம் 96–ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்த நான்காண்டு காலத்திலே மாத்திரம் இங்கே தம்பி துரைமுருகன் எல்லாத் திட்டங்களையும் விவரித்துக் காட்டினார். 69 முதல் 76–ஆம் ஆண்டு வரை எத்தனை திட்டங்கள் நிறைவேற்றி இருக்கிறோம், எத்தனை அணைக்கட்டுத் திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறோம் என்பதை எடுத்துச் சொன்னார். அதற்குப் பிறகு 89–ஆம் ஆண்டு எவ்வளவு திட்டங்கள் தொடங்கினோம், எத்தனை திட்டங்களை முடித்தோம் என்ற புள்ளி விவரத்தையும் இங்கே சுட்டிக் காட்டினார். இந்த நான்காண்டு காலத்தில் 96–க்குப் பிறகு சிறிய சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலமாக எத்தனை விவசாயிகளுக்கு பயனளித்திருக்கிறோம் என்பதை ஒரு ஒப்பீடாக நீங்கள் பார்க்க வேண்டும்.

கடந்த ஆட்சி நடந்த ஐந்தாண்டு காலத்தில் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலமாக பயன்பெற்ற நிலங்கள் 11,809 எக்டேர் நிலங்கள். இந்த நான்காண்டு காலத்தில் இந்த ஆட்சியிலே பாசனப் பயன் பெற்ற நிலங்கள் 40,033 எக்டேர் என்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்வீர்களேயானால் எவ்வளவு அக்கறையோடு காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதை தெரிந்து கொள்ளலாம். நாம்தான் பெரிய திட்டங்களையெல்லாம் நிறைவேற்றிவிட்டோமே என்று அதோடு விட்டுவிடாமல் இன்றைக்கு இந்தத் திட்டங்கள் மூலமாக பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் பயன்பெறக்கூடிய அந்த ஒரு சூழ்நிலையை இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**பயன் பெறுவர் அடிப்படையில்தான் திட்டங்கள் தீட்டப்படுகின்றன.**

எனவே திட்டங்கள் என்பது பொருளாதார அடிப்படையிலே வெற்றிகரமானதா என்று பாப்பதைவிட எத்தனை விவசாயிகளுக்குப் பயன்பட்டது என்றுதான் பார்க்க வேண்டும். இந்தத் தத்துவத்தின் அடிப்படையிலேதான் ஆட்சியிலே திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. அப்படி நிறைவேற்றப்பட்ட திட்டங்களிலே ஒன்றுதான் இந்த நம்பியாறு திட்டம்".

*– முதல்வர் கலைஞர் அவர்கள் 4.10.2000 அன்று நம்பியாறு அணையைத் திறந்து வைத்து, ஆற்றிய உரையிலிருந்து.* •

## இயற்கை என்னும் இளமை

புன்னகை பூக்கும்
பூக்கள் எல்லாம்
பொன்னகை யாகாதோ ?–வான
வெண்ணிலா எனக்கு வெள்ளி ஓடமாய்
விரைந்து வாராதோ ?

மாலை வெய்யில்
மஞ்சள் என்னைத்
தஞ்சம் அடையாதோ ?–அதி
காலை மலரோ
கண்ணில் வந்து
ஜாலம் புரியாதோ ?

கொட்டும் அருவி
கும்மியடித்துக்
கூடிக் குலவாதோ ?–அங்கே
வெட்டும் மின்னல்
வேடிக்கைக் காட்ட
என்னை அழைக்காதோ ?

மானும் மயிலும்
மனத்துள் வந்து
மேடை அமைக்காதோ ?–அங்கே
வான வீதியில்
வலம் வரும் பறவை
வந்து தழுவாதோ ?

பச்சைக் கொடியும்
பசுமைப் புல்லும்
பார்வை யாகாதோ ?–மலை
உச்சியில் என்னைத்
தென்றல் வந்து
தழுவிச் செல்லாதோ ?

செயற்கை யோடு
சேர்ந்திசை பாடிச்
சோர்ந்தே போகாமல்,
இயற்கை என்னும்
இளமை இனிமை
எனக்கும் வாராதோ !

• பி.வி. கிரி



## தமிழ்நாடு முழுவதும் தெருவிளக்கு, குடிநீர் வசதி முழுமையாகச் செய்துதர அரசின் முனைப்பான நடவடிக்கைகள்

சிறு கிராமம் முதல் மாநகராட்சி வரையுள்ள அனைத்து இடங்களிலும் தெருவிளக்கு மற்றும் குடிநீர் வசதி செய்து தந்து, அவற்றை நன்முறையில் பராமரிக்க தமிழக அரசு பல்வேறு தீவிர நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

முதலமைச்சர் கலைஞர் அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறைகளின் பல்வேறு பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொண்டபோது, உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள தெருவிளக்குகள் அனைத்தும் தொடர்ந்து எரிவதை உறுதி செய்யும் பொருட்டு, ஒவ்வொரு காலாண்டிலும் இப்பணியினை மேற் கொள்ளும் துறைகளின் பிரதிநிதிகள், எல்லா தெருவிளக்கு களையும் பார்வையிட்டு, அவை அனைத்தும் நன்முறையில் எரிவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என அறிவுறுத்தியிருந்தார். இதே முறையில் குடிநீர் வழங்கும் ஆழ்துளைக் கிணறுகள், விசைப்பம்புகள் மற்றும் கைப்பம்புகள் பழுதின்றி தொடர்ந்து இயங்குவதற்கான ஏற்பாடுகளையும் செய்திட வேண்டும் என்றும் வற்புறுத்தியிருந்தார்.

மேலும் இதனைக் கண்காணிப்பதற்கு ஏதுவாக, மூத்த அரசு அலுவலர்களை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அனுப்ப வேண்டும் என முதலமைச்சர் கலைஞர் தெரிவித்திருந்தார். அதனடிப்படையில், தமிழ்நாட்டில் உள்ள எல்லா மாவட்டங்களுக்கும், ஒரு மாவட்டத்திற்கு ஒரு அதிகாரி என்ற முறையில், மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பற்றாளர்களாக நியமிக்கப் பட்டனர். இந்தப் பற்றாளர்கள் சனவரி, ஏப்ரல் மற்றும் ஜூலை மாதங்களில் ஆண்டு சிறப்பாய்வினை, ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் தமிழ்நாடு மின்வாரியம் ஆகிய துறை அலுவலர்களுடன் மேற்கொண்டு, அரசுக்கு அறிக்கைகளை அனுப்பியுள்ளனர்.

முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அறிவுரைகளின்படி, ஜூலை திங்கள் வரையில் அரசு மேற்கொண்டுள்ள இந்த சிறப்பு நடவடிக்கைகளின் காரணமாக 98.4 சதவீத தெருவிளக்குகளும், 98.4 சதவீத கைப்பம்புகளும், 98.5 சதவீத விசைப்பம்புகளும் நல்லமுறையில் இயங்கி வருகின்றன.

### தெரு விளக்குகள்

ஊராட்சிகளில் 10,64,280 தெருவிளக்குகள், பேரூராட்சிகளில் 2,94,769 தெருவிளக்குகள், நகராட்சிகளில் 2,55,999 தெருவிளக்குகள், மாநகராட்சிகளில் 2,11,330 தெருவிளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. இதில், ஊராட்சிகளில் 10,46,359 தெருவிளக்குகள், பேரூராட்சிகளில் 2,92,614 தெருவிளக்குகள், நகராட்சிகளில் 2,51,554 தெருவிளக்குகள், மாநகராட்சிகளில் 2,06,720 தெருவிளக்குகள் நல்ல நிலையில் இயங்குகின்றன. ஆகவே, மொத்தம் அமைக்கப்பட்டுள்ள 18,26,378 தெருவிளக்குகளில் 98.4 சதவீதம் தெருவிளக்குகள் சரியாக எரிகின்றன. எரியாமல் உள்ள 29,131 தெருவிளக்குகளையும் எரியச் செய்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

**செய்திச்சரம்**

### குடிநீர் வழங்கல்

குடிநீர் வழங்கும் சாதனங்களைப் பொறுத்தவரை, ஊராட்சிகளில் 1,75,246 கைப்பம்புகள், பேரூராட்சிகளில் 24,118 கைப்பம்புகள், நகராட்சிகளில் 14,875 கைப்பம்புகள், மாநகராட்சிகளில்(சென்னை நீங்கலாக) 5,514 கைப்பம்புகள் உள்ளன. இதில், ஊராட்சிகளில் 1,72,422 கைப்பம்புகள், பேரூராட்சிகளில் 23,936 கைப்பம்புகள், நகராட்சிகளில் 14,543 கைப்பம்புகள், சென்னை நீங்கலாக உள்ள மற்றைய மாநகராட்சி களில்5,338 கைப்பம்புகள் நன்முறையில் இயங்குகின்றன. ஆகவே, மொத்தம் அமைக்கப்பட்டுள்ள 2,19,753 கைப்பம்புகளில் 2,16,239 கைப்பம்புகள் அதாவது 98.4 சதவீத கைப்பம்புகள் சரியாக இயங்குகின்றன. மொத்தத்தில் இயங்காமல் உள்ள 3,514 கைப்பம்புகளையும் சரி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விசைப்பம்புகளைப் பொறுத்தவரை, ஊராட்சிகளில் 40,583 விசைப்பம்புகள், பேரூராட்சிகளில் 4,989 விசைப்பம்புகள். நகராட்சிகளில் 1,476 விசைப்பம்புகள், சென்னை நீங்கலாக உள்ள மற்றைய மாநகராட்சிகளில் 1,042 விசைப் பம்புகள் உள்ளன. ஊராட்சிகளில் 39,944 விசைப்பம்புகள், பேரூராட்சிகளில் 4,963 விசைப்பம்புகள், நகராட்சி களில் 1,445 விசைப்பம்புகள், சென்னை நீங்கலாக உள்ள மாநகராட்சிகளில் 1,029 விசைப் பம்புகள் நன்கு இயங்குகின்றன. ஆகவே, மொத்தம் அமைக்கப் பட்டுள்ள 48,090 விசைப்





பம்புகளில் 47,381 விசைப் பம்புகள் அதாவது 98.5 சதவீத விசைப்பம்புகள் சரியாக இயங்குகின்றன. மொத்தத்தில், இயங்காமல் உள்ள 709 விசைப்பம்புகளையும் சரி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஊரகக் குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில், சென்னை மாவட்டம் நீங்கலாக ஏனைய 28 மாவட்டங்களிலும் சட்டத்திற்குப் புறம்பாக 3,24,443 குடிநீர் குழாய் இணைப்புகள் உள்ளதாக ஆய்வில் கண்டறியப்பட்டது. இதில், தொழில்நுட்ப ரீதியாக 2,19,639 இணைப்புகள் வரன்முறை செய்யப்பட வேண்டும். சட்டத்திற்குப் புறம்பாக உள்ள 1,04,804 இணைப்புகள் துண்டிக்கப்பட வேண்டும். இதில், இதுவரை, 4,618 இணைப்புகள் துண்டிக்கப்பட்டு விட்டன. மேலும், 41,729 இணைப்புகள் வரன்முறை செய்யப்பட்டு விட்டன. புதிதாக 1,28,519 குடிநீர் இணைப்புகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

அரசு தொடர்ந்து எடுத்துவரும் இத்தகைய சிறப்பு நடவடிக்கைகளினால், உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள தெருவிளக்குகள் நூறு சதவீதம் எரிவதற்கும், கைப்பம்புகள் மற்றும் விசைப்பம்புகள் அனைத்தையும் செம்மையாக இயங்கிடச் செய்யவும் வகை செய்யப்பட்டுள்ளன.

• • •

## கட்டடம் இல்லாத 960 தொடக்கப்பள்ளிகளுக்கு கட்டட வசதிகள்

**– முதலமைச்சர் ஆணை**

*ஜவஹர் கிராம வளர்ச்சித் திட்டம் மற்றும் பிரதமரின் கிராம வளர்ச்சித் திட்டங்களின் கீழ், இந்த ஆண்டில் முப்பது கோடியே முப்பது இலட்சம் ரூபாய்ச் செலவில், 960 தொடக்கப்பள்ளிகளில், ஒவ்வொரு பள்ளியிலும், இரண்டு அறைகள், கழிப்பறை வசதி மற்றும் தாழ்வாரத்துடனான கட்டடங்கள் கட்டித்தர முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.*

*ஒவ்வொரு பள்ளிக்கும் இரண்டு இலட்சத்து பதின்மூன்றாயிரம் ரூபாய்ச் செலவில் கட்டடமும், அறுபத்திரண்டாயிரம் ரூபாய்ச் செலவில் தாழ்வாரமும் மற்றும் தலா இருபதாயிரம் ரூபாய்ச் செலவில் இரண்டு கழிப்பறைகளும் ஆக மொத்தம் மூன்று இலட்சத்து பதினையாயிரம் ரூபாய்ச் செலவில் இந்த அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 12 கோடியே 30 இலட்சம் ரூபாயும், பிரதமரின் கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 18 கோடி ரூபாயும், ஆக மொத்தம் 30 கோடியே 30 இலட்சம் ரூபாய்ச் செலவில் இத்திட்டம் நிறைவேற்றப்படுகிறது.*

## 6,900 தொகுப்பு வீடுகள் கட்ட

**முதலமைச்சர் ஆணை**

*சட்டமன்றத்தில் அறிவித்தபடி, நடப்பு ஆண்டில் எழுபது கோடி ரூபாய்ச் செலவில் நாற்பத்தேழாயிரம் தொகுப்பு வீடுகள் கட்டும் பணிகள் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்று வருகின்றன.*

*அத்துடன் கூடுதலாக, 6,900 தொகுப்பு வீடுகள் 24 கோடி ரூபாய்ச் செலவில் கட்டும் பணிகளைப் பிரதமரின் கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ள முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.*

*இத்திட்டத்தின்கீழ் தொகுப்பு வீடுகள் கட்டுவதுடன், குடியிருப்புகளில் உள்ள உட்புறச் சாலைகள், குடிநீர் வசதி மற்றும் தெரு விளக்கு ஆகிய அடிப்படை வசதிகளும் செய்து தரப்படுகின்றன.*





தர்பூசணிப் பழங்கள் மேல்
கோபமில்லை
கீற்றுச் சிவப்புக் கூட
அழகாகத்தான் இருக்கிறது.
இதை இப்போது
குவித்திருக்கும் மரத்தடியில்தான்
வெள்ளைக் களிமண்ணில்
சிலைகளை வார்த்துக் கொண்டிருக்கும்
அந்தக் கணவனும் மனைவியும் குழந்தையும்
சித்திரம்போல
உறங்கிக்கொண்டிருந்த
கயிற்றுக் கட்டில் கிடந்தது.
அதை மனதிலிருந்து
அகற்றுவதில்தான் சிரமம் எனக்கு.
அயர்ந்துறங்கும் மனிதர்களை
ஒருபோதும் ஈடுசெய்யாது
அடுக்கிவைத்த
தர்பூசணிப் பழங்கள்.

**- கல்யாண்ஜி,**
*அந்நியமற்ற நதி நூலிலிருந்து.*

இயற்கை வளங்கள் செறிந்து குன்றுகளால் சூழப்பட்டு மாங்கனிக்குப் பெயர் பெற்றதும் எஃகுத் தொழிலில் சிறப்புற்று விளங்குவதும் சேலம் மாவட்டமாகும். இம்மாவட்டத்தில் எங்கு நோக்கினும் வளம்மிக்க வனப்பகுதிகள் காட்சியளிக்கும். குளிர்தென்றல் காற்று உடலுக்கு உற்சாகமூட்டும். சேலம் மாவட்டத்தில் வனத்துறை பலப் புதுமையான பயன்மிக்க திட்டங்களைச் செயலாக்கப் படுத்தி வருகிறது. இந்தத் திட்டங்களால் மலைவாழ் மக்கள் மன மாற்றம் பெற்றுத் தங்கள் வாழ்க்கையில் ஏற்றம் பல கண்டு வருகின்றனர்.



வனத்துறையினர் முதல் நடவடிக்கையாக மலைவாழ் மக்களின் முரட்டுத்தனத்தை நீக்கி விழிப்புணர்வை ஏற்படுத்த மென்மையான வழிமுறைகளைக் கையாண்டனர். விலங்குகளை முரட்டுத்தனமாக வேட்டையாடுவது, மரங்களை வெட்டுவது போன்ற சமூகவிரோத செயல்களிலிருந்து இவர்களை விடுவிக்க தகுந்தத் திட்டங்களை வனத்துறையினர் உருவாக்கினார்கள்.

வனத்துறையினர் இத்திட்டங்களைப் பல கிராமங்களைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தினர். சேலம் மாவட்டத்தில் தீவிர காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 12 மலைக் கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ.6 கோடியே 35 இலட்சம் நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிராம மக்களிடத்திலேயே 300 முதல் 500 எக்டேர் நிலப்பரப்பை ஒப்படைத்து அதில் உற்பத்தியாகும் நெல்லிக்காய், புளி, பயிர் வகைகளை அவர்களே விற்பனை செய்யும் அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. இம்மக்களுக்கு நிலங்கள் வழங்க ஒரு குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. கடந்த 3 ஆண்டில் இதுபோன்று 45 கிராமங்களுக்கு வனப்பகுதிகள் வழங்கப்பட்டு உள்ளது. தவிர, இதில் வரும் வருவாயைக் கொண்டு, அந்தந்த கிராமத்திற்குத் தேவையான அடிப்படை வசதிகளை அவர்களே செய்துகொள்ளவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் கிராம மக்கள் சுயமாகத் தொழில் தொடங்க மலைப்பகுதிகளில் 52 மகளிர் சுயநிதிக் குழுக்கள் அமைக்கப்பட்டு இவற்றின் மூலம் வனம் சாரா தொழில்களான நெசவு, தையல், கயிறு திரித்தல், துணி மிதியடி நெய்தல், பாய் பின்னுதல் போன்ற தொழில்கள் செய்வதற்குப் பயிற்சியும் உதவியும் அளிக்கப்பட்டு வருகின்றது. இதுவரை இவர்களுக்கு ரூ.65 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டு உள்ளது. கடனைப் பெற்றவர்கள் ஒழுங்காகச் சங்கங்களுக்குக் கடனைத் திருப்பிச் செலுத்தி வருவது குறிப்பிடத் தக்கதாகும்.

மேலும், இப்பகுதி மக்கள் விவசாயம் செய்ய உதவும் வகையில் மலை ஓடைகளில் தடுப்பாணைகள், கசிவு நீர்க் குட்டைகள், கட்டித் தரப்படுகின்றன. தடுப்பாணைகளில் மீன் வளர்ப்பதன் மூலமும் கிராமத்திற்கு வருவாய் கிடைக்கிறது. மருத்துவ செடிகள் பயிரிடுவதற்கும் வனத்துறை உதவி செய்கிறது.

வனத்துறையின் மூலம் மலைவாழ் மக்கள் மனநிலை மாற்றப்பட்டு, இன்று அவர்கள் அத்திட்டங்களின் பயனை அனுபவித்து வருகிறார்கள். முன்பு இருந்த தங்கள் வாழ்க்கை நிலையையும் தற்போது அவர்கள் வாழும் நிலையையும் எடுத்துரைத்தனர். டேனிஷ்பேட்டை என்ற கிராமம் புளிமலை அடிவாரத்தில் இயற்கை கொஞ்சும் இடத்தில் அமைந்துள்ளது. இக் கிராமத்தின் முக்கியத் தொழில் மரம் வெட்டி அவற்றைக் கடத்திச் சென்று விற்பனை செய்வதாகும். ஆனால் தற்போது அவர்கள் அத்தொழிலை அடியோடு விட்டு மரம் வளர்க்கும் மனப்பக்குவத்தை பெற்றுள்ளனர். அவ்வூர் ஒரு பெரியவர் கூறும் போது, "இப்பொழுது நாங்கள் திருட்டுத்தனமாக மரம் வெட்டுவதில்லை. அதற்குப் பதிலாக மரம் வெட்டிய பகுதிகளில் மரங்களை வளர்க்கிறோம்" என்று கூறினார்.

இக்கிராமப் பெண்கள் படிப்பில் ஆர்வம் காட்டுவதோடு தொழிற்பயிற்சியிலும் ஆர்வம் காட்டி வருகின்றனர். இவர்களுக்கு இலவசமாக தையற் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. படித்துக் கொண்டே ஓய்வு நேரங்களில் தொழிற்பயிற்சிப் பெறும் அனிதா என்ற மாணவி கூறும் போது, "நான் +2 படித்து வருகிறேன். விடுமுறையில் தையற் பயிற்சி பழகி இப்போது துணிகள்



# மறுமலர்ச்சி காணும் மலைவாழ் மக்கள்



தைக்க பழகியுள்ளேன். இதன் மூலம் வரும் வருமானம் எனது படிப்புச் செலவுக்கு உதவுகிறது. இதற்கு முன் விடுமுறை நாட்களில் பொழுதை வெறுமனே கழித்து வந்தோம். ஆனால் தற்போது படிக்கும் காலத்திலே ஒரு தொழில் கற்றுக் கொண்டோம்" என்று பெருமையாகக் கூறினார்.

மேலும் ரேவதி என்ற மாணவி "நான் ஓய்வுநேரங்களில் தென்னங்கீற்று பின்னுகிறேன். இதன் மூலம் ரூ.10 முதல் ரூ.20 வரை ஒரு நாளைக்குக் கூலி கிடைக்கிறது. இத்தொகை என் படிப்புச் செலவை ஓரளவுக்குக் குறைக்க உதவுவதாகக் கூறுகிறார்."

பெண்களுக்குக் கால்மிதியடிகள் தயாரிக்கும் பயிற்சியும் அளித்து வருகிறது. பயிற்சி பெற்ற லதா கூறும் போது, "எங்களுக்கு இம்மிதியடிகள் தயாரிக்க நிதி வசதியும் செய்து கொடுக்கப்பட்டு உள்ளது. இதன் மூலம் நாள் ஒன்றுக்கு ரூ.30 முதல் ரூ.40 வரை வருமானம் கிடைக்கிறது. இதனால் நாங்கள் மாதத்திற்கு ஒரு கணிசமான தொகையையும் எங்களால் சம்பாதிக்க இயலுகிறது" என்று பெருமிதத்துடன் கூறினார்.

இவ்வூரில் வனத்துறை சார்பில் நெல் மற்றும் மாவு அரவைமில் அமைத்துத் தந்துள்ளதால் பெண்கள் வெளியூர்களுக்குச் சென்று மாவு அரைக்கும் பிரச்சினை தீர்ந்துள்ளதாக பெண்கள் மகிழ்ச்சியுடன் கூறினார்கள். முன்பெல்லாம் விவசாயம் செய்யப் போதிய தண்ணீர் வசதி இல்லை. ஆனால், வனத்துறை தற்போது 'செக் டேம்' கட்டியுள்ளதால் நிலத்தடி நீர் உயர்ந்து விவசாயம் நன்றாக செய்ய முடிவதாகவும் பயனடைந்த விவசாயி ஒருவர் கூறினார்.

இதற்கு முன்பு தீராத பிரச்சினைகளுக்கும் ஒரு முடிவு கட்டி எங்கள் வாழ்க்கையை வளமுள்ளதாக ஆக்கி தற்போது மறுமலர்ச்சிக் கண்டு வருகிறோம். இதற்கெல்லாம் காரணம் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் நல்லாட்சியே. அவர் தோற்றுவித்த மகளிர் குழுக்கள் மூலம் எங்கள் குலப் பெண்களெல்லாம் நல்ல தொழிலைக் கற்றுக் கொண்டு வருமானமும் ஈட்டுகின்றனர். இது எங்களின் குடும்பப் பாரத்திற்கு மிகவும் உதவியாக உள்ளது என்கிறார் சாமியப்பன் என்கிற கிராமவாசி.

தவிர, சேலம் மாவட்டத்தில் கண்ணப்பாடி என்ற மலைகிராமம் ஒன்றுள்ளது. இக்கிராமத்தில் கந்து வட்டிக்காரர்கள் புற்றீசல் போல் பெருகியுள்ளனர். இப்பகுதி வாழ் மக்கள் பெரும்பாலும் எஸ்டேட் தொழிலாளர்கள். இவர்கள் தங்கள் வறுமையின் காரணமாகக் கந்துவட்டிக் காரர்களிடம் ரூ.100க்கு ரூ.12.50 வட்டிக்கு வாங்குகிறார்கள். இவர்கள் வருமானம் கந்து வட்டியை அடைக்கவே போதவில்லை. இதனால் இப்பகுதி மக்கள் மிகவும் வேதனையுடன் வாழ்க்கையை நடத்தினர். இதனை அறிந்த வனத்துறையினர் இக்கிராமத்தை தத்து எடுத்து பல அடிப்படை வசதிகளைச் செய்து தந்ததோடு மட்டுமல்லாமல், கந்து வட்டிக்காரர்களிடமிருந்து இக்கிராமத்தை மீட்க நடவடிக்கை மேற்கொண்டனர். இதற்காக தமிழக முதல்வர் அவர்களால் உருவாக்கப்பட்ட மகளிர் சுயநிதிக் குழுக்களை அமைத்து அவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை உருவாக்கினார்கள். இதனால் இவர்கள் தற்போது சேமிப்புத் தொடங்கி கந்து வட்டிக்காரர்களிடமிருந்து கொஞ்ச கொஞ்சமாக மீண்டு வருகின்றனர். இதனால் இவர்களின் நீண்டகால கந்துவட்டிப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்பட்டு விட்டதாக இவ்வூர் பெரியவர்கள் பெருமூச்சு விடுகின்றனர்.



'கந்துவட்டி' என்னும் கொடிய அரக்கனை விரைவில் இப்பகுதியை விட்டு விரட்டி அடிப்பதே ஒவ்வொருவரின் குறிக்கோள்' எனப் பெருமைப்பட கூறினர்.

தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் திட்டத்தினால் மலைவாழ் மக்களின் வாழ்வு மலர்ந்துள்ளது. ஆண்டாண்டு காலமாக தீராத பிரச்சினை தற்போது தீர்ந்து அடிப்படை வசதிகளைப் பெற்று, இன்று வளமான வாழ்வை பெற்றுள்ளனர்.

*– மு. நா. கிருட்டிணசாமி,*
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர், சேலம்.*

★ ★ ★

# இராணுவத்தில் சேர...

- வீ. சங்கரன்

"வாழ்க்கையில அது ஒரு மறக்க முடியாத நாளு, அன்னிக்குதா நா ஒரு எதிரி ஊடுருவல்காரன கொன்னேன்" இது இளம் இராணுவ வீரர் முத்துராஜின் பெருமிதம். தனது சொந்த ஊரான தருமபுரி மாவட்டம் பூசாரிப்பட்டிக்கு விடுமுறையில் வந்திருந்தார் அவர். கார்கில் போரில் இவரும் பங்கேற்று சாகஸம் புரிந்திருக்கிறார். அதைப் பற்றிய பேச்சுதான் இது. பூசாரிப்பட்டி கிராமத்து இளைஞர்கள் வாய்க்கால் வேப்பமரத்தடியில் தினந்தோறும் கூடிப் பேசுவது வழக்கம். விடுமுறையில் வந்திருக்கும் முத்துராஜும் அங்கு வருவார். அப்போது தனது சாதனையையும் தனது படை பிரிவைச் சேர்ந்த மற்ற வீரர்களின் சாகஸங்களையும் அவர் கதை கதையாகக் கூறுவார். இதைக் கேட்டு முத்துராஜின் நண்பர்கள் மெய்சிலிர்த்துப் போவார்கள். அதோடு இராணுவத்தில் எப்படியாவது சேர்ந்துவிட வேண்டுமென்ற ஆசையும் அவர்களிடம் ஒட்டிக்கொண்டது. தங்களையும் இராணுவத்தில் சேர்த்து விடுமாறு முத்துராஜை அவர்கள் நச்சரிக்க ஆரம்பித்தார்கள்.

இராணுவத்தில் சேருவதற்கு முன்பு முத்துராஜ் முரடனாகவும், அப்பாவியாகவும் இருந்தான். இராணுவப் பயிற்சியும் வாழ்க்கை முறையும் அவனை வெகுவாக மாற்றிவிட்டது. தற்போது அவனிடம், பண்பு, வீரம், அறிவு, மரியாதை ஆகியவையெல்லாம் செறிந்து கிடக்கின்றன. அவனுக்குப் பெண்தர நான் நீ என்று பலபேர் தற்போது போட்டிப் போடுகிறார்கள். இதில் வியப்பேதும் இல்லை. கார்கில் போரின் போது நமது வீரர்கள் செய்த சாகஸங்கள் பத்திரிக்கைகளில் வெளிவந்தவுடன் நாடெங்கிலும் இராணுவ ஆட்சேர்ப்பு அலுவலகங்களுக்கு இளைஞர்கள் படையெடுக்கத் துவங்கிவிட்டார்கள்.

உண்மையில், சாகஸ செயல்கள் புரிவதற்கு இராணுவம் தரும் வாய்ப்புகளைப் போன்று வேறு எந்த தொழிலும் தர முடியாது. பனி படர்ந்த சியாச்சென் சிகரமானாலும் சரி, மணலாகப் பரவிக் கிடக்கும் ஜெய்சால்மர் பாலைவனப் பகுதியானாலும் சரி, வடகிழக்குப் பகுதியிலுள்ள அடர்ந்த காடுகளானாலும் சரி, இலைப் பச்சை சீருடையிலிருக்கும் வீரனின் பணி எப்போதுமே சாகஸங்கள் நிறைந்த தாகத்தான் இருக்கும்.

செய்யவேண்டிய பணிகள், ஈடுபட வேண்டிய பயிற்சிகள் ஆகியவை எப்போதுமே இராணுவ வீரனை ஆயத்த நிலையிலேயே வைத்திருக்கும். உடலும், உள்ளமும் உறுதியானவையாக இருக்கும். மேலும் வீரரின் அறிவுத் திறனை மேம்படுத்த அவருக்குத் தொடர்ந்து கல்வி புகட்டப்படுகிறது. திறமைகளை வெளிக்கொணரும் வகையில், விளையாட்டு போட்டிகளிலும், கலாச்சார நிகழ்ச்சிகளிலும் அவர் ஈடுபடுத்தப்படுகிறார்.

இராணுவம் வேலைவாய்ப்பை மட்டும் அளிப்பதில்லை. வீரராக பணியாற்றுபவர்களுக்கு



கௌரவமிக்க அந்தஸ்தையும் அது வழங்குகிறது. இராணுவத்தில் சேருபவர்கள் பெருமிதத்துடன் தாய்நாட்டிற்குச் சேவை செய்கிறார்கள். அரசாங்கத்தில் பணிபுரிபவர்கள் அரசு ஊழியர் என்றே குறிப்பிடப்படுகின்றனர். ஆனால், இராணுவ வீரர்கள் எப்போதுமே வீரர்கள் என்றே அழைக்கப்படுகிறார்கள். இராணுவ வீரர்களுக்கு நல்ல ஊதியம் தரப்படுகிறது. சொல்லப்போனால், அரசு ஊழியர்களின் சம்பளத்தைவிட இராணுவ வீரர்களின் சம்பளம் கவர்ச்சியானது. ஐந்தாவது சம்பளக் கமிஷனும் அவர்களுக்குக் கணிசமான அளவில் சலுகைகளை வழங்கியுள்ளது. இராணுவத்தில் சேருபவருக்கு முன்னேற்றம் காண பல வாய்ப்புகள் தரப்படுகின்றன. பதவி உயர்வு பல உண்டு. அதுமட்டுமல்ல, தலைநகரங்களிலும் ஆட்சேர்ப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன. தமிழகத்திலிருந்து மட்டும் ஆண்டிற்கு சுமார் **6,000** இளைஞர்கள் இராணுவத்தில் பணியமர்த்தப்படுகிறார்கள்.

இராணுவத்தில் பணியாற்ற விரும்பும் இளைஞர்கள் ஆட்சேர்ப்பு முகாம்களுக்கு நேரடியாக வந்துவிட வேண்டும். வயது, கல்வித் தகுதி, குடியுரிமை ஆகியவற்றை நிரூபிக்க அவற்றின் சான்றிதழ்களை அவசியம் கொண்டு வரவேண்டும். உயரம், எடை, மார்பளவு ஆகியவை நிர்ணயிக்கப்பட்டிருக்கும் அளவுகளுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும். எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்றவராகவும் இருத்தல் அவசியம். இவைகள் அனைத்தும் விவரமாக



பணி ஓய்வுக்கு பிறகு வேறு வேலை பார்க்கவோ சுயமாகத் தொழில் புரியவோ அவருக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இளம் வயதிலேயே ஓய்வுபெறும் இராணுவ வீரனை, திறமையும் தன்னம்பிக்கையும் கொண்ட மனிதனாக மாற்றுகிறது நமது இராணுவம்.

**ஆட்சேர்ப்பு முகாம்கள்**

இராணுவத்திற்கு பெரும்பாலும் இரண்டு நிலைகளில் ஆட்சேர்ப்பு நடைபெறுகிறது. கீழ் மட்டத்தில், அநேகமாக மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நடத்தப்படும் ஆட்சேர்ப்பு முகாம்கள் மூலம் இராணுவ வீரர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள். தமிழ்நாட்டில், சென்னை, திருச்சி, கோவை ஆகிய நகரங்களில் ஆட்சேர்ப்பு அலுவலகங்கள் உள்ளன. இந்த நகரங்களில் மட்டுமல்லாமல், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களிலுள்ள இளைஞர்கள் பயன்பெறும் வகையில், மாவட்ட நாளிதழ்களில் செய்தியாக வெளிவரும். ஆட்சேர்ப்பு முகாம்கள் நடப்பதற்கு ஒருசில நாட்களுக்கு முன்பு இந்த செய்தி வெளியாகும். முகாமிற்கு எந்தெந்த மாவட்டத்து இளைஞர்கள் அழைக்கப்படுகிறார்களோ அந்தந்த மாவட்டத்து இளைஞர்கள் மட்டுமே அந்த குறிப்பிட்ட முகாமிற்கு வரமுடியும் என்பதை மறக்கலாகாது.

முகாம் நடைபெறும் நாளில், இராணுவத்தில் சேர விருப்பம் உள்ளவர்கள் அதிகாலையிலேயே முகாமிற்கு வந்துவிட வேண்டும். முகாமின்போது உயரம், எடை, மார்பளவு போன்றவை பரிசோதித்து, வந்திருப்பவர் இராணுவத்தில் சேரத்தகுதியான நபரா என்பது கண்டறியப்படும். பின்னர், வயது, கல்வித்தகுதி, குடியுரிமை போன்றவற்றைக் குறிப்பிடும் சான்றிதழ்கள், சரி பார்க்கப்படும். ஓட்டம், தூரம் தாண்டுதல் போன்றவற்றில் அவரின் திறமையும் அறியப்படும். ஆறு நிமிடங்களில் ஒரு மைல் தூரம் ஓட வேண்டும். குறிப்பிட்ட



அகலமுடைய குழியையும் அவர் தாண்டியாக வேண்டும். இதில் வெற்றி பெறுபவர்கள் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். இதிலும் வெற்றி பெறுபவர்கள் அந்தமாதத்தின் கடைசி ஞாயிற்றுக் கிழமையன்று பொதுத் தேர்வையும் எழுத வேண்டும். இதில் தேர்ச்சி பெறுபவர்களுக்கு இராணுவத்திற்கு வந்து சேரச்சொல்லி, அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்படும்.

**ஊதியமும் சலுகைகளும்**

புதிதாக இராணுவத்தில் சேருபவர்களுக்கு படை மையங்கள் ஒதுக்கப்படும். பின்னர் தங்களுக் குரிய படை மையங்களில் பயிற்சி அளிக்கப்பட்டு, அவரவர் படைப்பிரிவுகளுக்கு அனுப்பி வைக்கப் படுவார்கள். இராணுவத்தில் சேர்ந்தவுடன் மாத ஊதியமாக சுமார் ரூ.5,000 கிடைக்கும். அத்துடன் நகர ஈட்டுப்படி, களப்படி போன்ற சில படிகளும் உண்டு. உணவு, தங்கும் வசதி, மருத்துவ தேவை போன்ற வற்றை இராணுவமே முழுமையாக ஏற்றுக் கொள்கிறது. மேலும், குறைந்த விலையில் பொருள்களை வாங்க கேண்டீன் வசதியும் அவர்களுக்குக் கிடைக்கும். இராணுவ வீரர்களுக்கு, வருடத்திற்கு 60 நாட்கள் விடுமுறை உண்டு. அத்துடன், 30 நாட்கள் வரை சிறுவிடுப்பும் எடுத்துக் கொள்ளலாம். சொந்த ஊருக்குச் சென்றுவர வருடத்திற்கு ஒருமுறை இலவச இரயில் பயணச்சலுகை வழங்கப் படுகிறது.

ஒன்றுக்கு மேற்பட்ட இத்தகைய பயணங்களுக்கு, இரயில் கட்டணங் களில் 50 சதவீத சலுகையும் உண்டு. குழுக் காப்பீட்டுத் திட்டம், வீடு கட்டவும், வாகனம் வாங்கவும் கடனுதவி போன்ற வசதிகளும் கிடைக்கும். குழந்தைகளின் கல்விக் கட்டணமாக செலவழிக்கப்பட்ட தொகையும் ஈடுசெய்யப்படுகிறது. சொல்லப்போனால், இராணுவ வீரரின் ஒவ்வொரு தேவையையும் அரசே பூர்த்தி செய்துவிடுகிறது. எனவே தனது சம்பளத்தின் பெரும்பகுதியை, இராணுவ வீரர் சேமிக்க முடிகிறது. வேறெங்காவது இதே சம்பளத்தைத் தரும் பணியில் இருந்தால், நிச்சயம் அவரால் இவ்வளவு சேமிக்க இயலாது.

இராணுவத்தில் சேருபவர் பணிக்காலம் முழுவதும் திறமைசாலியாக விளங்கினால், அவர் சுபேதார் மேஜராகக் கூட பதவி உயர்வு பெற முடியும். இந்தப் பதவி தான் அதிகாரிகள் அல்லாத பதவிகளில் மிக உயர்ந்த பதவியாகும். அதிகாரிகள் மட்டத்தில் மூன்றாம் நிலையிலுள்ள பதவியான மேஜர் பதவியை பெற்ற வீரர்களும் உண்டு.

இராணுவ வீரர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஓய்வு பெறுகின்றனர். விருப்ப ஓய்விலும் செல்கிறார்கள். ஓய்வுபெறும் வீரர்களுக்குப் பின்னர் வேலை தேடிக்கொள்ளவும், சொந்தத் தொழில் புரியவும் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி தரப்படுகிறது. சென்னையிலுள்ள ஐ.டி.ஐ. ஒன்றில் அண்மையில் பிளம்பர் தொழிற்பயிற்சி முடித்தார் இராணுவ வீரர் ஆனந்தன். ''ஓய்வு பெறுவது பற்றிய கவலை எனக்கில்லை; ஓய்வுபெறும் நாளை ஆவலுடன் எதிர் பார்க்கிறேன்'' என்கிறார் அவர். தன்னம்பிக்கை மிகுந்த மனிதராக அவர் காணப் படுகிறார். கிடைக்கவிருக்கும் ஓய்வூதியமும், பின்னர் பிளம்பராக சுயதொழில் புரியும்போது கிடைக்கும் வருமானமுமே தனது வாழ்க்கையை வளமான தாக்கும்'' என்கிறார் அவர்.



தாய்நாட்டிற்குச் சேவை செய்வதற்கு இராணுவப் பணியை விட மாற்று ஏதும் கிடையாது. எனவே, நீ என்ன சொல் கிறாய்? இளைஞனே! இப்பொழுதே ஒரு முடிவு எடு. இராணுவத்தில் சேருவதற்கான தகுதிகள் உன்னிடம் இருக்கின்றன என்று நீ கருதினால், உனது ஊர் அருகாமையில் நடைபெறப் போகும் இராணுவ ஆட்சேர்ப்பு முகாம் குறித்த அறிவிப்பை எதிர்பார்த்திரு. இராணுவத்தில் சேர்ந்தவுடன், உனது வாழ்க்கை அர்த்தமும் வளமும் கொண்டதாக மாறிவிடும்.

*– பத்திரிகைத் தகவல் அலுவலகம்*

# களவழி நாற்பதில் உவமைத் திறன்

□ குடந்தை டி.எஸ்.பாலு

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று 'களவழி நாற்பது'. இது, புறப்பொருள் பற்றிய 40 வெண்பாக்களைக் கொண்டது.

சேரமான் கணைக்கால் இரும்பொறை சோழன் செங்கணானுடன், 'கழுமலம்' என்னுமிடத்தில் போரிட்டுத் தோற்றபோது, அவனைச் சிறை மீட்கப் பாடியதே இந்த நூல்.

கல்லைப் பிசைந்து கனியாக்கும் செந்தமிழின் சொல்லை, மணியாகத் தொகுத்துக் 'களவழி நாற்பது' என்னும் இந்த நூலை இயற்றியவர் பொய்கையார்.

கவிதையின் ஒரு கூறாகிய 'உவமை நலன்' இந்நூலில் சிறப்பாக இடம் பெற்றுள்ளது. சில எடுத்துக் காட்டுகளைக் காண்போம் :



**குருதி ஏற்படுத்திய குளம்**

சேரனுக்கும், சோழனுக்கும் போர் நடைபெறுகின்றது. வீரர்களுக்கு வீரத்தையும் எழுச்சியையும் தம் ஒலியால் ஏற்படுத்திய முரசங்கள், மேற்போர்வை கிழிந்து ஒரு பக்கமாகக் கிடக்கின்றன. அந்த முரசங்களின் மேல், 'பிறை கவ்வி மலை நடந்ததைப் போன்ற, ஒரு யானை விழுந்து விடுகின்றது. போர்க்களம் முழுவதும்

குருதியால் நனைந்து, பெருங்குளமாகவே மாறிவிடுகிறது. செங்குருதி, இங்கும் அங்குமென அலை பாய்ந்து, முரசத்தின் வழியாகச் செல்லுகிறது.

இந்தக் காட்சி எப்படி இருக்கின்றது தெரியுமா? கார்காலத்தில் மழை பெய்த பிறகு, செங்குளத்தினது கரையின் கீழ் உள்ள மதகுகள், நீர் உமிழ்தலைப் போல வித்தியாசமாக இருப்பதாகப் பொய்கையார் உவமைப்படுத்திப் பாடுகின்றார்.

*"ஞாட்பினுள் எஞ்சிய, ஞாலஞ்சேர் யானைக்கீழ்*
*போர்ப்பு இல், இடி முரசின் ஊடு, போம் ஒண் குருதி,*
*கார்ப்பெயல் பெய்தபின், செங்குளக் கோட்டுக்கீழ்*
*நீர்த்தூம்பு, நீர் உமிழ்வ போன்ற புனல் நாடன்*
*ஆர்த்த மரட்ட களத்து"*

– இதுவே பொய்கையார் தீட்டிக் காட்டிய அந்தப் பாடல் வரிகள்.

**பயன் உவமை**

'ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியர், உவமையை வினை, பயன், மெய், உரு என நான்காகப் பிரித்துக் கூறினார். தொல்காப்பியர் வழிநின்று, 'களவழி நாற்பது' நூலில், பொய்கையார் படைத்துக் காட்டும் பயன் பற்றிய உவமை ஒன்றைக் காண்போம்.

போர்க்களமெங்கும், குருதியானது வெள்ளமெனப் பாய்ந்தது. அது, பெருங்கடலைப் போலத் தோன்றியது. கருங்கடலையே கண்டு பழகிய கண்கள், அந்தச் செங்கடலைக் கண்டு சிவந்தன.

கடலிலே உள்ள தோணியையும் அலையையும் போலக், குருதி வெள்ளத்திலே பிணங்கள் மிதந்தன; அலைகள் பாய்ந்தன. மலைகள் உருட்டுகின்ற வெள்ளத்தைப் போலப் பரந்த குருதி வெள்ளம், கொல்லப்பட்ட யானைகளை இழுத்துச் சென்றன.

இப்படிப்பட்ட குருதி வெள்ளத்தில், தளர்ச்சி அடைந்த வீரர்கள் எவ்வாறு எழுந்து நடக்கிறார்கள் என்பதை நுட்பமாக ஒரு உவமை வழி விளக்குகிறார் பொய்கையார்.

போர்க்களத்தில், நடக்கும் இடமெல்லாம் குருதியால் வழுக்குகிறது. வீரர்கள், தம் கையில் வேல் வைத்திருந்தாலாவது அதைக்கொண்டு ஊன்றுகோலாகப் பயன்படுத்துவர். அதுவோ கையில் இல்லை. வாளாக இருந்தாலும் அதைப் பயன்படுத்தலாம். அதுவும் கரத்தில் இல்லை.

எனவே வீரர்கள் என்ன செய்தார்கள். களத்தில் இறந்து கிடக்கும் யானைகளின் கொம்புகளை ஊன்றுகோலாகக் கொண்டு எழுந்தனராம்.

*"ஒழுக்கும் குருதி உழக்கித் தளர்வார்*
*இழுக்கும் களிற்றுக் கோடு, ஊன்றி எழுவார்..."*

என்று இரண்டே வரிகளில், இதனை நமக்குப் புரிய வைக்கின்றார் பொய்கையார்.

வீரர்கள் தளர்ந்து விழும் இடமெல்லாம், யானைகளின் கொம்புகள் கிடந்தன என்றால், போர்க்களத்தில் எத்தனை யானைகள் கொல்லப்பட்டிருக்க வேண்டும் என்று சிந்திக்க வைக்கவும் அல்லவா இந்த உவமை நமக்கு உதவுகிறது.

**உரு தரும் உவமை**

'உரு' என்பதன் அடிப்படையிலும், உவமைகள் தோன்றும் எனக்கூறிய தொல்காப்பியத்தின் இலக்கணத்திற்கு, இலக்கியமாகத் திகழ்கிறது 'களவழி நாற்பது'.

உரு பற்றிய ஒரு உவமையைப் பாருங்கள்... போர்க்களத்தில், இறந்துபோன வீரர்களின் உடல்கள் விழுந்து கிடக்கின்றன. அந்த உடல்களில், வேல் பாய்ந்த இடங்களில் எல்லாம் குருதி ஒழுகிக் கொண்டிருக்கிறது.

## சென்னையின் தாகம் தீர்க்கும் திருவள்ளூர் மாவட்டம்

சென்னைக்கு நீர் வழங்கும் புழல் ஏரி, பூண்டி, சோழவரம் ஏரி, செங்குன்றம் ஏரி ஆகியவை திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ளன.

சென்னை மாநகர மக்களுக்கு நாள் ஒன்றிற்கு 250 மில்லியன் லிட்டர் குடிநீர் திருவள்ளூர் மாவட்ட நீர் தேக்கங்களில் இருந்து வழங்கப்படுகிறது. பூண்டி நீர் தேக்கத்தில் இருந்து புழல் ஏரிக்கு வந்தடையும் நீரை சுத்திகரிக்கப்பட்டு, சுத்தம் செய்யப்பட்ட குடிநீர் குழாய்கள் மூலம் மாநகரின் பல்வேறு பகுதிகளுக்கு வழங்கப்படுகிறது.

இது தவிர, தாமரைப்பாக்கம், பூண்டி, மீஞ்சூர் போன்ற பல்வேறு இடங்களில் 75 ஆழ்துளை கிணறுகள் மூலமாக 100 மில்லியன் லிட்டர் நீர் நாள் ஒன்றிற்கு எடுக்கப்படுகிறது. இந்த நீரில் பெரும்பகுதி மணலி, எண்ணூர் பகுதிகளில் அமைந்துள்ள பெரிய தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படுகிறது. மீதமுள்ள நீரும் சென்னை மாநகர மக்களுக்கு குடிநீராக வழங்கப்படுகிறது. ●

அதைக் காகங்கள் உண்டு களிக்கின்றன. இதனால், காகங்கள் தம் இயல்பான நிறத்தை இழந்தனவாம். சிச்சிலிக் குருவி போன்ற வாயினையும், செம்போத்து போன்ற நிறத்தையும் அவை பெற்றதாக, உரு பற்றிய வண்ண உவமையாகப் படைத்துக் காட்டுகிறார் பொய்கையார்.

உவமைகளில் மற்றொரு வகை 'இல்பொருள் உவமை' என்பதாகும். உலகில், இல்லாத ஒரு பொருளை உவமையாகக் கூறுவது எவ்வகை உவமையாகும். திருக்குறளில் ஓர் எடுத்துக்காட்டு.

'களவழி நாற்பது' நூலிலும் இவ்வகை உவமைகளைக் காணலாம். மலை கலங்கப் பாயும் மலை போல், யானைகள் பாய்தலால், அவற்றின் மீது கட்டப்பெற்ற கொடிகள் மேலே எழுந்து வானத்தைத் துடைப்பது போன்ற செய்கையை ஒத்திருந்ததாகப் பாடுகிறார் பொய்கையார்.

*"மலை கலங்கப் பாயும் மலைபோல் நிலைகொள்ளாக்*
*குஞ்சரம் பாயக் கொடியெழுந்து – பொங்குடி*
*வானம் துடைப்பன போன்ற புனல்நாடன்*
*மேவாரை அட்ட களத்து"*

என்பது அப்பாடல்.



*"அன்பு அகத்தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்*
*வற்றல் மரம் தளிர்த் தற்று"*

வலிய பாலை நிலத்தில், வற்றல் மரம் தளிர்க்குமா...? தளிர்க்காது. அதைப் போன்றதே நெஞ்சில் இரக்கமில்லாதார் வாழும் வாழ்க்கையும் என்று இப்பொருள் உவமையைத் தம் குறளில் அமைத்துக் காட்டினார் வள்ளுவர்.

இதைப்போல், இன்னொரு பாடல். போர்க் களத்தில், வீரர்களின் கைகள் வெட்டப்பட்டு, அங்கங்கே கிடக்கின்றன. அவற்றைப் பருந்துகள் கவ்விக்கொண்டு செல்லுகின்றன. இந்தக் காட்சி, ஐந்து தலை பாம்பைக் கவர்ந்து செல்லும் கருடனைப் போல இருந்ததாக உவமிக்கிறார் பொய்கையார்.

இதயத்திற்கு இன்பம் தரும் இவ்வகை இலக்கியங்களைக் கற்போம்; மகிழ்வோம். •

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906 தொலையச்சு : 5368927





## வியர்வை சிந்துவோர்தம்
## கண்ணீர்துடைக்கும்

# கலைஞர் அரசு

## வியர்வைத் துளிகளுக்கு விழா எடுப்போம்

**57 அமைப்பு சாரா தொழில்களுக்கான நல வாரியங்களில் பதிவு செய்பவர்கள் வாழ்நாள் முழுவதும் பயன் பெறுவர்.**

- ★ விபத்தில் உயிரிழப்போர்க்கு ரூ. 1 லட்சம்
- ★ மகப்பேறு நிதியுதவி ரூ. 1000
- ★ பணி முடிப்பு நலன்

**தொழிலாளர் நலத்துறை**

பதிவு எண். M.8676 LICENCE No. TN/MS(C)/PP-23






# இளைஞர் மன்றம்





விளையாடி மகிழ்வோம்
ஒன்றுகூடி வாழ்வோம்
நாடு நலம்பெற உழைப்போம்

இளைஞர் மன்ற உறுப்பினர்கள்

# திட்ட விளக்கக் கையேடு

# இளைஞர் மன்றம்

கிராம ஊராட்சிகள் / நகர்ப்புறங்களில் உள்ள
விளையாட்டு மற்றும்
உடற்பயிற்சி மையங்களின்
இளைஞர் மன்ற உறுப்பினர்களுக்கு...



**திட்ட விளக்கக் கையேடு**

சிறப்பு வெளியீடு எண் : 37

'தமிழரசு' இலவச வெளியீடு

அக்டோபர் 2000

*வெளியிடுபவர் :*

இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

தமிழரசு அச்சகம்,
சென்னை–600 002.

## ஆக்கப்பூர்வமான பணியில் இளைஞர் மன்ற உறுப்பினர்

தமிழக அரசால் திட்டமிடப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வரும் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையம் உங்கள் ஊரில்/நகரில், அமைக்கப்பட்டு, இதற்கென துவக்கப்பட்டுள்ள இளைஞர் மன்றத்தில் நீங்கள் தற்போது ஓர் உறுப்பினர் என்பதில் நீங்கள் பெருமை கொள்ள வேண்டும். இளைஞர்களிடையே உறுதிப்பாட்டினை ஏற்படுத்துவதற்கு விளையாட்டு ஒரு முக்கியமான அம்சம் என்பதை நீங்கள் உணர்ந்து செயல்பட வந்துள்ளீர்கள் – வாழ்த்துக்கள்!

## இளைஞர் மன்றத்தின் பணிகள் யாவை?

★ விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையம் பொது சந்திப்பு மையமாக செயல்படுதல் வேண்டும்.



★ விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையத்திற்கு புதிய உபகரணங்கள் வாங்குதல்.

★ பழைய பந்துகள் மற்றும் வலைகள் போன்றவைகளுக்குப் பதிலாக புதிய உபகரணங்கள் வாங்குதல்.

★ மன்றத்தின் செயல்பாடுகளைக் கவனிக்கும் பொறுப்பு இம்மன்றத்தைச் சாரும். இதற்கென போதிய நிதி ஆதாரத்தை மன்றமே திரட்டிக் கொள்ளுதல்.

★ தமிழக அரசால் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் **நமக்கு நாமே** திட்டத்தில் முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு தன்னார்வ அமைப்பாக செயல்படுதல்.

★ ஏற்கெனவே அறிவொளி வளர்கல்வித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு, செயல்படுத்தப்படும் பகுதிகளில் இத்திட்டப் பணியாளர்களுடன்



ஒருங்கிணைந்து உங்கள் ஊரில் **கல்லாமையை இல்லாமையாக்குவோம்** என்ற குறிக்கோளுடன் செயல்படுதல்.

★ அறிவியல் ஆர்வம் ஏற்படுத்துதல், மதநல்லிணக்கம், தேசிய ஒற்றுமை மற்றும் நமது கலாச்சார பாரம்பரிய பண்பாட்டு முன்னேற்றத்தைப் பெருக்கும் வகையில் செயல்படுதல்.

★ அரசின் பல்வேறு துறைகள் மூலமாக மேற்கொள்ளும் விளம்பர நடவடிக்கைகளில் ஒத்துழைத்தல்.

## இளைஞர் மன்றத்தின் பெயர்

★ உங்கள் ஊரில்/நகரில் அமைக்கப்பட்டுள்ள இளைஞர் மன்றம் அந்த இடத்தின் பெயரைக் கொண்டதாக இருக்கும். உதாரணமாக, அரியூர்



என்ற கிராமத்தில் இளைஞர் மன்றம் அமைக்கப்பட்டிருந்தால், **இளைஞர் மன்றம் – அரியூர்** என்ற பெயரில் மன்றம் அமைத்தல் வேண்டும்.

★ தனி நபரின் பெயர், ஒரு சமுதாயம் அல்லது எந்த ஒரு கட்சியின் பெயரைக் கொண்டதாக மன்றம் அமையக் கூடாது.

## இளைஞர் மன்றத்தின் சின்னம்

இளைஞர் மன்றம் மூலமாகப் பயன்படுத்தப்படும் கடிதப் போக்குவரத்தில் இச்சின்னத்தைப் பயன்படுத்தலாம். மேலும் துணி பேனர்கள், துண்டு பிரசுரங்கள் மற்றும் பொதுமக்கள் கூடும் இடங்களில் விளம்பரம் செய்யவும் இச்சின்னத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.



## இளைஞர் மன்றத்தின் குறிக்கோள்

**“விளையாடி மகிழ்வோம்**
**ஒன்று கூடி வாழ்வோம்**
**நாடு நலம் பெற உழைப்போம்”**

## இளைஞர்களுக்கான உறுதிமொழி

இளைஞர் மன்றத்தில் உறுப்பினராகச் சேரும் உறுப்பினர் ஒவ்வொருவரும் எடுக்க வேண்டிய உறுதிமொழி :

"இளமையும், மன உறுதியும் நிரம்பப் பெற்ற நான் என் சக இளைஞர்களுடன் மதம், சாதி எனும் குறுகிய வேறுபாடுகளைக் கடந்து இந்திய ஒருமைப்பாட்டிற்கும் தமிழக மேம்பாட்டிற்கும் மாவட்ட நிர்வாகத்துடன் ஒருங்கிணைந்து பணியாற்ற உளமாற உறுதி கூறுகிறேன்.




நான் என் தனிப்பட்ட திறமைகளை வளர்த்துக்கொள்ளவும், உடல் வளத்தை அதிகரித்துக் கொள்ளவும், தலைமைப் பண்புகளை மேம்படுத்திக் கொள்ளவும், அயராது பாடுபடுவேன். எனது ஓய்வு நேரத்தை விளையாட்டு, வாசிப்பு, கலை, இலக்கியம், சமூகப்பணி, கிராம ஒற்றுமை, மத ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு போன்ற

ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபட்டு, ஒளிபடைத்த கண்களுடன் வலிமை மிக்க தோள்களுடன் விளங்கிட பயன்படுத்துவேன் என முழு மனதுடன் சூளுரைக்கிறேன்.

## இளைஞர் மன்றங்கள் அமைத்தல் மற்றும் செயல்படுத்துதல்

1. 15 முதல் 35 வயதிற்கு இடையே உள்ள இளைஞர் மன்றத்தில் உறுப்பினர் ஆகலாம்.

2. ஓர் இளைஞர் மன்றம் குறைந்தபட்சம் 25 உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். ஆனால் உறுப்பினர் எண்ணிக்கைக்கு உச்சவரம்பு இல்லை.

3. இந்த இளைஞர் மன்ற உறுப்பினர்கள் அனைவரும் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சி / நகர்புற உள்ளாட்சி அமைப்பு பகுதிகளில் வசிப்பவர்களாக இருக்க வேண்டும்.

4. கூடுமானவரை அந்த ஊரைச்சார்ந்த அனைத்து சாதி மற்றும் சமுதாயத்தினரின் பிரதிநிதித்துவம் இளைஞர் மன்றத்தில் இருக்க வேண்டும். மகளிருக்கும் தகுந்த பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும்.

5. இவ்விளைஞர் மன்றங்கள் அரசியலைச் சாராமலும் மதச்சார்பற்ற வகையிலும் செயல்பட வேண்டும்.

6. இளைஞர் மன்றத்தின் பணிகளை 10 உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாகக் குழு கண்காணிக்கும். ஒரு தலைவர், துணைத் தலைவர், செயலாளர், இணைச் செயலாளர், பொருளாளர் மற்றும் 5 நிர்வாகக் குழு உறுப்பினர்களை இளைஞர் மன்ற உறுப்பினர்களிடமிருந்து ஒரு




வருடகாலத்திற்கு (ஜனவரி–டிசம்பர்) தேர்ந்தெடுக்கப்படுவர். ஓர் இளைஞர் மன்றம் ஆண்டின் மத்தியில் துவக்கப்பட்டால் முதல் நிர்வாகக் குழுவினரின் பதவிக் காலம், வரும் ஆண்டின் டிசம்பர் இறுதிவரை நீட்டிக்கப்படும்.

7. நிர்வாகக் குழு குறைந்தபட்சம் மாதம் ஒருமுறை கூட்டப்பட வேண்டும். இதற்கென இக்குழு கூட்டக்குறிப்பு புத்தகத்தைப் பராமரிக்க வேண்டும். ஒரு நிர்வாகக் குழு கூட்டம் கூடுவதற்குக் குறைந்தபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை 5 ஆக இருக்க வேண்டும்.

8. இளைஞர் மன்றத்தின் அனைத்து உறுப்பினர்களையும் கொண்ட பொதுக்குழு ஒன்று செயல்படும். இது வருடத்தில் ஜூன் மாதம் ஒரு முறையும், டிசம்பர் மாதம் ஒரு முறையும் ஆக இரண்டு முறைகள்

கூட்டப்பட வேண்டும். இந்தப் பொதுக்குழுக் கூட்டத்தில் இளைஞர் மன்ற மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 10 சதவீதத்தினருக்குக் குறையாமல் பங்கேற்க வேண்டும். பொதுக் குழுக் கூட்டத்தில் பங்கேற்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 10 நபர்களுக்குக் குறையாமல் இருக்க வேண்டும்.

9. வயது மற்றும் இருப்பிட நிபந்தனைகளுக்கு உட்பட்டும் விருப்பப்பட்டும் எந்தவொரு நபரையும் எந்தவொரு கட்டுப்பாடு மின்றி இளைஞர் மன்றத்தில் உறுப்பினராக அனுமதிக்கலாம். இவ்வாறு உறுப்பினராவதற்கு ஒரு வெள்ளைத்தாளில் மனுச் செய்தால் போதுமானது. (இதற்காக தனியாக படிவம் எதுவும் கிடையாது) ஒருவர் மனுச் செய்த நாளிலிருந்தே கீழ்க்கண்ட விளக்கக் கூறுகளுக்கு உட்பட்டு உறுப்பினராகக் கருதப்படுவர்.

மனநிலை சரியில்லாமல் இருத்தல், குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டவராய் இருத்தல் மற்றும் மொத்த தவறான நடத்தை கொண்டவராக இருத்தல் போன்ற காரணங்களின் அடிப்படையில் ஒருவருடைய உறுப்பினர் ஆவதற்கான விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்ய வேண்டுமெனில் அதற்கான காரணத்தை நிர்வாகக்குழு எழுத்து வடிவில் பதிவு செய்து மனு பெறப்பட்ட 30 நாட்களுக்குள் மனுதாரருக்குத் தெரிவிக்க வேண்டும்.

10. இளைஞர் மன்றத்தின் உறுப்பினராவதற்கு அனுமதிக்கப்படாமல் நிர்வாகக்குழுவினரால் தள்ளுபடி செய்யப்பட்ட மனுதாரர் எவரேனும் இருப்பாரேயானால் அடுத்த பொதுக்குழு கூடுவதற்கு முன்னரே அவர் மேல்முறையீடு செய்ய வேண்டும். பொதுக் குழுவின் முடிவே இறுதியானது.

11. ஒவ்வொரு இளைஞர் மன்றமும் தமது பெயரில் ஒரு வங்கிக்கணக்கு ஆரம்பித்து செயல்படுத்த வேண்டும். இளைஞர் மன்றத்தின் நிர்வாகக்குழு உறுப்பினர்களிடமிருந்து எவ்வளவு கட்டணம் வசூலிப்பது, வசூலிப்பதற்கான காலமுறை மற்றும் விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டிய உறுப்பினர் ஆகியவற்றை நிர்வாகக்குழு, பொதுக்குழுவின் பின்னேற்பிற்கு உட்பட்டு தீர்மானிக்கும். இளைஞர் மன்றத்தின் வங்கிக்கணக்கு அம்மன்றத்தின் பொருளாளரால் இயக்கப்படும்.

12. தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் / நன்கு பெயர் பெற்ற சுய உதவிக்குழுக்கள் / நேரு யுவகேந்திரா / உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றின் மூலம் இளைஞர் மன்றங்கள் அமைப்பதை மாவட்ட ஆட்சித்தலைவர் தீர்மானிப்பார். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட முகமை, **இளைஞர் மன்ற அமைப்பாளர்** என்று அழைக்கப்படும். குறைந்தபட்சம், முதல் **6** மாதகாலம் பயிற்சி காலமாகவும், எவ்வித இடர்ப்பாடின்றி இயங்குவதற்கு உதவி செய்வதும் இளைஞர் மன்ற அமைப்பாளரது பொறுப்பாகும். முதல் செயற்குழுக் கூட்டம் நடைபெற்ற இந்த காலகட்டத்தில் அமைப்பாளர் கீழ்க்கண்டவற்றை உறுதிப்படுத்துவார்.

★ இளைஞர் மன்ற செயற்குழு ஒரு மாதத்திற்கு ஒரு முறையாவது கூடுதல்.

★ பொதுக்குழு கூட்டம் ஒரு முறையாவது கூட்டப்படுதல்.

★ செயற்குழு மற்றும் பொதுக்குழுவின் கூட்ட நடவடிக்கைப் புத்தகம் முறையாகப் பராமரிக்கப்படுதல்.

★ இளைஞர் மன்றத்தின் உறுப்பினர்கள் மரம் நடுதல் / மண்சாலை அமைத்தல் / புதர்களை அகற்றுதல் / தூர்வாருதல் போன்ற ஊர் / நகர வளர்ச்சிப் பணிகளில் ஏதேனும் ஒரு பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளுதல்.




இளைஞர் மன்ற அமைப்பாளர் (Promoter) தவிர்த்து மாவட்ட விளையாட்டு அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அல்லது மாவட்ட ஆட்சித்தலைவர் அங்கீகாரம் பெற்ற அலுவலர்கள் இளைஞர் மன்றங்களின் அமைப்பு மற்றும் செயல்பாடுகள் குறித்துக்

கண்காணிக்கும் பணியில் ஈடுபடுவார்கள். இவர்களுக்கு அனைத்து வகையிலும் இளைஞர் மன்றம் ஒத்துழைப்பு நல்கிட வேண்டும். உங்கள் இளைஞர் மன்றத்திற்கு தேர்வு செய்யப்படும் அமைப்பாளர் குறித்த விவரங்கள் தனியே மன்றத்திற்கு விரைவில் தெரிவிக்கப்படும்.

## உங்களால் முடியும்

உங்கள் (இளைஞர்) மன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள விளையாட்டு உபகரணங்களைச் சீரிய முறையில் பராமரித்து உரியமுறையில் பயன்படுத்திடல் வேண்டும்.

தகுதியுள்ள இளைஞர்கள் அனைவரையும் உறுப்பினர்களாகச் சேர்த்திடல் வேண்டும்.

முறையான உடற்பயிற்சியும், தொடர்ந்து விளையாடுவதும் நோய் நொடியற்ற ஆரோக்கிய வாழ்விற்கு அடித்தளமாகும் என்ற விழிப்புணர்வினை இளைஞர் மன்ற உறுப்பினர்களிடையே உருவாக்குதல் வேண்டும்.

இளைஞர் மன்ற உறுப்பினர்களை ஊக்குவிக்கும் அடிப்படையில் அந்தந்தப் பகுதிகளில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கிட முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

விளையாட்டுப் போட்டிகளில், தனித்திறமை கொண்ட இளைஞர்களைக் கண்டறிந்து, நிர்வாகக்குழு மூலமாக மாவட்ட விளையாட்டு அலுவலருக்குத் தெரிவித்திடல் வேண்டும்.



விளையாட்டு, பொழுதுபோக்கு என்ற அடிப்படையில் மட்டுமின்றி, மக்களாட்சி அமைப்பில், நம் ஊரின் வளர்ச்சியில் நம்முடைய பங்கும் அவசியம் என்ற நோக்கில், பொதுச் சொத்துக்களைப் பேணிப் பராமரித்திடல் வேண்டும்; அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிடும் அரசின் பல்துறை அலுவலர்களுக்கு முழு ஒத்துழைப்பையும் நல்கிடல் வேண்டும்.

'நம்மால் முடியும்' சுவரொட்டி இதழ் மற்றும் 'அரசு செய்தி' சுவரொட்டி இதழ்களை மன்ற உறுப்பினர்கள் படித்துப் பயனடைந்திடும் வகையில் உரிய இடத்தில் ஒட்டிப் பாதுகாத்திட வேண்டும்.




இளைஞர் மன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் காட்டும் ஈடுபாடு, எதிர்காலத்தில் உலக அரங்கில் பல விளையாட்டு வெற்றி வீரர்களை உருவாக்கிட வழிவகுத்திடும் என்ற குறிக்கோளோடும், நம்முடைய சமூகப் பொருளாதார மேம்பாட்டில், உங்களுடைய தன்னலமற்ற சேவை பல வெற்றிகளைக் குவித்திடும் – அது நம்மால் முடியும் என்ற நம்பிக்கை முழு அளவில் உங்களிடையே விரவிட வேண்டும்.

உங்கள் பணி சிறக்க வாழ்த்துக்கள்.

**கே. அசோக் வர்தன் ஷெட்டி,** இ.ஆ.ப.,
செயலாளர்,
இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டு
மேம்பாட்டுத்துறை.



விளையாடி மகிழ்வோம்
ஒன்றுகூடி வாழ்வோம்
நாடு நலம்பெற உழைப்போம்